

நீள் விழி
வானதி பதிப்பகம்

| | | | |
|---|---|---|---|
| முதற் பதிப்பு | : | நவம்பர், | 1972 |
| இரண்டாம் பதிப்பு | : | | 1975 |
| மூன்றாம் பதிப்பு | : | | 1978 |
| நான்காம் பதிப்பு | : | | 1980 |
| ஐந்தாம் பதிப்பு | : | ஆகஸ்ட், | 1984 |
| ஆறாம் பதிப்பு | : | பிப்ரவரி, | 1986 |
| ஏழாம் பதிப்பு | : | மார்ச், | 1994 |
| எட்டாம் பதிப்பு | : | அக்டோபர், | 1995 |
| ஒன்பதாம் பதிப்பு | : | ஜூன், | 1997 |
| பத்தாம் பதிப்பு | : | பிப்ரவரி, | 2000 |
| பதினொன்றாம் பதிப்பு | : | செப்டம்பர், | 2003 |
| பன்னிரெண்டாம் பதிப்பு | : | செப்டம்பர், | 2006 |
| பதின்மூன்றாம் பதிப்பு | : | அக்டோபர், | 2008 |

**திருநாவுக்கரசு தயாரிப்பு**

**விலை : ரூ.50.00**

| | | |
|---|---|---|
| Title | : | **NEELVIZHI** |
| Author | : | **SANDILYAN** |
| Edition | : | Thirteenth Edition, October, 2008 |
| Pages | : | 240 |
| Published by | : | **VANATHI PATHIPPAKAM**<br>23, Deenadayalu Street,<br>Thyagaraya Nagar, Chennai - 600 017.<br>☎ 24342810, 24310769<br>E-mail : vanathipathippakam@vsnl.net<br>Website : www.vanathi.in |
| Price | : | **Rs.50.00** |

Typeset at : Sivaa Graphics, Ph : 23610810
Printed at : Novena Offset Printing Co., Chennai-5. ☎ 28446891, 28446166


# முன்னுரை

கி.பி. ஆறாவது நூற்றாண்டின் இடைப் பகுதியிலிருந்து சுமார் முந்நூறு ஆண்டுகள் வரை, பாதாமி சாளுக்கியர், காஞ்சி பல்லவர், மதுரைப் பாண்டியர் ஆகிய மூன்று அரசுகளும் தங்கள் நிலையை வல்லரசுகளாக உயர்த்திக் கொள்ள இடைவிடாது போர் புரிந்துகொண்டிருந்தன. இந்த மூன்று அரசுகளில் முதலில் சளைத்துப் போட்டியிலிருந்து நீங்கியது சாளுக்கிய அரசு. பிறகு போட்டி பல்லவருக்கும் பாண்டியருக்கும் இருந்து வந்தது. இந்தப் போட்டியில் பல்லவர் வலுவாயிருந்த காலத்தில், இரண்டாவது நந்திவர்மன் பெயர் பிரபலமாகி, சரித்திரத்திலும் ஆழ்வார் பாடல்களிலும் இடம் பெற்றிருந்த காலத்தில், பாண்டிய ஜடில பராந்தக நெடுஞ்சடையன் தெற்கே தலை தூக்கினான். அவனை அடக்க தெற்கே வந்த நந்திவர்மனை, காவிரிக்குத் தென்கரையிலிருந்து பெண்ணாகடம் என்ற இடத்தில் ஜடிலன் எதிர்கொண்டு அவனை முறியடித்தான். இந்தச் சம்பவம் கி.பி. 775-வது ஆண்டில் நடந்தது. பாண்டியனை வெல்ல, கொங்கு நாட்டு மன்னனுடனும் சேரனுடனும் பல்லவன் ஒப்பந்தம் செய்துகொண்டான். ஆனால் அவர்களையும் நெடுஞ்சடையன் வெற்றி கொண்டான். கொங்கு மன்னனை சிறைப் பிடித்து மதுரைக்கும் அனுப்பிவிட்டான். (A History of South India- Sri Neelakanta Sastry PP. 150 & 151).

பாண்டியர்களெல்லோரும் சிவபக்தர்களாயிருந்தாலும் நெடுஞ்சடையன் மட்டும் பெரும் வைணவனாக இருந்தான். இவனை "பரம வைஷ்ணவன் தானாகி நின்றிலங்கு மணி நீள் முடிநில மன்னவன்" என்று சீவரமங்கல செப்பேடுகள் கூறுகின்றன. (பாண்டியர் வரலாறு- சதாசிவ பண்டாரத்தார், பக்கம்: 53) இவனுக்கு கரவந்தபுரத்தைச் சேர்ந்த மாறன்காரியென்பவர்

முதலமைச்சராக இருந்தார். இவரும் வைணவர். இவருக்கு மதுரகவி என்ற பெயரும் உண்டு. (பாண்டியர் வரலாறு பக்கம்: 55)

இந்த சரித்திரக் குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு 'நீள்விழி'யின் கதை இயற்றப்பட்டிருக்கிறது. பாண்டியர்களின் முதல் சாம்ராஜ்யம் அமைக்கப்பட்ட காலம் இது. இந்தக் கதையில் பிரதான பாத்திரங்களான ஜடிலன், நந்திவர்மன், மாறன்காரி மூவரும் சரித்திரத்தில் பிரசித்தி பெற்றவர்கள். கதையின் அவசியத்தையொட்டி நீள்விழி, விஜயன் இருவரும் சிருஷ்டிக்கப் பட்டார்கள்.

பெண்ணாகடம் என்ற ஊர் தஞ்சைக்கருகில் காவிரிக்குத் தென்புறத்திலிருந்ததாக சரித்திரம் குறிப்பிட்டாலும், திட்டமாக அது எந்த ஊர், எப்படியிருந்தது என்று தகவல் கிடையாது. அந்த ஊரின் பெயரை வைத்து அதற்கு ஓர் உருக்கொடுத்து, அங்கு விளைந்த மாபெரும் போரை வைத்து அதற்கு கோட்டை கொத்தளங்கள் அமைத்து, நீள்விழியின் கதை எழுதப்பட்டிருக்கிறது.

இது ஒரு சிறு நாவல். நிகழ்ச்சிகள் எல்லாம் அநேகமாக பெண்ணாகடத்திலேயே துவங்கி அங்கேயே முடிவடைந்து விடுகின்றன. அறிவிலும் வீரத்திலும் சிறந்து விளங்கிய தமிழகத்தின் இரு பெரும் மன்னர்களைப் பற்றிய கதை இது. இந்தக் கதை மலேசியா 'தமிழ் நேசன்' பத்திரிகையில் ஆறுமாத காலம் தொடர்கதையாக வெளிவந்தது. இந்தக் கதையை மலேசியா தமிழர்களைப் போலவே நீங்களும் சுவைத்துப் படிப்பீர்களென எதிர்பார்க்கிறேன். இதைத் தொடர்கதையாக வெளியிட்ட 'தமிழ்நேசன்' பத்திரிகை ஆசிரியருக்கும், புத்தக வடிவில் வெளியிட முன்வந்த பதிப்பக உரிமையாளருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—சாண்டில்யன்

# நீள் விழி

## 1. தண்புனல்! கண்கனல்!

அந்திக் கதிரவன் அள்ளிச் சொரிந்த அழகை அப்புறமும் இப்புறமும் புரவியில் ஊர்ந்த வண்ணமே பார்த்து மகிழ்ந்த ஜடிலன், கதிரவன் ஓட்டத்துக்கும் மனித வாழ்க்கைக்குமுள்ள பெரும் பொருத்தத்தை எண்ணிப் பார்த்து விம்மிப் பெருமூச்சொன்றை நாசியிலிருந்து வெளிவிட்டான். சென்ற மூன்றரை காத பயணத்தில் பகலெல்லாம் கடுமையாகத் தன்னைத் தகித்த கதிரவன், மறையும் வேளையில் மதிமயக்கத்தை அளிக்கவல்ல பேரழகை அவனிமீது அள்ளி வீசவேண்டிய காரணத்தை எண்ணிப் பார்த்த அந்த வாலிப வீரன், 'வாழ்க்கை முக்கால் வாசிக் கடுமையும் அந்திமக் காலத்தில் சிறிது அமைதியையும் பெறும் தன்மை வாய்ந்தது என்பதை உணர்த்தத்தான் பகலவன் இப்படி நடந்து கொள்கிறான்' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். அந்தி நெருங்கிய அந்த வேளையிலும் புழுக்கம் அதிகமிருந்ததால் தனது மேலங்கியைப் பிரித்துவிட்டு ஆசுவாசப்படுத்திக் கொண்டு, "இத்தனை அழகு விரிந்தும் இம்சையும் சிறிது இருக்கின்றதே" என்று நினைத்து அழகின் நிலையற்ற, உபயோக

மற்ற தன்மையை எண்ணி மெல்ல நகைக்கவும் செய்தான். அப்படி நகைத்துக்கொண்டு இருபுறமும் முன்னும் நோக்கவே செய்த அந்த வாலிபன், சிறிது தத்துவத்தை அதிகமாகவும் ஓடவிட்டான் சிந்தையில்.

மாலைக் கதிரவன் மஞ்சள் நிறக் கதிர்கள், தலை சாய்த்து அறுவடைக்குத் தயாராகப் பக்க வயல்களிலிருந்த நெற்கதிர்களைப் பொற்கதிர்களாக அடித்திருந்ததையும், சாலையின் ஓரங்களிலிருந்த சிற்சில மஞ்சளரளி மலர் களை அதிக மஞ்சளாக அடித்திருந்ததையும், அதுவரை வேசாகக் காய்ந்து கிடந்த வரப்புப் புல் தட்டைகள் ஏதோ தங்கத் தகடுகள் போல் தெரிந்ததையும் பார்த்து, 'கதிரவன் எதையும் மிகைப்படுத்திக் காட்டுகிறான். ஆகவே, அவன் ஒளியிலும் உண்மை பட்டவர்த்தனமாகத் தெரிவது கஷ்டம்' என்று முடிவு கட்டிய அந்த வாலிப வீரன் "உண்மை புலப்பட்டுவிட்டது என்பதைக் குறிக்க 'எல்லாம் வெட்ட வெளிச்சமாகிவிட்டது' என்றொரு தமிழ்ப் பழமொழி இருக்கிறதே, அதுவும் தவறுதான்" என்றும் சொல்லிக்கொண்டான். அந்தக் கடுமையான கோடை காலத்தில் கூட சற்று தூரத்தில் ஓடிக் கொண் டிருந்த காவிரியின் கிளை வாய்க்காலொன்றில் நீர் மணலை அரித்து ஓடிக் கொண்டிருந்ததைக் கண்டு, காவிரியின் இணையிலாக் கருணையையும் எண்ணி மகிழ்ந்தான். எத்தனை கடுமையிலும் கருணை நீர் ஊற் றெடுக்கும் உள்ளங்கள் உலகத்தில் எங்கோ அபூர்வமாக இருக்கத்தான் செய்கின்றன என்றும் நினைக்கவும் செய்தான்.

அவன் நினைத்ததெல்லாம் வேதாந்தம். அத்தனை வேதாந்தத்தை நினைக்கும் வயது அவனுக்கு ஆகவில்லை. வேதாந்தம் ஊறியதற்கான தோற்றமும் அவனுக்கில்லை. சுமார் முப்பது அல்லது முப்பத்திரண்டு ஆண்டுகள்



மதிக்கக்கூடிய அந்த வாலிபனின் புஜங்கள் நன்றாகத் திரண்டிருந்ததன்றி உடலும் நல்ல வாளிப்பாயிருந்தது. புரவியின் வயிற்றைக் கவ்வி நின்ற கால்களிலிருந்த உறுதி அவன் உடலின் உறுதிக்குச் சான்றாக இருந்தது. கையில் அவன் சேணத்தை அலட்சியமாகப் பிடித்திருந்ததிலிருந்து சேணத்தைப் பிடிக்காமலே அவனால் அப்புரவியைச் செலுத்த முடியுமென்று ஊகிக்க முடிந்தது. அவன் முகம் கம்பீரமாகவும் அழகாகவும் இருந்ததன்றி அதில் ஓர் அசட்டையும் விரவி நின்றது. எதையும் லட்சியம் செய்யாத ஒரு பாவம் அவன் தீட்சண்யமான கண்களில் ஒளி விட்ட தன்றி அதில் ஒரு களவும் வேதாந்தமும் கலந்து நின்றன. உலகம் பொய்யென்று நினைப்பவன் போலிருந்தது அவன் ஒரு சமயம் பார்த்த பார்வை. இன்னொரு சமயம் பார்த்த பார்வை அக்கம் பக்கத்திலிருந்த அழகை அப்படியே அள்ளிக் குடிப்பது போலிருந்தது. மற்றொரு சமயம் அந்தக் கண்கள் பஞ்சடைந்து உறங்குவனபோல் மாறி சிந்தையில் ஆழ்ந்த யோசனை படர்ந்து விட்டதை அறிவுறுத்தின. இப்படிப் பலவிதமாக மாறிய பார்வையுடன் சாலை வழியே புரவியை நடத்திய அந்த வீரன் எதிரே வந்த பாதசாரிகளையோ வண்டிகளையோ கவனிக்கவில்லை என்பது நன்றாகப் புலனானாலும், அவன் புரவி அவ்வப் பொழுது எதிரே வரும் வண்டிகள், பாதசாரிகள், புரவி வீரர்கள் இவர்களுக்கு இடங்கொடுத்துச் சென்றதிலிருந்து, உடையவன் நோக்கம் அதற்கு நன்றாகத் தெரிந்திருந்த தென்பது புரிந்தது. எசமானனை எந்தச் சமயத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும் காக்கவல்ல திறன் அப்புரவிக்கு உண்டென்பது அதன் ராஜநடையிலிருந்து மிகத் தெளிவாக விளங்கியது.

எசமானனுக்கும் புரவிக்கும் இருந்த நேசம் அத்தனை சிந்தனையிலும் அதன் கழுத்தை ஜடிலன் தடவிக்

கொடுத்ததிலிருந்தும், அவன் கை பட்டதும் அப்புரவி லேசாகக் கனைத்ததிலிருந்தும் தெள்ளத் தெளியத் தெரிந்தது.

ஜடிலன் ஒருமுறை குனிந்து தனது புரவியின் கழுத்தைத் தடவிவிட்டு முகத்திலிருந்து வழிந்த வியர்வையைச் சிறிது துடைத்துக் கொண்டான். புரவியின் இருபக்கத்திலிருந்தும் தொங்கிய பைகளிலொன்றிலிருந்து ஒரு சிறு துணியை எடுத்து புரவியின் கழுத்தையும் பிடரி மயிர்களையும் துடைத்து விட்டான். பிறகு பைக்குள் துணியை அடைத்து, "நீலா! அதோ தெரிகிற ஊருக்குப் போக எத்தனை நேரம் பிடிக்கும் நமக்கு?" என்று சற்று இரைந்து கேள்வியும் கேட்டான். நீலன் என்ற அப்புரவி தலையை ஒருபுறம் தூக்கி அவன் கூறியதைச் செவியில் வாங்குவது போல் அபிநயித்து நடையை முன்னைவிடச் சற்று துரிதமாகப் போட்டது.

"அதிக வேகம் வேண்டாம் நீலா, இந்த வெயில் என்னைப் போலவே உன்னையும் தகித்திருக்கிறது. இருட்டுவதற்குள் அங்கு போய்விட்டால் போதும்" என்று கூறிய அந்த வாலிபன் இடைக் கச்சையிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த நீண்ட வாளை சிறிது சரிப்படுத்தித் திரும்பினான். அப்படி திரும்பியதால் வாளின் உறை சிறிது பக்கவாட்டில் உராயவே புரவி மீண்டும் நிதானத்துடன் நடக்கலாயிற்று.

தூரத்தே தெரிந்த ஊர் பெரும் பட்டணமுமல்ல; சிற்றூருமல்ல வென்பது பொதுப்பார்வையிலிருந்தே தெரிந்திருந்தால், எப்படியும் அந்த ஊரில் ஏதாவதொரு சத்திரமிருக்கும் தங்குவதற்கு என்று உள்ளூர எண்ணிக் கொண்டான் ஜடிலன். அவனிருந்த இடத்திலிருந்து தெரிந்த பெரிய ஸ்தூபி அந்த ஊர் நகரமென்பதை



நிரூபித்தது. ஆனால் ஸ்தூபியைச் சுற்றித் தெரிய வேண்டிய பெரும் கட்டடங்களோ ஆலய கோபுரங்களோ ஏதும் தெரியாததால் அது பெரும் நகரமாயிருக்க முடியாதென்ற முடிவுக்கு வரவேண்டியிருந்தது ஜடிலனுக்கு. ஆகையால் பேரூருமல்லாது சிற்றூருமல்லாத அந்த ஊரில் என்ன வசதியிருக்குமோ, ஏது வசதியிருக்குமோ என்ற சந்தேகத்துடனேயே அந்த ஊரை மெல்ல மெல்ல அடைந்த ஜடிலன் வியப்பும் மெல்ல மெல்ல அதிகமாயிற்று. உண்மையில் தான் அடைந்தது சிற்றூரல்ல; ஒரு நடுத்தர நகரமென்பதை அந்த நகரத்தை நெருங்க நெருங்க உணர முற்பட்ட ஜடிலன், இத்தகைய நகரம் சுமார் அரை காதத்திற்கு முன் எப்படி அடியோடு மறைந்து கிடந்தது என்று எண்ணி வியப்பின் வசப்பட்டான். அந்த நகரத்தின் முன்னணியில் ஆகாயமளாவி நின்ற பெரும் தோப்புகள், அதை இருக்குமிடம் தெரியாது அடித்திருந்ததென்பதையும், அந்த மரத் தோப்புகளும் செயற்கையாக மனிதன் ஏற்பாட்டால், சிருஷ்டிக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதையும் உணர்ந்த ஜடிலன், "இத்தனை நேரம் இயற்கை சிருஷ்டித்தப் பொய்யைப் பற்றித்தான் நினைத்தேன். ஆனால் மனிதன் சிருஷ்டிக்கும் பொய், இயற்கையையும் தோற்கடிக்கிறதே" என்று சற்றே இரைந்தே சொல்லிக் கொண்டான்.

இப்படி எண்ணிய வண்ணம் முகப்புத் தோப்பு ஒன்றுக்குள் நுழைந்த அந்த வாலிபன் அந்தத் தோப்பின் முடிவில் பெரும் கோட்டைச் சுவர் ஒன்று கிளம்பியதையும் கண்டு கோட்டைச் சுவரை மறைப்பதற்கே இத்தகைய முகப்புத் தோப்பை ஏற்படுத்தியிருக்கிறார்களென்பதையும் புரிந்து கொண்டான். இப்படி மிக மர்மமாக இருக்கும்படி இந்த நகரம் ஏன் நிறுவப்பட வேண்டும் என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டு அதற்கேதும் விடை காணாமல்

கோட்டைச் சுவரை அடைந்த ஜடிலன், கோட்டைக்குள் எந்தவிதத் தடையுமின்றி நுழைந்தான். கோட்டையின் வாயில் மிக விசாலமாயிருந்ததன்றி அவற்றில் காவலரும் இருந்தனர். ஆனால் அவனை எந்தக் காவலனும் தடை செய்யவுமில்லை; எங்கு செல்கிறானென்று கேட்கவு மில்லை; அதைப்பற்றியும் சிறிது ஆச்சரியப்பட்டுக் கொண்டே அந்த நகரத்திற்குள் நுழைந்து சென்று ஜடிலன் கோட்டைச் சுவரை அடுத்துப் பெரும் அங்காடி இருப்பதையும், அந்த அங்காடியில் வர்த்தகமும் பலமாக நடப்பதையும் கண்டு, பத்துப்பதினைந்து சிற்றூர்களுக்கு அது பொதுச் சந்தையாயிருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்தான். கடைகளிலிருந்த பொருள்களின் தரம் நடுத்தர வாழ்வினருக்குச் சற்று அதிகப்படியாய் இருந்ததை அவன் கண்கள் கவனித்ததால் அநேகமாக அரச குடும்பங்களும் இதர தனிக வணிகர்களும் அங்கிருந்து பொருள்களை வாங்கலாமென்று ஊகித்து, "இப்படி ஒரு நகரம் சோழ நாட்டில் இருப்பதாக இன்றுவரை நான் கேள்விப்பட்ட தில்லையே! இந்த நகரம் இப்படி ரகசியமாக இருக்க வேண்டிய அவசியமென்ன?" என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டும் விடை கிடைக்காமல் புரவியை அந்த நகரத்தின் தெருக்களில் நடத்திச் சென்றான்.

மாலை நன்றாகச் சூழ்ந்துவிட்டதால் மஞ்சள் வெயில் லேசாக மறையத் தொடங்கி விட்டதன் காரணமாக, ஆங்காங்கு வணிகர்கள் தங்கள் கடைகளில் தீபங்களைக் கொளுத்தத் தொடங்கினார்கள். அவ்வப்பொழுது எங்கெங்கிருந்தோ வந்து கொண்டிருந்த புஷ்ப வண்டிகள் மலர்களைக் கூடை கூடையாக பூக்கடைகளில் கொட்ட முற்பட்டதால் எங்கும் புஷ்ப வாசனை பரவிக் கொண் டிருந்தது. அந்த வாசனையை மாலை நேர மந்தமாருதம் பூக்கடைகளிலிருந்து முகர்ந்து கொண்டு பக்கத்து வீதி



களுக்குள் கொண்டு போகத் துவங்கியது. அந்த நகரத்தின் உள் வீதிகளிலிருந்த வீடுகளிலிருந்து புறப்பட்ட மங்கையர் பலர் புஷ்பம் வாங்கக் கடை வீதிகளுக்கு விரைந்து வந்து கொண்டிருந்ததால் ஜடிலன் அந்தக் கும்பலிலிருந்து விலகிச் செல்ல புரவியிலிருந்து குதித்துப் புரவியை நடத்திய வண்ணம் விலகி விலகிச் சென்றான். பெண்கள் கும்பல் வீதிக்கு வீதி அதிகமாகியதால் வீதிகளின் ஓர மாகவே சென்ற ஜடிலன், 'இந்த ஒரு நகரத்தில் இத்தனைப் பெண்கள் எங்கிருந்து வந்தார்கள்?' என்று மனதுக்குள் கேள்வியொன்றை எழுப்பிக்கொண்டான். ஆடவர்களும் பலர் வந்து போய்க் கொண்டிருந்தாலும் பெண்களின் எண்ணிக்கையே அதிகமாயிருந்ததையும், பெண்களும் அநேகமாக யுவதிகளாயிருந்ததையும் சற்று வயதானவர் கள்கூட நாற்பது வயதைத் தாண்டாத மாதர்களாகவே இருந்ததையும் கண்ட ஜடிலன் அந்த நகரம் சோணாட்டில் ஒரு விந்தைதானென்று நினைத்தான். அதைவிட பெரிய விந்தையொன்று அவனுக்கு அந்த நகரத்தின் மற்றொரு புறத்தில் காத்திருந்ததை அவன் அந்தச் சமயத்தில் உணராமலே நாலைந்து தெருக்களைத் தாண்டிச் சென்று அந்நகரத்தின் வடபுறத்திலிருந்த காவிரியாற்றின் மீது கண்களை ஓட்டினான்.

காவிரியின் நீர் இரண்டு மூன்று இடங்களில் அரித்து அழகாக ஓடிக்கொண்டிருந்தது. அதன் தண்புனலில் குளித்து அன்றைய பயணத்தின் ஆயாசத்தைத் தீர்த்துக் கொள்ள இஷ்டப்பட்ட அந்த வாலிபன் கோட்டையின் வட பாகத்து மதிலை நோக்கிச் சென்றான். மதிலை அடைந்து வாயிலையும் தாண்டியிருப்பான்; அவனைத் தாண்டவிடாது அடித்தது சற்று எட்ட இருந்த வாவியொன்று. அந்த வாவியின் அழகு அவன் இதயத்தைக் கொள்ளை கொண்டது. பச்சை பச்சையாக வட்ட வட்ட

மாக நீரின் மீது படர்ந்து கிடந்த தாமரை இலைகளுக்கு இடையிடையே அழகழகான பங்கய மலர்கள் பாதி விரிந்தும் பாதி மூடியும் கிடந்தன. கதிரவன் கண்ணை அடியோடு மூடிவிட்டால் அந்த மலர்களும் கண்களை மூடி விடும் என்பதைப் புரிந்துகொண்ட ஜடிலன், இதனால் தான் புலவர்கள் அனைவரும் கதிரவனையும் கமல மலர்களையும் காதலை விளக்கக் கையாண்டிருக்க வேண்டும் என்று முடிவு கட்டி லேசாகப் புன்முறுவலும் கொண்டான். பிறகு தன்னையே வெறுத்துக் கொண்டவனாய், "சே! காதலுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? இந்த ஜன்மத்தில் காதலைத் துறப்பதென்று சபதமும் செய்து விட்டேனே" என்று சொல்லிக்கொண்டு புரவியைப் பக்கத்திலிருந்த ஒரு மரத்தருகே நிற்கவிட்டு தனது மேலங்கியையும் மற்ற ஆடைகளையும் களைந்து புரவி மீது போட்டுவிட்டு, தனது இடக் கச்சையையும் வாளையும் அதன் முதுகில் தொங்கவிட்டான். இடையில் ஒரு துண்டை மட்டும் கட்டிக் கொண்டு தாமரைக் குளத்தில் இறங்கினான். ஏற்கெனவே அங்கு சிலர் குளிக்கிறார்களென்பதற்கு அறிகுறியாகத் துறையுமிருந்ததால் அந்தத் துறையில் இறங்கி தாமரை இலைகளை விலக்கிக்கொண்டு நல்ல ஆழத்திற்குச் சென்று மூழ்கி நீராடினான்.

தாமரைத் தடாகத்தின் தண்புனல் கதிரவன் வாட்டிய அவன் உடலுக்குப் பேரதரவாயிருந்ததால் அவன் நேரம் போவது தெரியாமல் நீராடினான். நீரளித்த குளிர்ச்சியும் மூழ்கி எழுந்தபோதெல்லாம் கன்னத்தில் தடவிய ஓரிரு தாமரை மலர்களும், இலைகளும் அவன் அலுப்பை எல்லாம் விரட்டியடித்தன. கடைசியாக அவன் மூழ்கிய நிலையில் இருந்து எழுந்து எதிரே குளத்தில் வாடி குவியத் தொடங்கிவிட்ட பங்கய மலர்களின் அழகைப் பார்த்துக் கொண்டு மார்பளவு நீரில் நின்றான். "சுகம் என்றால்



இதுதான். இருள் நெருங்கிக் கொண்டிருக்கும். இந்த நேரத்திலும் இந்தத் தாமரை மலர்கள் எத்தனை அழகாயிருக்கின்றன! எனக்கு என்ன வரவேற்பளிக்கின்றன" என்று சிந்தித்து மகிழ்ச்சியால் மந்தகாசம் செய்தான்.

மகிழ்ச்சி ஒரு விநாடிதான் நிலைத்தது. "டேய்! யார் நீ?" என்று கரையிலிருந்து எழுந்த கேள்வி அவனைத் திகைக்க வைத்தது. தன்னை அப்படி அவமரியாதையாக அழைக்கும் துணிவு யாருக்கு இருக்கும் என்று எண்ணிய வண்ணம் சீற்றம் மிகுந்த கண்களுடன் கரையை நோக்கித் திரும்பினான் ஜடிலன். கரையில் கண்ட காட்சி அவனுக்கு விவரிக்க இயலாத பிரமையை அளித்தது. கரையிலிருந்து சற்றுத் தள்ளி புரவியிலமர்ந்த வண்ணம் கையில் வேல் தாங்கிய வேல் விழியாளொருத்தி அவனை அதிகாரத்துடன் உற்று நோக்கிக் கொண்டிருந்தாள். முதல் கேள்விக்கு அவன் பதில் சொல்லாததால், "வா வெளியே" என்ற இரண்டாவது உத்தரவு வெளிப்பட்டது அந்தப் பெண்ணிடமிருந்து. தண்புனலில் நீராடிய ஜடிலன் ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காகக் கேட்டான், "வராவிட்டால்?" என்று.

வேறு வார்த்தை உதிரவில்லை அவள் உதடுகளிலிருந்து. அவள் கண்களில் கனல் தெரித்தது. அவள் கையிலிருந்த வேல் பறந்தது அசுர வேகத்துடன் அவனை நோக்கி.

# 2. கைவளை நகைத்தது

புரவியில் அமர்ந்திருந்த பாவை படுவேகத்தில் வீசி விட்ட போர் வேல் பறப்பதற்கு முன்பே சரேலெனத் தண்ணீரில் மூழ்கிவிட்ட ஜடிலன், சற்று அப்புறம் நகர்ந்து விட்டதன் காரணமாக அந்த வேல் அவன் உயிரைக் குடிக்கவில்லையாயினும், மீண்டும் அவன் நீர்மட்டத்துக்கு மேல் தலை தூக்கியபோது அந்தப் பருவ மங்கையின் கமல விழிகள் அவன் உயிரைக் குடித்துவிடும் உக்கிரத்துடன் சீறிப் பார்க்கவே செய்தன. அந்த உக்கிரத்திலும் அவள் கண்களில் மயக்கம் தரும் ஓர் அழகும் தனிப்பட்ட ஒளியும் இருந்ததைக் கவனித்த ஜடிலன் அவளை ஏற இறங்கப் பார்த்ததன்றி, "சற்றுப் பொறுங்கள்" என்பதைக் குறிக்கத் தனது வலதுகையை சிறிது தூக்கிச் சைகையும் காட்டினான்.

அவள் அந்தச் சைகைக்குப் பதில் சைகை செய்யாமலும் கோபக் கனலைச் சிறிதளவும் குறைக்காமலும் புரவியின் பக்கவாட்டிலிருந்த மற்றொரு வேலைக் கையில் எடுத்துக் கொண்டாள். அவள் விழிகள் மீண்டும் அவனை எரித்து விடுவனபோல் நோக்கின. ஆனால் அந்தக் கனல் விழிகளின் சீற்றத்தை லட்சியம் செய்யாத ஜடிலன் சற்று இரைந்து கேட்டான், "இந்த ஊரில் நீராட்டத்துக்குத் தடை உண்டா?" என்று.



அவள் பவள இதழ்கள் சற்றே மலர்ந்தன. இகழ்ச்சியுடன், "தகாத இடத்தில் நீராடினால் தடையும் உண்டு, தண்டனையும் உண்டு" என்று பதில் கூறினாள்.

அந்தப் பதிலில் கோபமிருந்தாலும் குரலில் உக்கிரம் மிகக் குறைவாக ஒலித்ததைக் கவனித்த ஜடிலன் மகிழ்ச்சியடைந்தான். இருப்பினும் அந்த மகிழ்ச்சியை மறைத்துக் கொண்டு, "நீராடத் தகுந்த இடம், தகாத இடம் என்பது உண்டா இவ்வூரில்?" என்று கேட்டான்.

"தகுந்தது தகாதது எல்லா ஊர்களிலும் உண்டு. இது அரசகுமாரி நீராடும் வாவி. இந்தப் பகுதியிலேயே யாரும் வருவது குற்றம்" என்ற அந்தப் பாவை, "சரி, வெளியே வா" என்றாள் மறுபடியும்.

ஜடிலன் மிகுந்த சங்கடத்துக்குள்ளாகி, "சற்று முகத்தை அப்புறம் திருப்பிக் கொள்ளுங்கள்" என்று கூவினான் இருந்த இடத்திலிருந்து.

"எதற்காக முகத்தைத் திருப்பிக் கொள்ள வேண்டும்? வா வெளியே" என்றழைக்கத் துவங்கி, மேலும் ஏதோ சொல்லப் போன அந்தப் பாவையின் முகத்தில் திடீரென சொல்லவொண்ணாத நாணமும் கிலியும் பரவியது. 'ஐயையோ அப்படியா குளிப்பான் இவன்?' என்ற எண்ணமும் உள்ளூர உதயமானாலும், 'சே சே, அப்படியிருக்காது' என்று மனம் தைரியம் சொல்லவே முகத்தைத் திரும்பிக் கொண்டாள் அந்த யுவதி.

ஜடிலன் நீரிலிருந்து மெல்லத் தரைக்கு வரக் கிளம்பினான். அதுவரை நீருக்குள்ளிருந்த ஆடையை, எழுந்து நின்றதும் நன்றாகப் பிழிந்துகொண்டும் பக்கத்திலிருந்த இரு தாமரை மலர்களைக் கொடியுடன் பிடுங்கிக் கொண்டும் நீரை விட்டு வெளியேறித் தரைக்கு வந்து, தனது

புரவியிருக்குமிடம் சென்று புரவியின் முதுகின் மீது தாமரைக் கொடிகளைப் போட்டான். பிறகு குதிரையின் பக்கவாட்டில் தொங்கிய பையிலிருந்து ஒரு துண்டை எடுத்துத் தலையைத் துவட்டத் துவங்கினான்.

வாவியிலிருந்து முகத்தைத் திருப்பிக் கொள்ளுமாறு அவன் கூறியதும், அவன் ஒருவேளை விபரீத நிலையிலிருக்கிறானோ என்ற திகிலில் முகத்தைத் திருப்பிக் கொண்ட அந்தப் பைங்கிளியும், அவன் தரையில் ஏறியதும் ஆடையுடனேயே நீராடி இருக்கிறானென்பதைப் பக்கவாட்டில் பார்த்து அறிந்ததால் சிறிது துணிவு கொண்டாள். அந்தத் துணிவுடன் வியப்பும் கலந்து கொள்ளவே தனது பார்வையை சற்றுத் தாராளமாகவே விட்டாள் அவன் மீது ஓரக்கண்ணால். அவன் உறுதியுடன் தரைமீது ஏறி நடந்த தோரணையும், அவன் கால்களின் திடமும், உடல் வாளிப்பும், பார்வையைப் பற்றி இழுக்கக் கூடிய வண்ணம் அமைந்திருந்ததைக் கண்டாள் அப் பாவை. அவன் அலட்சியமாகத் தாமரைக் கொடிகளைப் புரவியின் மீது போட்டுவிட்டுத் துணி எடுத்துத் தலை துவட்ட ஆரம்பித்தபோது அந்தக் கைகளின் நீளமும், அவை வளைந்த லாவகமும், உடலைத் திருப்பித் திருப்பி அவன் துடைத்தபோது இறுகிய மெல்லிய திண்மையான சதைப் பிடிப்புடன் அவன் உடல் அசைந்து அசைந்து திரும்பிய உரமும் அவன் சக்திக்கு அத்தாட்சி கூறியதைக் கவனித்த அந்தப் புரவிப் பாவை, நீராடிய வாலிபன் சாதாரண வாலிபனல்லவென்பதைப் புரிந்துகொண்டாள். அவன் தலையைத் துவட்டி உடலைத் துடைத்ததும், தனது ஆடைகளை அணிய பக்கத்திலிருந்த மரத்தின் மறைவுக்குச் சென்றதுமே அவள் தலையை நன்றாகத் திருப்பி அவன் சென்ற இடத்தை நோக்கினாள்.



ஆடை அணிய மரத்தின் மறைவிற்குச் சென்ற ஜடிலன் வெகு சீக்கிரம் ஆடைகளைப் புனைந்துகொண்டு, தனது ஈர ஆடையைப் பிழிந்துகொண்டு வந்து புரவிமீது போட்டு விட்டு, அதன் கடிவாளக் கயிறுகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு பாவையின் புரவியை அணுகி வந்தான். வந்தவன் இரண்டொரு விநாடிகள் அவளை ஏற இறங்கப் பார்த்தான். ஏறெடுத்து நோக்கிய அவன் கண்களுக்கெதிரில் விரிந்ததோர் அழகுச் சிலை. தான் வாவியிலிருந்து பறித்துக் கொண்டு வந்த கமல மலர்களுக்கும் புரவியில் அமர்ந்திருந்த அந்தப் பாவையின் முகத்துக்கும் அதிக வித்தியாசமில்லை என்பதை முதல் பார்வையிலேயே அவன் கண்கள் புரிந்து கொண்டன. அவள் கன்னங்களில் செந்தாமரையின் மென்மையும் இருந்தது. வழவழப்பும் இருந்தது. இடையே வெட்கச் சிவப்பு இருந்தது; பருவத்தின் ஒளியும் இருந்தது. அவள் முகம் அதிக விசாலமில்லாமலும் அதிக குறுகலில்லாமலும் கச்சிதமாக இருந்ததன்றி, அவள் குழல் நன்றாக கருத்து அடர்ந்திருந்ததையும் கவனித்த அந்த வாலிபன், 'இந்தக் குழல் மட்டும் பின்ன விட்டு எடுத்து முடியாமல் அவிழ்க்கப்பட்டால் அவள் பின்னழகு முழுவதும் திரை போட்டுவிடும்' என்று எண்ணினான். அவள் கண்கள் மட்டும் நன்றாக அகன்று இருப்பதற்குப் பதிலாக, அகலத்தைவிட சற்று நீளமாக மீன்களைப் போலிருந்தனவாதலால், கோயில் தூண்களின் வெட்டுச் சிற்பச் சிலைகளைப்போல் அம்முகம் காட்சியளித்தது.

அந்த நீள்விழிகள் முன்பு கோபத்துடன் பார்த்த போது அகன்ற நிலையை எண்ணிய வாலிபன், "இந்த அழகுமீன் அவசியமிருந்தால் அனலையும் கக்கும்" என்று உள்ளூர சொல்லிக் கொண்டான். புரவியில் உட்கார்ந்திருந்த நிலையில் அவள் உடலின் பக்கப் பகுதிகள் அழகாக உறுதியுடன்

இறங்கியிருப்பதையும், மார்பகம் ஆடையைத் திமிறிக் கொண்டு எழுந்ததையும், அதனாலோ என்னவோ அவள் இடை துவண்டு மறைந்துவிட்டதையும் பார்த்த வாலிபன் மனம் உடன் படபடவென அடித்துக் கொண்டது. புரவியில் உட்கார்ந்தால் குதிரைப் பக்கங்களில் இறங்கிய அவள் கால்களின் திண்மையும் பின்புற எழிலின் உறுதியும் அவனைப் பைத்தியமாக அடித்துவிடும் போலிருந்ததால், அவன் அவளுடன் பேச்சுக் கொடுக்கத் துவங்கி, "நீ யார்?" என்று வினவினான்.

அந்தப் பெண்ணின் விழிகள் ஒருமுறை அவனை அளவெடுத்தன. "அந்தக் கேள்வியை நானல்லவா கேட்க வேண்டும்?" என்றாள் அவள் ஒரு விநாடி கழித்து.

"நான் ஒரு வழிப்போக்கன்" என்று கூறினான் ஜடிலன்.

"ஆனால் சாதாரண வழிப்போக்கன் அல்ல" என்றாள் அந்தப் பாவை.

"என்ன அசாதாரணமிருக்கிறது என்னிடம்?" என்று வினவினான் அவன்.

"அலட்சியமிருக்கிறது, தைரியமிருக்கிறது, சமயோசித புத்தியுமிருக்கிறது, போர் திறமையிருக்கிறது" என்றாள் அந்தப் பாவை அவனை நோக்கி விடுவிடு என்று.

ஜடிலன் பிரமித்துப் போனான். எப்படி அவள் தன்னை அத்தனை தூரம் எடை போட்டாள் என்பது புரியாததால் கேட்டான்: "என்னைப் பற்றி எல்லாம் தெரிந்தது போல் பேசுகிறீர்களே?" என்று.

அவள் மீண்டும் அவனை உற்று நோக்கினாள் வியப்புடன். அதுவரை கடுமையுடனிருந்த அவள் இதழ்கள், அவன் புரவி மீதிருந்த கமலங்களை வெட்கச் செய்வன போல் மெல்ல விரிந்தன முறுவல் காட்டி. "அகத்தினழகு



முகத்தில் தெரியும், குணத்தின் அழகு செயலில் தெரியும்" என்ற சொற்களும் அவள் சிவந்த இதழ்களிலிருந்து உதிர்ந்தன.

"அகத்தினழகு முகத்தில் தெரியும் என்று தமிழ்ப் பழமொழி இருக்கிறது. ஆனால் குணத்தினழகு செயலில் தெரிகிறதென்று கூறுகிறீர்களே, இது என்ன புதுமொழியா?" என்று வினவிய ஜடிலன் அவள் புரவியை மெல்ல நெருங்கினான்.

அவன் நெருங்குவதை அவள் தடை செய்யவில்லை. "அகத்தினழகு முகத்தில் தெரியுமென்று சொன்னது உங்கள் கண்ணியத்தைப்பற்றி. ஒரு மனிதன் முகத்திலிருந்து அவன் யோக்கியனா அயோக்கியனா, மேலோனா கீழோனா என்பதைக் கூடிய வரையில் சொல்லலாம். உங்கள் முகம் கண்ணியத்தைக் கூறுகிறது. உங்கள் செயல்கள்..." என்று அந்தப் பெண் சற்று அரைகுறையாக விட்டாள்.

வியப்பு விரிந்தது வாலிபன் முகத்தில். "என் செயல்களா, அவற்றுக்கென்ன? அவற்றிலிருந்து என்ன தெரிந்து கொண்டீர்கள்?" என்று வினவினான்.

"நான் வேலெறிந்தேன்..." என்று துவங்கினாள் அவள் விஷயத்தை விவரிக்க.

"எறிந்தீர்கள்" என்று ஆமோதித்தான் அவன்.

"சட்டென்று தண்ணீரில் மூழ்கிவிட்டீர்கள்."

"ஆம்."

"மூழ்கி அப்புறம் நகர்ந்துவிட்டீர்கள் மின்னல் வேகத்தில்."

"ஆம்."

"இல்லாவிட்டால் நீரிலும் நீங்கள் தப்பியிருக்க மாட்டீர்கள்."

"அப்படியா!"

"ஆம், என் வேல் குறி தப்பாது."

ஜடிலனுக்கு வியப்பு அதிகமாயிற்று. தனது நடவடிக்கை ஒவ்வொன்றையும் அவள் கண்கள் கவனிக்கத் தவறவில்லை என்பதை அறிந்த அவன் கேட்டான்: "அப்படியானால் என் பிணம் இந்த வாவியில் மிதந்திருக்குமென்று கூறுங்கள்" என்று.

"இருக்காது. உங்கள் தோளுக்குத்தான் வேல் குறி வைக்கப்பட்டது. நீங்கள் போரில் பழகியவராதலால் சட்டென்று மூழ்கி விலகிவிட்டீர்கள், போர்க்களத்தில் விலகுவதுபோல்" என்ற அந்தப் பாவை, "அதிலிருந்து உங்களுக்குப் போர்ப் பழக்கம் உண்டென்று ஊகித்தேன். பிறகு நீங்கள் கரையேறி நடந்தபோது உங்கள் நடையின் பாணியையும் கவனித்தேன்" என்ற அவள் முகத்தில் திடீரென வெட்கச் சாயை படர்ந்தது. எதைச் சொல்ல வேண்டாமென்று நினைத்தாளோ அதைச் சொல்லிவிட்டதால் சிறிது சங்கடமும் அவள் முகத்தில் உலாவியது. அதை மறைக்க விடுவிடு என்று சொற்களை உதிரவிட்டாள் அழகிய உதடுகளிலிருந்து, "நீங்கள் அரச வமிசத்தவர் என்று புரிந்தது எனக்கு. ஆகவே அடுத்த வேலை எடுத்து வீசவில்லை. எப்படியும் இந்த வாவியில் குளித்ததற்குத் தண்டனை உண்டு" என்று கூறினாள் அந்த அழகி.

ஜடிலன் சில விநாடிகள் மௌனம் சாதித்தான். பிறகு கூறினான் அப்பெண்ணை நோக்கி, "சரி அழையுங்கள் உங்கள் காவலை" என்று.



அவள் நீண்ட கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன. "எதற்கு காவலர்?" என்று வினவினாள்.

"என்னைச் சிறைச் செய்ய?" என்றான் ஜடிலன்.

"ஏன் நான் போதாதா உங்களைச் சிறைசெய்ய?" என்று வினவிய அவள், "ஆயுதங்களைத் தொட வேண்டாம். நடக்கலாம் என் புரவிக்கு முன்பாக!" என்று உத்தரவிட்டாள்.

ஜடிலன் மெல்ல நகைத்தான்.

"எதற்கு நகைக்கிறீர்கள்?" என்று வினவினாள். அவள் குரலில் சற்று உஷ்ணம் ஒலிக்க,

"காரணம் வேறேதுமில்லை, பெண்ணே! இதுவரை நான் யாரிடமும் சிறைப்பட்டதில்லை. முதல் தடவையாக சிறைப்படும்போது போயும் போயும் ஒரு பெண்ணிடம் சிறைப்பட வேண்டிய நிலை ஏற்பட்டதே என்று நகைத்தேன்" என்றான் அந்த வாலிபன்.

அவள் முகத்தில் சினம் தாண்டவமாடியது. "பெண்ணிடம் சிறைப்படுவது அத்தனை கேவலமா?" என்று சீறிய அவள், "பெண்ணிடம் பிராணனை விடுவது?" என்று வினவினாள்.

"அதைவிடக் கேவலம்" என்றான் ஜடிலன்.

"அப்படியானால் அந்தக் கேவலம் உண்டாகட்டும்" என்ற அவள் கண்ணிமைக்கும் நேரத்தில் கைவேலை ஓங்கிவிட்டாள். ஓங்கிய வேகத்தில் அவள் கைவளைகள் கலகலவென ஒலித்தன. நகைத்தன. நகைத்த காரணம்? அதுதான் இக்கதைக்குத் துவக்கம். துவக்கத்துக்கு அறிகுறியாக அடுத்த விநாடி அந்தக் கையை வாலிபன் இரும்புக்கரம் பிடித்துக் கொண்டிருந்தது.

# 3. கட்டாயச் சிறை!
## காக்கவந்த மோகினி!

சொல்லொக்கும் கடிய வேகத்தில், வில்லொக்கும் புருவத்தாளின் அல்லி மலரொக்கும் கையை இரும்பொக்கும் அந்த இளங்காளையின் கைபிடித்த மாத்திரத்தில் அந்த மோகினியின் கைவளைகள் நகைத்தன, கயல்விழிகளும் எரித்தன அந்த வாலிபனை நோக்கி. அதுவரை எந்த ஆடவன் கையும் படாததினால் அவள் வாளை விழிகளில் சுடர்விட்ட தீ அவள் உடலிலும் பரவி உணர்ச்சிகளில் ஊடுருவி உடலையும் எரித்துவிடுவது போன்ற நிலைமையை உண்டாக்கவே, அவள் நளின உடல் சற்று நடுங்கியது. அவள் முகத்தில் திடீரெனப் பாய்ந்துவிட்ட குருதி அதைக் குங்குமச் சிவப்பாக அடித்துவிட்டதால் அவள் நீள்விழிகளில் வெட்கமா பயமா கோபமாக என்று புரியாத சாயை ஒன்று படர்ந்தது.

புரவியின் வயிற்றைக் கவ்வி நின்ற அவள் கால்கள் எதனாலோ சற்று தளர்ந்தன. கையில் அவள் அதுவரை பிடித்திருந்த வேல் தானாக நழுவித் தரையில் விழுந்தது. வேல் விழுவதற்கு முன்பே ஏதோ தகாத காரியத்தைச் செய்துவிட்ட உணர்ச்சியின் சாயையொன்று அந்த வாலிபன் முகத்தில் படர்ந்ததால், வேல் விழுந்த பின்பு



அவன் இரும்புப் பிடியும் திடீரென்று மென்மைப்பட்டது. அவள் கையை விடுவிக்கவும் செய்தது.

அவன் கையிலிருந்து தன் கை விடுபட்ட பின்பும் அவள் புரவி மீதே நிலைத்து உட்கார்ந்திருந்தாள். அவள் நீள் விழிகள் அவனை நோக்க முயன்று சக்தியற்று நிலத்தில் நிலைத்தன. சில விநாடிகள் புரவியைப் பார்த்தன. சில விநாடிகள் அவனையும் பார்த்தன இடையிடையே. அவள் நிலை அந்த வாலிபனுக்குப் புரிந்தே இருந்தது. அதுவரை அவன் காட்டிய வேடிக்கைப் பேச்சும் விளையாட்டுப் பார்வையும் அவன் அழகிய முகத்திலிருந்து மறைந்து, அதில் சீரிய நோக்கு ஒன்று பரவி நின்றது. அவள் கையை விட்டதும் சிறிது எட்ட விலகிய அவன் உதடுகளிலிருந்து சொற்கள் குற்றவாளி காட்டும் பயத்துடன் உதிர்ந்தன. "மன்னிக்க வேண்டும். அவசரத்தில் செய்து விட்ட குற்றம். வேலின் கூர்மையும் நீங்கள் அதை ஓங்கிய வேகமும்தான் என் துணிவுக்குக் காரணம்" என்றான் அந்த இளங்காளை.

புரவியலமர்ந்த யுவதி ஏதும் பேசவில்லை. துணிவை வரவழைத்துக்கொண்டு ஒரு விநாடி அவனை உற்று நோக்கினாள். பிறகு திடீரென்று புரவியைத் திருப்பிக் கொண்டு அந்த வாலிக்கு முதுகைக் காட்டிக்கொண்டு சில விநாடிகள் உட்கார்ந்திருந்தாள். பிறகு புரவியின் வயிற்றை மெல்லக் காலால் உதைக்க புரவி நகர்ந்து சென்றது. புரவி மெல்லவே சென்றது என்றாலும் அதைப் பின்பற்றிச் செல்ல முடியாமல் நின்ற இடத்திலேயே நிலைத்து நின்றுவிட்ட ஜடிலன் அவள் போவதைப் பார்த்துக்கொண்டே இருந்தான். உணர்ச்சிகள் அலைய உடல் குன்ற சென்ற அந்த நிலையிலும் அவள் மிக அழகாய் இருந்ததை அவன் கவனித்தான். அவள் பின்புறமே அவனுக்குத் தெரிந்ததென்றாலும் அந்தப் பின்புறத்தின் வளைவுகளிலும் எழுச்சிகளும் மாறன் கணைகள்

எத்தனை புதைந்து கிடந்தன என்பதைப் புரிந்து கொண்டான் அவன்.

சிவி எடுத்துப் பின்னிக் கட்டியிருந்த குழலுக்குக் கீழே அவள் கழுத்து வெள்ளை வெளேரென்று வாழை மரத்தின் நுனிப்பாகம் போல் சிறுத்தும் ஒரே சீராகவும் தோள்களுக்கிடையில் இறங்கியிருந்ததையும், அதையடுத்து அதிகமாகப் படராமல் கச்சிதமாயிருந்த மணித் தோள்களும், சிறிய முதுகும், வழித்து விட்டதுபோல் இறங்கியிருந்த விலாப் பகுதி வரவரச் சிறுத்துக் கடையில் மறைந்து இடையாகிவிட்டதையும், ஒளிந்த இடைக்குக் கீழே மன்மதனின் அம்பறாத் தூணிகள் இரண்டு செழிந்து எழுந்து புரவியில் முதுகின் ஆட்டத்திற்குத் தகுந்தபடி அசைந்து அசைந்து சென்றதையும் கவனித்த ஜடிலன், பைத்தியம் பிடிக்கும் நிலைக்கு வந்து கொண்டிருந்தான். அப்படி உன்மத்த நிலையை எய்தியவன் திடீரென மெல்ல நகைக்கவும் செய்தான். "நான் யார்? அவள் யார்? நான் வந்த காரணம் என்ன? சேசே என்ன மதிகெட்டுப் போனேன்? இப்படி பார்க்கும் பெண்களிடத்திலெல்லாம் மனதைப் பறிகொடுத்துத் திண்டாடினால் என் வாழ்க்கை, என் குறிக்கோள் என்ன ஆவது?" என்று தன்னைத்தானே கடிந்து கொள்ளவும் செய்தான். பிறகு ஏதோ முடிவுக்கு வந்துவிட்டவன்போல் புரவியின் கடிவாளத்தை அதன் தோள்மீதே போட்டு, "நீலா, வா" என்று அழைத்து அந்தப் பாவையின் புரவி சென்ற திசையை நோக்கி நடந்தான்.

அவள் புரவி மெல்லப் போய்க்கொண்டிருந்ததால் நடையிலும் அதை அணுகுவது கஷ்டமில்லாவிட்டாலும், அதை அணுகாமல் பத்தடி தூரம் விட்டுப் பின்னாலேயே ஜடிலன் நடந்தான். நீலனும் எசமானனுக்குப் பின்னால் சதிர் நடை போட்டு நடந்தது. வாவியின் எல்லையை விட்டு வீதிக்குள் ஜடிலன் வந்ததும், எதிரே இருந்த



விடுதிகளின் வாயிலில் இருந்தவர்களும் எதிரில் வந்து கொண்டிருந்தவர்களும், அந்த விநோத ஊர்வலத்தைப் பார்க்கவே செய்தனர். முன்னால் புரவியில் சென்ற பாவை, அவளைத் தொடர்ந்து பாதசாரியான ஒரு வீரன், அவனுக்குப் பின்னால் கடிவாளம் பற்றப் படாத ஒரு குதிரை, இந்த மூவரும் சென்றது பார்த்தவர்களுக்கு வேடிக்கையாக இருந்தாலும் அதைப்பற்றி யாரும் பேசவுமில்லை பரிகசிக்கவுமில்லை. எதிரே வந்தவர்கள் கூட விலகிச் சென்றார்களே தவிர நின்று நிலைத்துப் பார்க்கவும் முற்படவில்லை. தவிர அந்த அழகியைத் தாங்கிய, புரவி சென்ற போது விடுதிகளின் திண்ணைகளிலும் வாயிற்படியிலும் இருந்தவர்கள் எழுந்து தலை வணங்கியே நின்றார்கள். எதிரே வந்த ஓரிரு வண்டிகளும் சட்டென்று நின்று அவள் புரவி சென்ற பின்பே நகர்ந்தன. இவற்றையெல்லாம் சிறிதும் கவனிக்கத் தவறாத ஜடிலன் அந்தப் பெண் யாராவது சிற்றரசன் மகளாகவோ அமைச்சர் மகளாகவோ அல்லது குறைந்தபட்சம் ஒரு பிரமுகரின் மகளாகவோ இருக்க வேண்டுமென்று தீர்மானித்ததால், தான் சற்று ஆழந்தெரியாமல் காலிட்டுக் கொண்டு விட்டதைப் புரிந்து கொண்டான்.

வேதாந்தியான அவன் அப்பொழுதும் தனது நிலையை வாவிக்கு வருமுன்பு இருந்த உட்கண்ணோடு ஆராயத் தொடங்கினான். "உலகம் பொய்யானது என்பது சரியாயிருக்கிறது. ஒரு பிரமுகனின் மகள் எதற்காக வாவிக்கு வர வேண்டும்? அப்படியே வந்தாலும் காவலாளிகளைக் கூப்பிட்டு என்னை வெளியேற்றாமல், தானாக எதற்கு வலுச்சண்டைக்கு இழுக்க வேண்டும்? எல்லாம் வேஷம், எல்லாம் பொய். இப்பொழுதானாகட்டும் குறுக்கும் நெடுக்கும் வந்து போய்க்கொண்டிருக்கும் வீரர்களை விட்டு என்னைச் சிறை செய்வதுதானே?" என்று

தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். மேலும் சிந்தித்தான். 'சரி, அவள்தான் திரும்பிப்போய்விட்டாள். நான் எதற்காக அவளைத் தொடர வேண்டும்? வாயிலிருந்தே திரும்பிப் போயிருக்கலாமே. அவள் அழகு இழுப்பதால் செல்கிறேன். அழகு வெறும் மாயை! அதற்கு நான் ஏன் கட்டுப்பட வேண்டும்?' என்று வினவிக்கொள்ளவும் செய்தான்.

ஆனால் இத்தகைய சிந்தனைக்குத்தான் அவனுக்கு சக்தி இருந்ததேயொழிய சிந்தனையைச் செயல்படுத்த சக்தி அணுவளவும் இல்லை. புரவியின் முதுகில் உட்கார்ந்த நிலையில் அசைந்த அழகுகள், முக்கியமாக புரவியின் முதுகில் பதிந்து அகன்றிருந்த மாயா பிம்பங்கள் அவனை மயக்கி இழுத்தே சென்றன. அவன் வேதாந்தமெல்லாம் காற்றில் பறந்து கொண்டிருந்தது. வீர வைணவனான அவன் மனம் மாயையிலிருந்து விடுபட ஆழ்வார்களின் பாசுரங்களைத் திரும்பத் திரும்ப எண்ணிப் பார்த்தது. "மாதரார் கயல்கண் எனும் வலையிற் பட்டழுந்து வேனை" என்ற விப்ரநாராயணன் பாசுரத்தை உதடுகள் முணுமுணுத்தன. கன்னியர் கயல் கண்களில் பட்டழுந்துவது எத்தனை கேவலம், பாபம் என்றெல்லாம் மனம் நினைத்தாலும் அவன் கண்கள் அவள் பின்னழகுகளைப் பார்த்தன. கால்கள் தொடர்ந்தன. அவள் புரவி செல்லும் வழியைப் பின்பற்றி மெல்ல மெல்ல மனமும் கண்களின் பாதையில் திரும்பவே அவள் நீள்விழிகள் அவன் மனதுக்குள்ளிருந்து எட்டிப் பார்த்தன. அவள் உடல் பூராவும் அவன் மனத்தில் எழுந்து மனத்தை ஆக்கிரமித்துக் கொண்டது. புலன்கள் அவள் வசப்பட்டன. போகுமிடத்தைப் பற்றியோ, பின்னால் நிகழக்கூடிய விளைவைப் பற்றியோ சிறிதும் கவலைப்படாமல அவள் புரவியைப் பின்பற்றி நடந்தான் ஜடிலன்.



வாயிலிருந்த வீதியைத் தாண்டி வேறொரு வீதியையும் கடந்து அந்த ஊரின் கோட்டைக்குள்ளிருந்த மற்றொரு சிறு கோட்டையின் வாயிலுக்கு அவள் புரவி வந்ததும், அதன் பின்னே நடந்து வந்த ஜடிலன் அந்தக் கோட்டையில் காவல் பலமாயிருப்பதைக் கண்டான். அச்சிறு கோட்டை அழகாகவுமிருந்தது. பலமாகவுமிருந்தது. ஊரைச் சுற்றியிருந்த கோட்டைப் பெரும் சுவரைப் பின்புறத்தில் மட்டும் இணைத்துக்கொண்டது உட்கோட்டையின் சிறு சுவர். அதன் பின்புறத்தில் காவிரியாறு பரந்து கிடந்தது. அச்சிறு கோட்டையின் முன்புறச் சுவர்கள் கருங்கற்களால் நியமிக்கப்பட்டு, ஆங்காங்கு எழும்பிய காவலர் கூடங்களுடனும் ஸ்தூபிகளுடனும் காட்சியளித்தது. கோட்டைச்சுவரின் மேற்புறம் நல்ல அகலத்துடனிருந்ததையும், அவற்றில் படைவீரர் நடமாட நிரம்ப இடமிருந்ததன்றி ஆங்காங்கு சிறுசிறு விற்கூடங்களும் வேற்கூடங்களுமிருந்ததையும் கவனித்த ஜடிலன் இந்தக் கோட்டைக்குள்ளிருப்பவர்களை நீண்டகால முற்றுகை கூட சரணடையச் செய்ய முடியாதென்ற முடிவுக்கு வந்தான்.

இப்படி அண்ணாந்து பார்த்துக் கோட்டையை எடை போட்டுக் கொண்டிருந்த சமயத்தில் அந்த அழகியின் புரவி கோட்டைக்குள் சென்று மறைந்துவிட்டதால் திடீரென விழித்துக்கொண்ட ஜடிலன் வேக வேகமாக உள்ளே நுழைந்தான். அவன் புரவியும் அவனைப் பின்பற்றி நுழைய முயன்றது. இரு வேல்கள் குறுக்கே பாய்ந்து ஜடிலனை மறைத்தன. வேல் வீரனொருவனின் கேள்வியும் எழுந்தது அதட்டலுடன், "யார் நீ? கோட்டைக்குள் என்ன வேலை உனக்கு?" என்று.

அந்தக் கேள்வி பெரும் பிரமிப்பை மட்டுமல்ல; விழிப்பையும் அளித்தது அந்த வாலிபனுக்கு. கோட்டைக்குள்

நுழைந்து மறைந்துவிட்ட யுவதி தன்னைப்பற்றி, எந்த உத்தரவையும் வீரர்களுக்குப் பிறப்பிக்கவில்லையென்றும், தன்னைச் சிறை செய்ய அவள் இஷ்டப்படவில்லையென்றும் புரிந்து கொண்டதால் வியப்பின் வசப்பட்டான் ஜடிலன். முதலில் சிறை செய்யத் துணிந்தவள், வேலெறிந்து காயப்படுத்தவும் முயன்றவள், எதற்காகத் தன்னைச் சிறைசெய்ய உத்தரவிடாமல் சென்றாளென்பது புரியவில்லை அவனுக்கு. ஒன்று மட்டும் புரிந்தது. திட்டமாக தன் மனத்தின் நிறைவு அவளுக்கும் ஏற்பட்டிருக்க வேண்டும் என்ற நினைப்புதான் அது. அந்த நினைப்புகூட அவனுக்கு இன்பமளிப்பதாயிருந்ததால் புன்முறுவலை இதழ்களில் கூட்டி நின்றான்.

குறுக்கே வேல்களைப் பாய்ச்சி நின்ற வீரர்கள் அவன் பதிலேதும் சொல்லாமலிருப்பதையும், போதாக்குறைக்கு இளநகை புரிவதையும் கண்டு சினத்துடன், "என்ன நகைக்கிறாய் பதில் சொல்" என்று ஆளுக்கொருவாசகமாக உதிரவிட்டார்கள்.

அவர்களை ஏறெடுத்துப் பார்த்த ஜடிலன், "வீரர்களே! கோட்டைக்குள் நானாக நுழைய இஷ்டப்படவில்லை. முன்னே சென்ற பெண் அழைத்து வந்தாள்" என்று பதில் கூறினான்.

வீரர்கள் கண்களில் தீப்பொறி பறந்தது ஒரு விநாடி. பிறகு அவர்களில் ஒருவன் கோபத்தைத் தணித்துக் கொண்டு, "உனக்கு இந்த ஊர் புதிதா?" என்று வினவினான் வாலிபனை நோக்கி.

"ஆம்" என்றான் ஜடிலன்.

"தெரிகிறது. ஆனால் இனிமேல் அரசகுமாரியை அந்தப் பெண் என்று சொல்லாதே. சொன்னால் உன் தலை உன் உடலில் ஒட்டியிருப்பது கஷ்டம்." என்று கூறினான் ஒரு



வீரன். அதை ஆமோதித்த மற்றொருவனும் புன்னகை புரிந்தான்.

ஜடிலன் முகத்தில் பிரமை சிறிதும் தட்டவில்லை. இத்தகைய ஏதோ ஒரு பதவி அவளுக்கு இருக்குமென்பதை அவன் ஏற்கெனவே புரிந்து கொண்டிருந்தான். ஆகவே சர்வசாதாரணமாகக் கேட்டான், "அரச குமாரியா?" என்று.

"ஆமாம்" என்றார் வீரர்களில் ஒருவன்.

"அப்படியானால் நான் உடனே கோட்டைக்குள் செல்ல வேண்டும்" என்று ஜடிலன் கூறினான் அதிகாரத்துடன்.

"செல்லத்தான் வேண்டுமா?" என்று கேட்டான் வீரர்களில் ஒருவன்.

"ஆம்."

"அனுமதி இருக்கிறதா உள்ளே செல்ல?"

"இல்லை."

"அப்படியானால் உள்ளே செல்ல முடியாது."

"என்னை யாரும் தடுக்க முடியாது."

"ஏன்? நீ என்ன பெரிய அரசரா? அல்லது படைத் தலைவரா?"

"இரண்டு பேருக்கும் உயர்ந்தவன்."

"அப்படியா?"

"ஆம்."

"என்ன அப்பேர்ப்பட்ட உயர்ந்த பதவி உனக்கு?"

"சிறைப்பட்டவன்."

வீரர்கள் முகத்தில் பிரமிப்பு காணப்பட்டது. "என்ன! சிறைப்பட்டவனா?" என்று வீரர்களில் ஒருவன் விசாரித்தான் வியப்புடன்.

"ஆம்" என்று பதிலளித்தான் ஜடிலன்.

"யாரிடம் சிறைப்பட்டாய்?" மற்றொரு வீரன் கேட்டான்.

பதில், இரு வீரர்களுக்கும் பேரதிர்ச்சியைத் தந்தது. "அரசகுமாரியிடம்" என்று சர்வ சாதாரணமாக சொன்னான் ஜடிலன்.

"எதற்காகச் சிறைப்பட்டாய்?" என்று கேட்டான் ஒருவன்.

"அவர்கள் நீராடும் வாவியில் குளித்தேன்..." என்ற ஜடிலன் அவர்கள் முகத்தில் படர்ந்த கிலியைக் கண்டு உள்ளூரச் சிரித்துக் கொண்டான்.

வீரர்களில் ஒருவன் கிலியை உதறிக்கொண்டு ஜடிலன் அருகில் வந்து, "வாலிபனே! உனக்குச் சித்தப்பிரமை ஏதுமில்லையென்று நினைக்கிறேன். வயது சிறு வயது, இந்த ஊரைவிட்டு உடனே ஓடிவிடு" என்றான் மெதுவாக.

"ஏன் ஓட வேண்டும்?" என்று வினவினான் ஜடிலன்.

"அரசகுமாரியின் வாவியில் நீராடுபவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. அரசகுமாரி உன்னைச் சிறை செய்தாலும் என்ன காரணத்தாலோ உன்னை விடுதலை செய்யத் தீர்மானித்து விட்டாள். ஆகையால் தான் எங்களுக்கு உத்தரவேதும் பார்வையாலோ, சைகையாலோ இடவில்லை. ஓடிவிடு" என்று கூறினான் அந்த வீரன்.



ஜடிலன் அவனை ஏற இறங்கப் பார்த்தான்! "ஓடும் பழக்கம் எனக்குக் கிடையாது" என்றான் முடிவில் திட்டமாக.

"சாகும் பழக்கந்தான் உண்டு போலிருக்கிறது" என்றான் அந்த வீரன்.

"சாவில் பழக்கமென்பது கிடையாது. ஒருமுறை செத்தால் மற்றொரு முறை சாக முடியாது. ஆனால் சாவைப் பற்றி அச்சமில்லை. என்னைச் சிறைக்கூடத்துக்கு அழைத்துப் போ" என்றான் ஜடிலன்.

'வேண்டாம். சொல்வதைக் கேள். சிறைக்கூடத்துக்குச் சென்றால் நாளை அஸ்தமனத்தோடு உன் வாழ்வும் அஸ்தமனமாகிவிடும். அரசகுமாரி தரும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்" என்று மன்றாடினான் வீரன்.

"வீரனே! உன் கடமையைச் செய். பெண்ணிடம் சிறைப்பட்டபின் நான் வாழ இஷ்டப்படவில்லை. அழைத்துச் செல் என்னைச் சிறைக்கு" என்று வலியுறுத்தினான் ஜடிலன்.

வீரர்கள் நிலை பரிதாபமாய் இருந்தது. அரசகுமாரி எப்பொழுது தங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கவில்லையோ அப்பொழுது அந்த வாலிபனை விடுதலை செய்ய இஷ்டப்பட்டுவிட்டாள் என்பதைப் புரிந்து கொண்டார்கள். ஆனால் வாலிபன் பிடிவாதமோ பயங்கரமாய் இருந்தது. குளித்ததற்கு மரண தண்டனை இருக்காதென்று இவன் தப்புக் கணக்குப் போடுகிறானே என்று நினைத்தார்கள். ஒருவேளை அரசகுமாரி தயவிருப்பதால் தப்பிவிடலாமென்று நினைக்கிறானோ என்று எண்ணிய இரு வீரர்களில் ஒருவன் அது விஷயமாகவும் எச்சரிக்க முற்பட்டு, "வாலிபனே! நீ குற்றத்தை ஒப்புக்கொண்டு சிறைக்குள்

சென்றுவிட்டால் அப்புறம் உன்னைத் தப்புவிக்க அரசகுமாரியாலும் முடியாது" என்று கூறினான்.

"முடியாவிட்டால் பாதகமில்லை" என்ற ஜடிலன் சிறை செல்லப் பிடிவாதம் செய்து கொண்டிருக்கையில் அச்சிறு கோட்டைக்குள்ளிருந்து புரவியிலேறிய வீரனொருவன் வேகமாக வந்தான். வந்தவன் கோட்டை வாயிலில் நடந்து கொண்டிருந்த விவாதத்தைக் கண்டு சட்டென்று புரவியை நிறுத்தி, "என்ன இங்கே விவாதம்?" என்று வினவினான் அதட்டலுடன்.

வீரர்கள் பதில் சொல்லாமல் விழிக்கவே ஜடிலனே பதில் கூறினான். "என்னைச் சிறையில் தள்ள மறுக்கின்றனர்" என்று வீரர்களைச் சுட்டிக்காட்டவும் செய்தான்.

"என்ன குற்றம் செய்தாய் நீ?" என்று அதட்டினான் புரவியில் இருந்தவன்.

"அரசகுமாரி வாவியில் குளித்தேன்" என்றான் வாலிபன்.

புரவியமர்ந்தவன் கண்களில் ஒரு விநாடி சினம் தெரிந்தது. அடுத்த விநாடி வியப்பு தெரிந்தது. "இவனை இவன் விருப்பப்படி சிறையில் தள்ளுங்கள். காலையில் விசாரிப்போம்" என்று கூறிவிட்டுப் புரவியை அதிவேகமாக முடுக்கிவிட்டு வெளியே சென்றுவிட்டான்.

"உன் வாழ்வு முடிந்துவிட்டது, வா" என்று கூறி வீரர்கள் அவனை அழைத்துச் சென்றனர் கோட்டைக்குள்ளே.

கோட்டைக்குள் ஒரு மூலையில் தனித்திருந்த கொட்டடியில் ஜடிலன் அடைக்கப்பட்டான். அவன் புரவியை தன் அறைச் சாளரத்து அருகிலேயே கட்டும்படி ஜடிலன் கேட்டுக் கொண்டதால் வீரர்கள் அப்படியே கட்டிவிட்டுச் சென்றனர். இரவு சூழ்ந்து முற்றியது. காலாகாலத்தில் நல்ல உணவு அளிக்கப்பட்டது அவனுக்கு. உணவு உண்ட ஜடிலன் மிக அமைதியுடன் உறங்கினான். சிறைக் காவலன், அவன் அமைதியையும் உறக்கத்தையும் கண்டு அதிசயப்பட்டான். நாளை சாகப்போகிறவனுக்கு என்ன அமைதி என்று எண்ணி வியந்தான்! "சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால்" என்றும் சொல்லிக்கொண்டான் சிறைக் காவலன் கடைசியாக. ஆனால் அத்தனை சுலபத்தில் சாவு வாலிபனை ஆட்கொள்வதாயில்லை. அவனை ஆட்கொள்ள நள்ளிரவில் ஒரு உருவம் சிறையை நோக்கி வந்தது. சிறைக் காவலனை வேலின் நுனியால் குத்தி எழுப்பவும் செய்தது. துள்ளியெழுந்த சிறைக்காவலன் வந்த உருவத்தின் முகத்தைக் கவனித்தபின், "யார், நீங்களா அரசகுமாரி?" என்று குளறவும் செய்தான் பிரமிப்புடன்.



"அந்த வாலிபர் எங்கே இருக்கிறார்?" என்று வினவினாள் முக்காடிட்டுக் கொண்டிருந்த அரசகுமாரி.

அறையைக் காவலன் சுட்டிக் காட்டவே, "திற அந்தக் கதவை" என்று உத்தரவும் இட்டாள். சிறைக்காவலன் கதவைத் திறக்க, "வேறு யாரும் இங்கே வராமல் பார்த்துக் கொள்!" என்று உத்தரவிட்ட அரசகுமாரி சிறைக்குள் நுழைந்தாள். சிறைக் காவலன் கருத்துடன் அவள் கட்டளையை நிறைவேற்றவே செய்தான். ஆனால் அந்த நாடகம் அந்த மூவருடன் நிற்கவில்லை நான்காவது உருவமொன்றும் சற்று எட்ட இருந்த மரத்தின் மறைவில் நின்று சிறையில் நடப்பதைக் கவனிக்கலாயிற்று.

# 4. நீள்விழி

மற்றுமொரு மனிதன் மரத்தின் மறைவிலிருந்து தனது நடத்தை ஒவ்வொன்றையும் கவனிக்கிறானென்பதை சற்றும் உணராமலே சிறைக்குள் நுழைந்த அரசகுமாரி அந்த அறைக்கதவை மெல்லச் சாத்திவிட்டுத் தரையில் படுத்திருந்த ஜடிலனை உற்றுப் பல விநாடிகள் நோக்கிய வண்ணம் நின்றாள். வெளியே காய்ந்த வெண்ணிலவு சாளரக் கம்பிகளின் மூலமாக லேசாக அவன்மீது விழுந்திருந்ததால் படுத்திருந்த நிலையிலும் அந்த வாலிபன் மிக அழகாயிருப்பதைக் கவனித்தாள் அரசகுமாரி.

கால்களை லேசாக மடக்கிக்கொண்டும், மடிந்த ஒரு கையில் முகத்தைப் புதைத்துக்கொண்டும், தலைமயிர் அக்கம் பக்கம் விழுந்து கிடக்க அவன் படுத்திருந்த நிலை ஏதோ சண்டித்தனம் செய்வது போலிருந்தது. அந்தச் சண்டித்தனத்திலும் கழுத்திலிருந்து இடுப்புவரை இருந்த உடற்பகுதி மிக உறுதியாகக் காட்சியளித்ததைக் கண்ட அரசகுமாரி, 'இத்தனை இரும்பு உடலுடையவன், இத்தனை அழகாயிருப்பவன் ஏன் சாக இஷ்டப்படுகிறான்?' என்று எண்ணிப் பார்த்து விடையேதும் கிடைக்காததால் மெல்ல கையிலிருந்த சட்டியால் அவன் உடலை ஒரு முறை லேசாகத் தட்டினாள்.



அந்தத் தட்டல் அவனைச் சிறிதும் அசைக்கவில்லையாதலால் மறுபடியும் தட்டினாள் இருமுறை. அந்தத் தட்டலுக்குப் பிறகும் சிறிதும் அசையாமலும் நெளிந்து கொடுக்காமலும் நிம்மதியாகத் தூங்கிய அந்த வாலிபனின் நெஞ்சுறுதி அரசகுமாரிக்குப் பெரிதும் வியப்பைத் தந்தது. நாளை இறக்கப் போகிறவன் இன்று எப்படி இத்தனை நிம்மதியாக உறங்க முடியும் என்று நினைத்துப் பார்த்து, சாவைப்பற்றி இவன் அதிகமாகக் கவலைப்படாதவன் என்று எண்ணிக் கொண்டதால், இத்தகைய வாலிபனைச் சாகவிடுவது மிகவும் பாவம் என்றும் மனத்துக்குள் சொல்லிக் கொண்டாள். ஆனால் அவள் மனம் திருப்பிக் கேட்டது கேள்வி, "இவன் இருந்தாலென்ன, போனால் என்ன? இவன்மேல் உனக்கென்ன அக்கறை?" என்று.

"ஆம். என்ன அக்கறை?" என்று அவளும் திருப்பிக் கேட்டாள்.

"தெரியவில்லையா உனக்கு?" என்று திருப்பிக் கேட்டது மனம்.

தெரிந்திருந்தது அவளுக்கு. இந்த வாலிபனிடம் வேறொருவரிடத்தும் உதயமாகாத அனுதாபம் தனக்கு உதயமாய் இருந்ததை உணர்ந்துகொண்டாள் அவள். அந்த அனுதாபத்திற்குக் காரணம் மட்டும் புரியவில்லை அவளுக்கு. துணிவுடன் கையைப் பிடித்தவனிடம் எதற்கு எனக்கு அனுதாபம் என்று வினவிக்கொண்டாள் அரசகுமாரி. அவள் மனம் மீண்டும் மீண்டும் கேட்டது:

"உனக்கு அவன் மேல் ஏற்பட்டிருப்பது அனுதாபந்தானா?" என்று.

அந்தக் கேள்வி அவளைத் தூக்கிவாரிப் போட்டது ஒரு விநாடி.

"ஆம், அனுதாபந்தான். வேறென்ன இருக்க முடியும்?" என்று பதில் கேள்வி தனக்குத்தானே போட்டுக் கொண்ட அவன், "சேசே! சற்று முன்புதான் பார்த்தேன் இவரை, முன்பின் தெரியாத பயணி, இளம் வயதாயிருக்கிறதே, சாகவிடக் கூடாதென்ற அனுதாபந்தான். வேறென்ன?" என்று தன்னைச் சமாதானமும் படுத்திக் கொண்டு, மனம் எழுப்பிய கேள்விகளால் தன்னைப் பற்றிச் சிறிது சினமும் கொண்டு, வேலால் அவனை மூன்றாம் முறை சற்று அதிகமாகவே குத்தினாள்.

இம்முறை அவள் எதிர்பாராத நிகழ்ச்சி ஏற்பட்டது. குத்திய வேல் திடீரென்று இழுக்கப்பட்டு அரசகுமாரி அந்த வாலிபன் மீது விழப்போனாள். வேலை இழுத்த வாலிபன் வந்திருப்பது அரசகுமாரியென்பதை அறிந்த உடன், அவள் உடல் தன்மீது விழாதிருக்கத் தனது இடது கையை விழுந்த அவள் உடலுக்குக் குறுக்கே நீட்டித் தடுத்தான். அதனால் விழாமல் நிதானித்துக் கொண்ட அரசகுமாரி, அவனிருந்த இடத்திலிருந்து சற்று தள்ளி உட்கார்ந்துகொண்டாளானாலும் அவள் சித்தம் பெரிதும் நிலைகுலைந்திருந்தது. குறுக்கே அவன் கைநீட்டி தடுத்த போது எழுச்சியுற்ற அவள் அழகு பிம்பங்களிரண்டும் உறுதியான அவன் கையில் பட்டுவிட்டதால், அவள் உடலில் விவரிக்க இயலாத வேகமும் பயமும் கலந்த உணர்ச்சி பாய்ந்து கொண்டிருந்தது. 'இவரை எழுப்ப எதற்காக சிறைக்கு வந்தோம்' என்று நொந்தும் கொண்டாள், அரசகுமாரி. அப்படி நொந்துகொண்டது உண்மைதானா என்பதில் அவளுக்குச் சந்தேகமும் இருந்தது.

ஆனால் ஜடிலன் தன்னைக் கண்ணிமைக்கும் நேரத்தில் சமாளித்துக்கொண்டான். சட்டென்று அரைவாசி உட்கார்ந்துகொண்ட நிலையிலிருந்து எழுந்து நின்று கொண்டு அரசகுமாரியை உற்று நோக்கினான். வெளி



நிலவு அவள் மீதும் விழுந்தால் அவள் உடல் மோகனாகரமாகக் காட்சியளித்தது. திடீரென விழுந்ததால் சற்றே கலைந்த ஆடை, சிறிய குழல்கள் ஓரிரண்டு, இடம் மாறிவிட்ட மல்லிகைச்சரம், சந்திரவதனத்தின் பீதி, கலவரம், இவையனைத்தும் சேர்ந்து, சாபத்தால் சிறையால் வந்து விழுந்துவிட்ட தேவலோக மோகினியைப்போல் காணப்பட்டாள் அரசகுமாரி. அலைந்த சூழலை அடுத்த சங்குக் கழுத்து, திறந்த இடை, சேலை சற்றே மேலே ஏறிவிட்ட கால்கள், இவை மூன்றும் நிலவின் வெண்மையை வெட்கச் செய்ததாலும் சிவந்துவிட்ட முகம், வெண்மையைப் பழிக்கும் அழகும் உலகில் உண்டு என்று நிருபித்தாலும் ஒரு விநாடி நிலைகுலைந்த உள்ளத்துடன் நின்றான் ஜடிலன். பிறகு தனது சங்கடத்தை உதறிக்கொண்டு, "அரசகுமாரி! இது தவறு. நீங்கள் இந்தச் சிறைக்கு வந்திருக்கக் கூடாது" என்றான் குரலில் கடுமையைக் காட்டி.

தன்னிடம் அப்படி அவன் கடுமையைக் காட்டியது அவளுக்கு மிகவும் திருப்தியாயிருந்தது. இருந்த போதிலும் அதை வெளிக்காட்டாமல், "தவறு என்பதை இங்கு வந்த பிறகுதான் உணர்ந்து கொண்டேன்" என்றாள் அவளும் கடுமையான குரலில்.

"இங்கு வந்த பிறகா!" என்று கேட்டான் ஜடிலன் வியப்புடன்.

"ஆம்; நீங்கள் வேலைப் பிடித்து இழுத்து என்னைத் தள்ளிய பிறகு" என்ற அரசகுமாரி, "இதற்கென்ன தண்டனை தெரியுமா?" என்று கேட்டாள்.

"தெரியும், மரணதண்டனை" என்றான் ஜடிலன் புன்முறுவலுடன்.

"மரண தண்டனை என்றால் உங்களுக்கு வேடிக்கை யாக இருக்கிறதா?" என்று வினவினாள் அரசகுமாரி சினம் தொனித்த குரலில்.

"அரசகுமாரி! வாவியில் குளித்ததற்கு ஒரு மரண தண்டனை; இங்கு உங்களை இழுத்துத் தள்ளியதற்கு ஒரு மரண தண்டனை. இரண்டு தடவை என்னை யாரும் கொல்ல முடியாது. இனிமேல் நான் எத்தனை முறை குற்றம் செய்தாலும் தண்டனை ஒன்றே ஒன்றுதான். ஒரே முறைதான் அதை செயல்படுத்தவும் முடியும். ஆகையால் இனியும் நான் குற்றம் புரியலாம்" என்றான் அலட்சியத் துடன் ஜடிலன்.

"வேறென்ன குற்றம் புரிவீர்கள்?" என்று அவளும் சீற்றத்துடன் கேட்டாள்.

அவன் பதில் கூறவில்லை. அவள் அழகிய உடலை ஆவலுடன் உற்று நோக்கினான். அதைக் கவனித்த அரச குமாரி நடுங்கினாள். அவன் கண்கள் நிலைத்த இடங்களை எண்ண எண்ண அவள் திகில் அதிகமாயிற்று. ஆனால் அவள் திகிலை அகற்ற அவன் தனது பார்வையைச் சில விநாடிகள் சிறைக் கம்பிகளுக்கு வெளியே ஓட விட்டான். பிறகு திடீரென அவளை நோக்கித் திரும்பி, "அரசகுமாரி! சீக்கிரம் அறையை விட்டு வெளியே சென்று விடுங்கள்" என்றும் கூறினான். அவன் குரலில் லேசாக பயம் தெரிந்தது.

அச்சம் அவன் குரலில் தொனித்தது அவளுக்கு வியப் பாய் இருந்தது. ஆகவே அவள் மெல்ல எழுந்து நின்றாள்.

"அறையை விட்டு வெளியே செல்வதும் செல்லாததும் என் இஷ்டம்" என்று வீம்புக்குக் கூறினாள் அரசகுமாரி.



ஜடிலன் முகத்தில் சற்று பரிதாபச் சாயை படர்ந்தது. "இல்லை அரசகுமாரி, உங்கள் இஷ்டமில்லை, சமுதாயத் தில் நாம் இருக்கிற வரையில் நமது இஷ்டம் என்பது சொற்பம். நீங்கள் என்னை விடுதலை செய்ய வந்திருப்பது எனக்குப் புரிகிறது. அதைச் செய்ய நீங்கள் நேரிடையாக வந்தது தவறு. அதுவும் இரவு முற்றிய இந்த நேரத்தில் வந்தது தவறு. உங்கள் உயர்ந்த நிலைக்கு அது உகந்த தில்லை" என்றான்.

அவன் கூறியதன் பொருள் அவளுக்குப் புரிந்திருந்தது. இருப்பினும் பிடிவாதத்துடன் கூறினாள், "வீரரே! உம்மைப் போன்ற வீரனை, வாலிபனை அழிக்க எனக்கு இஷ்டமில்லை. ஆகையால் உங்களை விடுதலை செய்ய வந்தேன்" என்று.

"அதற்கு யாரையாவது காவலனை அனுப்பி உத்தர விட்டால் போதுமே" என்றான் ஜடிலன்.

"போதாது வீரரே! நான்கூட உம்மை நேரடியாக விடுதலை செய்ய முடியாது. இந்தக் கதவைத் திறந்து விட்டு நீங்களாகத் தப்பிவிட்ட நிலையைச் சிருஷ்டிக்கவே இங்கு வந்தேன்" என்று விளக்கினாள் அரசகுமாரி.

அவள் விளக்கம் அவனைப் பெரிதும் குழப்பவே செய்தது. "என்ன! என்னை விடுதலை செய்ய உங்களால் முடியாதா? நான் தப்பிவிட்டதாகப் பொய்யைச் சிருஷ் டிக்க வந்தீர்களா?" என்று அவன் சொன்ன வார்த்தை களையே கேள்வியாகத் திருப்பினான் ஜடிலன்.

"ஆம்" என்றாள் அவள் சற்றே துயரப் பெருமூச்சு விட்டு.

"உங்களை அரசகுமாரி என்று கோட்டை வாயிற் காவலர்கள் கூறினார்கள்..."

"அரசகுமாரிதான் நான்."

"அரசகுமாரிக்கே இந்த ஊரில் அதிகாரமில்லையா?"

"கிடையாது."

"பின் யாருக்கு அதிகாரம்?"

"இங்குள்ள தர்மாதிகாரிக்கு."

"யாரவர்?"

"மாறன் காரி."

"மாறன் காரியா! சோழ மன்னன் மந்திரியா?"

"இல்லை."

"தர்மாதிகாரி என்று ஒரு தனிப்பதவி இருக்கிறதா?"

"இந்த ஊருக்கு மட்டும் இருக்கிறது."

"என்ன இந்த ஊரில் அப்படிப்பட்ட விசேஷம்?"

அரசகுமாரி சிறிது சிந்தித்தாள். "இந்த ஊரின் பெயர் தெரியுமா உங்களுக்கு?" என்று வினவினாள் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

"சொல்லுங்கள்." ஜடிலன் குரலில் குழப்பமிருந்தது. ஊரின் பெயருக்கும் இவள் நிர்க்கதியான நிலைக்கும் என்ன சம்பந்தம் என்ற நினைப்பினால்.

"இதைப் பெண்ணாகடம் என்று அழைக்கிறார்கள். ஊர் நீண்ட நாளாக இருக்கிறது. ஆனால் பெயர் சில வருஷங்களாகத்தான் சூட்டப்பட்டிருக்கிறது." என்று கூறினாள் அரசகுமாரி.

ஜடிலன் அதற்குப் பதிலேதும் கூறவில்லை. அவளே மேலே பேசட்டுமென்று வாளாவிருந்தான். அரசகுமாரி அவன் மௌனத்தின் குறிப்பறிந்து மேலே கூறினாள்: "வீரரே! இந்த ஊர் சோழ நாட்டைச் சேர்ந்ததென்பதை



நான் உமக்குக் கூறத் தேவையில்லை. இந்த ஊருக்குள் வந்தபோது இதில் பெண்கள் அதிகமாயிருந்திருப்பதைக் கவனித்திருப்பீர்கள். அதுவும் யுவதிகளே அதிகமாய் இருப்பதையும் கண்டிருப்பீர்கள். இங்கு நடக்கும் பொதுச் சந்தைக்கும், சோழ நாட்டின் முக்கிய தனிகர்களே வருகிறார்கள். வாயிலில் காவலர் தடையேதும் செய்யாவிட்டாலும் உன்னிப்பாய் வருகிறவர் போகிறவர்களைக் கவனிக்கிறார்கள். சிறிது சந்தேகமாயிருப்பவர்கள்கூட சிறை செய்யப்படுகிறார்கள். ஆண்கள் அணுகக்கூடாத இடங்கள் சில உண்டு. அங்கு செல்லும் ஆண்கள் தண்டிக்கப் படுகிறார்கள். இந்த உட்கோட்டையில் நானும் இன்னும் சில குறுநில மன்னர்களின் குமாரிகளும் வசிக்கிறோம். எங்களுக்கு நீராட அந்தத் தாமரை வாவியும் தோட்டமும் நிறுவப்பட்டிருக்கின்றன. அங்கு வருகின்றவர்களுக்கே மரண தண்டனை உண்டு. குளிப்பவர்களைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. பெண்களுக்காகவே ஏற்பட்ட இக்கட்டை 'பெண்ணாகடம்' என்று அழைக்கப்படுகிறது. இது உண்மையில் சோழ நாட்டு அரசகுமாரியின் சிறை" என்று.

ஜடிலன் முகத்தில் வியப்பு அதிகமாகப் படர்ந்தது. "சிறையா! கன்னிமாடமென்று சொல்லுங்கள்" என்று திருத்தினான் அவன்.

"கன்னிமாடம் தஞ்சை மாநகரிலேயே இருக்கிறது. கன்னிமாடமல்ல இது. சந்தேகமின்றி சிறைதான். ஆனால் கம்பிகளில்லாத சிறை. இங்கு அழகு அதிகம், மலர்கள் அதிகம், ஆபரணங்கள் அதிகம், பட்டாடைகள் அனந்தம். சகல சௌபாக்கியங்களுமுள்ள பெரும் சிறை இப் பெண்ணாகடம். இரண்டு ஆண்டுகளாக இங்கு நாங்கள் வசிக்கிறோம்," என்றாள் அரசகுமாரி.

"ஏன் வசிக்கிறீர்கள்? யார் உங்களை சிறை வைத்திருப்பது சோழ மன்னனா?" என்று வினவினான் ஜடிலன்.

"இல்லை" என்றாள் அவள்.

திடீரென்று ஏதோ நினைத்துக்கொண்டு அவளை நோக்கி வினவினான்: "உங்கள் பெயர் என்ன?" என்று.

அரசகுமாரி அவன் கண்களுடன் தன் கண்களைக் கலந்தாள். "இந்த துரதிர்ஷ்டக்காரியின் பெயர் நீள்விழி" என்று மெல்ல பதில் கூறினாள்.

ஜடிலன் அசைவற்று நின்றான். பல விஷயங்கள் புரிந்தது அவனுக்கு. விதியின் விசித்திரத்தை எண்ணி உள்ளூர வியந்தான். "நீள்விழி! எத்தனை அழகான பெயர்! எத்தனை பொருத்தமான பெயர்!" என்று இரண்டு மூன்று முறை தன்னுள் சொல்லிக் கொண்டான். அத்துடன் பெருமூச்சு விட்டு அவளை அணுகி, "அரசகுமாரி! இப்படி ஓர் அற்புதம் என் வாழ்வில் நிகழுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. விதியின் வழியை நிர்ணயிக்க நீங்கள் யார்? நான் யார்?" என்று கூறிவிட்டுத் தனது இடையிலிருந்து ஓர் ஓலையை எடுத்து அவள் கையில் திணித்தான். நிலவொளியில் ஓலையில் கண்களை ஓட்டினாள் அவள். அவள் கண்களையே அவளால் நம்ப முடியவில்லை. நிலவில் எழுத்தைப் பூரணமாகப் படிக்க முடியவில்லை அவளால். ஆனால் எழுதியிருப்பது ஓரளவு புரிந்தது அவளுக்கு. நன்றி ததும்பிய கண்கள் ஓலையிலிருந்து எழுந்து வாலிபன் கண்களுடன் உறவாடின.

# 5. அழகு தந்த ஆபத்து

**வா**வியில் குளித்து வலிய சிறைப்பட்ட வாலிபன் கையில் தந்த அந்த ஓலையின் மீது கண்களை ஓடவிட்டதுமே சிந்தையில் விரிந்த விந்தையின் காரணமாக வியப்பின் சாயை அவள் சுந்தரமுகம் பூராவும் படரவே, மீண்டும் மீண்டும் அந்த ஓலையைத் திரும்பப் பார்த்த வண்ணமே சில விநாடிகள் நின்றுவிட்டாள் நீள்விழி. சிறைக் கம்பிகளுக்கு வெளியிலிருந்து வந்த வான்மதியின் வெளிச்சத்தில் ஓலையின் எழுத்துக்கள் தெளிவாகத் தெரிய வில்லையாயினும் வாசகத்தின் மேலும் கீழும் பொறிக்கப் பட்டிருந்த அதிகார இலச்சினைப் பளிச்செனத் தெரிந்ததால் அந்த ஓலையை அனுப்பியவர் யாரென்பதைப் புரிந்து கொண்ட சோழ மன்னன் புதல்வி சில விநாடிகளுக்குப் பிறகு ஓலையில் இருந்த கண்களை வாலிபன் மீது திருப்பி, "நீங்கள் யாரென்பதை ஏன் முன்னமே சொல்லவில்லை?" என்று வினவினாள் வருத்தந் தோய்ந்த குரலில்.

ஜடிலன் உடனடியாக அவளுக்குப் பதில் கூறவில்லை. வெளியிலிருந்து வந்த நிலவொளி அவளுக்கு எத்தகைய மெருகை அளித்திருந்ததென்பதைக் கவனித்துக்கொண்டு ஏதும் பேசாமலே நின்றான் பல விநாடிகள். சிறைக் கம்பிகளுக்கருகில் அவள் ஒருக்களித்து நின்றிருந்தபடியால் முகத்தில் ஒரு பகுதியில் மட்டுமே விழுந்திருந்த நிலவு

அந்தப் பகுதியிலிருந்த கன்னத்தையும், கண்ணையும் ஒரு பகுதி நாசியையும் பெரிதும் பளிச்சிடச் செய்திருந்தாலும், முகத்தில் மறுபுறத்தில் சிறை விளக்கின் மற்ற வெளிச்சம் மட்டுமே பட்டு சிறிது மங்கலான தங்க நிறமாக அவளது மற்றொரு கபோலத்தை அடித்திருந்தாலும் வெள்ளியும் தங்கமும் நிறைந்த புது ஆபரணம் போலிருந்தாள் சோழ மன்னன் மகள். அவள் தலைக் குழல்களிலிருந்து பிரிந்து வந்திருந்த நாலைந்து மயிர்களும் ஒருபுறம் சந்திர வெளிச் சத்திலும் மறுபுறம் அறை விளக்கிலும் பிரகாசித்தாலும் அவற்றின் கருமை நிறம் அதிகப்பட்டதே தவிர சிறிதும் குறையவில்லை. தலையிலிருந்த சிறு சுட்டியிலிருந்த விலை உயர்ந்த கற்கள் பலவிதமாகப் பிரகாசித்தாலும் அவள் நுதலில் எத்தனை எத்தனையோ வண்ணங்களை வீசி நுதலில் ஏதோ மாயா ஜாலம் நிகழ்வதைப் போன்ற பிரமையை ஏற்படுத்தின. அவள் அணிந்திருந்த மெல்லிய சேலையும் அதைப் புறக்கணிக்க முயன்ற மார்பகத்தின் இரு பக்கங்களுங்கூட இருவித விந்தைகளை வெண்ணில விலும் சிறை விளக்கிலும் சிருஷ்டித்தன. அவள் மேலா டைக்குள் மார்பின் நடு ஆற்றில் மிதந்த கழுத்துச் சங்கிலி யின் முகப்பு உள்ளிருந்து எட்டிப் பார்த்துக் கொண்டிருந் தது. இத்தனைக்கும் மேலாக வெளேரென்று இடையின் அமைப்பு சித்தத்தை மயக்குவதாக அமைந்திருந்தது. இத்தனையும் கவனித்த ஜடிலன் மீண்டும் வேதாந்தியாக மாறினான். "வாழ்க்கையின் தன்மைக்கும் அரசகுமாரிக் கும் சிறிது வித்தியாசமிருக்கத் தான் செய்கிறது. வாழ்க்கை இருளும் வெளிச்சமும் சேர்ந்தது. ஆனால் அரசகுமாரியின் ஒருபுறம் சந்திர வெள்ளியாகவும் மற்றொருபுறம் சிறை விளக்கின் தங்க ஒளியாகவும் திகழ்கிறது; இரு புறத்திலும் இவளிடம் அழகுதானிருக்கிறது. வெளிச்சந்தான் இருக் கிறது. இருளில்லை கல்மஷமில்லை" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.



நீள்விழியின் கண்கள் மீண்டும் அந்த வாலிபன் மீது நிலைத்தன. தனது கேள்விக்கு அவன் பதில் சொல்லா ததையும் தன்னைக் கூர்ந்து நோக்கிக்கொண்டு ஏதோ யோசித்துக்கொண்டு நிற்பதையும் பார்த்த அவள் ஒரு விநாடி சங்கடத்துக்குள்ளானாள். துருவிப் பார்த்த அவன் பார்வையின் விளைவாக, மற்றொரு விநாடி சற்று சினத்துக் கும் உள்ளானாள் அவன் பதில் கூறாததால். ஆகவே மீண்டும் கூறினாள்; "நான் ஒரு கேள்வி கேட்டேன்" என்று.

அந்தக் கேள்விக்குப் பிறகே சுயநிலை அடைந்த ஜடிலன், "ஆம் ஆம், கேட்டீர்கள்" என்றான் சிறிது தடுமாற்றத்துடன்.

"நீங்கள் யார் என்பதை முன்னமே ஏன் சொல்ல வில்லை என்ற கேள்வி அது" என்று வலியுறுத்தினாள் நீள்விழி உள்ளே எழுந்த சினம் குரலிலும் ஊடுருவி ஒலிக்க.

ஜடிலனும் ஒப்புக் கொண்டான் அவசர அவசரமாக. "ஆம் ஆம். அதுதான் கேள்வி" என்று.

அவன் பதிலில் இருந்த அவசரத்தையும், அச்சத்தையும் கவனிக்கவே செய்தாள் நீள்விழி எந்த மகாவீரனும் பெண்களுக்கெதிரில் கோழைதானென்பதைப் புரிந்து கொண்டதால் சினம் அகன்றது அவள் முகத்தில். புன்முறு வல் புகுந்தது உதடுகளில். "கேள்விக்கு ஏன் பதில் சொல்ல வில்லை?" என்று புன்முறுவலின் ஊடே விசாரிக்கவும் செய்தாள்.

ஜடிலன் சிறிது சிந்திக்க முற்பட்டான். பிறகு முகத்தில் விரிந்த விஷமச் சாயையுடன் சொற்களை மெல்ல உதிர்த் தான். "அரசகுமாரி! விதி என்று ஒன்று உண்டு. நீங்கள் அதை நம்புகிறீர்களா?" என்று.

அந்தச் சமயத்தில் வேதாந்தம் எதற்கு என்பது புரியவில்லை அரசகுமாரிக்கு. ஆகவே குழப்பம் மிகுந்த விழிகளை அவன் மீது காட்டி, "இப்பொழுது அதைப்பற்றி என்ன?" என்று வினவினாள்.

"அதற்கும் உங்கள் கேள்விக்கும் சம்பந்தமிருக்கிறது" என்றான் ஜடிலன்.

"என்ன சம்பந்தம்?" என்று கேட்டாள் நீள்விழி ஏதும் புரியாமல்.

ஜடிலன் சிறைக் கம்பிகளுக்கு வெளியில் சில விநாடிகள் பார்த்தான். பிறகு ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டவன் போல் உட்புறம் திரும்பி நீள்விழியின் முகத்தில் நிலைத்தன. "அரசகுமாரி!" என்று பிறகு அவன் துவங்கிய பேச்சில் ஏதோ ஆழமும் கவலையும் ஒலித்தது.

"சொல்லுங்கள் வீரரே" என்று நீள்விழி ஊக்கினாள்.

"முதலில் இந்த ஊருக்கு வர நான் விரும்பவில்லை. புறப்பட்ட சமயத்தில்..." என்று வாசகத்தை முடிக்காமல் விட்டான் ஜடிலன்.

அரசகுமாரி பதிலுக்கு, 'உம்' என்று கொட்டினாள், அவனே கதை முழுவதையும் சொல்லட்டுமென்று. ஜடிலனே மேலே சொன்னான்: "தஞ்சைக்கு அருகில் இப்படி ஓர் ஊர் இருப்பதே எனக்குத் தெரியாது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஒருமுறை நான் வந்தபோது இந்த இடத்தில் ஒரு சிற்றூர் இருந்தது. அதை சிற்றூர் என்றே இங்கிருந்த குடிமக்கள் அழைத்து வந்தார்கள். இங்கு ஒரு சிறு நகரத்தையோ கோட்டையையோ நான் எதிர்பார்க்கவில்லை."



"ஆம் ஆம். இந்த நகரம் முழுதும் நிர்மாணமாகி மூன்று வருஷங்களுக்குள்ளாகத்தான் ஆகிறது" என்று அரசகுமாரி ஒப்புக்கொண்டாள்.

"சிற்றூர் நகரமாகியதே எனக்கு வியப்பாயிருந்தது. நகரம் பெண்களின் நகரமானதும் எனக்கு வியப்பாயிருந்தது. இந்த வியப்புடன் வாவியில் குளித்தபோது அதற்கு ஒரு தண்டனையும் உண்டு என்பது பெரும் வியப்பைத் தந்தது" என்றான் ஜடிலன்.

அரசகுமாரியின் இதழ்களில் இளநகை உதயமாயிற்று. "அந்த வாவியிலிருந்து உங்களை வெளியேற்ற நான் வந்தது அதிக வியப்பைத் தந்திருக்கலாம்" என்று கூறினாள் அரசகுமாரி சற்றே நாணம் துளிர்ந்த குரலில்.

"ஆம் அரசகுமாரி, அது பெரு வியப்பைத்தான் தந்தது. நீங்கள் வீசிய வேல் எத்தனை பயங்கரமாகப் பறந்து வந்தது அரசகுமாரி! என்னைத் தவிர அங்கு யாராவது நீராடியிருந்தால் அவன் உயிரை வேல் நிச்சயமாகக் குடித்திருக்கும்" என்று கூறிய ஜடிலன் பெருமை நிரம்பிய விழிகளை அவள்மீது நிலைக்கவிட்டு, "அரசகுமாரி! தமிழகத்தின் பெண்களுக்கு நல்லவேளை போர்ப் பயிற்சி அளிக்கவில்லை. அளித்திருந்தால் ஆண்கள் பிழைப்பது கஷ்டம்" என்று கூறினான்.

"வீரரே!" என்று இழுத்தாள் அரசகுமாரி.

"ஏன் அரசகுமாரி!"

"ஆண்களின் புத்தி மட்டும் ஒரே விதந்தான்."

"என்ன விதம் அது?"

"பெண்களைக் கண்டால் புகழ்வது. அவர்கள் பல்லிளித்தால் ஏமாற்றுவது..."

"ஏமாற்றி...?"

"நல்ல கேள்வி..."

"என்ன என் கேள்விக்கு?"

"நுட்பம் இருக்கிறது அதில்."

"என்ன நுட்பம் அரசகுமாரி?"

"அயோக்கியத்தனம்."

இதைக்கேட்ட ஜடிலன் நகைத்தான். "அரசகுமாரி! எல்லா ஆண்களையும் பொதுவாக எடை போடாதீர்கள்" என்றும் கூறினான்.

"இந்த விஷயத்தில் எல்லா ஆண்களும் ஒன்றுதான்" என்று சீறினாள் நீள்விழி.

"நான் என்ன அப்படித் தவறாக நடந்து கொண்டேன்?" என்று வினவினான் ஜடிலன்.

அரசகுமாரியின் சிந்தனையில் வாவிக்கருகில் தன் புரவியின் அருகில் வந்த அவன் பார்த்த பார்வையும் இப்பொழுதும் சற்று முன்பு அவன் நோக்கிய நோக்கும் எழுந்ததால், "என்ன தவறா! அந்தக் கண்கள் எதற்காக அப்படி உற்று உற்றுப் பார்த்தன?" என்று உள்ளூரக் கேட்டு நகைத்தும் கொண்டாள். அப்படி அவன் பார்த்தது தனக்கு தவறாகத் தோன்றாததையும் எண்ணிப் பார்த்த அவள் தன்மீது சினமும் கொண்டாள். ஆகவே பேச்சை மாற்றி, "சரி சரி! இது எதற்கு வீண் பேச்சு? நீங்கள் யாரென்பதை ஏன் சொல்லவில்லை!" என்று ஆரம்பக் கேள்வியைத் திருப்பினாள் அரசகுமாரி.

ஜடிலனும் சுய உணர்வடைந்து பேச்சைத் தொடர்ந் தான்: "சொல்ல வாய்ப்பு எங்கிருந்தது அரசகுமாரி! புது



விதமான, நான் சற்றும் எதிர்பாராத ஒரு நகருக்குள் நுழைகிறேன். குளித்தபோது என்மீது ஒரு வேல் பாய வருகிறது. கரையேறி வந்து பேச முற்பட்டதும் வேலெறிந்த வித்தக்காரி பதிலேதும் சொல்லாமல் புரவியைத் திருப்பிக் கொண்டு செல்கிறாள். அவள்தான் நான் தேடிவந்த நீள்விழி என்பது எனக்கெப்படித் தெரியும்? அவள்தான் சொல்லவில்லை. என்னைத் தடுத்த கோட்டைக் காவலர் கூட பெயரை உச்சரிக்கவில்லை. சிறையில் தெரியுது பெயர். தஞ்சையில் சந்திக்க வேண்டிய அரசகுமாரியை பெண்ணாகடத்தில் சந்திக்கிறேன். சோழ அரசகுமாரிகள் மூவரில் நான் சந்தித்த அழகிதான் நீள்விழி என்று எப்படித் தெரியும்?" என்று வினவினான் ஜடிலன். பிறகு அவளை நோக்கி நகைக்கவும் செய்தான் மெல்ல.

"ஏன் நகைக்கிறீர்கள்?" என்று வினவினாள் நீள்விழி.

"என் மடமையை நினைத்துச் சிரித்தேன்."

"மடமையா!"

"ஆம். உங்கள் விழிகளைப் பார்த்து உங்கள் பெயரை ஊகித்திருக்கலாம் நான். ஆனால் புத்தி அத்தனை கூர்மையாயில்லை."

ஜடிலன் தன் நீண்ட விழிகளைச் சுட்டிக் காட்டியதும் நிலத்தில் அவற்றை நிலைக்கவிட்டாள் அவள். "ஆம் வீரரே! விழிகளைக் கொண்டுதான் பெயரிட்டார்கள் எனக்கு" என்றாள் அரசகுமாரி.

"காரணப் பெயரா அரசகுமாரி?" என்று வினவினான் ஜடிலன்.

"ஆம். ஏன் கேட்கிறீர்கள்?"

"காரணத்துடன் உலகத்தில் நடக்கும் காரியங்கள் சொற்பம். அந்தக் காரியங்களிலும் சிலவற்றுக்குத்தான் பிரசித்தி ஏற்படுகிறது."

"அப்படியானால் என் பெயர்..."

"நாடறிந்தது அரசகுமாரி. உங்களைப் பற்றித் தமிழகத்தில் கேள்விப்படாதவர்கள் கிடையாது."

"அதனால் என்ன பயன் வீரரே?"

"புகழ் பயனற்றதா அரசகுமாரி?"

"பயனற்றது மட்டுமில்லை. நான் சம்பந்தப்பட்ட மட்டில் அபாயமானதுங்கூட..."

"ஏன் அரசகுமாரி?"

"எதற்காக நீங்கள் அனுப்பப்பட்டிருக்கிறீர்கள்?"

"உங்களை ஆபத்திலிருந்து காப்பாற்றவா?"

"ஆம்."

"என்ன ஆபத்து உங்களுக்கு?"

"இரண்டு அரசர்களால் விரும்பப்படுகிறேன்."

"யாரவர்கள்?"

"பல்லவ மல்லர் ஒருவர்."

ஜடிலன் திகைத்து நின்றான். பல்லவ சாம்ராஜ்யாதிபதி நீள்விழியை விரும்புகிறாரென்ற செய்தி அவனுக்குப் பெரும் வியப்பையும் ஓரளவு அச்சத்தையும் தந்தது. "யார் நந்திவர்மரா? பல்லவ சாம்ராஜ்யாதிபதியா!" என்று வியப்பும் அச்சமும் கலந்த குரலில் வினவவும் செய்தான் ஜடிலன்.



"ஆம்" என்ற நீள்விழி துயரப் பெருமூச்சு விட்டாள்.

அந்தப் பெருமூச்சைக் கவனிக்கவே செய்தான் ஜடிலன். அவன் இதயத்திலும் அந்தப் பெருமூச்சு துன்பத்தை விளைவித்தது. இருப்பினும் அதை வெளிக்குக் காட்டாமல் வினவினான், "இன்னொருவர் யார்!" என்று.

"கொங்கு நாட்டு மன்னன்" என்றாள் நீள்விழி. இப்பொழுது அவள் சொல்லில் துயரமில்லை. மிதமிஞ்சிய வெறுப்பே ஒலித்தது.

"கொங்கு மன்னனுக்கு வயது அதிகமாயிற்றே" என்றான் ஜடிலன்.

"ஐம்பது வயது அதிகமில்லையென்று கொங்கு மன்னர் நம்புகிறார். இந்தப் பைத்தியம் யாரையும் எந்த வயதிலும் பிடித்துக்கொள்கிறது" என்று நீள்விழியின் சொற்களில் வெறுப்பு முன்னைவிடப் பல மடங்கு அதிகமாக ஒலித்தது.

ஜடிலன் பதிலேதும் சொல்லவில்லை. அவனையும் மீறி உணர்ச்சிகள் அவன் உடலை ஊடுருவிச் சென்று கொண்டிருந்தன. தான் எண்ணி வந்த காரியம் அத்தனை சுலபமல்லவென்பதைப் புரிந்து கொண்டதால் சிறிது நேரங்கழித்துப் பெருமூச்சும் விட்டான். நீண்ட யோசனைக்குப் பிறகு, "அரசகுமாரி..." என்று அவன் அழைத்த போது அதில் கவலையும் தொனித்தது.

"என்ன வீரரே?" என்று அவளும் கேட்டாள் கவலையுடன்.

"தமிழகத்தில் மீண்டும் போர் நிகழும்" என்று அறிவித்தான் ஜடிலன் திட்டவட்டமாக.

"ஆம் வீரரே!" என்றாள் அரசகுமாரி.

"அதைத் தவிர்க்க முடியுமென்று நினைக்கிறீர்களா?" என்று வினவினான் ஜடிலன்.

"முடியுமென்று தந்தை நினைக்கிறார். அதற்காகத் தான் உங்களை அழைத்திருக்கிறார்" என்றாள் நீள்விழி.

"போரைத் தவிர்க்க என்ன வழி சொல்கிறார் அவர்?" என்று வினவினான் ஜடிலன்.

"வழி எனக்குத் தெரியாது. ஆனால் ஏதோ ஒரு வழியை அவரும் தர்மாதிகாரியும் யோசித்திருக்கிறார்கள்" என்றாள் அரசகுமாரி!

ஜடிலன் நீள்விழியை உற்று நோக்கினான். பிறகு சொன்னான், "அரசகுமாரி! உங்கள் அழகு ஆபத்தானது" என்று.

அதற்கு பதில் அவளிடமிருந்து வரவில்லை. சிறை வாயிற்படியிலிருந்து வந்தது. "அதை நீ புரிந்து கொண்டது புத்திசாலித்தனம்" என்ற சொற்கள் ஊடுருவின சிறையின் அந்த அறையை. வாயிற்படியைத் திரும்பி நோக்கிய ஜடிலன், நீள்விழி, இருவரில் நீள்விழியின் விழிகள் திகைத்து நிலைத்தன. வாயிற்படியில் நின்றிருந்தவனின் குரூரமான கண்கள் நீள்விழியைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் அவளையும் தாண்டி ஜடிலன்மீது நிலைத்தன. "உன்னை எங்கோ பார்த்திருக்கிறேன்" என்ற சொற்களும் அவன் வாயிலிருந்து உதிர்ந்தன. அவன் குரலில் வஞ்சகம் ஒலித்தது. பார்வையிலும் அந்த வஞ்சகம் பரந்து நின்றது. நீள்விழியின் அழகு இன்னொரு புது ஆபத்தையும் சிருஷ்டித்திருப்பதைக் கண நேரத்தில் உணர்ந்து கொண்டான் ஜடிலன்.

# 6. வாளும் பொறுப்பும்

நீள்விழியும் தானும் பேசிக் கொண்டிருந்தபோது சிறிதும் சந்தடி செய்யாமல் வந்து வாயிற்படியில் நின்று கொண்டிருந்தவனுடைய வயது தன்னுடைய வயதுக்கு அதிகமில்லையென்பதையும், உடல் வலுவிலும் அவன் தனக்கு குறைந்தவனல்லவென்பதையும் நிமிட நேரத்தில் எடை போட்டுவிட்ட ஜடிலன், அவன் சிறிதும் நம்பத் தகாதவனென்பதையும் சந்தேகமறப் புரிந்துகொண்டான்.

கோட்டை வாயிலில் தான் உட்புக முயன்றபோது புரவியேறி வந்து தன்னைச் சிறையிலடைக்கக் காவலருக்கு உத்தரவிட்டுச் சென்றவனும் அவனேதானென்பதைக் கண்ணிமைக்கும் நேரத்தில் உணர்ந்து கொண்ட ஜடிலன் அவனை மிக அலட்சியமாக நோக்கினான். அந்த வாலிப வீரனும் ஜடிலனைச் சிறிதும் லட்சியம் செய்யாமலும் அதிகார தோரணையிலும் கூறினான். "உன்னை எங்கோ பார்த்திருக்கிறேன்" என்று மறுபடியும்.

ஜடிலன் லேசாக நகைத்தான் பதிலுக்கு. "உங்களுக்கு மறதி அதிகமாயிருக்க வேண்டும்" என்று கூறினான் சிரிப்பின் ஊடே.

"எனக்கு மறதி அதிகமா?" கோபத்துடன் உதிர்ந்தன வாயிற்படியில் நின்றவன் சொற்கள்.

"ஆம். இல்லையேல் இரவின் ஆரம்பத்தில் நாம் சந்தித்ததை இதற்குள் மறந்திருக்க முடியுமா?" என்று வினவினான் ஜடிலன்.

"இரவின் ஆரம்பத்திலா? நாம் சந்தித்தோமா?" வந்தவன் கேள்வி அதிக உஷ்ணத்துடன் ஒலித்தது.

"ஆம்."

"எங்கு சந்தித்தோம்?"

"இந்த அரண்மனைக் கோட்டை வாசலுக்கு அருகில். தங்கள் உதவியில்லாவிட்டால் இந்தச் சிறைக்கு வந்திருக்கும் பாக்கியம் எனக்குக் கிட்டியிருக்காது."

வந்திருந்தவன் விழிகளில் கோபம் அதிகரித்தது. அந்தக் கோபம் தலைக்கேறிவிட்டதற்கு அறிகுறியாக அவன் புருவமும் ஒருமுறை ஏறி இறங்கியது. "டேய், இரவின் ஆரம்பத்தில் கொட்டடியில் அடைக்கச் சொன்னதை மறந்துவிட அத்தனை முட்டாளல்ல நான்" என்ற சொற்கள் கடுமை தொனித்த குரலில் உதிர்ந்தன அவன் வாயிலிருந்து.

"மகிழ்ச்சி" என்றான் ஜடிலன்.

வந்தவன் சுயநிலை இழந்தான். குரல் அடங்கி கரகரத்து ஒலித்தது. "எதற்கு மகிழ்ச்சி?" என்ற கேள்வி வெளிப்பட்டபோது.

"தாங்கள் முட்டாளல்லவென்று அறிவித்ததற்கு."

"விளையாடுகிறாயா என்னிடம்?"

"தங்களை நாடி நான் வரவில்லை விளையாட."

"நான் வந்ததாகச் சொல்கிறாயா?"

"தாங்கள் இருக்கும் நிலை, நிகழ்ந்துள்ள விஷயங்கள் அப்படித்தான் சுட்டிக் காட்டுகின்றன."



வந்த வாலிபன் அதற்குமேல் பேச முடியாமல் திணறினான் உணர்ச்சி மிகுதியால். திடீரென என்ன காரணத்தாலோ அவன் முகத்தில் தாண்டவமாடிய கோபம் மறைந்தது. அதில் பூராவும் ஆச்சரியம் படர்ந்தது. "நீ பெரும் வீரன், சந்தேகமில்லை" என்ற சொற்கள் அவன் வாயிலிருந்து உதிர்ந்தபோது அதில் மகிழ்ச்சியும் ஒலித்தது.

அந்தத் திடீர் மாற்றத்துக்கு ஜடிலனுக்குக் காரணம் புரியவில்லையாயினும், உணர்ச்சிகளை இப்படி திடீர் திடீரென மாற்றுகிறவன் பெரும் அபாயமானவன் என்ற முடிவுக்கு வந்தான். தான் மிக எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டிய மனிதர்களில் அந்த வாலிபனும் ஒருவன் என்பதும் சந்தேகமறப் புலனாயிற்று ஜடிலனுக்கு. ஆகவே தனது உணர்ச்சிகளைச் சிறிதும் வெளிக்குக் காட்டாமலே, "என்னை அனாவசியமாகப் புகழ்கிறீர்கள்; நான் ஒரு சாதாரண வீரன். தங்களைப்போல் படைகளை நடத்தும் திறனுள்ளவனல்ல" என்றும் கூறினான்.

இந்தப் பதில் வாயிலில் நின்றவனை மட்டுமல்ல; அரசகுமாரியையும் அதிர்ச்சியடையச் செய்திருக்க வேண்டும். அதுவரை ஏதும் பேசாமல் மௌனமாக நின்று கொண்டிருந்த அரசகுமாரி சற்றே தலைநிமிர்ந்து, "என்ன சொன்னீர்கள்?" என்று வினவினாள்.

"இவரைப்போல் படைகளை நடத்தும் தலைவனல்ல நான் என்று கூறினேன் அரசகுமாரி! ஏன், அது தவறா?" என்று பதிலுக்குக் கேட்டான் ஜடிலன்.

"இல்லை, சோழநாட்டுப் படைத்தலைவர்களில் இவரும் ஒருவர். இவர் படைத்தலைவரென்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டாள். அரசகுமாரி.

"அவர் கழுத்தில் இருக்கிற வீர சங்கிலிப் பதக்கத்தில் புலிக்கொடி பொறிக்கப்பட்டிருந்தது. இத்தகைய அரச

இலச்சினைகளை முக்கியமானவர்கள்தான் தரித்துக் கொள்ள முடியும். மந்திரிகள், பிரதானிகள், படைத் தலைவர்கள் அணியலாம். அமைச்சர், பிரதானி பதவிகளை அடையும் வயது இவருக்கு ஆகவில்லை."

"படைத் தலைவராக ஆக வயதாகிவிட்டதா?"

"படைத் தலைவராக ஆவதற்கு வயது அதிகம் வேண்டியதில்லை. போர் வல்லமை வேண்டும்; படைகளை நடத்தும் முறைகள் தெரிய வேண்டும். முக்கியமாக படையை நடத்துபவனுக்குத் துணிவு வேண்டும். அது இருக்கிறது இவருக்கு நிரம்ப."

ஜடிலன் விவரணத்தைக் கேட்கக் கேட்க வியப்பின் வசப்பட்ட சோழநாட்டுப் படைத்தலைவன், அரசகுமாரிக்கும் ஜடிலனுக்கும் ஏற்பட்ட உரையாடலில் உட்புகாமல் மௌனமாகவே நின்றான். கடைசியில் வினவினான்: "நீ யார்? உன் பெயர் என்ன?" என்று.

ஜடிலன் இதற்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை. அரசகுமாரியை ஒருமுறை நோக்கிவிட்டு வந்தவனையும் நோக்கினான். பிறகு, "இரண்டும் அரச குமாரிக்குத் தெரியும்" என்று சாவதானமாகப் பதில் கூறினான்.

வந்தவன் முகத்தில் மறுபடியும் சினம் உதயமாகத் துவங்கியதால் அவன் கண்கள் சற்று உருண்டன. இமைகள் விரிந்தன ஒருமுறை. "அரசகுமாரிக்குத் தெரியும் என்று சொல்ல இவனுக்கு எத்தனை நாள் அரசகுமாரியுடன் பரிச்சயம்! சற்று முன்பு வாவியில் குளித்தபோது சிறை செய்யப்பட்டவன்! என்னைவிட அரசகுமாரியை அறிந்தவன் போல் பேசுகிறான்" என்று எண்ணினான். எண்ணியதைக் கேட்கவும் செய்தான். "அரசகுமாரியை உனக்கு நீண்டநாள் பரிச்சயமோ?" என்று.



"இல்லை, தங்களுக்குள்ள பரிச்சயத்தைவிட குறைவுதான்." ஜடிலன் பேச்சில் கேலி இருந்தது.

"இன்று மாலைதான் பார்த்திருக்கிறாய் அரசகுமாரியை?"

"ஆம்."

"வாவியில் குளித்திருக்காவிட்டால் சந்தித்திருக்க நியாயமில்லை?"

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல சற்று நிதானித்தான் ஜடிலன். "நிச்சயமாகச் சொல்ல முடியாது" என்று பதில் கூறினான் சற்று நேரங்கழித்து.

"எதை நிச்சயமாகச் சொல்ல முடியாது?" என்று கேட்டான் வந்தவன் கோபத்துடன்.

"வாவியில் குளித்திருக்காவிட்டால் அரசகுமாரியைச் சந்தித்திருக்க மாட்டேன் என்பது."

"எப்படியும் சந்தித்திருப்பாயா?"

"சந்தித்திருப்பேன்."

"கட்டாயமாகச் சந்தித்திருப்பாயா?"

"ஆம், அதற்காகத்தானே வந்தேன்."

இதைக் கேட்டதும் தூக்கிவாரிப் போட்டது அந்த வாலிபனுக்கு. "எங்கிருந்து வருகிறாய் நீ?" என்று வினவினான் கடைசியில்.

"பாண்டி மாநாட்டிலிருந்து" என்று கூறினான் ஜடிலன். அதை உச்சரிக்கும்போது அவன் குரலில் சந்துஷ்டியும் பெருமையும் கலந்திருந்தது.

அந்தச் சந்துஷ்டியையும் பெருமையையும் கவனிக்கத் தவறவில்லை வாயிற்படியில் நின்ற வாலிபன். "உன் நாட்

டைப் பற்றிப் பேசும்போது உனக்குப் பெருமையாயிருக்கிறது." என்றும் குறிப்பிட்டான் அவன்.

"பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் நினைத்துப் பெருமைப்படாதவன் மனித வர்க்கத்தில் சேர்ந்தவனல்ல" என்று கூறிய ஜடிலன், "அதுமட்டுமல்ல சோழர் படைத் தலைவரே! இன்னும் பாண்டிய நாடு பல்லவர் ஆதிக்கத்துக்குள் வரவில்லை.தென் திசையில் சுதந்திரமாக இன்னும் நிற்பது பாண்டிய நாடு ஒன்று தான்" என்றும் தெரிவித்தான். இந்தக் கடைசிச் சொற்களைப் பேருணர்ச்சியோடு உதிர்த்தான் அவன். அவன் முகத்தில் அதுவரை காணப்படாத ஒளியொன்று திடீரென்று பரவியது. இருந்த இடத்தைவிட்டு சற்று இரண்டடி தள்ளி நடந்தான் அவன்.

"வாலிபனே! மனித வாழ்வில் சில சந்தர்ப்பங்கள் நாம் நினைக்காமலே விளைகின்றன. அத்தகைய சந்தர்ப்பம் என் வாழ்விலும், பாண்டி நாட்டு வாழ்விலும் தற்சமயம் ஏற்பட்டிருக்கிறது. இன்று இப்பொழுது நீ நிற்பது சிறை வாயிலிலல்ல; வரலாற்று வாயிலில் நிற்கிறாய். வரலாற்றுப் பாத்திரங்களுடன் உரையாடுகிறாய். உன் பிற்காலம் பொற்காலமாகட்டும்" என்று கூறினான் ஜடிலன். அவன் கண்களில் கனவு தெரிந்தது. சிறை வாயிலில் நின்றவனை ஏதோ சாதாரண சிறுவனைப் பார்த்துப் பேசுவதுபோல் பேசினான். பேசிவிட்டுச் சட்டென்று திரும்பிக் கேட்டான்: "உன் பெயரென்ன?" என்று.

"ஜடிலன் பேச்சினாலும், பார்வையாலும், உணர்ச்சியாலும் திகைப்படைந்து நின்றுவிட்ட சோழர் படைத் தலைவன், "விஜயன்" என்று பதில் கூறினான்.

ஜடிலன் அவனை அலட்சியமாகப் பெயர் கொண்டே அழைத்து, "விஜயா! அரசகுமாரியை அழைத்துச் செல். மீதி பேசவேண்டியதை நாளை தர்மாதிகாரி முன்பு பேசிக் கொள்வோம். இன்றைய இரவை நிம்மதியாகக் கழிப்



போம்" என்று, அவர்கள் சொல்லலாம் என்பதற்கு அறிகுறியாக வலது கையால் சைகையும் காட்டினான்.

விஜயனுக்கு என்ன சொல்வது, என்ன செய்வது என்று தெரியாததால் வாயடைத்து நின்றான். "இவன் யாரோ பாண்டிநாட்டுப் பெருங்குடி மகன். ஆகையால்தான் இப்படிப் பேசுகிறான் அந்தத் துணிவில்தான் தானாக சிறையை நாடியிருக்கிறான்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாலும் மேலும் அவனை விசாரிக்கச் சக்தியற்றவனானான். தவிர ஜடிலன் தோரணையும், அதிகாரச் சொற்களும் அவனைப் பிரமையடையச் செய்திருந்தன. ஆகையால் அவன் ஏதும் பேசாமல் அரசகுமாரியை நோக்கினான்.

அரசகுமாரியின் நிலையும் விஜயன் நிலையைவிட எந்த விதத்திலும் மாறுபட்டதாயில்லாததால் அவள் ஒரு முறை ஜடிலன்மீது கண்களை ஓட்டினாள். அந்தக் கண்களில் தொக்கியிருந்த கேள்வியைப் புரிந்துகொண்ட ஜடிலன், "என்று வாருங்கள் அரசகுமாரி" என்று கூறினான்.

அவன் கூறத்தான் கூறினானா அல்லது உத்தரவிட்டானா என்பதை நிர்ணயிக்க முடியாத அரசகுமாரி சிறைக்கூடத்தைவிட்டு வெளியேற எண்ணியவள் சற்று நிதானித்து, "நீங்கள்கூட சோழநாட்டு படைத்தலைவருடன் இரவைக் கழிக்கலாமே" என்று சொன்னாள்.

"வேண்டாம் அரசகுமாரி. இந்தச் சிறைச்சாலையிலேயே தங்கி விடுகிறேன்" என்றான் ஜடிலன்.

"சிறை தகுந்த இடமா தங்குவதற்கு?" என்று கேட்டான் விஜயன் சம்பிரதாயத்துக்கு.

"சிறையில் ஆண்டவன் பிறந்தான். அடியார்கள் பலர் சிறையிலிருந்திருக்கிறார்கள். சிறைக்குத் தனி மகத்துவம்

உண்டு" என்று கூறிப் புன்முறுவல் செய்த ஜடிலன், "சென்று வாருங்கள் நண்பரே! நாளை சந்திப்போம்" என்று கூறிவிட்டு அரசகுமாரி செல்ல வழி விட்டு நின்றான்.

அரசகுமாரி மெல்ல அவனைத் தாண்டி நடந்தாள் சிறை வாயிலை நோக்கி. அவள் வந்ததும் விஜயனும் வாயிலை விட்டு விலகி நிற்க அரசகுமாரி தலையைத் திருப்பி தனது நீண்ட விழிகளை ஜடிலன் மீது ஒருமுறை நிலைக்கவிட்டுப் பிறகு வெளியே நடந்தாள். விஜயனும் அவளைத் தொடர்ந்து நடந்தான். அவர்கள் சென்றதும் ஜடிலன் சிறைக்கம்பிகளுக்கருகில் நின்றிருந்த நீலனை அழைத்து, "நீலா, வா! எனது மேலங்கியைக் கொடு" என்று கேட்டு, அந்தப் புரவி திரும்பியதும் அதன் வயிற்றுப் பக்கத்தில் தொங்கிக் கொண்டிருந்த பையிலிருந்து ஓர் அங்கியை எடுத்துத் தரையில் போட்டுக் கொண்டு மல்லாந்து படுத்தான். அவன் மனத்தில் பெரும் நிம்மதி ஏற்பட்டிருக்க வேண்டும். அப்பொழுது முகம் மிகவும் சாந்தியைக் காட்டியது. மூடிய உதடுகளில் ஒரு புன்சிரிப்பு தவழ்ந்தது. நித்திரை அவனை நிமிட நேரத்தில் ஆட்கொண்டு விட்டது.

மறுநாட் காலை சிறையை அடுத்திருந்த மரங்களில் கூண்டு கட்டியிருந்த பட்சி ஜாலங்களின் கிலகிலா சப்தங்கள் அவனை எழுப்பவே கண்விழித்த ஜடிலன் நேரம் அதிகமாகிவிட்டதையும் கதிரவன் தோன்றி விட்டதையும் உணர்ந்துகொண்டான். அவன் விழிப்பதை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சிறைக் காவலன், வெளியில் பல் துலக்கி முகம் கழுவி நீராட சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கவே சிறையை விட்டு வெளியே வந்த ஜடிலன் நீராடிக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு சிறை வாயிலிலேயே உட்கார்ந்து கொண்டான்.



அவனைச் சுற்றிலும் காட்சி மிக ரமணீயமாயிருந்தது. சிறைச்சாலையைச் சுற்றிலும் நின்ற பெரு மரங்கள் பலப் பல மலர்களை எங்கும் உதிர்த்திருந்தன. காலைக் கதிரவனின் கிரணங்கள் மரங்களின் அடிக்கிளைகளையும் இலைக் கூட்டத்தையும் ஊடுருவி ஆங்காங்கு திட்டைத் திட்டையாக ஒளியைப் பாய்ச்சியிருந்தன. மரங்களிலிருந்து கூவிய பட்சிகளைத் தவிர மைனாக்களில் இரண்டொன்று அவன் எதிரில் சற்று தூரத்தில் நடந்து அவனைத் திரும்பித் திரும்பிப் பார்த்தன. சற்று தூரத்தில் இருந்த அரண்மனையில் காவலர் மாறியதால் அடிக்கப்பட்ட ராஜத்துவார மணியின் ஒலி எங்கும் பரந்தது. விற்பயிற்சிக்கும், வாட் பயிற்சிக்கும், வேல் பயிற்சிக்கும் படைக் கலங்களுடன் புறப்பட்ட வீரர்களின் நடையொலி தூரத்தில் கம்பீரமாகக் கேட்டது. சிறையிலிருந்து கூப்பிடு தூரத்திலிருந்த அரண்மனைக் கோட்டை வாயிலில் புரவி வீரர் வேகமாகச் சென்ற அரவமும் அவன் காதில் விழுந்தது. பெண்ணாகடத்தின் அரண்மனைக் கோட்டைக்குள் அரண்மனையைத் தவிர வேறு நாலைந்து சிறு மாளிகைகளுமிருந்ததையும் அவற்றிலிருந்து பெண்கள் காலை மங்கல கீதங்களைப் பாடும் ஒலி கேட்டதையும் கவனித்த ஜடிலன் ஆனந்தத்தின் வசப்பட்டான்.

அப்படி அவன் ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் அவனுக்கு அரண்மனையிலிருந்து அழைப்பு வந்தது. "தர்மாதிகாரி அழைக்கிறார் தங்களை" என்று வீரனொருவன் அழைக்க, சிறை வாயிற்படியை விட்டு எழுந்திருந்த ஜடிலன், "நீலா" என்று அழைத்துக் கொண்டு புரவி பின்தொடர அரண்மனையை நோக்கிக் காவலருடன் சென்றான். வாயிலிலேயே புரவி நின்றது. ஜடிலன் மட்டும் உள்ளே போனான்.

அரண்மனையின் நடுமண்டபத்தில் தர்மாதிகாரி உட்கார்ந்திருந்த ஆசனத்திலிருந்து சற்றுத் தள்ளி வேறோர் ஆசனத்தில் அரசகுமாரி அமர்ந்திருந்தாள். ஒருபுறத்தில் பூரண ராணுவ உடையணிந்து நின்றிருந்தான் விஜயன்.

தர்மாதிகாரியின் கண்கள் ஜடிலனை ஏறெடுத்து நோக்கின. நாற்பது வயதைத் தாண்டியிருந்த தர்மாதிகாரியின் கண்களைக் கண்டதும் மிகக் கூரிய அறிவு உள்ள ஒரு மனிதனைத் தான் சந்திப்பதைப் புரிந்துகொண்டான் ஜடிலன்.

தர்மாதிகாரி முதலில் எதுவும் பேசவில்லை. "பாண்டி நாட்டு வீரனே! சோழநாட்டுக்கு உன் வரவு பயனளிக்கட்டும்" என்று கூறி தனது மடியிலிருந்த ஒரு வாளை எடுத்து அவனிடம் நீட்டினார். அதை வாங்க இரு கைகளையும் நீட்டிய ஜடிலனை நோக்கி, "பாண்டிய வீரனே! நீ இப்பொழுது கையில் ஏந்தப் போவது வெறும் கத்தியை அல்ல; சோழநாட்டின் சரித்திரத்தை, அதன் இணையற்ற சின்னத்தை ஏந்தப் போகிறாய். பிடி சோழ நாட்டின் மாபெரும் பொறுப்பை" என்று கூறி வாளை அவன் இரு கைகளிலும் திணித்தார்.

அந்த வாளைக் கண்டதும் பிரமித்துச் சிலையென நின்றான் ஜடிலன். அந்த வாள் சொன்னது ஒரு பெருங் கதை. தமிழகத்தின் பெருமைக் கதை அது. யாருக்கும் கிட்டாத அதிர்ஷ்டந்தான், ஆனால் யாருக்கும் கிட்டாத ஆபத்தும் தனக்குக் கிடைத்துவிட்டதையும் உணர்ந்தான் ஜடிலன்.

அந்தச் சமயத்தில் ஒலித்தன தர்மாதிகாரியின் சொற்கள் கணீரென: "ஜடிலா! அதற்கும் நீள்விழிக்கும் தொடர்பிருக்கிறது" என்று கூறி அந்தத் தொடர்பை விளக்கவும் முற்பட்டார் அவர். அந்த விளக்கம் வாளுடன் இணைந்து கிடந்த பொறுப்பையும் அபாயத்தையும் வலியுறுத்தவே செய்தன.



# 7. ஜடிலன் ஆணையும் காரியின் சீற்றமும்

பெண்ணாகடத்தில் தர்மாதிகாரியான, மாறன்காரி கொடுத்த அந்தப் பெரும் வாளை இருகைகளிலும் வாங்கியதுமே ஜடிலன் கண்களில் பிரமையும் இதயத்தில் ஒருவித அச்சமும் ஏற்படவே பல விநாடிகள் ஏதும் பேசாமல் திரும்பத் திரும்ப அந்த வாளைப் பார்த்த வண்ணமே நின்றான் அவன். வாள் உறையின் ஒரு பக்கத்தில் பெரும் புலி சீறுவது போன்ற உருவமும் இன்னொருபுறம் முழுக்கதிரவனின் அடையாளமும் பொறிக்கப்பட்டிருந்ததன்றி, அந்த இரு அடையாளங்களிலும் வைரம், மரகதம், மாணிக்கம் முதலிய கற்கள் புதைக்கப்பட்டிருந்ததையும், அதன் விளைவாக புலியின் சீறும் கண்கள் அக்னிப் பிழம்பாகவும், கதிரவனின் கிரணங்கள் அதிக வெள்ளையும் அழகும் கம்பீரமும் இணைந்ததாகவும் ஜொலித்ததையும் கண்ட ஜடிலன் அந்த வாளைக் கையிலேந்துவதே பெருமையென்று நினைத்தான். தவிர அந்த வாளின் கைப்பிடியின் தலைப் பகுதியில் நாலைந்து விலை உயர்ந்த கற்களே புதைக்கப்பட்டிருந்ததைக் கண்ட ஜடிலன், வாளை உறையிலிருந்து இழுக்கவும், சுழற்றவும் கைக்கு இடைஞ்சலிருக்கக் கூடாதென்பதற்காகவே பிடியில் வேலைப்பாடு குறைவாயிருக்கிறதென்பதைப் புரிந்துகொண்டான். "ஆனால் பிடி

யிலிருக்கும் நாலைந்து கோமேதகங்களின் விலை அதிகம். இவற்றைக் கொண்டே ஒரு நாட்டை விலைக்கு வாங்கலாம்" என்று உள்ளூர சொல்லிக்கொண்டான். அந்த வாளின் பெருமைக்கு அதிலிருந்த விலை உயர்ந்த வைர வைடூரிய கோமேதகங்கள் மட்டும் காரணமல்லவென்பதும் அவனுக்குத் தெரிந்திருந்தது. சோழர்களிடம் ஒரு பழங்காலத்து வாளிருப்பதாகவும், அது எப்பொழுதும் சோழ மன்னருடைய பூஜையிலிருப்பதாகவும், அதை வைத்திருப்பவர்களுக்குப் பேரதிர்ஷ்டம் உண்டென்றும் ஜடிலன் கேள்விப்பட்டிருந்தனானாகையால் தன் கையிலிருப்பது அந்த வாளாகத்தானிருக்க வேண்டுமென்று தனக்குள் சொல்லிக்கொண்டான். அந்தச் சமயத்தில், "அந்த வாளுக்கும் அரசகுமாரி நீள்விழிக்கும் தொடர்பிருக்கிறது" என்று தர்மாதிகாரி அழுத்தந்திருத்தமாகச் சொற்களை உதிர்க்கவே. சொப்பனத்திலிருந்து விழித்துக் கொண்ட ஜடிலன் வாளிலிருந்து கண்களை உயர்த்தி தர்மாதிகாரியைக் கவனித்தான்.

தர்மாதிகாரியின் கூரிய கண்கள் ஜடிலன் கண்களைச் சந்தித்தன. அவருடைய விசால வதனம் நிர்மலமாயிருந்தது. நாற்பது வயதைத் தாண்டியதால் தலையில் ஓடிய ஓரிரு நரை மயிர்களைக்கூட அவர் முகத்துக்கு அழகையே தந்தது. நீண்ட மெல்லிய கைகள் அவர் மடியில் மடிந்து கிடந்தன. மென்மையாயிருந்தாலும் அவை வலிமை குன்றா கைகளென்பதைப் புரிந்துகொண்டான் ஜடிலன். இத்தனையிலும் அவர் கச்சையில் ராஜரீகத்துக்கு அடையாளமாக குறுவாளோ, வாளோ அணியாததையும் கண்ட ஜடிலன் தனது கண்களில் வியப்பைக் காட்டினான். அவன் வியப்பைக் கண்ட தர்மாதிகாரி அவன் உள்ளே ஓடிய எண்ணங்களை ஊகித்துக் கொண்டார். "ஜடிலா, நான் அரச இலச்சினைகளை அணிவதில்லை, ஆயுதங்



களை வெறுக்கிறேன்" என்று கூறி விசாலமான உதடுகளில் சிறிது புன்முறுவலையும் தோற்றுவித்தார்.

ஜடிலன் கண்களில் வியப்பு அதிகமாக விரிந்தது. "பிரபு! அப்படியானால் இந்த வாளை எதற்காகக் கொடுத்தீர்கள்?" என்று வினவவும் செய்தான் வியப்பு குரலிலும் ஒலிக்க.

"அவரவர்களுக்குத் தேவையென்பது தனிப்பட உண்டு. உனக்கு வாள் தேவை" என்றார் மாறன்காரி.

"தங்களுக்கு?" என்று வினவினான் ஜடிலன்.

"வாட்போர் வீரரை இயக்கும் அறிவு தேவை. அது இருக்கிறது எனக்கு?" என்று சொல்லிய மாறன்காரி மெல்ல நகைத்தார்.

அவர் செய்துகொண்ட சுயஸ்தோத்திரம் பிடிக்காததால் ஜடிலன் இதழ்களில் இகழ்ச்சி நகை அரும்பியது. "அறிவை மட்டும் கொண்டு போரை நடத்திவிடலாம்?" என்ற வாலிபன் கேள்வியில் இகழ்ச்சியில் பெரிதாக மண்டிக் கிடந்தது.

"கண்டிப்பாய் நடத்திவிடலாம். மனித குலத்தில் காண அரிதாயிருப்பது அறிவு ஒன்றுதான். தவிர மனிதன் வாளைச் சிருஷ்டிக்கலாம். கேடயத்தைச் சிருஷ்டிக்கலாம். அம்பு, வேல் அனைத்தையும் சிருஷ்டிக்கலாம். ஆனால் சிருஷ்டிக்க முடியாதது ஒரே ஒரு ஆயுதம் அறிவுதான். அந்த அஸ்திவாரமில்லாவிட்டால் மனிதன் சிருஷ்டிக்கும் ஆயுதங்கள் எவையும் இயங்கா" என்ற மாறன்காரி புன்முறுவல் கொட்டினார்.

ஜடிலன் அவர் சொற்களில் புதைந்து கிடந்த அறிவின் ஆழத்தைக் கவனித்தான். அவர் சொற்களில் பெறும் உண்மையுமிருக்கிறதென்பதையும் புரிந்து கொண்டான்.

இருப்பினும் மேற்கொண்டும் அவர் மனத்திலுள்ளதை அறிய அவன் கேள்வி தொடுத்தான். "அப்படியானால் இந்த வாளை எதற்காக எனக்களித்தீர்கள்!" என்று.

"உன்னிடம் வாள் இல்லையென்பதற்காக அந்த வாளை உனக்குக் கொடுக்கவில்லை." என்று சுட்டிக் காட்டினார் மாறன்காரி.

"வேறெதற்குக் கொடுத்தீர்கள்?" என்று வினவினான் ஜடிலன்.

தர்மாதிகாரி சில விநாடிகள் தலையைக் குனிந்து நிலத்தைப் பார்த்தவண்ணம் சிந்தித்தார். பிறகு மெல்ல கண்களை உயர்த்தி ஜடிலனை நோக்கி, "ஜடிலா! அந்த வாளுடன் வரலாறு கலந்திருக்கிறது உனக்குத் தந்திருப்பது வாளல்ல வரலாறு" என்று மெல்லக் கூறினார்.

ஜடிலன் அவர் கண்களை ஏறெடுத்து நோக்கி, "ஆம் பிரபு! இத்துடன் வரலாறு கலந்திருக்கிறது" என்று ஒப்புக் கொண்டான்.

"என்ன வரலாறு என்று தெரியுமா?" என்று கேட்டார் தர்மாதிகாரி.

"இப்படி ஒரு வாள் சோழர் காலத்தில் நீண்ட நாட்களாக இருப்பதாக கேள்விப்பட்டிருக்கிறேன். அதை சோழ மன்னர்கள் பூஜையில் வைத்திருப்பதாகவும் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று உரைத்தான் ஜடிலன்.

"வேறென்ன கேள்விப்பட்டிருக்கிறாய்?" என்ற தர்மாதிகாரியின் குரல் உணர்ச்சியுடன் ஒலித்தது.

"என்ன காரணத்தாலோ சோழர்கள் இந்த வாளை உயிரைவிடப் பத்திரமாகப் பாதுகாக்கிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்."



"சொல் மேலே."

"சொல்வதற்கு வேறெதுவுமில்லை. ஏதாவதிருந்தால் தாங்கள்தான் சொல்ல வேண்டும்."

தர்மாதிகாரி உடனடியாகப் பதில் சொல்லவில்லை அவனுக்கு. சற்று சிந்தித்துவிட்டு, "வீரனே! உற்றுப் பார் அந்த வாளை. அது எந்தக் காலத்தது? கூற முடியுமா உன்னால்?" என்று வினவினார்.

ஜடிலன் இருமுறை அந்த வாளைத் திரும்பிப் பார்த்தான். "கடந்த ஐந்நூறு ஆண்டுகளுக்குள் செய்யப்பட்ட வாளல்ல இது" என்று திட்டமாகக் கூறினான்.

அதுவரையில் ஓவியப் பாவையாய் அசையாமலும் உரையாடலில் புகாமலும் உட்கார்ந்திருந்த நீள்விழி கூட அதிர்ச்சியடைந்தாள் வாலிபனின் அந்தப் பதிலைக் கேட்டு. "என்ன அத்தனை நிச்சயமாகச் சொல்கிறீர்கள்?" என்றும் வினவினாள் முதன் முதலாக உரையாடலில் கலந்து.

ஜடிலன் தனது கண்களை அரசகுமாரியின் கண்களுடன் கலந்தான். "அரசகுமாரி! வாட்களில் ஓரளவு பழக்கமுண்டு எனக்கு. பாண்டிய மன்னன் அரண்மனையில் ஐந்நூறு ஆண்டுகளுக்குள் செய்யப்பட்ட பலதரப்பட்ட வாட்களிருக்கின்றன. அவற்றின் அமைப்பு எதுவும் இதில் இல்லை. தவிர இது இந்தத் தமிழக வாளுமல்ல" என்று திட்டவட்டமாகக் கூறவும் செய்தான்.

நீள்விழி ஏதோ பேச முயன்று வாயை மூடிக்கொண்டாள். தர்மாதிகாரியே பேசினார். "ஜடிலா! இந்த வாள் சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த சோழ வம்சத்தின் மன்னர் கரிகாலரிடம் அலுவல் புரிந்த யவனர்கள் தங்கள் நாட்டு

பாணியில் வாளொன்றைச் செய்து அவருக்கு அளித்ததாகவும், அதைக் கரிகாலர் நாளங்காடிப் பூதத்திடம் வைத்து அதன் ஆசிகளுடன் பெற்றுத் தன்னிடம் வைத்துக் கொண்டதாகவும் கதை ஒன்று இருக்கிறது. தவிர இந்த வாளை எவனொருவன் தரிக்கிறானோ அவன் பெரிய சாம்ராஜ்யத்தைச் சிருஷ்டிப்பான் என்றும் சோழ நாட்டுப் பழைய ஓலைகளில் எழுதி வைத்திருக்கிறது." என்று கூறிய மாறன்காரி, "இத்தகைய வாளை உனக்குக் கொடுக்கக் கட்டளையிட்டிருக்கிறார் சோழ மன்னர்" என்று முடித்தார்.

ஜடிலன் அந்த வாளைப் பற்றிய வரலாற்றைக் கேட்டு மலைத்தான். எழுநூறு ஆண்டுகளுக்குப் பின்பும் அந்த வாளின் வேலைப்பாடும் பிடி அழகும் சிறிதும் மங்கா திருப்பதைக் கண்டு பிரமித்தான். ஒருமுறை அந்த வாளை உறையிலிருந்து பாதி இழுத்துப் பார்த்தான். வாள் அன்று தான் உறையில் போடப்பட்டது போல் பளபளத்தது. அதன் இரு பக்கங்களும் மிகக் கூர்மையாயிருப்பதையும் கவனித்த ஜடிலன் வாளைப் பாதி உருவிப் பிடித்த வண்ணம் தர்மாதிகாரியை நோக்கி, "வாள் இன்று செய்யப் பட்டதுபோல் புத்தம் புதிதாக இருக்கிறது" என்றான்.

"நளங்காடி பூதத்தின் சக்தி அதில் உறைந்திருப்பதாக வதந்தி கூறுகிறது" என்றார் தர்மாதிகாரி.

ஜடிலனுக்கு அந்த பூதத்தையே கையில் பிடித்தது போன்ற பிரமையிருந்தது. "எந்த சாம்ராஜ்யத்தை விஸ் தரிக்க என்னிடம் இந்த வாளை அளித்தீர்கள்?" என்று வினவினான் ஜடிலன்.

"சோழ சாம்ராஜ்யத்தை" என்றார் நிதானமாக தர்மாதிகாரி.

"சோழ அரசே பிறர் பிடியிருக்கிறதே."



"அதை மீட்கவும் இந்த வாள் பயன்படும்."

"இதை சோழ மன்னரே உபயோகப்படுத்தி தமது அரசைக் காப்பாற்றி விஸ்தரிப்பது தானே."

"இந்த சோழ மன்னருக்கு இது பயன்படாது."

"ஏன்?"

"கரிகாலருக்கு பிறகு ஏழு தலைமுறைகளுக்கு இது பயன்படாது என்று ஓலையில் எழுதப்பட்டிருக்கிறது. இவர் தான் ஏழாவது தலைமுறை."

"ஓகோ!"

"ஆம். தவிர நாடு அடியோடு அழியும் சமயம் வருமானால் வேதாந்தியும் பெருவீரனுமான ஒருவனிடம் இதைக் கொடுத்து நாட்டைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்றும் ஓலையில் எழுதியிருக்கிறது."

ஜடிலன் சற்று நிதானித்துவிட்டுக் கேட்டான், "அதற்கு நான் எப்படிப் பொருத்தம்?" என்று.

"ஜடிலா!" என்று அவனை அன்புடன் அழைத்த தர்மாதிகாரி, "பாண்டிய மன்னரிடமிருந்து நீ கொண்டு வந்த ஓலையில் உன் விவரம் தெளிவாயிருக்கிறது, நீ உலகப் பற்றில்லாதவனென்றும். பெருவீரனென்றும் பாண்டிய மன்னர் தெளிவாக எழுதியிருக்கிறார்" என்று சுட்டிக் காட்டினார்.

"இந்த வாளை வைத்துக் கொண்டு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று வினவினான் ஜடிலன்.

பதிலுக்கு தர்மாதிகாரி தமது ஆசனத்தைவிட்டு எழுந்திருந்தார். "நீள்விழி! இனிப் போகலாமல்லவா?" என்று வினவினார்.

"போகலாம்" என்று கூறி நீள்விழியும் எழுந்தாள்.

"வா ஜடிலா! வா விஜயா!" என்று ஜடிலனையும் சற்று தூரத்தில் தனது வாள் மேல் கைவைத்த வண்ணம் ஏதும் பேசாமல் சிலைபோல் நின்றிருந்த சோழர் படைத் தலைவனையும் அழைத்துக் கொண்டு மாளிகையின் உட்புறம் சென்றார் தர்மாதிகாரி. இரண்டு மூன்று அடுக்குகளைத் தாண்டிச் சென்ற பிறகு தனிப்பட இருந்த ஒரு விசாலமான அறைக்குள் நுழைந்தார். அறை கிட்டத்தட்ட ஒரு கூடத்தின் அளவுக்கு இருந்தது. அதற்கு பலமான காவலும் ஆயுதந்தாங்கிய காவலரும் அறைமுகப்பில் நடமாடிக் கொண்டிருந்தனர். பெரும் இருப்புச் சலாகைகளாலும் பலமான கதவுகளாலும் பாதுகாக்கப்பட்டிருந்த அந்த அறையை தர்மாதிகாரியே சாவியிட்டுத் திறந்தார். அறையின் ஆரம்பத்தில் கெட்டியான இரண்டு பெரும் பட்டுத் துணிகள் விரிக்கப்பட்டிருந்தன. அதைத் தாண்டி ஒரு பெரும் தாமரைப் பூ கோலமும் கோலத்தின் முடிவில் பெரும் பீடத்தின்மீது பெரும் சிவலிங்கமும் காட்சியளித்தன. சிவலிங்கத்தின் முன்பு பல தங்கப் பாத்திரங்களும் தட்டுகளும் பெரிய மணியொன்றும் இருந்தன. தங்கக் குத்துவிளக்குகள் இரண்டு இரு பக்கமும் எரிந்து கொண்டிருந்தன.

ஈசன் சன்னிதானத்துக்கு வந்ததும் தலை வணங்கிய தர்மாதிகாரி மாறன்காரி, "ஜடிலா! அந்த வாளை உறையிலிருந்து உருவு" என்று உத்தரவிட்டார்.

வாளை உருவிப் பிடித்துக்கொண்ட ஜடிலனை, வாளை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு ஈசனைப் பார். ஈசனைப் பார்த்த வண்ணம் நீள்விழியையோ சோழ நாட்டையோ மாற்றாரிடம் ஒப்படைப்பதில்லையென்று



ஆணையிடு" என்று கூறினார், தர்மாதிகாரி பயபக்தியுடன் சிவலிங்கத்தைப் பார்த்தவண்ணம்.

ஜடிலன் வாளை உருவி அவர் சொன்ன வண்ணம் பிடித்துக்கொண்டான். "பெருமானே! உன் ஆணையாக, இந்த வாளின் ஆணையாக சோழ அரசையும் அரசகுமாரி நீள்விழியையும் மாற்றாரிடம் சிக்கவிட மாட்டேன். சத்தியம்" என்று உணர்ச்சி ததும்பும் குரலில் கூறினான். பிறகு திடீரெனத் திரும்பி வாளைக் கொண்டுபோய் நீள்விழியின் கைகளில் கொடுத்து, "அரசகுமாரி, நீங்களும் உத்தரவிடுங்கள்" என்று கூறி அவள் முன்பும் மண்டியிட்டான்.

சிதறி விழுந்து கிடந்த அவன் தலைக்குழலைக் கண்ட அரசகுமாரியின் விழிகளில் கருணை சுரந்தது, நீர் திரண்டது. "என்னைக் காக்க வந்த வீரனே! எழுந்திரு இந்த வாள் மட்டுமல்ல. உன் உறுதியும் என்னைக் காக்கட்டும்" என்றாள் அரசகுமாரி.

அந்தச் சொற்களை உதிர்த்த அரசகுமாரியின் குரலில் உணர்ச்சி ஏதுமில்லை. கம்பீரம் நன்றாக ஒலித்தது. சாட்சாத் நாடாளும் அரசியாக நிமிர்ந்து நின்றாள் அவள். அந்த சமயத்தில், அவள் கையிலிருந்து வாளை வாங்கிக் கொண்டு எழுந்திருந்த ஜடிலன் அதையும் இடையில் கட்டிக்கொண்டு ஒருபுறம் தனது பாண்டி நாட்டு வாளையும் இன்னொரு புறம் சோழர் குல வாளையும் தொங்கவிட்டுத் திரும்பித் திரும்பி அவற்றைப் பார்த்தான். இரு கைகளையும் அந்த இரு வாட்களின் பிடியிலும் வைத்தான். "கைக்கு ஒரு வாள் இப்பொழுது சரியாயிருக்கிறது" என்று கூறவும் செய்தான் தர்மாதிகாரியை நோக்கி.

"ஜடிலா! உனக்கு இந்த அரண்மனையிலேயே தனி அறை ஏற்பாடாயிருக்கிறது. நீ அதில் தங்கலாம். உன்

புரவியைக் கவனிக்க ஏற்பாடு செய்து விட்டேன். இன்று பகல் இளைப்பாறு நன்றாக. மாலையில் மீண்டும் செய்ய வேண்டிய அலுவல்களை விவரமாகக் கவனிப்போம்" என்று கூறி மாளிகையின் மாடியில் ஒரு பகுதியிலிருந்த அறைக்கு அவரே அழைத்துச் சென்றார். அறையை அடைந்ததும் அவனுடன் உள்ளே வந்து மெல்ல கதவைச் சாத்தித் தாளிட்டார். அடுத்த வினாடி அவர் கண்களில் சீற்றம் மிதமிஞ்சித் தெரிந்தது. "யார் வரச்சொன்னது உன்னை இங்கே?" என்று சீறவும் செய்தார் மாறன்காரி.

ஜடிலன் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. "என்னைப் புரிந்துகொண்டு விட்டீர்களா?" என்று வினவினான்.

"நீ யாரென்பது உன் முகத்தில் எழுதி ஒட்டியிருக்கிறதே" என்றார் கோபம் சிறிதும் தணியாமல்.

ஜடிலன் பெரிதாக நகைத்தான். ஆனால் அதே சமயத்தில் அவனுக்குப் பேராபத்து உதயமாகிக் கொண்டிருப்பதை அவன் உணரவில்லை. அந்த மாளிகையிலிருந்து சற்று எட்டி இருந்த படைவீடொன்றின் அறையில் மிகத் துரிதமாக ஓலையொன்றைத் தீட்டிக் கொண்டிருந்தான் விஜயன்.

## 8. கொடியில் சிக்கிய பூங்கொடி

**மா**றன்காரி அந்தத் தனியறையில் தன்மீது பெரிதும் எரிந்து விழுந்தாரென்றால் அதற்குக் காரணம் அவருக்குத் தன்மீதுள்ள இணையிலா அன்பே என்பதைப் புரிந்து கொண்டான் ஜடிலன். தன்னை நேரிட அவர் சந்தித்ததில்லையென்றாலும் கூர்மையான புத்தியின் காரணாக அவர், தான் யாரென்பதை எடை போட்டுவிட்டாரென்பதையும் உணர்ந்து கொண்டான் பாண்டி நாட்டு வீரன். பாண்டி நாட்டிலுள்ள கரவந்தபுரத்தின் அதிபதியும் அர்த்தசாஸ்திரங்களில் ஈடு இணையற்றவரெனப் பிரசித்தி பெற்றவருமான மாறன்காரியின் சேவையை தமிழகத்திலுள்ள பல மன்னர்களும் விரும்பினாலும், ஏற்கெனவே அவர் பாண்டிய நாட்டு அமைச்சராயிருந்தும், ஏது காரணத்தாலோ தற்சமயம் அந்த பாக்கியம் சோழ மன்னனுக்கே கிடைத்ததென்பதையும், அதனால் மன்னர்கள் சீற்றம் சோழன்மீது திரும்பியதென்பதையும் அறிந்திருந்த ஜடிலன், அவர்மீது பயமும் பக்தியும் நிறைந்த கண்களைத் திருப்பினான். "நீ யாரென்பது உன் முகத்தில் எழுதி ஒட்டியிருக்கிறது" என்று அறிவித்தபோது அவன் பெரிதாக நகைத்தானென்றாலும் அந்த நகைப்பில் ஒரு பணிவும் இருக்கத்தான் செய்தது.

அவன் அலட்சிய நகைப்பை வெறுப்புடனும் ஓரளவு அன்புடனும் நோக்கிய தர்மாதிகாரி, "ஜடில பராந்தகா! யாருமறியாதவனும் திறமைமிக்கவனுமான ஒருவனை அனுப்பும்படியே உனக்கு நான் ஓலை எழுதி அனுப்பினேன். ஆபத்தின் இடையே அகப்பட்டுக் கொண்டிருக்கும் சோழ அரசியைக் காக்க நம்பிக்கையான ஒரு மெய்க்காவலன் தேவை என்றுதான் எழுதியிருந்தேன். பதிலுக்கு நீயே வந்து நிற்கிறாய். அதுவும் இந்தப் பெண்ணாகடத்தில்" என்று கூறினார்.

ஜடில பராந்தகன் ஒருமுறை அந்தப் பெரிய அறையில் சாளரத் தண்டைச் சென்று எட்டிப் பார்த்துவிட்டுத் திரும்பினான். பிறகு மாறன்காரியைப் பார்த்து, "அமைச்சர் குலப் பெருமானே! நீங்கள் வீரனை அனுப்பச் சொன்னது தஞ்சை மாநகருக்கு. ஆனால் நீங்களும் அரசகுமாரியும் உறைவது இந்தப் பெண்ணாகடத்தில். ஓலையுடன் நேராக நான் அங்கு சென்றிருந்தால், சென்று உங்களைப் பற்றி விசாரித்திருந்தால், நிலைமை என்னவாயிருக்கும்? நீள்விழிக்கு எழுதப்பட்ட அந்த ஓலையை யாரிடம் கொடுத்திருக்க முடியும்?" என்று வினவினான்.

மாறன்காரியின் கண்கள் பளிச்சிட்டன. "ஜடில பராந்தகா! மாறன்காரி ஓர் அலுவலில் நுழைந்தான், அதை அரையும் குறையுமாகச் செய்தான் என்ற பெயர் இதுவரை கிடையாது. உதாரணமாக இந்தப் பெண்ணாகடத்தைப் பார். வெறும் சிற்றூராயிருந்தது சமீபத்தில் நான்கு வருடங்களில் பெரும் கோட்டையாகிவிட்டது. சுற்றிலும் பலமான சுவர்கள், சுவர்களுக்கு மேல் விற்கூடங்கள், வேற்கூடங்கள், அதற்குள் இந்தச் சிறு அரண்மனை. இதுவும் ஒரு கோட்டைதான். இந்த உட்கோட்டையிலும் பல அனுகூலங்கள் உண்டு" என்று சொல்லிக் கொண்டு



போன மாறன்காரியின் கண்கள் பளபளவென ஜொலித்தன பெருமையின் காரணமாக.

"ஆம் தர்மாதிகாரி! இந்தக் கோட்டையும் உட்கோட்டையும் பலமுள்ள அரண்கள்தான். இவற்றை வெற்றி கொள்ளவோ வீழ்த்தவோ முடியாது. வெளிக்கோட்டைச் சுவர் அடர்த்தியான மரங்களின் காரணமாக வெளியே தெரிவதில்லை. மதில் சுவருக்குச் சற்று முன்னுள்ள மரங்கள் அடர்த்தியாயிருப்பதால் ஆயுத வண்டிகள் கோட்டையை அணுக முடியாது. இந்த உட்கோட்டையின் மூன்று பக்கங்களை அணைத்து ஓடுகிறாள் அன்னை காவிரி. வெள்ளம் திரண்டு வரும் காலத்தில் மூன்று பக்கங்களில் இதை அணுக முடியாது. வேனிற் காலத்தில் ஆற்று மணலில் வண்டிகள் வந்தால் புதைபடும். புரவிப் படையோ, காலாட் படையோ வந்தால் உட்கோட்டையின் பின்புறச் சுவர்களிலுள்ள ஆயுதக் கூடங்கள் அவற்றை அழித்துவிடும். மிகுந்த முன்யோசனையுடன் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது பெண்ணாகடம்" என்று இடைபுகுந்து கூறினான் ஜடிலன்.

மாறன்காரி மிகுந்த பெருமையுடன் ஜடிலனை நோக்கினார். "ஜடிலா! நீ பெரும் படைகளைத் தலைமை நடத்தப் பிறந்தவனாதலால் இங்கு வந்து இக்கோட்டையைப் பார்த்தவுடனேயே இதன் பலத்தைப் புரிந்து கொண்டுவிட்டாய். சோழ நாட்டுக்கு நீ எதிரியாயில்லாமல் நந்திவர்மன் எதிரியாயிருப்பது சோழ நாடு செய்த பாக்கியம். இல்லாவிட்டால் பார்த்தவுடன் இக்கோட்டையை எடைபோடும் உனக்கு இதை அழிப்பதற்கும் வழி இருக்கும்" என்று கூறினார்.

"சோழர்குல அமைச்சரே! அழிப்பதற்கு உலகில் பல வழிகள் இருக்கின்றன. நிர்மாணிக்கும் சக்திகள்தான்

குறைவு. கட்டடத்தை அழிக்கலாம். உயிரை அழிக்கலாம். எதையும் அழிக்கலாம். ஆனால் அழிவு வேலைக்கு அரை நாழிகை என்றால், கட்டும் வேலைக்கு காலம் அதைவிட ஆயிரம் மடங்கு அதிகம் தேவையாயிருக்கிறது" என்றான் ஜடிலன்.

மாறன்காரி சிறிது சிந்தித்துவிட்டுச் சொன்னார்: "நீ வேதாந்தியென்று கேள்விப்பட்டிருக்கிறேன்" என்று.

ஜடில பராந்தகன் சில விநாடிகள் மௌனம் சாதித்தான். பிறகு மீண்டும் ஒருமுறை சாளரத்தை நோக்கிச் சென்று பார்த்துவிட்டு நடு அறைக்குத் திரும்பினான். "சத்தியத்துக்கு இன்னொரு பெயர் வேதாந்தம்" என்று கூறினான்.

"எது சத்தியம்? எது அசத்தியம்?" தர்மாதிகாரியின் கேள்வி எழுந்தது உணர்ச்சியற்ற குரலில்.

"நிலைப்பது சத்தியம், நிலையாதது அசத்தியம்."

"அதற்கு நீயே உதாரணம். உன்னை சாதாரண வீரனென்று சொல்லிக்கொள்ள முயன்றாய். ஆனால் உன்மை சொரூபம் கண்டுபிடிக்கப்பட்டது. நீ யாரென்பது எனக்கு வெட்ட வெளிச்சம்."

"என்னை விட்டுவிடுங்கள் தர்மாதிகாரி. எத்தனையோ ஜீவராசிகளில் நான் ஒருவன். தங்களை நிரந்தரமாக நினைக்கும் பேரரசர்களை எடுத்துக்கொள்ளுங்கள். அவர்களும் அநித்தியம், அவர்கள் சாம்ராஜ்யங்களும் அநித்தியம்."

இதைக்கேட்ட தர்மாதிகாரி அசந்து போனார். ஜடிலனுக்குப் பைத்தியம் ஏதும் பிடிக்கவில்லை என்பதை திட்டமாக அறிய அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கினார். அவர் நோக்கியதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட



ஜடிலன், மீண்டும் தொடர்ந்து கூறினான்: "அமைச்சரே! எனக்குப் பைத்தியமில்லை. சத்தியத்தைக் கூறுபவர்களை உலகம் பைத்தியமென்று நினைக்கிறது. அதனால்தான் என் சொற்களில் உங்களுக்குச் சந்தேகம் ஏற்படுகிறது. பல்லவ மல்லரான நந்திவர்மன் பேரரசை ஸ்தாபித்து விட்டதாக நினைக்கிறான். அவன் படைபலத்தையும் ராஜ்ய விஸ்தரிப்பையும் கண்டு தமிழகத்தின் சில குறுநில மன்னர்கள் அவனுடன் இணைந்துகொள்கிறார்கள்; சிலர் எதிர்க்க முயல்கிறார்கள். ஆதிநாள் முதல் மனித சரித்திரத்தில் இதே கதைதான். ஆனால் ஒரு கதை நிச்சயம். புராண ஏடுகளையோ வரலாற்று ஏடுகளையோ புரட்டினால் சாம்ராஜ்யங்கள் அழிந்தது ஸ்திரம். அப்படி நந்திவர்மன் பேரரசும் அழியும் தருவாயிலிருக்கிறது. ஆகையால்தான் உங்கள் ஓலை வந்ததும் நானே வந்தேன்."

இதைச் சொன்ன ஜடிலன் கண்களில் ஏதோ விவரிக்க இயலாத வேதாந்த ஒளி பரந்ததைக் கவனித்தார் தர்மாதிகாரி. அதைக் கண்டதால் சிறிது கோபமும் துளிர்த்தது மீண்டும் அவர் சித்தத்தில். "ஏன் உன் ஒற்றைக் கரத்தால் பல்லவ சாம்ராஜ்யத்தையே அழித்து விடலாமென்ற நினைப்பினால் வந்தாயா?" என்றும் வினவினார் கோபத்துடன்.

ஜடிலன் பதில் மிக அமைதியாக வந்தது. "நந்திவர்மன் சாம்ராஜ்யத்தை நான் அழிக்கத் தேவையில்லை. அதுவாக அழியத் துவங்கிவிட்டது" என்றும் கூறினான் பராந்தகன்.

"எப்படி அது தெரிகிறது உனக்கு?" என்று கேட்டார் தர்மாதிகாரி வெறுப்புடன்.

"ஆம்."

"வடக்கே சாளுக்கியம் வரையிலும் மேற்கே கொங்கு நாடு, சேர நாடு வரையிலும் விரிந்துவிட்டது நந்திவர்மன் பேரரசு."

"ஆம்."

"இத்தனை பெரிய சாம்ராஜ்யத்தை நிர்வகிக்க ஒன்று பெரும் படை நிரந்தரமாக வேண்டும். அல்லது வெற்றி கொள்ளப்பட்ட அரசர்கள் சிற்றரசர்களாக வாழப் பிரியப்பட வேண்டும்."

"இரண்டும் சாத்தியமில்லை என்கிறாயா?"

"வரலாறு அந்தப் படிப்பினையைத்தான் தருகிறது. தவிர சோழ மன்னன் போக்கும் தாங்கள் எனக்கனுப்பிய ஓலையும் அதைத்தான் குறிப்பிடுகின்றன. பல்லவர் வெற்றி சோழ மன்னனுக்குப் பிடிக்காததால், மெல்ல எதிர்க்கப் பார்க்கிறார் பல்லவமல்லனை. அதற்குப் பூர்வாங்கமாகப் பல்லவ மன்னனிடமிருந்து நீள்விழியைப் பாதுகாக்கப் பார்க்கிறார். நந்திவர்மன் பேரரசுக்கு விரிசல் முதலில் இங்கு காணப்படுகிறது. இந்தக் கோட்டையில் காணப் படுகிறது. அந்த விரிசலை விரிவுபடுத்த முயலும் கை தங்களுடையது" என்று திட்டமாகச் சொன்ன பராந்தகன் தர்மாதிகாரியை ஏறெடுத்து நோக்கினான்.

தர்மாதிகாரியின் சங்கடம் பெரிதாயிற்று. பதிலேதும் சொல்லாமல் குழம்பிய சிந்தையுடன் அந்த அறையில் நாலைந்து முறை அலைந்தார். பிறகு ஜுடிலனுக்கு வெகு அருகில் வந்து, "ஜுடிலா! நீ வேதாந்தம் பேசுகிறாயா? அரசியல் பேசுகிறாயா?" என்று வினவினார்.

"இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?" என்று கேட்டான் ஜுடிலன்.



"அரசியல் உலகத்தைப் பற்றியது; வேதாந்தம் உயிரைப் பற்றியது, ஆத்மாவைப் பற்றியது" என்று மாறன்காரி தர்க்கரீதியில் திரும்பினார்.

இதைக் கேட்ட ஜுடிலன் உற்சாகம் அதிகப்பட்டது. "அமைச்சரே! நன்று நன்று! நீங்களும் வேதாந்தத்துக்கு வந்துவிட்டீர்கள்" என்று குதூகலத்துடன் துவங்கி, "ஆனால் உயிர்களும், ஆத்மாக்களும் இந்த உலகத்தில் தானே நடமாடுகின்றன?" என்றும் கேட்டான்.

"ஆனால் உலகத்துடன் ஒட்டாதவை" என்று சுட்டிக் காட்டினார் தர்மாதிகாரி.

"ஒட்டாதிருந்தால் அரசியல்லை, பூசல்களில்லை. தவறுகளில்லை தர்மாதிகாரி! நீங்கள் கூறுவது மிகமிகத் தவறு. ஒவ்வோர் உயிரும் இந்த உலகத்தை எத்தனை அளவுக்கு அனுபவிக்க முடியுமோ அத்தனை அனுபவிக்க முயலுகிறது. எத்தனை வசதிகளை அதிகமாகப் பெற முடியுமோ அத்தனை வசதிகளைப் பெறப் பிரியப்படுகிறது. இந்த ஆசையிலிருந்து முளைக்கும் முயற்சியிலிருந்து தான் பூசல்கள், போர்கள் ஏற்படுகின்றன. அந்த ஆசையால்தான் சோழ மன்னனும் நந்திவர்மனை எதிர்க்கப் பார்க்கிறான். அந்த ஆசையால்தான் நீங்களும் எனக்கு ஓலை அனுப்பினீர்கள்" என்றான் ஜுடிலன்.

தர்மாதிகாரிக்கு எதுவும் சொல்லத் திறனில்லாததால் குரலில் கோபத்தைக் காட்டி, "நீ எந்த ஆசையால் இங்கு புறப்பட்டு வந்தாய்? எந்த ஆசையால் எனக்குப் பதில் கடிதம் எழுதுவதை விட்டு நீள்விழியின் பெயருக்கு எழுதி னாய்? எந்த ஆசையை முன்னிட்டு இன்று சோழர்களின் பரம்பரை வாளை நீ பெற்றுக்கொண்டாய்? எந்த ஆசையால் பரம வைணவனான நீ இன்று சிவலிங்கத்தின் முன்பு வணங்கினாய்?" என்று சீறினார்.

"எனக்கே புரியவில்லை" என்றான் ஜடிலன்.

"எனக்குப் புரிகிறது" என்று மேலும் சீறினார் தர்மாதிகாரி.

"என்ன! புரிகிறதா?" என்று விஷமத்துடன் கேட்டான் ஜடிலன்.

"நீள்விழியின் அழகைப் பற்றித் தரணியெங்கும் புலவர்கள் பாடுகிறார்கள். அதைக்கேட்ட நீ, அவளைப் பார்க்கும் ஆசையால் வந்திருக்கிறாய். தவிர உன் நாட்டுக்கும் இந்த நாட்டுக்கும் சதா விரோதம் உண்டு. ஆகையால் இதை உன் நாட்டின் வசப்படுத்தவும் ஆசை ஏற்பட்டிருக்க வேண்டும். அதற்காக வேவு பார்க்க வந்திருக்கிறாய் நீ. பெண்ணாசை, நாடாசை, இரண்டாசைகளும் உந்த வந்திருக்கிறாய். முதல் ஆசைக்கு வித்திட்டுவிட்டாய் அரசகுமாரியை தனிப்பட சந்தித்து. இரண்டாவது ஆசையும் இருக்கிறதா என்று பார்க்கத்தான் சாம்ராஜ்ய வரலாறு உள்ள சோழர்களின் வாளை உன்னிடம் அளித்தேன். அதை மிகுந்த மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டாய்" என்று குற்றம் சாட்டினார் தர்மாதிகாரி.

"தவறு தர்மாதிகாரி! வாளை நான் பெற்றது நாட்டாசையாலல்ல; ஒரு பெண்ணுக்கு நான் செலுத்த வேண்டிய கடமைக்கா. தவிர, விரிந்துவரும் நந்திவர்மன் பேரரசு பாண்டி நாட்டு விளிம்பையும் தொட்டிருக்கிறது. அதனின்றும் பாண்டி நாட்டைக் காப்பது என் கடமையாயிருக்கிறது" என்றான் ஜடிலன்.

"நீள்விழியைக் காக்கும் பொறுப்பை நீயே ஏற்றுக்கொண்டு விட்டாய் முன்னதாக." தர்மாதிகாரியின் குரலில் விஷமம் இருந்தது.

"ஆம்."



"அப்படியானால் வாள் மேல் சத்தியம் செய்தது சம்பிரதாயம்?"

"உள்ளமும் சம்பிரதாயமும் ஒத்துக்கொள்ளும்போது சம்பிரதாயத்தைக் கடைப்பிடிப்பதிலும் தவறில்லை."

"உன் நிலையில் இருப்பவன் சாதாரண வீரனென்று சொல்லிக்கொண்டு வேறு நாட்டில் நுழைவதும் சம்பிரதாயம் போலிருக்கிறது?"

"இல்லை, அங்கு சம்பிரதாயங்கள் உடைபடுகின்றன.

"சில சமயங்களில் சம்பிரதாயங்களை மேற்கொள்வாய்; சில சமயங்களில் உடைப்பாய்?"

"ஆம்."

"இது சத்தியத்தின் வழி போலிருக்கிறது?" தர்மாதிகாரியின் குரலில் கேலி மிதந்திருந்தது.

ஜடிலன் மெல்ல நகைத்தான். "சில சமயங்களில் சத்தியத்தை மீறுவதும் அவசியம்" என்றான்.

"அப்படியா!" தர்மாதிகாரி இரைந்தே நகைத்தார்.

ஜடிலன் அதைப்பற்றி லட்சியம் செய்யாமல் சொன்னான்: "தர்மாதிகாரி! சிறையிலிருந்த சீதையை அரக்கியர்கள் கேட்டார்கள்: 'அந்த வானரன் யார்?' என்று அனுமனைச் சுட்டிக்காட்டி. 'எனக்குத் தெரியாது' என்று சீதை பொய் சொன்னாள், உயிர்ச் சேதத்தைத் தவிர்க்க. நல்லவர்களைக் காக்க அசத்தியம் அனுமதிக்கப்படுகிறது சாஸ்திரங்களில்" என்று.

மாறன்காரிக்கு எரிச்சல் அதிகமாயிற்று. எப்படியும் ஜடில பராந்தகனை தன் வழிக்கு இழுக்க முடியாதென்பதையும் அவன் மனத்தில் ஏதோ ஆழ்ந்த திட்டம் உருவாகி

யிருப்பதையும் புரிந்து கொண்டார். "ஆகவே உன் வேதாந்தம் சமயத்துக்குத் தக்கபடி மாறுகிறது. அது கிடக்கட்டும். நீ எப்பொழுது இங்கிருந்து புறப்பட உத்தேசம்?" என்று கேட்டார் கடைசியாக.

"சில நாட்கள் ஆகும்" என்றான் ஜடிலன்.

"எதற்கு சில நாட்கள்?" என்று வினவினார் தர்மாதிகாரி.

"இந்த ஊரை இன்னும் நிதானமாகப் பார்க்க வேண்டும்" என்றான் ஜடிலன்.

"நீ யாரென்று இங்கிருப்பவர்கள் புரிந்துகொண்டால் என்ன அபாயம் என்று தெரியுமா?"

"சிறையில் தள்ளுவார்கள். பிறகு சோழ மன்னரிடம் அனுப்புவார்கள்."

"சோழ மன்னன் என்ன செய்வான்?"

"நீங்கள் செய்யாததைச் செய்வான்."

"நான் செய்யாததா?"

"ஆம். வாவியில் குளித்ததற்கு நீங்கள் என்னைக் கொன்றிருக்க வேண்டும். ஆனால் செய்யவில்லை. அந்தப் பணியை சோழ மன்னர் செய்வார்."

"தெரிந்துமா இங்கே தங்கப் பார்க்கிறாய்?"

"ஆம்."

"என்ன காரணமோ?"

"அதுதான் சொன்னேனே ஊரைப் பார்க்க என்று."

ஊரைப் பார்க்கவா, அரசகுமாரியைப் பார்க்கவா என்று கேட்க எண்ணினார் தர்மாதிகாரி. இருப்பினும் அதைக் கேட்கவில்லை அவர். "ஜடிலா! என்னைத் தவிர



யாரும் உன்னைப் புரிந்துகொள்ளவில்லை. புரிந்துகொண்டால் உன்னைக் காப்பாற்ற யாராலும் முடியாது. இது புரிகிறதா உனக்கு?" என்றார்.

அவர் சொல்வதைக் கேட்கவில்லை ஜடிலன். சில நாட்கள் அக்கோட்டையில் தங்கவே தீர்மானித்தான். தர்மாதிகாரி அவனைக் கட்டாயப்படுத்த முடியாததால் அறைக் கதவைத் திறந்துகொண்டு வெளியே சென்றார். அன்று பகல் முழுவதும் நிம்மதியாக அந்த அறையிலேயே கழித்த ஜடிலன் இரவு நெருங்க முற்பட்டதும் அரண்மனையைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டு, அதன் பின்புறத்தில் வந்து, அந்தப் பின்புற மதிலையும் மதிலுக்கப்பால் மதிலின் துவாரங்கள் வழியாக வெளேரென்று தெரிந்த ஆற்று மணலையும் பார்த்தான். பிறகு பக்கத்தில் ஓடிய ஒரு சிறு பாதை வழியாகச் சென்றான். பாதை மிகக் குறுகலாயிருந்தது. இருபுறமும் புஷ்பச் செடிகள் மிக அடர்த்தியாயிருந்தன. அந்த அடர்த்தியால் குறுகலாய் இருந்த பாதையில் நடந்து சென்ற ஜடிலன் தலையை மேலே தொங்கிய பல புஷ்பச் செடிகளும் இருபுறம் புஷ்பச் செடிகளுக்கு மேலே தொத்தியிருந்த புஷ்பக் கொடிகளும் தடவிக் கொடுத்தன. சிறிது தூரம் ரம்மியமான பாதையில் சென்றதும் ஜடிலன் சட்டென்று நின்றான். அவனிருந்த இடத்திலிருந்து நாலைந்து அடி தூரத்தில் நீள்விழி நின்றுகொண்டு அவள் குழலில் மாட்டிக்கொண்டிருந்த முட்கொடியொன்றை எடுக்க முயன்றுகொண்டிருந்தாள்.

அவளைக் கண்டதும் நின்ற இடத்தில் நிலைத்து நின்றான் ஜடிலன் பல விநாடிகள். பிறகு அடிமேலடி வைத்து மெல்ல அவளை அணுகி, "நான் உதவட்டுமா அரசகுமாரி?" என்று கூறி அவள் குழல்களைக் கொடிகளிலிருந்து மெல்ல மெல்லப் பிரிக்கலானான்.

# 9. வாவிக் கரையில்

முட்செடிகளும், முல்லைக் கொடிகளும், பூஞ்செடிகளும், வெட்டிச் செடிகளின் புதர்களும், சம்பங்கிக் கொடிகளும், சாதாரண அலறிகளும், கண்ணைக் கவரும் காட்டுப் பூஞ்செடிகளும் விண்ணை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த மரமல்லி மலர்களுமாகப் பலபடி காடாகவும் நந்தவனமாகவும் விதவிதமாகக் காட்சியளித்த அந்தப் பகுதியின் ஊடே ஓடிய பாதைகூட அக்கம்பக்கத்திலிருந்த செடிகொடிகளைப் போலவே ஓர் ஒழுங்கில்லாமல் வளைந்து வளைந்து சென்றதைக் கண்ட ஜடில பராந்தகன் அந்தப் பாதை இயற்கையாக அமைந்ததில்லையென்பதையும், காட்டிற்குக் குறுக்கே தேவையை முன்னிட்டு சமீப காலத்தில் அப்பாதை வெட்டிவிடப்பட்டிருக்க வேண்டுமென்றும் தீர்மானித்துக்கொண்டான். அப்படி இப்பாதை வளைந்து வளைந்து சென்றதாலும் அக்கம் பக்கத்திலும் மேலேயும் தொத்திக் கிடந்த செடிகள் எந்தச் சிருக்கும் உட்படாததாலும் எதிர்பாராதவிதமாக அரசகுமாரியின் குழலில் கொடியென்று சிக்கிக்கொண்டது வியக்கத்தக்க விஷயமல்லவென்பதையும் புரிந்துகொண்டான் அந்த வாலிபன். அக்கம்பக்கத்திலிருந்த சிறு காடும், வானிலிருந்து மதி வீசிய மயக்க ஒளியும், அவற்றினிடையே வனதேவதை போல் நின்ற அரசகுமாரியும் இணைந்த காட்சி எத்தனை அற்புதமாயிருந்ததென்பதை நினைத்துப்



பார்த்த அவன் அரசகுமாரி தனது இரு கைகளையும் உயரத் தூக்கி குழலிலிருந்த கொடியைப் பிரிக்க முயன்ற போது நர்த்தனபாணியில் அவள் காட்சியளித்ததையும் கண்டான். "பெண் சிருஷ்டியில் கலையும் கலந்து கிடக்கிறது" என்று மனத்துள் சொல்லியும் கொண்டான். அப்படிக் கலையால் கவரப்பட்ட காரணத்தாலோ என்னவோ விடுவிடு என்று நடந்து சென்று அவளை அணுகி, "உதவட்டுமா அரச குமாரி" என்ற சம்பிரதாயச் சொற்களை உதிர்த்துவிட்டு அவள் பதிலுக்குக் காத்திராமல் தலைக் குழலிலிருந்து கொடிகளைத் தன் கைகளால் பிரிக்கலானான்.

நீள்விழியின் நிலை விவரணத்துக்கு அப்பாற்பட்டதாயிருந்தது. அந்தக் குறுகலான காட்டுப் பாதையில் அவள் யாரையும் எதிர்பார்க்காத காரணத்தாலும், அரவமேதும் செய்யாமல் ஜடிலன் அவளுக்குப் பின்புறம் வந்து, "நான் உதவட்டுமா அரசகுமாரி?" என்று கேட்டதாலும் அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஏதோ சொல்ல வாயெடுத்தவள், தலைக்குமேலிருந்த தன் கரங்களை அவன் கரங்கள் தொட்டு நீக்கிக் குழலைப் பிரிக்கும் தொழிலை அவை ஏற்றுக் கொண்டதாலும் அந்த நிலையில் அவன் அவளுக்கு மிகமிக அருகிலிருந்ததாலும் பேசச் சக்தியற்று உள்ளிருந்த சொல்லை வெளிக் கொட்ட முடியாமல் திணறினாள். தனக்குப் பின்னால் அவன் உடை உராய்ந்ததையும் மேலே கொடியைப் பிரித்த கைகள் இரண்டொரு முறை தலைமீது பட்டதையும் உணர்ந்த அவள் உணர்ச்சிகள் உச்சியை எட்டிக்கொண்டிருந்தன. அந்த நிலையில் கொடியில் குழல் சிக்கிக் கொண்டதா அல்லது அந்த வாலிபன் பிடியில்தான் சிக்கிக் கொண்டாளா என்பது புரியாததால் மெல்ல இருமுறை அசையவும் செய்தாள் அவள்.

அப்படி அசைந்ததால் ஏற்பட்ட பின்னெழில்களின் சம்பந்தத்தால் ஜடிலன் நிலையை பெரிதும் சங்கடத்திற்குள்ளாக்கியிருந்தது. அரசகுமாரியைத் தொடவேண்டுமென்ற எண்ணம் ஏதுமில்லாமல் அவள் குழலை கொடியிலிருந்து மெல்ல மெல்லப் பிரிக்கத் தொடங்கிய அந்த வாலிபன், அந்த பணியில் தன்மீது உராய்ந்த பின்னெழில்களாலும், முழங்கைமீது தடவிய கன்னத்தாலும், ஒருமுறை திடப்படுத்திக் கொள்ள அவனே சிறிது இடம் பெயர்ந்த போது உராய்ந்த கால்களாலும் தன் பணியை அடியோடு மறந்தான். அப்படி பணியை மறந்ததால் இல்லாத சிக்கல்களைக் கொடி விளைவித்து விட்டதாகப் பாவித்து அவளை நெருங்கிக் குழலைப் பெரிதும் ஆராய்ச்சி செய்தான். அவளது கருங்குழல்கள் நிலவொளியில் அதிகக் கறுப்பாகத் தெரிந்தன. குழல் முடிப்பிலிருந்து பிரிந்து எழுந்திருந்த ஓரிரு தனி மயிர்கள் சந்திர வெளிச்சத்தில் பளபளத்தன. கொடியில் சிக்கிவிட்ட குழலின் சிறு பகுதி அழகில் அந்தக் கொடியின் மலர்களோடு போட்டி போட்டன.

நீள்விழி தன் நீள் குழலை அன்று நன்றாக எடுத்து பின்னலிட்டு முடிந்திருந்ததால் அவள் சங்குக் கழுத்து நன்றாகத் தெரிந்தது பார்வைக்கு. அந்தக் கழுத்தில் காரணமில்லாமல் பதிந்த அவன் கையின் மேல் பகுதியில் அக்கழுத்து லேசாகச் சுடவும் செய்தது. அந்தச் சூட்டையும் வெண்மையையும் கவனித்த ஜடிலன், "சங்கு சுட்டாலும் வெண்மை தரும்" என்பது எத்தனை சரியாயிருக்கிறது என்று நினைத்தான்.

கழுத்தில் அவன் கை பட்டதையும் பிறகு தோள்பட்டையில் அவன் முழங்கை லேசாக ஊன்றியதையும் தலைக்கு மேலே குழலில் அவன் உள்ளங்கையும் விரல்களும் விளையாடிக் கொண்டிருந்ததையும் கவனிக்கவே செய்தாள்



நீள்விழி. "இவர் எதற்காக என் குழலைப் பிரிக்க வேண்டும்? அப்படியே பிரித்தாலும் எதற்காக இத்தனை நேரம் பிடிக்க வேண்டும்?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டாலும் அவனைக் கேட்கவில்லை அந்தக் கேள்விகளை, அதற்குப் பதிலாக, "ஏன் ரொம்ப சிக்கியிருக்கிறதா?" என்று மட்டும் கேட்டாள் ஏதோ கேட்க வேண்டுமென்பதற்காக.

"ஆமாம்" என்ற ஜடிலன் சில விநாடிகள் பதில் சொல்லாமல் உணர்ச்சிகளை சற்று உதறிக்கொண்டு உண்மையாகவே குழல்களைப் பிரிக்கத் தொடங்கினான். குழல்களில் முட்கள் பல இடங்களில் சிக்கியிருந்ததால் ஒரே நிலையில் நிற்பதை விட்டு அவளைச் சுற்றியும் வந்து மிக லாவகமாக கொடி முட்களிலிருந்து குழல்களைப் பிரிக்கலானான். அவன் தன்னைச் சுற்றி வந்ததும் சுற்றி வந்த போது அவன் உடல் ஓரிரு சமயங்களில் தன் மீது கண்டபடி பட்டதும் அவளுக்குப் பெரு வேதனையை அளித்தது. போதாக்குறைக்குக் கடைசியாக அவன் அவள் எதிர்ப்புறம் வந்து, "அரசகுமாரி! சற்று தலையை நிமிர்ந்து கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு அவள் நிமிர்வதற்குக் காத்திராமல் அவனே அவள் முகவாய்க் கட்டையைப் நிமிர்த்திவிட்டது அவள் மனத்துக்கு வேதனையாக மட்டுமல்லாமல் பெரும் சோதனையாகவுமிருந்தது.

"இத்தனை தூரம் இந்த ஆண்மகன் நெருங்கி வர ஏன் நான் அனுமதித்தேன்? ஏன் அவர் செயல்களுக்கெல்லாம் சும்மா இருக்கிறேன்?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள். "முட்கொடி குழலில் சிக்குவது இதுவல்லவே முதல் தடவை! எத்தனையோ முறை சிக்கியிருக்கிறதே அப்பொழுதெல்லாம் இவரா வந்தார் குழலை விடுவிக்க?" என்றும் வினவிக் கொண்டாள். "சரி, இத்தனை நாள் குழலைப் பிரித்துக் கொண்டவள், நானே பார்த்துக் கொள்கிறேன். செல்லுங்கள் வழியைப் பார்த்துக் கொண்டு

என்று ஏன் சொல்லவில்லை?" என்றொரு கேள்வியும் எழுப்பிக் கொண்டாள்.

கேள்விகள் எழும்பின ஒன்றன்பின் ஒன்றாக. பதில்கள் மட்டும் எழும்பவில்லை. ஏனென்றால் இதயத்துக்குத் தெரியும் பதில் ஒன்று தானென்று. "அந்த வாலிபன் வந்ததும் உனக்குப் பிடிக்கிறது. அவன் நெருங்கியதும் உனக்குப் பிடிக்கிறது. அவன் குழலைப் பிரிப்பது முடிந்து விடப்போகிறதே என்ற பயமும் உனக்கிருக்கிறது" என்று கூறியது அவள் மனம். ஆனால் அந்த உண்மையைப் புத்தி ஏற்றுக்கொள்ள மறுத்தது. "இல்லையில்லை, அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. அவராக வந்தார். நான் வேண்டாமென்று சொல்லுமுன்பு குழலைத் தொட்டுப் பிரிக்கத் துவங்கிவிட்டார்" என்று புத்தியைக் கூறும்படி வைத்தாள் அவள். அதன் காரணமாக ஐடிலன் மீதும் குற்றத்தைத் திருப்பினாள். "இந்தப் பாதை எனக்காகப் போடப்பட்டது. இதில் எப்படி வரலாம் இவர்? வந்தாலும் என்னை எப்படித் தொடலாம்? ஆண்மகன் கர்வம், துடிப்பு, பித்து இவைதான் காரணம்" என்று சீற்றமடைந்தாள். இத்தகைய நினைப்புகளின் காரணமாக அவள் ஏதோ சொல்ல முயன்று சட்டென்று முகத்தைத் தூக்கியபோது அவள் கன்னம் அவன் முகவாய்க் கட்டையில் இடித்துவிட்டது. சட்டென்று அவன் கைகள் அவள் குழல்களிலிருந்து இறங்கின. ஒரு கை அவள் இடக்கன்னத்தைத் தொட்டுப் பார்த்தன. "தேவி! முகவாய்க் கட்டைப் பலமாகப் பட்டு விட்டதா?" என்ற சொற்களும் அனுதாபத்துடன் வந்தன.

அவளுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. அவள் உடலெங்கும் தணல் வாரித் தெளித்துக் கொண்டிருந்தது. அந்தத் தணலுக்குப் புனல் எதுவென்பதையும் பருவ மங்கையான அவள் அறிந்திருந்தாள். எதையும்



சொல்லும் நிலையில் அவள் இல்லையென்றாலும் "இல்லை, படவில்லை" என்று மெல்லச் சொன்னாள்.

"திடீரென்று தலையை நிமிர்த்திவிட்டீர்கள்." தன் மீது குற்றமில்லையென்று உணர்த்த முற்பட்டான் அவன்.

"ஆம் ஆம்" என்றாள் அவள் ஏதும் சொல்ல முடியாமல்.

"இத்தை நேரம் பொறுத்திருந்தவர் இன்னும் சில விநாடிகள் பொறுத்திருக்கலாம்" என்றான் அவனும் சங்கடத்துடன்.

"எதற்கு?"

"குழல் விடுபட."

"எதிலிருந்து?"

"சிக்கலிலிருந்து."

"எடுத்து விட்டீர்களா?"

"ஆம்; எடுத்துவிட்டேன்."

இதைச் சொன்ன அவன் மறுபடியும் ஒருமுறை விரல்களால் அவள் குழலை ஒரு விநாடி துழாவி கொடியை எடுத்து அப்புறம் எறிந்தான். "இப்பொழுது பாருங்கள்" என்று தலையை தன்னை நோக்கி இழுத்தான்.

குழல்கள் விடுதலை பெற்றன முட்கொடியிலிருந்து. ஆனால் தன் மனம் அந்த வாலிபனிடமிருந்து விடுபடவில்லையென்பதை உணர்ந்தாள் நீள்விழி. அவள் சட்டென்று முன்னோக்கித் தலையை இழுத்ததால் கிட்டத்தட்ட அவன் மார்பில் பட்டுவிட்ட முகத்தை மறுபடியும் பின்னுக்கு இழுத்துக்கொண்டாள். "போதும்" என்று கூறி அவனிடமிருந்து சற்று விலகி நிற்க முற்பட்டாள்.

ஆனால் அவன் ஒரு கை துணிவுடன் அவள் தோளில் பதிந்து நின்றது. அவன் கூரிய விழிகள் அவள் விழிகளை உற்று நோக்கின. "எதற்காக இந்த இரவு நேரத்தில் இந்தக் குறுகல் பாதையில் நடக்கிறீர்கள்? எங்கு போகிறீர்கள்?" என்று வினவவும் செய்தான் அவன்.

அவன் கை தன் தோள்மீது துணிவுடன் பதிந்ததையும், தோள்மீது மிகக் கடினமாக அது அழுந்தியிருந்ததையும், தோளை வினாடிக்கொரு முறை அது நொறுக்கிப் பிடித்ததையும் அவள் உணரவே செய்தாள். "தோளை என்னவென்று நினைத்து நொறுக்கிப் பிடிக்கிறார்?" என்று தன்னைக் கேட்டுக் கொள்ளவும் செய்தாள் கோபத்துடன். அந்தக் கோபத்துடன் வெட்கமும் இன்பமுங்கூட இணைந்து கிடந்தது அவளுக்கே புரியவில்லை. இருப்பினும் அதை அசட்டை செய்து துணிவை வரவழைத்துக் கொண்டு சீற்றம் மிகுந்த விழிகளை அவன்மீது திருப்பினாள். "நான் எங்கு போகிறேன், எப்பொழுது போகிறேன், என்ன செய்கிறேன் என்பதைக் கேட்க யாருக்கும் உரிமையில்லை" என்று சீறினாள் நீள்விழி.

அவள் தோள்மீதிருந்த கையை எடுக்காமலே பதில் கூறினான் அவன், "ஒருவரைத் தவிர" என்று.

"ஒருவரைத் தவிரவா!" அரசகுமாரி மேலும் சீறினாள்.

"ஆம்" என்றான் ஜடிலன் நிதானமாக.

"அந்த ஒருவர் நீங்கள் போலிருக்கிறது?" என்றாள் அவள் ஏளனத்துடன்.

"ஆம்," திட்டமாக வந்தது ஜடிலன் பதில்.

"யார் கொடுத்தது உரிமையை?"

"தர்மாதிகாரி."



"தர்மாதிகாரியா?".

"ஆம். அதை நீங்களும் ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள்."

"எப்பொழுது ஒப்புக்கொண்டேன்?"

"அரசகுமாரி! உங்கள் குல வாளை என்னிடம் கொடுத்து உங்களையும் சோழ நாட்டையும் காக்க தர்மாதிகாரி ஆணையிட நானும் அந்த ஆணையை ஏற்று சிவலிங்கத்தின் முன்பு சத்தியம் செய்திருக்கிறேன். உங்கள் முன்பு மண்டியிட்டு ஆணையிட்டிருக்கிறேன். நீங்கள் அப்பொழுது மறுக்கவில்லை." என்று விளக்கினான்.

அரசகுமாரி வியப்பு ததும்பிய விழிகளை ஜடிலன்மீது திருப்பினாள். "அதற்கும் இப்பொழுது நீங்கள் என்னைத் தொடர்ந்து வந்ததற்கும் என்ன சம்பந்தம்? நிம்மதியை நாடிச் செல்லும் என்னிடம் வந்து என்னைக் கேள்வி கேட்பதற்கும் அந்த ஒப்பந்தத்துக்கும் என்ன சம்பந்தம்?" என்று சீறினாள் அரசகுமாரி.

ஜடிலன் தன் கையை அவள் தோளிலிருந்து எடுத்தான். "அரசகுமாரி! உங்களை மாற்றரசர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் ஒற்றர்கள் இங்குமிருக்கலாம். உங்களைத் தூக்கிச் செல்ல சமயம் பார்த்திருக்கலாம். அந்தச் சமயத்தை, சந்தர்ப்பத்தை நீங்கள் அளிப்பது எனக்குத் திருப்தியளிக்க வில்லை," என்றான் ஜடிலன் உறுதியும் அதிகாரமும் நிறைந்த குரலில்.

நீள்விழியின் சீற்றம் அதிகமாயிற்று. "பாண்டி நாட்டு வீரரே!" என்று அழைத்தாள் அதிகாரக் குரலில்.

"அரசகுமாரி!" ஜடிலன் பதிலிலும் கடுமையிருந்தது.

"இந்த வழி எங்கு செல்கிறது தெரியுமா?"

"தெரியாது."

"நான் நீராடும் வாவிக்குச் செல்கிறது."

"குறுக்கு வழியா?"

"ஆம்."

"எதற்காக இந்த வழி, நேர்வழியிருக்கும்போது?"

"இரவில் நான் உட்கோட்டையை விட்டு வெளியே போவது கிடையாது."

"அதனால் இந்த வழியா?"

"ஆம். இந்த வழியில் என்னைத் தவிர யார் வந்தாலும்...?" அரசகுமாரி வாசகத்தை முடிக்கவில்லை.

ஜடிலனே முடித்தான் வாசகத்தை, "மரணதண்டனை" என்று. அதை முடித்ததும் பலமாக நகைக்கவும் செய்தான்.

அரசகுமாரி அப்புறமும் இப்புறமும் அஞ்சன விழிகளை அச்சத்துடன் திருப்பினாள். "உஷ்! இரைந்து நகைக்காதீர்கள்" என்றும் கூறினாள் அச்சம் குரலிலும் துலங்க.

"ஏன்?" ஜடிலன் நகைப்பை நிறுத்திக் குரலைத் தாழ்த்தினான்.

"நீங்கள் என்னுடன் இங்கு தனித்திருப்பது யாருக்கும் தெரியக்கூடாது" என்றாள் அவள் பயத்துடன்.

"தெரிந்தாலென்ன?" என்று கேட்டான் ஜடிலன்.

"தவறல்லவா?" நீள்விழி தன் நீள்விழிகளை நிலத்தில் நிலைக்கவிட்டாள்.

"என்ன தவறு?"

"வயது வந்த பெண்ணுடன் ஓர் ஆண்மகன் இரவில் தனித்திருப்பது."



"நான் தங்கள் மெய்க்காவலனல்லவா?"

"ஆம். அது சரிதான்..."

"வேறென்ன?"

"ஐயோ! உங்களுக்குத் தெளிவாக எப்படிச் சொல்லுவேன்." என்று கூறிய நீள்விழி சரேலென்று திரும்பி குறுக்குப் பாதையில் நடந்தாள் வேகமாக.

அவள் அப்படித் திரும்பிச் செல்வாள் என்பதை எதிர்பாராத ஜடிலன் ஒரு விநாடி நின்ற இடத்தில் நின்றான். அடுத்த விநாடி அவளைத் தொடர்ந்தான். அரசகுமாரி வேகமாக நடந்தாள். அவனும் அவளுக்குப் பின்னால் வேகமாகச் சென்றான். இடையிடையே அவன் கைகள் அவள் உடலின் பின் பகுதியில் பட்டன. பட்ட சமயங்களில் இருவரும் நிலைகுலைந்தாலும் இருவரும் அதைக் காட்டிக் கொள்ளாமல் நடையில் வேகத்தைக் காட்டிக் கொண்டார்கள்.

வளைந்து வளைந்து சென்ற அந்தக் குறுக்குப் பாதையில் சிறிது தூரம் நடந்த பிறகு நீள்விழி திடீரென ஒரு விரிவான இடத்தில் நின்றாள். எதிரே விரிந்தது அந்தத் தாமரை வாவி. அதை உற்றுப் பார்த்துக்கொண்டு சிறிது நேரம் நீள்விழி மெல்ல தரையில் உட்கார்ந்து கொண்டாள். ஜடிலனும் அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு வாவியையும் நோக்கி அவளையும் நோக்கினான். பிறகு கூறினான், "அரசகுமாரி நீங்களும் வாவியும் ஒன்று" என்று.

அரசகுமாரி தனது நீள்விழிகளை அவனை நோக்கித் திருப்பினாள். "கவி பாடப் போகிறீர்களா?" என்று வினவினாள் விஷமத்துடன்.

"இல்லை அரசகுமாரி. எனக்குக் கவி பாடத் தெரியாது." என்றான் ஜடிலன்.

"தெரியாதா?"

"தெரியாது. நான் கவிஞனல்ல. அவனுக்கு மேம்பட்டவன்."

"மேம்பட்டவரா?"

"ஆம். அரசகுமாரி. நான் வேதாந்தி" என்றான்.

அரசகுமாரி பதில் கூறவில்லை. நகைத்தாள். 'இவர் வேதாந்தியாம். அந்தக் குறுகல் பாதையில் இவர் பார்த்த பார்வை, தோளைப் பிடித்த வகை!' என்று நினைத்து நகைப்பைத் தொடர்ந்து முறுவலும் கொண்டாள்.

"ஏன் நம்பவில்லையா நீங்கள்?" என்ற ஜடிலன் அவளையும் பார்த்து வாவியையும் பார்த்தான். "அரசகுமாரி! இந்த வாவியின் மலர்கள் முகங்குவித்துக் கண் மூடி இருக்கின்றன. நீங்களும் கண்மூடியாயிருக்கிறீர்கள். சந்திர வெளிச்சத்திலும் இந்த வாவி நீர் கருமையாகத் தெரிகிறது. உங்கள் இதயத்திலும் இப்பொழுது இருளடைந்திருக்கிறது. உண்மை புலனாகவில்லை உங்களுக்கு" என்றான் மெதுவான குரலில்.

நீள்விழி அவனை நோக்கினாள். அவன் அவ்ளைப் பார்க்கவில்லை. வாவியையே நோக்கிக் கொண்டிருந்தான். "அரசகுமாரி! உன்னைப் பிடித்த நல்ல காலமோ என்னைப் பிடித்த நல்ல காலமோ நான் உன்னைத் தேடி வந்திருக்கிறேன்" என்று கூறிய அவன் திடீரென அவளை அணுகி அவள் ஒரு கையைத் தன் கையால் பிடித்தான். இன்னொரு கை அவள் முழங்காலுக்கு மேல் அழுந்தியிருந்தது. அந்த நிலையில் வாவியைப் பார்த்து விண்ணைப் பார்த்துக் காரணமின்றி கூவினான் அவன், "வாவியே, வான்மதியே உங்கள் சாட்சி, நீள்விழி நாளை சாம்ராஜ்யாதிபதி! உங்கள் சம்மதம் எப்படி?" என்று.



அதுவரையில் சிறு வெண்மேகத் திரையில் ஒளிந்து கொண்டிருந்த வெண்மதி வெளியே வந்தான். பறவை அசைந்ததால் அசைந்த ஒரு மரக்கிளையிலிருந்து விழுந்த ஒரு புன்னைக் காயால் 'சொட்' என்ற அரவம் வாவியிலிருந்து எழுந்தது. வாவி நீர் லேசாக விரிந்து விரிந்து சக்கரங்களையும் பரப்பியது. "வாவியும் வான்மதியும் ஒப்புக்கொண்டுவிட்டன. பார்த்தாயா நீள்விழி" என்ற ஜடிலன் கையை மெள்ள அவள் இடையில் செலுத்தினான்.

நீள்விழிக்கு ஏதும் புரியவில்லை. ஏதும் நினைக்கும் நிலையிலும் அவள் இல்லை. ஜடிலன் ஒருவேளை மூளை பிசகியவனோ என்றும் பயம் மூடிக்கொண்டது அவளை. அடுத்த விநாடி அவன் கைகளின் சிறையில் இருந்தாள் அவள். பயத்துடன் "நீ யார்? நீ யார்?" என்று வினவவும் செய்தாள்.

பதில் கூறினான் ஜடிலன். சந்தேகமின்றி அவனுக்குப் பைத்தியந்தானென்பதைப் புரிந்துகொண்டாள் நீள்விழி. ஆகவே மிதமிஞ்சிய அச்சத்தால் அசைவற்றும் போனாள். ஜடிலன் கைகள் அவளைச் சுற்றித் தவழ்ந்தன. உதடுகள் நம்பமுடியாத சொற்களை உதிர்த்தன.



# 10. இன்னொருவனுக்கும் தெரியும்

ஏதோ ஒரே ஒருநாள் பரிச்சயமே உள்ளவனான அந்த வாலிபன் திடீரென கைகளை தனது உடலைச் சுற்றி வளைத்துவிட்டதையும்; நீள்விழியெனப் பெயர் சொல்லி அழைத்ததையும், பிறகு வாளையும் வாவியையும் சுட்டிக் காட்டி தன்னை சாம்ராஜ்யாதிபதியென்று கூறியதையும் பார்த்ததால் சோழன் மகள் அவன் சித்தம் பிசகியவனோ என்னவோ என்ற நினைப்பால் ஒரு விநாடி பெரும் பயத்துக்குள்ளானாள். அவன் பார்வையிலிருந்த வெறியும் சொற்களிலிருந்த வேகமும் அவன் பைத்தியமென்பதற்கு அறிகுறியாக இருந்தாலும், அவன் மேற்கொண்டு விபரீத அலுவல்களில் ஈடுபடாத காரணத்தால் அவன் பைத்திய மல்ல, சற்று நிலை தவறியவன் தான் என்று முடிவு செய்து கொண்டு சிறிது பயத்தையும் உதறிக்கொண்டாள்.

பயம் நீங்கியதானாலும் அவன் கைகள் அவள் உடலை அப்பொழுதும் சுற்றியிருந்த காரணத்தால் அவள் நிலை மட்டும் சங்கட நிலையாகவே இருந்தது. கைகள் அப்படி யொன்றும் அவள் உடலை அழுத்தி அணைக்கவுமில்லை, இறுக்கி நொறுக்கி விடவுமில்லை. ஏதோ புஷ்பமாலை யைச் சுற்றி மிக எச்சரிக்கையுடன் தவழ்வதுபோல் தவழ்ந்து தொங்கிக்கொண்டிருந்தது. அவன் உள்ளங் கைகள் ஓரிரண்டு இடங்களிலும் பட்டாலும், மென்மை யாகவும் மிக பண்புடனும் பட்டன. முந்திய நாளிரவு



அவன் கையொன்று தன் கையை ஆவேசத்தில் இறுக்கிப் பிடித்த போது ஏற்பட்ட ஸ்பரிசமே அவளைப் பெரிதும் உலுக்கியிருந்ததென்றால் அன்று அந்த வாவிக்கரையில் அவன் கைகள் உடல் பூராவையும் வளைய வந்தபோது அவள் உணர்ச்சிகள் பெரிதும் நிலைகுலைந்து கிடந்தன. அந்த சமயத்திலும் அவன் துணிவை நினைத்து மெச்சி னாள் அவள். ஆனால், முதல் நாள் வாவியில் நீராடியதும் அதற்கு மரணதண்டனை உண்டென்பதை தான் அறி வித்த பின்பும் சிறைச்சாலையில் பலவந்தமாகப் புகுந்த வன் உயிருக்கு அதிகம் மதிப்பு வைக்காதவனென்பதை உணர்ந்து கொண்டதால், உயிருக்குத் துணிந்தவன் எதற்குத்தான் துணியமாட்டான் என்று தன்னைத்தானே வினவிக்கொண்டாள்.

அவனைப்பற்றி நினைக்க நினைக்க அவன் பெரும் புதிராகவேயிருந்தான் அவள் சித்தத்துக்கு. அவன் வந்த தினத்திலிருந்து நடந்த பல விஷயங்கள் விசித்திரமாகவே யிருந்தன அவளுக்கு. அவன் வந்ததும் வாவியில் குளித்த தும், பிறகு சிறையில் புகுந்ததும், பாண்டிய மன்னனிட மிருந்து ஓலையைத் தனக்குக் காட்டியதும், தன்னைக் காக்க வாளைப் பெற்றுக்கொண்டதும் எல்லாம் பெரு விசித்திரமாயிருந்தது அவளுக்கு. "அந்த ஓலையைப் பாண்டிய மன்னர் இவரிடம்தான் கொடுத்தார் என்ப தற்கு என்ன அத்தாட்சி? இவர் வேறு யாரிடமாவது அதை திருடியிருந்தால்..." என்று நினைத்தவள் திடீரென்று அந்த நினைப்பை பாதியிலேயே அறுத்து, "சேசே, ஒருக்காலும் இருக்காது. இவர் கண்ணியமானவர்தான்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

அவனைப்பற்றி தவறாக நினைக்க அவள் மனம் இடங் கொடுக்கவில்லை, அவன் தவறான அலுவலைப் புரிந்து கொண்ட பின்புகூட. அரசகுமாரியைக் கைகளால்

அணைப்பதைவிடப் பெரும் தகாத காரியம் என்ன இருக்க முடியும்? இதைக்கூட எண்ணிப் பார்க்கவில்லை அவன். மேலுக்கு எத்தனை கொதித்தாலும் உள்ளூர அந்தக் கைகளின் தழுவலில் ஆனந்தமே அடைந்தாள் அவள். "உண்மையில இவர் ஒன்றும் அப்படிக் கெட்டவர் அல்லர். ஏதோ உணர்ச்சி மிகுதியால் கைகளை என்னைச் சுற்றவிட்டாரே தவிர வேறு அக்கிரமம் ஏதும் செய்ய வில்லை" என்று சொல்லிக்கொண்டு திருப்தியும் அடைந்தாள். அது உண்மைத் திருப்தியல்லவென்பதும் அக்கிரமத்தை மனம் விரும்பியதென்பதும் அவளுக்குத் தெரிந்தேயிருந்தது. ஆனால் ஏதேதோ சொல்லி தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்டாள். அத்தகைய சுய ஏமாற்றம் காதலின் ஒரு பகுதியென்பதையும் புரிந்து கொண்டாள்.

அப்படிப் புரிந்துகொண்ட பின்பும் மேலுக்குச் சீற்றத்தையே காட்டி, "நீ யார்? நீ யார்?" என்ற கேள்விகளைத் தொடுத்தாள்; தொடுத்ததில் பயத்தையும் காட்டினாள்.

அவன் கூரிய கண்கள் அவள் கண்களை உற்று நோக்கின. "பாண்டியன்" என்ற சொற்களை உதடுகள் அமைதியுடன் உதிர்த்தன.

இதைக்கேட்ட அவள் மேலும் திகைத்தாள். "பாண்டியனா! பாண்டி நாட்டு வீரனா?" என்றாள் அந்தத் திகைப்பின் ஊடே.

அவன் பதில் மிகத் தெளிவாகவும் வந்தது, திடமாகவும் வந்தது. பதிலின் வாசகத்தில், குழப்பம் ஏதுமில்லை. "பாண்டிய நாட்டு மன்னன்" என்ற சொற்கள் மிகத் திடமாக உதிர்ந்தன அவன் உதடுகளிலிருந்து.

அவள் கண்களில் அவநம்பிக்கையின் சாயை படர்ந்தது. "இதென்ன வேடிக்கை?" என்ற சொல்லை உதிர்த்தாள் அவள் இகழ்ச்சி ததும்பிய குரலில்.



"பாண்டிய நாட்டு மன்னனாயிருப்பதில் வேடிக்கை என்ன இருக்கிறது?" என்று கேட்ட அவன் சற்று நகைத்தான்.

நீள்விழிக்கு என்ன சொல்வதென்று விளங்கவில்லை. பாண்டிய நாட்டு மன்னன் தன்னந்தனியே புறப்பட்டு மாற்றார் நாட்டுக்குள் புகுவானென்பது வெறும் புரட்டு என்று நினைத்தாள். அப்படியே புகுந்தாலும் தன்னை இன்னாரென்று அறிவிக்காமல் சிறைக்குள் போய் இரவைக் கழிப்பானென்பதை அவளால் நம்பமுடியவில்லை. "நீங்கள் யார்? நிஜத்தைச் சொல்லுங்கள்" என்று மீண்டும் வினவினாள்.

அடுத்த வார்த்தைகள் அவனிடமிருந்து மிகுந்த அதிகாரத்துடன் உதிர்ந்தன. "பாண்டியன் நெடுஞ்சடையன் வாயில் பொய் வராது" என்று கூறினான் திடமாக அவளை நோக்கி.

நீள்விழி சற்றுச் சிந்தித்தாள். பிறகு கேட்டாள் நிலத்தில் தனது நீள்விழிகளை நிலைக்கவிட்டு, "பின் சொன்னீர்களே நீங்கள் பாண்டி நாட்டு வீரரென்று" என்று.

"சொன்னேன்."

"ஆனால் இப்பொழுது மன்னனென்கிறீர்கள்..."

"ஏன்? மன்னன் வீரனாயிருக்க முடியாதா?" அவன் தென்மேற்கில் கண்களைச் செலுத்தினான். "நீள்விழி! அரசனும் ஒரு வகையில் சேவகன்தான். மக்களுக்கு சேவை செய்ய அதிக வசதியுள்ளவன்தான் மன்னன். அவன் வீரனாயிருந்தாலொழிய நாட்டைக் காக்க முடியாது. ஆகவே நான் மன்னன் என்பதைவிட சாதாரண வீரன் என்பதில் பெருமையடைகிறேன். அதோ இருக்கிறது என் நாடு. ஆனால் அதைக் காக்கத்தான் இங்கு வந்திருக்கிறேன்..." என்று ஏதோ சொல்லிக்கொண்டு போன

வனை நீள்விழி சட்டென்று மடக்கி, "அந்த நாட்டைக் காக்க இங்கு வருவானேன்?" என்று வினவினாள்.

ஜடிலன் சிறிது நேரம் சிந்தனையிலிறங்கினான். "நீள் விழி! இங்கு உங்கள் கோட்டையிருக்கிறதல்லவா?" என்று துவங்கினான்.

"ஆம்" என்றாள் அவள்.

"இதற்கு முன்பு அடர்ந்த காட்டை ஏன் விட்டு வைத்திருக்கிறீர்கள்?"

"கோட்டையைக் காக்க அதற்கு முன்புள்ள எல்லை தேவையல்லவா?"

"ஆம். சரியாகச் சொன்னாய் நீள்விழி! கோட்டையைக் காக்க அதன் எல்லை பாதுகாக்கப்பட வேண்டும். நாட்டைக் காக்கவும் அதுதான் வழி. பாண்டி நாடு பாதுகாக்கப்பட வேண்டுமானால் அதன் முக்கிய எல்லையான இந்தச் சோழநாடு பாதுகாக்கப்பட வேண்டும். அதற்குப் பூர்வாங்கமான சில அலுவல்களிருக்கின்றன. அவற்றை நாடித்தான் நான் தஞ்சைக்குப் புறப்பட்டேன். இடையில் இங்கு சிக்கிக் கொண்டேன்" என்று விளக்கினான்.

சிக்கிக்கொண்டது அவனா அல்லது தானா "என்பது புரியவில்லை சோழன் மகளுக்கு. அப்பொழுதும் அவளைச் சுற்றியிருந்த கைகள் விலகவில்லை. ஆகவே மெல்ல நகைத்த அவள், "சிக்கிக் கொண்டிருப்பது நீங்களல்ல" என்றாள்.

ஜடிலன் தன் கைகளை மெல்ல அகற்றினான். அவளை விட்டு, "மன்னிக்க வேண்டும். உணர்ச்சி மிகுதியில் செய்து விட்ட குற்றம்" என்று கெஞ்சவும் செய்தான்.

"மன்னர்கள் மன்னிப்பு கேட்பதில்லையே" என்றாள் நீள்விழி.



"மன்னனாயிருந்தாலும் குற்றம் குற்றமே. குற்றத்திற்கு யாராயிருந்தாலும் மன்னிப்புக் கேட்க வேண்டியது தான்" என்றான் ஜடிலன் அவளை நோக்கி.

"நல்ல அழகு?" என்றாள் நீள்விழி.

"ஏன் என்ன அழகுக்கு?"

"ஒரு பெண்ணைக் கட்டிப்பிடித்து விட்டு, பிறகு மன்னிப்பு கேட்டால் சரியாகி விடுமா?"

ஜடிலன் புரிந்து கொண்டான். உணர்ச்சி மிகுதியால் தான் சற்று முறைகேடாக நடந்து கொண்டு விட்டதையும் புரிந்து கொண்டதால் சற்று தள்ளியும் உட்கார்ந்தான்.

அவள் மேலும் நகைத்தாள். "ஏன் நகைக்கிறாய் நீள்விழி?" என்று அவன் கேட்டான்.

"பெண்ணைக் கட்டிப் பிடித்த பின்பு நகர்ந்து உட்கார்ந்துவிட்டால் குற்றம் குறைந்து விடுமா?" என்று கேட்டு மேலும் நகைத்தாள்.

ஜடிலன் மீண்டும் சூழ்நிலையில் கண்களை ஓட்டினான். வாவியையும் சூழ்ந்த காட்டையும் வானையும் பார்த்து அவளையும் பார்த்தான். "குற்றம் என்னுடையது மட்டுமல்ல நீள்விழி," என்று கூறினான் மெதுவாக.

"வேறு யாருடையது?" அவள் கேள்வியும் மெதுவாக எழுந்தது.

"பலருடையது" என்றான் அவன்.

"யார் யாருடையது?"

"வான்மதி..."

"உம்..."

"விண்மீன்கள்."

"பெரும் வீரர்களைப் போல் நிற்கும் இந்த மரங்கள்."

"வாவி..."

"கற்கள், புற்கள், குளத்துப்பாசி, மலர்கள்..." என்று கூறிய அவள் மெல்ல நகைத்தாள்.

"ஆம் ஆம்" என்ற அவன் அவளுடைய ஒரு கையைப் பற்றித் தன் கைகளுக்குள் புதைத்துக் கொண்டான். "அவை மட்டுமல்ல நீள்விழி, அவற்றுடன் நீயும் உண்டு. அவர்கள் குற்றத்தைவிட உன் குற்றம் அதிகம். உன் விழிகள் செய்த குற்றம் மிகமிக அதிகம்" என்றும் கூறி மெல்ல இருவருக்கு மிருந்த இடைவெளியைக் குறைத்துக் கொண்டான்.

அவன் மீண்டும் நகர்ந்து தன்னருகில் வந்துவிட்டதை அவள் கவனிக்கவே செய்தாள். துணிவுடன் மீண்டும் அவனது கரம் தன் இடையில் தவழ்ந்து சென்றதையும் உணர்ந்தாள். ஆனால் ஏது காரணத்தாலோ இம்முறை அவள் இரண்டையும் எதிர்க்கவில்லை. சீற்றச் சொற்களை உதிர்க்கவுமில்லை. விழிகள் நிலத்தில் தாழ்ந்து கிடந்தன. அவன் சமீபத்தின் காரணத்தினால் உடலெங்கும் உணர்ச்சி அலைபாய்ந்து கொண்டிருந்தது. அந்த நிலையை அந்த வாலிபன் பயன்படுத்திக் கொண்டுவிட்டால் விளைவென்னவென்பதையும் அவள் சிந்திக்கவில்லை. ஆனால் ஜடிலனும் அந்த நிலையைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ஒரு கையைத் தன் கையில் பிடித்துக் கொண்டிருந்தானானாலும், சரசமான நெகிழ்ச்சி எதிலும் அது ஈடுபடவில்லை. இடையில் தவழ்ந்த கைகூட ஓர் இடத்தில் பதிந்துவிட்டது. காதலைத் தவிர வேறு சிந்தனையில் அவன் மனம் புரண்டு கொண்டிருந்தது. அந்தப் புரட்சியில் அவன் கண்களில் கனவு தெரிந்தது. அவளைத் திரும்பிப் பார்க்காமலே அவன் கனவில் பேசுவதுபோல் பேசினான்: "நீள்விழி! உன்னையும் சோழநாட்டையும் பாதுகாக்க உன் பெயரால் மாறன்காரி ஓலை தீட்டியனுப்பி



யதும் நான் உன் பெயருக்கே ஓர் ஓலை தீட்டினேன். உன்னைப் பார்க்க வேண்டுமென்ற அவா நீண்ட நாட்களாக இருந்தது எனக்கு. தமிழகத்தின் கவிஞர்களெல்லாம் உன்னை என்ன அழகாக வர்ணித்திருக்கிறார்கள்! என்ன உவமைகளை அள்ளிக் கொட்டியிருக்கிறார்கள்! அவற்றைக் கேட்டேன். உன்னைப் பார்க்க உறுதி பூண்டேன். அந்த உறுதியுடன் மற்றோர் உறுதியும் கலந்து கொண்டது. முடிந்தால் உன்னைத் திருமணம் புரியவும் நிச்சயித்தேன்..." என்று சொல்லிக்கொண்டே போனவனை இடைமறித்த நீள்விழி, "திருமணமா!" என்று கேட்டாள்.

ஜடிலன் கனவு நிலையிலிருந்து மீளவில்லை. "ஆம், திருமணந்தான்!" என்று எங்கோ பார்த்துக்கொண்டு பதிலளித்தான்.

"அதற்கு என் சம்மதம் தேவையில்லை போலிருக்கிறது" என்றாள் அவள்.

"தேவைதான். அதைப் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது."

"எப்படி ஏற்பட்டது அந்த நம்பிக்கை?"

"உன் நாட்டை நீ நேசிப்பாய் என்று எண்ணினேன்."

"ஆம் நேசிக்கிறேன்."

"அதைப் பாதுகாக்க பாண்டி நாட்டுப் படைபலம் தேவை."

"ஆம்."

"அதை நாடி கடிதமும் வந்தது."

"ஆம், அனுப்பினோம் கடிதம்."

"ஆகையால்தான் நினைத்தேன் நீள்விழி எப்படியும் நாட்டைக் காக்க என்னை மணப்பாய் என்று. நாட்டுக்கு

உன்னைத் தியாகம் செய்ய மறுக்கமாட்டாய் என்று எண்ணினேன்," என்று கூறிய ஜடிலன் மேலும் சொன்னான்: "நீள்விழி! உன் அழகைக் கேட்டதாலும் உன்னைக் காப்பாற்றும் ஆர்வத்தாலும் என் கையெழுத்தை நானே போட்டு என் இலச்சினையை நானே பொறித்து ஓலை எழுதி எடுத்துக்கொண்டு புறப்பட்டேன் மதுரையை விட்டு. என் அமைச்சர்களும் படைத்தலைவர்களும் ஆட்சேபிக்கவில்லையா என்று கேட்பாய். அவர்கள் ஆட்சேபிக்கவில்லை. நான் தன்னந்தனியாகப் பயணம் செய்வதைப் பார்த்துப் பார்த்து, அதற்குத் தடை சொல்லிச் சொல்லி அவர்களுக்கு அலுத்துவிட்டது. பல இடங்களுக்குத் தனிமையில் போயிருக்கிறேன். இன்னும் பல இடங்களுக்குப் போவேன், ஆகையால் அவர்கள் தடை செய்யவில்லை. தஞ்சைக்குப் புறப்பட்டவன் இங்கு சிக்கிக் கொண்டேன் உன் கையில். பாண்டி நாடு பேரரசாகப் போகிறது நீள்விழி. அதன் சாம்ராஜ்ய அரியணையில் என் பக்கத்தில் நீ உட்காரப்போகிறாய். இந்த சோழ நாடு சந்தேகமின்றிப் பாதுகாக்கப்படும். பல்லவர் போர்களால் அழிக்கப்பட்டிருக்கும் அதன் வயல்கள், கிராமங்கள் மீண்டும் புத்துயிர் பெற்றுப் பூத்துக் குலுங்கும். என் பிற்காலம், உன் பிற்காலம் இரண்டும் இதில் பிணைந்து கிடக்கின்றன. ரூசகங்கள் திருப்தியாயிருக்கின்றன. பெரிய நீள அகலமுள்ள பெரும் தஞ்சைக் கோட்டையைப் பார்க்க வந்த எனக்கு இந்த பெண்ணாகடக் கோட்டை கிடைத்தது. பெண் நீயும் கிடைத்தாய். இனி இங்கிருந்து என் திட்டங்கள் இயங்கும்."

இதைச் சொன்ன அவன் சற்று நிதானித்தான். நீள்விழியின் உணர்ச்சிகள் ஊசி முனையில் நின்றன. அவனுடைய தைரியம், தன்னம்பிக்கை இரண்டும் அவளைத் திகைக்க வைத்திருந்தன. பெரிய சாம்ராஜ்யத்தை அவன் நிறுவி விடுவான் என்ற நம்பிக்கை அவளுக்குக் கூடக் கிடைத்தது.



இருப்பினும் ஊடே ஒரு பயமும் இருந்தது. இங்குள்ளவர்களுக்கு அவன் யாரென்பது தெரிந்தால் அவனுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமேயென்று எண்ணியதால் அவள் கலங்கினாள். அவள் வாய் விட்டும் கேட்டாள். "உங்களை யாரென்று இங்கிருப்பவர்கள் தெரிந்துகொண்டால்..." என்று.

"தெரிந்துகொள்ள முடியாது, நீ சொன்னாலொழிய," என்றான் அவன்.

"ஏன் தெரியாது?"

"முதலில் மன்னனொருவன் பரிவாரங்கள் இல்லாமல் தனியாக வருவானென்று யாரும் நம்பமாட்டார்கள். இரண்டாவது என் முகத்தை மதுரையில் நான் ஊர்வலம் செல்லும் தினங்களில் பார்த்தவர்கள் யாராவது இங்கு வந்தாலும் 'இவன் கிட்டத்தட்ட மன்னனைப் போலிருக்கிறான்' என்று நினைப்பார்களேயொழிய யாரும் மன்னனென்று உறுதியாக நினைக்கமாட்டார்கள்" என்றான் ஜடிலன்.

அவன் நினைத்தது சரியென்று அவள் நினைத்தாள். சரியல்லவென்பதை விஜயன் நிரூபித்துக் கொண்டிருந்தான். அதேசமயத்தில், எதிரே நின்ற ஒரு துறவியிடம் சொல்லிக் கொண்டிருந்தான் அவன், "சந்தேகமில்லை சுவாமி. நிச்சயம் அவன் பாண்டிய மன்னன் ஜடில பராந்தக நெடுஞ்சடையன்தான்" என்று.

துறவியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. "அப்படியானால் அவனைச் சிறை செய்தாலென்ன?" என்று வினவினார் சினத்துடன்.

"அதில் சில கஷ்டங்களிருக்கின்றன" என்ற விஜயன் அந்தக் கஷ்டங்களை விவரிக்கலானான்.

# 11. விஜயனும் துறவியும்

பங்கய வாவிக் கரையில் பல நெடுங்கதைகள் பேசி பரஸ்பர உணர்ச்சிகளிலும் வேட்கையிலும் சிக்கி உட்கார்ந்திருந்த நீள்விழியும் நெடுஞ்சடையனும் திருமண நினைப்பில் இளைத்திருந்த அதே நேரத்தில், அவர்கள் எந்த உண்மை வேறொருவருக்கும் தெரியாதென்று நினைத்தார்களோ, அதே உண்மையை உட்கோட்டைப் படைத்தலைவனாக விஜயன் தனக்கெதிரே நின்றிருந்த துறவியிடம் விளக்க முற்பட்டு, "சுவாமி! இன்று சிவலிங்கத்தின் முன்பாக சோழ நாட்டையும் நீள்விழியையும் பாதுகாக்க ஆணையிட்ட பெருமகன் பாண்டிய நாட்டின் சாதாரண வீரனல்ல, பாண்டிய மன்னன் ஜடில பராந்தக நெடுஞ்சடையன்தான், சந்தேகமில்லை" என்று கூறினான் திட்டமாக.

அவனெதிரே தாடி மீசையுடன் நெற்றியில் வைணவ ஸ்ரீசூர்ணமணிந்து சுமார் ஆறடிக்கும் மேலான உயரத்துடன் நின்ற துறவி சிறிது நேரம் பேசும் சக்தியை அறவே இழந்தார். பிறகு வெடித்தார் கோபம் தலைக்கேற, "அப்படியானால் அவனைச் சிறை செய்தாலென்ன?" என்று.

விஜயன் அவரை ஏறெடுத்து நோக்கினான். "அது அத்தனை சுலபமில்லை சுவாமி" என்றும் கூறினான் சாவதானமாக.



"பல்லவ மன்னன்னான நந்திவர்மன் பெயரால் நான் ஆணையிட்டால்கூட நடக்காதா?" என்று இரைந்தார் துறவி.

விஜயன் பதில் மிகத் திட்டமாக இருந்தது. "நடக்காது" என்று கூறினான் உறுதியான குரலில்.

விஜயன் துணிவு அவருக்குப் பெருவியப்பை அளித்திருக்க வேண்டும். அவர் விழிகள் மிகப் பெரிதாக ராட்சத அளவில் அகன்றன. தாடியை அவர் உருவிவிட்டுக் கொண்ட போதும் அவர் ஏதோ முடிவுக்கு வந்திருப்பது தெரிந்தது. அவர் கேட்டார், "இந்த சோழ நாடு யார் ஆதிக்கத்திலிருக்கிறது இப்பொழுது?" என்று.

"பல்லவ மல்லர் நந்திவர்மன் ஆதிக்கத்திலிருக்கிறது" என்றான் விஜயன் சற்று அலட்சியமாக.

"பல்லவர் படையின் ஒரு பகுதி என் கையிலிருப்பது தெரியுமா உனக்கு?"

"தெரியும்."

"அந்தப் படையின் ஒரு பகுதியை வரவழைத்து அந்தப் பாண்டியனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் சிறை செய்ய எனக்குச் சக்தியில்லையென்று நினைக்கிறாயா?"

இந்தக் கேள்வியைக் கேட்ட துறவி கம்பீரமாக நிமிர்ந்து நின்றார். விஜயன் அவர் சொன்ன விஷயங்களையோ அவர் கம்பீரத்தையோ லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை. "நீங்கள் எதிராளியைப் பற்றியும் சிறிது சிந்திக்க வேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டான் விஷமத்துடன்.

"என்ன சிந்திக்க வேண்டும்?" என்று வினவினார் துறவி.

"நெடுஞ்சடையன் பைத்தியமல்ல. இன்னும் நந்திவர்மரிடம் அடிமைப்படாத ஒரே நாடான பாண்டி நாட்டின் மன்னன். அவன் தன்னந்தனியாக இந்த ஊருக்கு வருகிறான். அரசகுமாரியுடன் தைரியமாக வாதாடுகிறான். பிறகு தானாக வலுக்கட்டாயமாக சிறைக்குள் நுழைகிறான். சிறையில் அவளிடம் ஓர் ஓலையைக் கொடுக்கிறான்..." என்று மேலும் ஏதே சொல்லப் போனவனை இடைமறித்த துறவி, "என்ன விஜயா! என்ன! சிறையில் அரசகுமாரியிடம் ஓலை கொடுத்தானா?" என்று வியப்பு மண்டிய குரலில் கேட்டார்.

"ஆம்."

"என்ன ஓலை?"

"அது எனக்குத் தெரியாது."

"ஓலை கொடுத்தது மட்டும் எப்படித் தெரியும் உனக்கு?"

"நானே பார்த்தேன்."

"உன்னெதிரிலா கொடுத்தான்?"

"கிட்டத்தட்ட அப்படி வைத்துக்கொள்ளலாம்."

அவன் புதிர் போடுவதை துறவி ரசிக்கவில்லை. "விளங்கச் சொல்லலாம் விஜயா. அதனால் யுக்தி விசேஷம் குறைந்துவிடாது" என்று சீறினார்.

விஜயன் துறவியை நோக்கி மெல்ல நகைத்துவிட்டு, "சுவாமி! என் யுக்தி விசேஷம் குறைந்ததில்லையென்று நீங்கள் கூறுவதில் பொருளிருக்கிறது," என்று ஒப்புக்கொண்டு மேலும் சொன்னான்: "ஜடிலன் என்று தன் பெயரின் ஒரு பகுதியை மட்டுமே சொல்லிக்கொண்ட பாண்டி நாட்டு மன்னனை இந்த உட்கோட்டை வாயிலில் நான் சந்தித்தேன். அவனைக் கண்டதும் அவனை எங்கோ



பார்த்திருக்கும் நினைப்பு வந்ததால் அவனைச் சிறை செய்ய மறுத்த கோட்டைக் காவலரை அவனிஷ்டப்படி சிறையில் தள்ளச் சொல்லிச் சென்றேன். பிறகு நினைப்புக்கு வந்தது அவனைப் பாண்டிய நாட்டில் பார்த்திருப்பது. இன்னாரென்று அறிந்ததும் பெரும் திகைப்படைந்தேன். ஆகவே அவனைச் சிறையில் சந்தித்து உண்மையை அறிய நடுநிசியில் சிறைச்சாலையை நோக்கிச் சென்றேன். அதேசமயத்தில் அரசகுமாரியும் மாளிகையிலிருந்து வெளியே வந்து சிறை நோக்கிச் சென்றதால் அவளைப் பின்பற்றி பதுங்கிப் பதுங்கிச் சென்றேன். பிறகு சிறை சாளரத்துக்கு வெளியே ஒரு மரத்தின் மறைவில் நின்று சிறையில் நடப்பதைக் கவனித்தேன். அரசகுமாரி அவனை வேல் கொண்டு குத்தி எழுப்பினாள். அவன் அவளிடம் ஓர் ஓலையைக் கொடுத்தான். இருவரும் ஏதோ பேசினார்கள். ஆனால் ஏதும் காதில் விழவில்லை எனக்கு. இருப்பினும் அந்த விநாடி முதல் அவர்கள் மீது கண் வைத்திருக்கிறேன்...!"

இதைச் சொன்ன விஜயன் சிறிது பேச்சை நிறுத்தி துறவியை ஏறெடுத்து நோக்கினான். துறவியின் முகத்தில் சிந்தனை படர்ந்து கிடந்தது. விஜயனே சொன்னான்: "இன்று சிவலிங்கத்தின் முன்பு அவன் சோழ நாட்டையும் அரசகுமாரியையும் பாதுகாக்க ஆணையிட்டிருக்கிறான்," என்று.

துறவி பதில் சொல்லவில்லை. கடைசியாக அவர், "அப்படியா!" என்றபோது அவர் சொற்களில் ஆழ்ந்த சிந்தனையே துலங்கியது.

"ஆம், அதற்காக அவனிடம் சோழர் குலப் பெருவாள் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது."

"உம் உம்." துறவியின் உறுமல் பலமாயிருந்தது.

"இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் பாண்டிய மன்னனைச் சிறை செய்தால் என்ன ஆகும்?" என்று வினவினான் விஜயன்.

துறவி நன்றாகப் புரிந்துகொண்டார் நிலைமையை. "பாண்டிய மன்னனை மன்னனாக அறிந்துகொண்டது போல் சிறை செய்தால் பாண்டிய நாடு உடனடியாகப் போர் முரசு கொட்டும். அப்படி அறியாததுபோல் சிறை செய்தால் இந்தக் கோட்டையில் உள்ள சோழ வீரர்கள் கொதித்தெழுவார்கள் தங்கள் அரசன் குலவாளை ஏந்திய வீரனைச் சிறை செய்ததற்காக. இந்த எழுச்சியை நீள்விழியும் தூண்ட முடியும். அந்த நரி இருக்கிறானே அவனும் தூண்ட முடியும்" என்றார் துறவி.

"துறவியாருக்கு இப்பொழுது விஷயம் புரிந்து விட்டது பற்றி மகிழ்ச்சியடைகிறேன்" என்றான் விஜயன் விஷமமாக.

"இதில் மகிழ்ச்சியென்ன இருக்கிறது?" என்று கேட்டார் துறவி வெறுப்புடன்.

"அறிவாளிகள் இருவர் ஒன்றுபடுவதில் மகிழ்ச்சி இருக்கிறதல்லவா?" என்று விஜயன் வினவிச் சிறிது புன்முறுவலும் கொண்டான்.

"உன்னையும் அறிவாளியென்று கூறுகிறாய்?" என்ற துறவி இகழ்ச்சிப் புன்முறுவல் கோட்டினார்.

"அந்தப் பட்டத்தைத் தங்களுடன் பகிர்ந்து கொள்வது அத்தனை உசிதமில்லையாயினும் அதற்கு ஒப்புக்கொள்கிறேன்" என்று இகழ்ச்சியை அவருக்குச் சமமாகக் காட்டிய விஜயன் கேட்டான்: "அடுத்தபடி என்ன செய்யலாம்?" என்று.



"நீதான் சொல்ல வேண்டும். உன்னைத்தானே நீள்விழியைக் காத்துத் தம்மிடம் சேர்ப்பிக்கவும் சோழ நாட்டை அடிமைத் தளையில் வைத்திருக்கவும் மல்ல மல்லர் நியமித்திருக்கிறார்" என்றார் துறவி அவனை நோக்கி வெறுப்பு நிரம்பிய விழிகளை நாட்டி.

"அந்தப் பொறுப்பு உங்களுடையதாயிருந்தால் என்ன செய்வீர்கள்?" என்று வினவினான் விஜயன்.

துறவி பல்லை நறநறவென்று கடித்தார். "பாண்டியன் கழுத்தை என் இருகைகளாலும் அழுத்தித் திருகி அவனைக் கொன்றுவிடுவேன்" என்று கூறினார் ஆத்திரத்துடன்.

விஜயன் கடகடவென்று நகைத்தான். "துறவியாரே! நீர் வைணவர்தானே?" என்றும் கேட்டான்.

"ஆம்" என்றார் துறவி பெருமையுடன்.

"பிறருக்கு எண்ணத்தாலும் துன்பம் விளைவிக்கக் கூடாதென்பது வைணவத்தின் அடிப்படைக் கொள்கையல்லவா?"

"ஆம்."

"நீர் துறவி. உலக பந்தங்களைத் துறந்தவர்."

"ஆம்."

"பிரபந்தங்களைக் கற்றவர்."

"பல்லவமல்லர் ஆசாரியனான திருமங்கை மன்னரின் நினைப்புடையவன் பிரபந்தங்களைக் கற்காதிருப்பானா?" என்று இதைப் பெருமையுடன் சொன்னார் துறவி. பிறகு தான் விஜயன் தன்னைப் பேச்சில் எங்கு இழுத்துச் செல்கிறானென்பதைப் புரிந்துகொண்டார்.

அதனால் வெகுண்டு, "இப்பொழுது பிரபந்தமென்ன வேண்டியிருக்கிறது. முதலில் பாண்டியனை என்ன செய்யலாம், அவனை எப்படி அழிக்கலாம், அதைச் சொல்" என்று கூவினார்.

விஜயன் முகத்தில் இகழ்ச்சி நகை நன்றாக விரிந்தது. "சுவாமி! தத்துவ நூல்களின்படி மனிதர்கள் வாழ்ந்தால் ஆசையிருக்காது. ஆசையில்லையேல் பகையிருக்காது. பகையில்லையேல் பூசல்கள் இல்லை. ஆனால் பூசல்களில் கூட ஓரளவு நாம் அறிவின் அடிப்படையில் நடந்து கொள்ள வேண்டும். நெடுஞ்சடையன் தனித்து வந்திருப்பதாக நாம் நினைக்கிறோம். அவன் நாட்டில் வேறென்ன ஏற்பாடுகளைச் செய்துவிட்டு வந்திருக்கிறானோ நமக்குத் தெரியாது. இங்குள்ள தர்மாதிகாரி இருக்கிறானே அவன் திடீரென ஊர் பேர் சரியாகத் தெரியாத ஒரு சாதாரண வீரனிடம் வாளையெடுத்துக் கொடுத்திருக்கிறான். தர்மாதிகாரி யாரையும் நம்பாதவன். திடீரென இவனை நம்புகிறானென்றால் ஓரளவு இவன் உண்மை சொரூபம் அவனுக்கும் தெரிந்திருக்க வேண்டும். அந்தத் தர்மாதிகாரியின் சொந்த ஊர் கரவந்தபுரம்..." என்று விளக்கிக் கொண்டே போனவன் சிறிது நிறுத்தினான்.

"சொல் விஜயா" என்று கூறினார் துறவி.

"கரவந்தபுரம் பாண்டி நாட்டிலிருக்கிறது. அதன் பிரஜை மாறன்காரி. ஏற்கெனவே பாண்டிய நாட்டில் அமைச்சுப் பதவி வகித்த குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் நல்ல வைணவர். சிவபக்தர்களான சோழர்கள் இவரை ஏன் தர்மாதிகாரியாகத் தேர்ந்தெடுத்தார்கள் என்பது தெரியவில்லை. பல்லவமல்லரைத் திருப்தி செய்வதற்காக இருக்கலாம்," என்று விஜயன் சற்று எட்ட இருந்த ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு தீவிர யோசனையில் ஆழ்ந்தான்.



பிறகு தலைநிமிர்ந்து துறவியை நோக்கி, "சுவாமி! இங்கு ஏதோ பெரும் சூது நடக்கிறது பல்லவ மல்லரை எதிர்க்க, இங்கிருந்து அதை நான் கவனிக்காத முறையில் நடந்து கொள்கிறேன். நீங்கள் நந்திவர்மரிடம் சென்று இங்குள்ள நிலை கூறுங்கள். தஞ்சையின் படையை சிறிது அதிகப்படுத்தச் சொல்லுங்கள்" என்று கூறினான்.

துறவியும் ஆழ்ந்த சிந்தனைக்குள்ளானார். பிறகு கேட்டார், "நான் சென்றுவிட்டால் முக்கிய விஷயங்களில் கலந்து ஆலோசிக்க உனக்கு வேறு யார் இருக்கிறார்கள்?" என்று.

விஜயன் இதழ்களில் இகழ்ச்சியின் சாயை நன்றாகப் படர்ந்தது. "சில சமயங்களில் கலந்தாலோசிப்பதற்கு யாருமில்லாதிருப்பதே நல்லது," என்று கூறினான் இகழ்ச்சி குரலிலும் சொட்ட.

துறவியின் கண்களில் சீற்றம் தெரிந்தது. பிறகு அதை அடக்கிக் கொண்டு, "விஜயா! எதிலும் நிதானத்துடன் இரு. அவசரப்பட்டு அலுவல்களில் இறங்கி திண்டாடாதே. நான் காஞ்சி சென்று பத்து நாட்களுக்குள் வந்து விடுகிறேன்," என்றார்.

அவர் தனக்கு நிதானத்தை உபதேசித்தது பெருவியப்பாயிருந்தது விஜயனுக்கு. இருப்பினும் துறவியை மறுத்து ஏதும் பேசாமல் அவருக்கு விடை கொடுத்து அனுப்பினான். துறவி அறையை விட்டு வெளியேறிய பின் ஆசனத்தில் நன்றாகச் சாய்ந்து கண்களை இறுக மூடிக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தான்.

இந்தச் சம்பவம் நிகழ்ந்த நேரத்தில் குறுக்குப் பாதை வழியே திரும்ப மாளிகைக்கு வந்துகொண்டிருந்த நீள்விழி குறுகலான காட்டுப் பாதையின் முகப்புக்கு வந்ததும் ஜடிலனிடமிருந்து பிரியாவிடை பெற்று மாளிகையை

நோக்கி நடந்தாள். ஜடிலன் அவள் போவதைப் பார்த்துக் கொண்டே நின்றான். அவள் கண்ணுக்கு மறைந்த பின்பு மாளிகைக்குச் செல்லாமல் முந்திய நாளிலிருந்த சிறைச் சாலையை நோக்கிச் சென்று அதன் வாயிற்படியில் உட்கார்ந்தான். சிறைச்சாலை அந்த உட்கோட்டையின் ஒதுக்குப்புறத்திலிருந்ததால் அங்கிருந்து அந்த உட்கோட்டையின் பிரதான விடுதிகளைப் பார்க்க முடிந்தது ஜடிலனால். ஒரு மாளிகை தவிர மற்ற எல்லா மாளிகைகளிலும் விளக்குகள் அணைந்து கிடந்தன. அந்த மாளிகை வாயிலில் ஒரு புரவி வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய ஒரு துறவி கதவை மெல்லத் தட்ட உள்ளிருந்து விஜயன் வந்ததும் இருவரும் ஏதோ பேசியதும் சற்று தூரத்திலிருந்த பந்தத்தின் வெளிச்சத்தில் நன்றாகத் தெரிந்தது ஜடிலனுக்கு. துறவி சற்றுத் திரும்பியதும் அவர் முகத்தில் பந்தத்தின் வெளிச்சம் நன்றாக விழவே சற்று திகைப்படைந்த ஜடிலன், "இவரா! இவர் எங்கே இங்கு வந்து சேர்ந்தார்" என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான். "சரி சரி; விஷயம் முற்றுகிறது" என்றும் கூறிக்கண்டான். அடுத்த விநாடி உட்கார்ந்த இடத்திலிருந்து புறப்பட்டு மாளிகையில் தனக்கு ஒளித்துவிடப்பட்ட அறைக்குச் சென்று விளக்கைத் தூண்டிவிட்டு எழுதுகோல் கொண்டு அவசர அவசரமாக ஓலையொன்றைத் தீட்டத் துவங்கினான்.



# 12. 'போரா பயிற்சியா?'

ஜடில பாரந்தக நெடுஞ்சடையன் எழுதுகோல் கொண்டு ஓலையொன்று அவசரமாகத் தீட்டத் தொடங்கியபோது விளக்கைத் தூண்டிவிட்டானென்றால், விளக்கை மட்டுமின்றி அறிவையும் அவன் தூண்டிவிட்டானென்பது விளக்கொளியில் பளிச்சிட்ட அவன் முகத்திலிருந்து மிக நன்றாகத் தெரிந்தது. முதலில் விடுவிடுவென்று எழுத்தாணியை ஓலையில் ஓடவிட்ட ஜடிலன் சிறிது நேரத்திற்குப் பிறகு ஓரளவு நிதானத்துடனேயே ஓலையில் எழுத்துக்களைப் பொறித்தான். சில இடங்களில் வரிக்கு வரி அவன் தாமதித்தும் சிந்தித்தும் கூட எழுதினான். அப்படி எழுதி முடித்ததும் ஓலையை ஒருமுறைக்கு இருமுறையாகப் படிக்கவும் செய்தான். படித்த பிறகு பரிபூர்ண திருப்தியடைந்ததற்கு அறிகுறியாகத் தனது தலையையும் சிறிது அசைத்துவிட்டு விளக்கையும் பழையபடி இழுத்துவிட்டு அந்த ஓலையை நன்றாகச் சுற்றி எடுத்துக் கொண்டு இடையில் சோழர் குல வாளை மட்டும் அணிந்து கொண்டு அறையிலிருந்து புறப்பட்டு வெளியே வந்தான். பிறகு சர்வ சாதாரணமாக மாளிகை வாயிலை அடைந்து உட்கோட்டையின் பிரதான வாயிலை நோக்கி நடக்கவும் செய்தான். மாளிகையிலிருந்து பிரதான வாயிலை அடையும் முன்பு இடையிடையே இருந்த காவலர்களை எச்சரித்தும் காவலர்கள்

விடுதிகளை நோக்கிச் சென்று அந்த இடங்களைச் சோதித்துக்கொண்டும் வாயிலை அடைந்து அங்கு காவல் நின்றவர்களை கம்பீரமாகப் பார்த்துவிட்டு, 'ஜாக்கிரதை' என்று கூறிவிட்டு உட்கோட்டைப் பகுதியிலிருந்து வெளியே சென்றுவிட்டான்.

அவன் அந்தச் சிறு நகரத்துக்கு வந்ததிலிருந்து நிகழ்ந்த சம்பவங்களும் அவனுக்கு சோழர்குல வாள் அளிக்கப் பட்டதும் உட்கோட்டை வீரர்களுக்குத் தெரிந்திருந்தால அவன் எச்சரிக்கைக்கும் உத்தரவுக்கும் அவர்கள் பணிந்தே நடந்துகொண்டார்கள். முதல் நாள் அவனைத் தடுத்த உட்கோட்டை பிரதான வாயில் காவலர்கள்கூட அன்று வாயிலுக்கு வந்ததும் தல்லை வணங்கினர், வாட் களைத் தாழ்த்தி மரியாதை செய்தனர். "ஜாக்கிரதை" என்று அவன் எச்சரித்ததும், "உத்தரவு பிரபு" என்று பதிலுத்தரவும் தந்தார். இப்படிக் காவலரை எச்சரித்துக் கொண்டு நகர சோதனை செல்லும் அரசன்போல் உட்கோட்டைவிட்டு வெளியே சென்ற ஜடிலன் அங்கிருந்த வீதிகளை மெல்லக் கடந்தான்.

அப்பொழுது நள்ளிரவு நெருங்கிக் கொண்டிருந்ததால் வீதிகளின் விடுதிகளில் விளக்குகள் ஏதும் பளிச்சிட வில்லை. திண்ணைகளில் படுத்திருந்த பலபேர் உறங்கவும் தொடங்கிவிட்டிருந்த சமயம் அது. ஏதோ ஓரிரு வீதிகளில் மட்டும் பேச்சு அரவம் கேட்டுக்கொண்டிருந்தது. இரவு ஏறியதால் வீதி வலம் வரப் புறப்பட்ட காவலர் இருவரின் எச்சரிப்பு கோஷம் மட்டும் எங்கிருந்தோ பெரியதாக வந்துகொண்டிருந்தது. அத்துடன் சேர்ந்து ஒலித்தது பெரிதாக கடை வீதியின் வியாபாரச் சத்தம் மட்டும். அந்த ஊர் கடைவீதி எளிதில் உறங்காது என்பதைப் புரிந்து கொண்ட காரணத்தாலோ என்னவோ ஜடிலன் அந்தக் கடைவீதியை நோக்கி நடக்க முற்பட்டான். கடைவீதிக்கு



வந்ததும் நள்ளிரவு மோகினி போலிருந்த அந்தக் கடைவீதி யைப் பார்த்துப் பல வினாடிகள் அதிசயித்து நின்றான்.

முதல் நாள் பார்த்த கடைவீதி அப்படியேதானிருந்த தென்றாலும் அந்த நள்ளிரவு வியாபாரத்தில் சிறிது வித்தியாசமிருக்கத்தான் செய்தது. முதல்நாள் இரவு சற்றே புகுந்த பின்னர் அவன் பார்த்த கடை வீதியில் இளமங்கை யரே பெரும்பாலும் பொருள்களை வாங்கிக் கொண் டிருந்தார்கள். இந்த நள்ளிரவில் வர்த்தகம் பெரும்பாலும் ஆண் மக்களுடையதாயிருந்தது. அந்த ஆண்மக்களுடன் வெளியூர்களிலிருந்து வந்து வழிக்குத் தங்கியிருந்த சில பெண்களும் வியாபாரத்தில் கலந்து கொண்டிருந்தாலும் அவர்கள் மிகக் குறைவாகவேயிருந்தார்கள். கடைவீதியின் கோடியிலிருந்த சில பொதி வண்டிகளையும், சில பிரயாண வண்டிகளையும், சில ரதங்களையும் பார்த்த ஜடிலன் வழிப்போக்கர் தங்குவதற்கும் வியாபாரம் செய்வதற்கும் அது தகுந்த இடம் என்பதையும் தஞ்சைக்கு அருகில் இருக்கும் காரணத்தால் அதன் வியாபாரம் சற்று அதிக மென்பதையும் புரிந்துகொண்டதால் ஜடிலன் கடை களைப் பார்த்த வண்ணம் நடந்து கொண்டிருந்தான். பொதுவாக அவன் வேடிக்கை பார்ப்பதுபோல் நடந்தா லும் அவன் எதையோ முக்கியமாக எதிர்பார்ப்பது போலி ருந்தது அவன் முகத்தில் விரிந்த ஒரு கேள்விக்குறி.

இப்படி எதையோ எதிர்பார்த்து நடந்து சென்ற ஜடிலன் அங்கிருந்த கடைகளில் பெரிய கடை ஒன்றுக்குச் சென்று வியாபாரியிடம், "ஐயா! பெண்ணாகடத்தின் கடைவீதியில் இதுதான் பெரிய கடையாகத் தோன்று கிறது" என்றான்.

வியாபாரி ஜடிலனை சற்று ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "ஆம். இதுதான் பெரிய கடை. அதனால் இதற்குப் பெரிய

கடை என்றே பெயரும் ஏற்பட்டுவிட்டது" என்று கூறினான்.

"இந்தக் கடையில் பெரும்பாலும் முத்து பவளந்தான் பார்க்கிறேன்" என்றான் ஜடிலன்.

"ஆம். பெரும்பாலும் அதுதான். உங்களுக்கு என்ன தேவையோ?" என்று வினவினான் கடைக்காரன்.

"மூலிகைகள் எங்கு கிடைக்கும்?" என்று கேட்டான் ஜடிலன்.

"அவையும் இங்கு கிடைக்கும். தனிப்பட உள்ளே வைத்திருக்கிறோம். தங்களுக்கு எந்த மூலிகை தேவை?" என்று கடைக்காரன் கேட்டான்.

"கருட சஞ்சீவி இருக்கிறதா?"

"கிழங்கா?"

"இல்லை அந்தக் கிழங்கிலிருந்து ஓடும் வேர்."

"எவ்வளவு தேவை?"

"வேரைச் சுற்றினால் தேங்காய் பிரமாணம் இருக்க வேண்டும்."

"விலை அதிகமாகுமே?"

"பாதகமில்லை."

இந்தப் பதிலைக் கேட்டதும் கடைக்காரன் எழுந்து உள்ளே சென்று கிட்டத்தட்ட வெட்டி வேர் போலிருக்கும் *கருட சஞ்சீவியின் வேரில் ஒரு பந்து சுருட்டிக்கொண்டு

★கருட சஞ்சீவி என்பது கிட்டத்தட்ட சிறு சேனைக் கிழங்கு போலிருக்கும். தண்ணீர் விடாமலே காற்றிலிருந்தே தண்ணீரை உறிஞ்சி வேர்களை விட வல்லது. இது இருக்குமிடத்தில் விஷ ஜந்துக்கள் வரா என்று கூறப்படுகிறது.



வந்தான். அதை வாங்கிப் பரிசோதித்த ஜடிலன், "இதை அடைக்க ஏதாவது மரக்குழல் இருக்கிறதா?" என்று வினவினான். அதையும் உள்ளிருந்து கடைக்காரன் எடுத்து வந்ததும் மூலிகைக்குண்டான பணத்தைக் கொடுத்து விட்டு அந்தக் கடையிலிருந்து சென்ற ஜடிலன் கடைவீதியின் கோடியிலிருந்த ஒரு மூலை வீட்டின் தாழ்வார இருளில் வந்து நின்று மடியிலிருந்த ஓலையை எடுத்து அதை கருட சஞ்சீவியின் வேர்களில் சுற்றி மறைத்தான். பிறகு அந்தப் பந்தைச் சுருட்டி நீட்டிக் குழலில் அடைத்து, அதை எடுத்துக்கொண்டு மீண்டும் கடைவீதியின் கோடியில் வண்டிகள் விடப்பட்டிருந்த இடத்துக்கு வந்து, "யாரையா இங்கு ஏதாவது பொதி வண்டி மதுரைக்குப் போகிறதா?" என்று வினவினான்.

அந்த வண்டிக் கூட்டத்தின் நடுவிலிருந்த வண்டியிலிருந்து ஒருவன் எழுந்து நடந்து வந்தான் ஜடிலனை நோக்கி, "நான் மதுரைக்குப் போகிறேன்" என்றும் கூறினான்.

"எப்பொழுது போகிறீர்களய்யா?" என்று வினவினான் ஜடிலன்.

"இன்னும் ஒரு ஜாமத்தில் கிளம்புவேன். சரக்கு கட்டியாகிவிட்டது. பொதிகளை ஏற்ற வேண்டியதுதான் பாக்கி."

"மதுரையில் ஒரு மூலிகையைச் சேர்ப்பிக்க வேண்டும்."

"என்ன மூலிகை?"

"இதோ பார். கருட சஞ்சீவி வேர்," என்று கூறிய ஜடிலன் குழலைத் திறந்து காட்டினான்.

"யாரிடம் சேர்ப்பிக்க வேண்டும்?" என்று வினவினான் வண்டிக்காரன்.

"மதுரையில் பெரியகடைக் கூலவாணிகன் தெரியுமா?"

"அவரைத் தெரியாதவர்கள் உண்டா? தென்னாட்டில் எல்லோருக்குமே அவரைத் தெரியுமே" என்று கூறிய பொதி வண்டிக்காரன், "அவரை உனக்கெப்படித் தெரியும்?" என்று வினவினான்.

"எனக்கு உறவினர்."

"அப்படியா! மிக்க மகிழ்ச்சி என் உயிரை விட மூலி கையை ஜாக்கிரதையாகப் பாதுகாத்துச் சேர்ப்பிக்கிறேன்" என்று உறுதி கூறி குழலை வாங்கிக் கொண்டான் வண்டிக்காரன்.

"உங்கள் பெயர் என்ன?" என்று வினவினான் ஜடிலன்.

"சொக்கநாதன்" என்று கூறி வண்டிக்காரன், "கவலைப் பட வேண்டாம் தம்பி! இருபது ஆண்டுகளாக இந்தப் பொதி மாற்று வியாபாரந்தான் செய்து வருகிறேன். இத்தனை நாள் என் வண்டிகள் மதுரைக்கும் தஞ்சைக்கும் ஓடிக்கொண்டிருந்தன. இப்பொழுது இந்த ஊருக்கும் மதுரைக்கும் ஓடுகின்றன; பெரிய கடைக் கூலவாணிகர் வியாபாரத்தில் நான்கிலொரு பங்கு என் வண்டிகள் மூலம் நடக்கிறது. ஆமாம் நீ எந்த ஊர்?" என்று கேட்டான்.

"நானும் மதுரைதான்" என்றான் ஜடிலன்.

"நமது ஊர்க்காரன் தானா?"

"ஆமாம்."

"இங்கு எங்கு வந்தாய்?"

"இரண்டொரு பேரைப் பார்க்க."

"சரி. திரும்பிப் போகிறதானால் சொல். என் வண்டி யிலேயே போகலாம்."

"நீங்கள் எப்பொழுது திரும்புவீர்கள்?"



"இன்றிலிருந்து நான்காவது நாள்."

"அப்பொழுது சந்திக்கிறேன்" என்று கூறிய ஜடிலன் அவனிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு மறுபடியும் உட்கோட்டைக்குத் திரும்பினான். கோட்டைக்குள் நுழைந்ததும் நேராக மாளிகைக்குள் செல்லாமல் மாளிகை யின் பின்புறமிருந்த குதிரைக் கொட்டடிக்குச் சென்று, "நீலா" என்று அழைத்தான். இருளடர்ந்த கொட்டடியின் ஒரு மூலையிலிருந்து ஒரு கனைப்பு கேட்டது பதிலுக்கு. அந்தக் கனைப்பைக் கேட்டதை அடையாளம் வைத்துக் கொண்டு அந்த இடத்திற்குச் சென்ற ஜடிலன் நீலன் கழுத்தை இறுகக் கட்டிக் கொண்டான். நீலனும் கழுத்தை அவன் தோள்மீதும் கழுத்திலும் கன்னத்திலும் உராய்ந்து கனைத்தது. சில சமயங்களில் நாய் போல் நாக்கால் அவன் முதுகுத் துணியை நக்கவும் செய்தது. சுமார் அரை ஜாம நேரம் நீலனுடன் கழித்த ஜடிலன், "நீலா, நாளை காலையில் நாம் வெளியே செல்வோம். அதுவரை பொறுத்திரு" என்று கூறிவிட்டு அதனிடமிருந்து பிரியா விடை பெற்று மாளிகையின் அறைக்கு வந்து பஞ்சணையில் மல்லாந்து விழுந்தான். விழுந்தவன் மோட்டு வளையை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டே இருந்தான். பெரிய காரியத்தைச் செய்து முடித்ததற்கு அறிகுறியான சாந்தி அவன் முகத்தி லிருந்தது. "சொக்கநாதா! தேவி மீனாட்சி!" என்று உச்சரித் துக் கொண்டே கண்களை மூடி ஆனந்த நித்திரையில் ஆழ்ந்தான்.

மறுநாள் காலைப் பொழுது நன்றாகப் புலர்ந்து எழுந்த பின்புதான் இரவில் தனது மேலங்கியையோ இடை வாளையோ கழற்றாமல் அப்படியே படுத்துக் கொண்டு விட்டது அவனுக்குப் புரிந்தது. அதற்குக் காரணம் மனத்திலேற்பட்ட திருப்திதானென்பதை உணர்ந்து கொள்ளவும் செய்தான். "திருப்தி சில விஷயங்களில்

மறதியை அளிக்கிறது" என்று சொல்லி நகைத்துக் கொண்டே ஜடிலன் ஆடை களைந்து சோழர் வாளை பயபக்தியுடன் அந்த அறைக் கோடியிலிருந்த ஆசனத்தில் தனது சொந்த வாளுடன் சார்த்தி விட்டுக் காலைக் கடன்களை முடிக்கச் சென்றான்.

காலைக் கடன்களை முடித்து நீராடி, புத்துடை புனைந்து இடுப்புக் கச்சையில் இரு வாள்களையும் கட்டிக்கொண்ட ஜடிலன், மாளிகைக்குள்ளிருந்த சிவலிங்கத்திடம் சென்று தலையால் ஆவுடையாரைத் தொட்டு விபூதியும் லேசாக நெற்றியின் நடுவில் பொட்டாக இட்டுக் கொண்டான். அவனுடன் சிவலிங்கத்தை சற்று எட்ட இருந்து வணங்கிய நீள்விழியும் கரவந்தபுரம் மாறன்காரியும் இளநகை புரிந்தனர். மாறன்காரி வாய்விட்டுக் கேட்கவும் செய்தார்! "வைணவன் சிவபக்தனாக மாறி விட்டார் போலிருக்கிறது" என்று.

"ஆம்" என்றான் ஜடிலன் இளநகையை இதழ்களில் படரவிட்டு.

"நல்ல வைணவர்கள் விபூதியைத் தொடமாட்டார்கள்," என்றார் மாறன்காரி.

"தங்களைப் பார்த்தால் அப்படித்தான் தெரிகிறது," என்று கூறிய ஜடிலன் அவர் நெற்றியிலிருந்த திர்க்கான ஸ்ரீ சூர்ணத்தின் மீது கண்களை நாட்டினான்.

"மறந்தும் புறந்தொழா மாந்தர் வைணவர்" என்று சுட்டிக்காட்டிய மாறன்காரி நீள்விழியின் காதுகளுக்கு மட்டும் கேட்கும்படியாக, "இவன் இப்பொழுது எந்த வேடம் வேண்டுமானாலும் போடுவான்" என்றார். "காரணமும் எனக்குத் தெரியும்" என்றும் சேர்த்துச் சொல்லிவிட்டு அவ்விடத்தைவிட்டு அகன்றார்.



அவர் சென்ற பின்பு ஜடிலனை நோக்கிய நீள்விழி, "நீங்கள் எனக்காக மதம் மாறிவிட்டதாக நினைக்கிறார் தர்மாதிகாரி" என்று கூறி வெட்கப் புன்னகை கோட்டினாள் நீள்விழி.

"நீள்விழி.." என்றழைத்தான் ஜடிலன்.

"இதோ எதிரில்தான் இருக்கிறேன் குத்துக்கல்லைப் போல" என்றாள் நீள்விழி.

"அப்படியா!"

"ஆம். ஆகையால் பெயர் சொல்லி அழைக்கத் தேவையில்லை."

"சரி நீள்விழி. மதம் எதைப் பொறுத்தது?" என்று வினவினான் ஜடிலன் மெல்ல.

"மனத்தைப் பொறுத்தது" என்றாள் சோழகுல அரச குமாரி.

"மனம் மாறினால் மதமும் மாறவேண்டியதுதானே. இதைப் புரிந்துகொள்ளவில்லையே தர்மாதிகாரி" என்று கூறி நகைத்தான் ஜடிலன்.

"சரி சரி; வாயை மூடுங்கள். யார் காதிலாவது விழப் போகிறது" என்று கூறிவிட்டு வேகமாகச் சென்றுவிட்டாள் நீள்விழி.

பூஜை அறையிலிருந்து அகன்ற ஜடிலன் மாளிகைக்கு வெளியே வந்து வீரர்கள் அணிவகுத்துச் சென்றுகொண்டிருந்த பயிற்சியைப் பார்த்தான். அதில் ஓரிரு திருத்தங்களையும் கூறினான். அதேசமயத்தில் அங்கு வந்த விஜயனை நோக்கி, "வாருங்கள் படைத் தலைவரை! தங்களை நாடித்தான் வந்துகொண்டிருக்கிறேன்" என்று கூறினான்.

"அரசகுமாரியின் காவலர் எதைக் கூறினாலும் கேட்கக் கடமைப்பட்டவன் நான்" என்று கூறினான் விஜயன்.

"இந்தப் புது வாளைக் கொடுத்திருக்கிறீர்களே" என்று இடையிலிருந்த சோழர்குலப் பெருவாளைத் தட்டிக்காட்டிய ஜடிலன், "இது அதிகக் கனமாயிருக்கிறது. இதைக் கையாள சிறிது பயிற்சி தேவையாயிருக்கிறது" என்று கூறினான்.

விஜயன் மனம் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தது. விட்டில் பூச்சிபோல் தன்னை நோக்கி ஜடிலன் வருவதை எண்ணி உளம் பூரித்தான். இருப்பினும் அதை வெளிக்குக் காட்டாமல், "என்னுடன் பயிற்சியை வைத்துக்கொள்ள முடியுமானால் அது பெரும் பாக்கியமாகும் எனக்கு" என்றான் விஜயன்.

"சோழர் படைத்தலைவரே! சாதாரண வீரனுடன் படைத்தலைவர் வாள் மோத ஒப்புக்கொள்வது அவருக்கல்ல பெருமை. பெருமை எனக்கு" என்றுகூறிய ஜடிலன், "அரச மகள் வாவிக்கரைக்குப் போவோமா. அங்கு யாரும் வரமாட்டார்கள்" என்றான்.

அதற்கு உடன்பட்ட விஜயன் ஜடிலனுடன் வாவிக் கரையை அடைந்தான். அங்கு இருவரும் வாட்களை உருவிப் பதம் பார்த்த பிறகு பயிற்சியைத் தொடங்கினார்கள். அந்தப் பயிற்சியைத் தூரத்திலிருந்து அரசகுமாரி பார்த்துக்கொண்டிருந்தாள். நாலைந்து விநாடிகளுக்குப் பிறகு பயிற்சி போராக மாறிவிட்டதையும், விஜயன் ஜடிலன் மார்புக்குக் குறிவைத்து வாளை வேகமாக இயக்கியதையும், ஜடிலன் மெல்லப் பின்னடைவதையும் கண்ட அரசகுமாரி கதிகலங்கினாள்.



# 13. மூன்று கேள்விகள்

ஜடிலனும் விஜயனும் வாட்பயிற்சி செய்த வாவிக் கரைக்கு நீள்விழி அகஸ்மாத்தாக வந்தவளுமல்ல, அங்கு நடந்த விபரீதத்தை எதிர்பார்த்தவளுமல்ல. அன்று காலை சூரியன் கிளம்பி மூன்று நாழிகைக்கு மேல் தனது மாளிகையின் உப்பரிகையில் நீராடியதால் நனைந்த குழலை உலர்த்திக் கொண்டிருந்தவள், மாளிகையிலிருந்து ஜடிலன் உடையணிந்துகொண்டு வெளியே சென்றதையும், காலையில் அணிவகுத்துச் சென்றுகொண்டிருந்த காவல் கூட்டத்தைப் பார்த்து ஏதோ கூறியதையும், பிறகு விஜயனைச் சந்தித்து ஏதோ பேசியதையும் பிறகு அவ்விருவரும் வாவிக்குச் செல்லும் குறுக்குப் பாதையில் சென்றதையும் கவனித்தாள். அவர்கள் இருவரும் எதற்காக வாவிக்குச் செல்கிறார்கள் என்பதைப்பற்றி ஏதும் உணரவோ ஊகிக்கவோ முடியாத காரணத்தாலும், விஜயனிடம் எப்பொழுதும் அவளுக்கிருந்த சந்தேகத்தின் காரணமாகவும், உப்பரிகையிலிருந்து அவசர அவசரமாகக் கீழே இறங்கி குழலைக் கொண்டையிட்டு அவர்கள் சென்ற குறுக்குப் பாதை வழியில் அவளும் சென்றாள். அவள் வாவியை நெருங்கிய சமயத்தில்தான் ஜடிலனும் விஜயனும் தங்கள் வாட்களை உருவிக் கூர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். முதலில் இருவரும் போரிடப் போகிறார்களோ என்று பயந்த நீள்விழி, அவ்விருவரும்

பரஸ்பரம் பேசியும் சிரித்துக்கொண்டும் வாட்களைப் பார்த்துக் கொண்டிருந்ததிலிருந்து ஏதோ பயிற்சியோ பலப்பரீட்சையோ அவர்களுக்குள் நடக்கப் போகிறதென்பதைப் புரிந்து கொண்டதால் சற்று எட்டவே நின்று அவர்கள் வாட் பயிற்சியைக் கவனிக்கலானாள்.

உண்மையில் நீள்விழி எதிர்பார்த்ததுபோல் அந்த இரு வாலிபர்களும் மிகுந்த உற்சாகத்துடனேயே வாட் பயிற்சியைத் தொடங்கினார்கள். முதலில் வாளை உறையிலிருந்து உருவிக்கொண்ட ஜடிலன் அந்தச் சோழர் குல பழங்காலத்து வாள் சாதாரண வாளைவிட அதிகக் கனமாயிருப்பதைக் கவனித்தான். அதை வாய் விட்டும் சொன்னான் விஜயனை நோக்கி, "இந்த வாள் பெரிதாயிருப்பதோடு, அதிகக் கனமாகவும் இருக்கிறது" என்று.

அதேசமயத்தில் தனது வாளை உருவி அனாயாசமாக இருமுறை காற்றில் வீசிய விஜயன், "அதிகக் கனமோ?" என்று வினவினான் அலட்சியமாக.

"ஆம்! அந்தக் காலத்து மனிதர்களைப் போலிருக்கிறது" என்று கூறி நகைத்தான் ஜடிலன்.

"என்ன சொல்கிறீர்கள்?"

"இந்த வாள் கரிகாலருடையது என்று சொல்லப்படுகிறது."

"ஆம்."

"அப்படியானால் இது அறுநூறு வருஷங்களுக்கு முன்பு செய்யப்பட்டது."

"அப்படித்தான் வைத்துக்கொள்ள வேண்டும்."

"அப்படி வைத்துக்கொண்டால் அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த மனிதர்களுடைய சக்தியை இந்த வாள் குறிக்கிறது. இதைச் சுழற்றிய கை மிகுந்த பலமுள்ளதாயிருக்க வேண்டும்."



"தங்கள் கைக்குப் பாந்தமில்லாதிருக்கிறதா?" இதைக் கேட்ட விஜயன் நகைத்தான் சற்று இகழ்ச்சியாக.

"பார்ப்போம்" என்று அடக்கத்துடன் கூறிய ஜடிலன் அந்த வாளை முதலில் கண்ணில் ஒற்றிக்கொண்டு நீட்டிப் பிடித்தான். இருமுறை சுழற்றவும் செய்தான். பிறகு, "நான் தயார் படைத்தலைவரே!" என்று விஜயனைப் பார்த்துக் கூறினான்.

இதைச் சொல்லி அவன் முடிக்கு முன்பே விஜயன் வாள் கனவேகத்தில் ஜடிலனை நோக்கி நீண்டது. ஜடிலன் சற்று அஜாக்கிரதையாயிருந்தால் அன்று என்ன நேரிட்டிருக்குமோ சொல்ல முடியாது. திடீரென ஜடிலன் வாளும் எழுந்துவிடவே இரு வாட்களும் ஒன்றையொன்று தடுத்து நின்றன. சரேலெனப் பின்னுக்கு இழுக்கப்பட்ட அந்த இரு வாட்களும் மீண்டும் மீண்டும் இணைந்தன. அகன்றன, அதன் விளைவாக எழுந்த கிளாங் கிளாங் என்ற சத்தமும் சர்சர் என்ற சத்தமும் வாவிக் கரையில் எங்கும் எதிரொலி செய்தன.

முதலில் வாளை இறக்கியபோது திடீரெனத் தன் வாள் தடுக்கப்பட்டதால் சற்று வியப்படைந்த விஜயன் அடுத்த படி வாள் வீச்சை சற்று எச்சரிக்கையுடனேயே கையாண்டான். மிக நிதானமாகவும் திட்டமாகவும் ஜடிலனின் முகம், மார்பு, வயிறு இந்தப் பகுதிகளை நோக்கி நோக்கித் திரும்பத் திரும்ப அவன் வாள்முனை நெருங்கியது. விஜயன் கைலாவகம் வியக்கத்தக்கதாயிருந்தது.

ஜடிலனும் அந்தப் பழைய கனமான வாளைக் கூடிய வரையில் லாவகமாகவே சுழற்றினானென்றாலும் அதன் கனம் அவனுக்கு ஆரம்பத்தில் சற்று இடைஞ்சலாகவே இருந்தது. ஆனால் பயிற்சி நீடிக்க நீடிக்க எந்தக் காரணத்தாலோ அதன் கனம் குறைந்துவிட்டதாகவும், அது தன் இஷ்டப்படி சுழல்வதாகவும் தோன்றவே ஜடிலன் பெரு

வியப்படைந்தான். பயிற்சி துவங்கிய சில விநாடிகளுக்குள் அந்த வாள் தன் கையின் பரிமாணத்தையும், சக்தியையும் உத்தேசித்தே செய்யப்பட்டதாகக்கூடத் தோன்றியது பாண்டிய வீரனுக்கு. அந்த வாள் மிக அழகாகவும் கச்சிதமாகவும் சுழலுவதை உணர்ந்த ஜடிலன் சில விநாடிகளுக்குப் பிறகு சிறிது அலட்சியமாகவே வாட்பயிற்சியில் ஈடுபட்டான். ஆனால் சிறிது தூரம் சென்றதும் புரிந்து கொண்டான், தனக்கும் விஜயனுக்கும் நடப்பது வாட் பயிற்சியல்ல வாட்போர் என்பதை. விஜயனின் கண்களிலிருந்த ஆவேசம், அவன் கத்தியை தனது முகத்துக்கும், மார்புக்கும், தொண்டைக்கும் குறி வைத்துக் குறி வைத்துப் பாய்ச்ச முற்பட்டது. இவற்றைக் கவனித்த ஜடிலன் சற்றே இளநகை கொண்டான். ஆகவே, அதற்குத் தக்கபடி தனது போர் முறையையும் அமைத்துக்கொண்டான். அதன்பிறகு அவன் வாள் தற்காப்புக்கே முனைந்தது. விஜயனின் தாக்குதல்களைச் சமாளிப்பதில் மட்டுமே ஜடிலன் கருத்தையும் வாளையும் செலுத்தினான்.

விஜயன் நிதானமும் மெல்ல மெல்ல நீங்கத் தொடங்கியது. முதல்நாள் வந்து வீம்பு பிடித்து சிறைச்சாலையில் நுழைந்த பாண்டிய மன்னனை பயிற்சியைக் காரணமாக வைத்து ஆழக் காயப்படுத்தி ஊருக்கு அனுப்பிவிட்டால் பாண்டிய நாட்டை நந்திவர்மர் ஆட்கொள்ள அதிக நாளாகாதென்பதை உணர்ந்திருந்த விஜயன் அந்த நோக்குடனேயே பயிற்சிக்கு ஒப்புக் கொண்டான். தவிர தனது வீரத்திலும் வாள் வீச்சிலும் அபார நம்பிக்கையுமிருந்தது சோழர் படைத்தலைவனுக்கு. ஆனால் விநாடிகள் ஓட ஓட அந்த நம்பிக்கை சற்று அசையத் தொடங்கியது. தன் வாள் பாயுமிடங்களிலெல்லாம் அந்த சோழர் குலப் பெருவாள் தன் வாளின் முன்பு நிற்பதையும், கனமான அந்த வாள் ஜடிலன் கையில் அனாயசமாக இயங்குவதை



யும் உணர்ந்ததால், தான் சற்று துரிதமாகப் போரிட்டாலொழிய எதிரியைக் காயப்படுத்துவது நடவாத காரியமென்ற உண்மை புலனாயிற்று விஜயனுக்கு. ஆகவே போரை சற்று மும்முரமாக்கினான்.

விஜயன் துரிதமாக முன்னேறுவதையும், அவன் வாள் மிக வேகமாகப் பாய்ந்து வருவதையும் முக்கியமாக தனது உயிர் நிலைகளை நோக்கி வருவதையும் உணர்ந்த ஜடிலன் அவனை மெல்லத் தன்னை நோக்கி இழுத்துப் பின்வாங்கிச் சென்றான். தனது வாளைத் தற்காப்புக்கு மட்டுமே உபயோகப்படுத்தி எதிரியை இஷ்டப்படி வேகமாகப் போராட விட்டுப் பின்னடைந்து வாவியை நோக்கிச் சென்றான் மெல்ல. இந்த நிலையில்தான் தூரத்தே நின்ற நீள்விழி பதறினாள்.

அரசகுமாரிக்கு விஜயன் பெருவீரனென்பது தெரியும். அந்த வாள் வீச்சு பெரிய விந்தையாகவே மதிக்கப் பெற்று வந்தது சோழர் வட்டாரங்களில். அவன் போர் வேகத்தைப் பற்றிப் பல கதைகளைச் சொல்லி வந்தார்கள் வீரர்கள். ஆனால் அவன் கைலாவகத்தை அன்றுவரை அரசகுமாரி பார்த்ததில்லை. அன்று பார்த்தபோது அந்தக் கதைகள் எத்தனை உண்மையென்பதையும் புரிந்து கொண்டாள். விஜயனுடைய வேகம் அசுர வேகமாயிருந்தது. வாள் மின்னல்போல், பாய்ந்தது ஜடிலனை நோக்கி. ஜடிலன் அதன் முன்பு பின்வாங்கியதையும், தற்காப்புப் போர் புரிந்ததையும் கண்ட நீள்விழி எந்த விநாடியிலும் விஜயன் வாள் ஜடிலன் உயிரைக் குடித்து விடும் என்று எண்ணினாள். அத்தகைய விபரீதத்தைத் தடுக்கவும் எண்ணினாள்.

அதற்குள் வேறு விபரீதம் நேர்ந்தது. 'ஹா' என்று திடீரென அலறினான் விஜயன். வாளை வீசிய அவன் வலது தோளில் ஜடிலன் வாள் பாய்ந்திருந்ததால் குருதி வந்துகொண்டிருந்தது. அவன் வாள் நிலத்தில் விழுந்து

கிடந்தது. அதைக் கண்ட நீள்விழி ஒரு விநாடி பிரமித்தாள். மறுவிநாடி அவர்கள் இருவரும் இருந்த இடத்தை நோக்கி ஓடினாள். அவள் வந்ததைப் பார்த்த இருவரும் பிரமிப்புக்கே உள்ளாயினர். அரசகுமாரி ஜடிலனையும் நோக்கி விஜயன் காயத்தையும் நோக்கினாள், "இது எப்படி ஏற்பட்டது?" என்று வினவினாள்.

ஜடிலனே பதில் கூறினான்: "அரசகுமாரி! உங்கள் குலத்து வாள் பெரிதாகவும் கனமாகவும் இருந்தது. அதைப் பழகிக்கொள்ள யாராவது ஒரு வீரனைப் பயிற்சிக்காகத் தேடினேன். படைத்தலைவர் தானே பயிற்சி தருவதாக ஒப்புக்கொண்டார். அந்தப் பயிற்சியில் இது எதிர்பாராத விதமாக நேர்ந்துவிட்டது."

விஜயன் ஜடிலனை நோக்கினான். "உமது வாள் வீச்சுத் திறம் மெச்சத்தக்கது" என்று மட்டும் கூறினான்.

"திறம் என்பதை தவறு என்று கூறுவது பொருந்தும்" என்று அறிவித்தான் ஜடிலன் பணிவுடன்.

"பயிற்சியில் இத்தகைய காயங்கள் ஏற்படுவது இயற்கை. ஆனால் அந்தக் கனமான வாளை இத்தனை லாவகமாக நீங்கள் சுழற்ற முடியுமென்று நான் நினைக்கவில்லை" என்றான் விஜயன், அந்த வாளையும் ஜடிலனையும் ஆச்சரியத்துடன் நோக்கி.

"உண்மையில் உங்களிடம் நான் பயந்துகொண்டுதான் போராடினேன். உங்கள் வேகத்தைத் தாங்க முடியாமல் பின்னடைந்தேன்" என்று ஜடிலன் பணிவைக் காட்டினான்.

"ஆம். பின்னடைந்ததை நானே பார்த்தேன்" என்றாள் நீள்விழி.

விஜயன் பதிலேதும் கூறவில்லை. ஜடிலன் கூறுவது அனைத்தும் பொய் என்பது விஜயனுக்குத் தெரிந்தேயிருந்



தது. இருப்பினும் அவன் கூறுவதை மறுக்காமல், "சரி; நான் வருகிறேன்" என்று திரும்பிச் செல்ல முயன்றான்.

"சற்றுப் பொறுங்கள் படைத்தலைவரே" என்ற ஜடிலன் அவன் அங்கியை அகற்றிக் காயத்தைப் பரிசோதித்தான். பிறகு விஜயன் மேலங்கியில் ஒரு மூலையைக் கிழித்து, அதை நீரில் நனைத்து அந்த நீரை விஜயன் தோள் காயத்தில் பிழிந்து ரத்தத்தைத் துடைத்து அந்த அங்கியையே காயத்தில் வைத்து நன்றாக அழுத்தி ரத்தத்தைத் தேக்கினான். பிறகு அரசகுமாரியை நோக்கி, "நீங்கள் மாளிகைக்குச் செல்லுங்கள்; நான் படைத்தலைவருடன் சென்று காயத்துக்கு மருந்து வைத்துக் கட்டிவிட்டு வருகிறேன்" என்று கூறினான்.

நீள்விழி சிறிது சிந்தித்தாள். பிறகு அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள். குறுக்குப் பாதையில் அவள் தலை மறைந்ததும் விஜயன் ஜடிலன் மீது கனல் கக்கும் கண்களைத் திருப்பினான். "இந்தக் காயம் எதிர்பாராது ஏற்பட்டதா?" என்று வினவவும் செய்தான் ஆத்திரத்துடன்.

"நீங்கள்தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும்" என்ற ஜடிலன் பதிலில் அலட்சியமிருந்தது.

"உண்மையில் இங்கு நமக்குள் நடந்தது வாட் பயிற்சியா பலப்பரீட்சையா?"

"அதற்கும் நீங்கள்தான் பதில் சொல்ல வேண்டும்."

"ஏன் நீங்கள் எதற்குமே பதில் சொல்லமாட்டீர்களாக்கும்?"

ஜடிலன் விஜயன் தோள்மீது கையைப் போட்டுக்கொண்டு, "வாருங்கள் படைத்தலைவரே. உமது இருப்பிடம் சென்று காயத்தைக் கவனிப்போம்" என்று அழைக்க இருவரும் நீண்டகால நண்பர்களைப்போல சென்றார்கள் குறுக்குப் பாதை வழியாக. விஜயனை அவன் விடுதியில்

விட்டு மருத்துவரை அழைத்துக் காயத்தையும் கவனிக்கச் சொல்லிவிட்டு மீண்டும் மாளிகையில் தனது அறைக்கு வந்து சேர்ந்த ஜடிலன் சோழர் குல வாளை பழைய இடத்தில் சார்த்திவிட்டு அங்கியையும் களைந்தான். பிறகு மஞ்சத்தில் உட்கார்ந்து நீண்ட யோசனையில் ஆழ்ந்தான். சிந்தனை நேரத்தைத் துரிதமாக ஓட்டியதால் சிறிது நேரத்திற்கெல்லாம் தர்மாதிகாரி அந்த அறைக்குள் வந்ததையோ அவர் ஓர் ஆசனத்திலமர்ந்து தன்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்ததையோ ஜடிலன் கவனிக்கவில்லை.

"அடுத்தபடி யாரை சண்டைக்கிழுக்கலாமென்று யோசனையோ?" என்று மாறன்காரி குரல் கொடுத்த பின்பே ஜடிலன் விழித்துக் கொண்டான். "நீங்களா!" என்று வியப்புடன் கேட்கவும் செய்தான்.

"ஆம்" என்றார் தர்மாதிகாரி எரிச்சலுடன்.

"எங்கு வந்தீர்கள்? என்னால் எதாவது ஆக வேண்டிய காரியம் இருக்கிறதா?" என்று வினவினான் ஜடிலன் ஏதுமறியாதவன் போல்.

"நான் தர்மாதிகாரி" என்றார் மாறன்காரி பதிலுக்கு.

"ஆம் சுவாமி."

"இந்தப் பெண்ணாகடத்தில் நடக்கும் சண்டை சச்சரவுகளை விசாரிக்கக் கடமைப்பட்டவன்."

"அதுவும் சரிதான்."

"ஆகவே வாவிக்கரை சண்டையைப் பற்றியும் விசாரிக்க வந்திருக்கிறேன்" என்றார் மாறன்காரி கோபத்துடன்.

ஜடிலன் இதழ்களில் இளநகை படர்ந்தது. "அங்கு சண்டை நடக்கவில்லை. ஆகவே விசாரணைக்கும் ஏதுமில்லை" என்று கூறவும் செய்தான்.



"நீயும் விஜயனும் விளையாடினீர்கள் போலிருக்கிறது?" என்றார் மாறன்காரி இகழ்ச்சியுடன்.

"விளையாடவில்லை, வாட் பயிற்சி செய்தோம். அதற்கும் நீங்கள்தான் காரணம்" என்று குற்றம் சாட்டிய ஜடிலன் தர்மாதிகாரி மீது விஷமம் சொட்டிய பார்வையொன்றை வீசினான்.

"நான் காரணமா?" மாறன்காரியின் சொற்களில் சீற்றமிருந்தது.

"ஆம்."

"எப்படியோ?"

"நீங்கள்தான் சோழர்குல வாளை என்னிடம் கொடுத்தீர்கள்?"

"ஆம்."

"அது அதிகக் கனமாயிருந்தது; ஆகவே பயிற்சி தேவையாயிருந்தது. படைத்தலைவர் தாமே பயிற்சி தருவதாக ஒப்புக்கொண்டார்..." இந்த இடத்தில் மென்று விழுங்கினான் ஜடிலன்.

தர்மாதிகாரி எழுந்திருந்து அவனருகில் வந்து எதிரே நின்றுகொண்டு கேட்டார்: "இந்தக் கதையெல்லாம் வேண்டாம். மூன்று கேள்விகளுக்குப் பதில் வேண்டும்" என்று.

"கேளுங்கள்" என்றான் ஜடிலன் பணிவுடன்.

"நீ நேற்றிரவு கடைவீதிக்கு எதற்காகச் சென்றாய்?" என்று தொடுத்தார் முதல் கேள்வியை.

அந்தக் கேள்வியால் அதிர்ச்சியுற்றான் ஜடிலன். தான் சென்றது தர்மாதிகாரிக்கு எப்படித் தெரிந்ததென்பது அவனுக்கு அடியோடு விளங்கவில்லை. இருப்பினும் சொன்னான், "கடைவீதியைப் பார்க்க" என்று.

"அப்படியானால் கருட சஞ்சீவி வேர் எதற்கு வாங்கினாய்?" என்று கேட்டார் அடுத்த கேள்வி.

"மதுரைக்கு அனுப்ப வேண்டியிருந்தது ஒருவர் சிகிச்சைக்கு" என்றான் ஜடிலன்.

"அனுப்பி விட்டாயா?"

"அனுப்பி விட்டேன்."

"யாரிடம்? எப்படி?"

இந்தக் கேள்வியைக் காதில் வாங்கியதும் நிம்மதியடைந்தான் ஜடிலன். தான் கடைத்தெரு சென்றதும் கருட சஞ்சீவி வாங்கியது மட்டுமே தர்மாதிகாரிக்குத் தெரியுமென்பதையும் மேற்கொண்டு ஏதும் தெரியாதென்பதையும் புரிந்துகொண்டதால் நிம்மதியடைந்த ஜடிலன், "மூன்றாவது கேள்வி கேட்கவில்லையே" என்றான்.

"கேட்கத்தான் நினைத்தேன். ஆனால் அவசியமில்லை" என்றார் தர்மாதிகாரி.

"ஏன் அவசியமில்லை."

"எனக்கே தெரியும்."

"என்ன தெரியும் உங்களுக்கு."

"நீ காரணமாகவே விஜயனைக் காயப்படுத்தியிருக்கிறாய் என்பது தெரியும். ஏன் காயப்படுத்தினாய் என்று கேட்டால் உன்னிடமிருந்து உண்மை கிடைக்காது. ஆகையால் கேட்கவில்லை. உன் போக்கு எனக்குப் புரியவில்லை" என்றார் மாறன்காரி.

அவருக்கு மட்டுமல்ல ஜடிலன் போக்கு புரியாதது. காஞ்சியிலிருந்த நந்திவர்மனுக்கும் புரியவில்லை. இரண்டு நாள் கழித்து நந்திவர்மனும் தர்மாதிகாரியின் நிலையிலேயே இருந்தான்.

# 14. படைத்திறல் பல்லவர்கோன்

**விஜயனிடம்** ஓலையும் விடையும் பெற்றுப் புரவியில் புறப்பட்ட வைணவத் துறவி பெண்ணாகடத்திலிருந்து கிளம்பிய மூன்றாவது நாளிரவு பல்லவ காஞ்சிக்குள் பிரவேசித்தார். அடுத்தடுத்து வந்த பல்லவ மன்னர்களால் பல திருக்கோயில்கள் எடுக்கப்பட்டதும், பெருமதில்கள் சூழ்ந்ததும், பல கலைகளுக்கு இருப்பிடமானதும், ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் அவரவர் வழிபட்ட ஆலய மூர்த்திகளைப் பற்றி மங்களாசனம் செய்யப் பெற்றதும், அந்த அடியார்கள் திருவடிகள் பட்டதாலேயே புண்ணியம் பெற்ற மண்ணை உடையதாயிருந்ததும், காலையிலிருந்து இரவு நேரம் மட்டும் தென்னாட்டு இசை வல்லுநர்களாலும் வடநாட்டு பஜனைக் கூட்டங்களாலும் சதா இசை மணம் பெற்றுக்கொண்டிருந்தது மான பல்லவ காஞ்சியில் பிரவேசித்த வைணவத் துறவி மட்டும் அத்தனை பெருமையையும் இசையையும் சிந்திக்கவோ ரசிக்கவோ சக்தியற்றவராய் காஞ்சியின் வீதிகளில் புரவியை நடத்தினார்.

காஞ்சிவாசிகளுக்கோ காஞ்சி மாநகர் காவல் வீரர்களுக்கோ துறவி புதியவரல்லவாதலால் எந்த இடத்திலும் எந்தத் தடையுமின்றிப் பல்லவப் பேரரசன் அரண்மனையை நோக்கி அவர் விரைந்தார். விரைந்தபோது பார்த்தவரெல்லாம் தனக்குத் தலை தாழ்த்தியதையோ,

உலா வந்த வீரர்கள் உருவிப் பிடித்த வாள்களைத் தாழ்த்தி மரியாதை செலுத்தியதையோ துறவியார் கவனித்தாரில்லை. அவர் உடல் காஞ்சியில் நுழைந்து விட்டதேயொழிய அவர் நினைப்பெல்லாம் பல காதத்துக்கு அப்பாலிருந்து பெண்ணாகடக் கோட்டையிலிருந்தது. விஜயன் கலபமாகப் பாண்டியனைத் தீர்த்துவிடாதிருந்தது பெரும் குறையாகவேயிருந்தது வைணவத் துறவிக்கு. பாண்டியனைப் பெண்ணாகடத்தில் வளர விடுவது பெருஞ்சுறாவுக்கு இரையிடுவதாகும் என நினைத்தார் அவர். உண்மையில் மீனவர்கோன் பெரும் திமிங்கிலமென்பதையும் சமயமகப்பட்டால் அவன் சோணாட்டை விழுங்கத் தயங்கமாட்டானென்றும் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டு துறவியார் மெல்ல சிறு காஞ்சியைத் தாண்டி மஞ்சள் நீர் வாய்க்காலையும் தாண்டி ராஜவீதியில் தனித்திருந்த பல்லவ மன்னர் அரண்மனையை நோக்கிப் புரவியைத் தூண்டிவிட்டார்.

அரண்மனையின் முதல் வாசலுக்கு வந்ததும் முதல் மதிலின் கோட்டை வாயிற் கதவுகள் திறக்க உள்ளே சென்றார் துறவி. இப்படியாக சுமார் ஐந்து வாயில்களைக் கடந்த பிறகு அரண்மனையின் முன்பு புரவி விட்டிறங்கி புரவியின் கடிவாளக் கயிற்றை அங்கிருந்த ஒரு காவலன் கையில் கொடுத்து அரண்மனையின் முதல் கட்டை அடந்தார். முதல் கட்டின் வாயிற் கதவுகள் பல்லவ சாம்ராஜ்யத்தின் செல்வச் சிறப்புக்கும், கலைச் சிறப்புக்கும் அத்தாட்சிகளாக விளங்கின. இரு கதவுகளும், மிகப் பெரிதாகவும் இருந்ததன்றி அவை பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பிரிவிலும் பலவகைச் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தன. சிற்பங்களின் கிரீடங்கள், சேலைகள், ஆயுதங்கள், இசைக் கருவிகள் இவை பற்பல விலை உயர்ந்த கெம்புகளும் கோமேதகம் முதலிய



பலவகைக் கற்களாலும் இழைக்கப்பட்டிருந்தமையால் கதவின் மரப்பகுதிகள் பளபளத்தன.

அடுத்திருந்த இரு கட்டுகளும் போகப் போக அதிகச் சிறப்பையே காட்டின. கடைசி கட்டில் நந்திவர்மன் அந்தரங்க அறை மற்ற கட்டுகளின் அலங்காரங்களைத் தூக்கியடித்தது. அதன் கதவுகள் இரண்டிலும் *ஊர்த்தவ புண்டரமணிந்த இரு துவார பாலகர் கதைகளை ஊன்றி நின்றிருந்தனர். அவர்கள் ஊர்த்வபுண்டரங்களின் வெண்மைப் பகுதிகள், வைரங்களாலும், நடு சிவப்புப் பகுதி மாணிக்கக் கற்களாலும் இழைக்கப்பட்டிருந்தன. துவாரபாலகர்கள் தங்கத் தகட்டில் செய்யப்பட்டுப் பொருத்தப்பட்டிருந்தார்கள். இத்தகைய பெருங் கதவுகளை இருவீரர்கள் உருவிய வாட்களுடன் காத்திருந்தார்கள். அவர்களை நோக்கிய வைணவத் துறவி, "பல்லவர் கோனைப் பார்க்கத் திருத்தேர் நம்பி வந்திருக்கிறானென்று சொல்லுங்கள்" என்று உத்தரவிட்டார்.

வீரர்களில் ஒருவன் தலை தாழ்த்தி உள்ளே சென்று சிறிது நேரம் கழித்து வெளியே வந்து பதிலேதும் சொல்லாமல் வலது கையை நீட்டினான்.

"என்ன வேண்டும்?" என்று வினவினார் துறவியார்.

"ஓலை" என்றான் பதிலுக்கு அந்த வீரன்.

"ஓலையா!" வியப்பின் எல்லைக்குள் துறவியார் புகுந்தார்.

"ஆம்."

"ஓலை கொண்டு வந்திருப்பதாக யார் சொன்னது?"

"மாமன்னர்."

இதற்குப் பிறகு எதும் பேசத் துறவியாருக்கு துணிவில்லாததாலும் விவரிக்க இயலாத வியப்பு அவர் இதயத்

★ ஊர்த்வபுண்டரம்-திருமண்காப்பு.

தைக் கவிழ்ந்து கொண்டதாலும் மடியிலிருந்த ஓலையைக் கையில் எடுத்துக் கொண்டாரானாலும் கொடுக்க மனமில்லாமல் தயங்கினார். பிறகு துணிவை வரவழைத்துக் கொண்டு, "இதை மாமன்னர் கையில்தான் கொடுக்க வேண்டும் என்று கூறிவிடு" என்றார்.

காவலன் விழிகளில் வியப்போ பிரமிப்போ ஏதுமில்லை. பதுமைபோல் மீண்டும் உள்ளே சென்று திரும்பி வந்து அவர் உள்ளே செல்லலாமென்பதற்கு அறிகுறியாகக் கதவைத் திறந்து விட்டான் மெல்ல. துறவி அடிமேலடி வைத்து உள்ளே நுழைந்தார். அந்த அறையே பெரிய கூடமாதலாலும் அங்கு பற்பல சிற்பங்களும் ஓவியங்களும் மூலைக்கு மூலை நின்று கொண்டிருந்தபடியாலும் மெல்லவே அடிமேலடி வைத்து நடந்து அறையில் ஒரு கோடியில் அரியணையொன்றில் அமர்ந்திருந்த பல்லவ மல்லன் முன்பு வந்து தலை நிலத்தில் தொடப் பணிந்தார்.

ஆஜானுபாகுவான சரீரத்துடனும் தீர்க்கமான நாசியுடனும் அகலமான நெற்றியுடனும் வீரஸ்ரீ கண்களில் தாண்டவமாட உட்கார்ந்திருந்த பல்லவ சக்கரவர்த்தியான நந்திவர்மன், துறவியார் மீது தனது கண்களை லேசாக நாட்டி, அந்தப் பார்வையிலேயே விஷயமென்னவென்பதை வினவினான். 'நென்மலியில் வெருவச் செருவேல் வலங்கைப் பிடித்த படைத்திறல் பல்லவர் கோன்' என திருமங்கையாழ்வாரால் போற்றப்பட்டவனும் சாளுக்கியர்களின் பரம விரோதியும் வைணவ சார்வ பௌமனும் பரம பாகவதனுமான நந்திவர்மன் கண்கள் தம்மீது நிலைத்தவுடன் சப்த நாடியையும் இழந்துவிட்ட துறவியார் தமது கையிலிருந்த ஓலையை அவனிடம் நீட்டினார்.

அந்த ஓலையை வாங்கிப் படித்த பல்லவ மல்லன் நெற்றியிலிருந்து ஸ்ரீசூர்ணக் கோடு அவன் சிந்தனைக்கு அறிகுறியாக சிறிது சுருங்கியதே தவிர வேறெந்த வித்தியாச



மும் ஏற்படவில்லை பல்லவ மல்லன் வதனத்தில். எந்த ஓலையின் உள்ளடக்கம் நந்திவர்மனிடத்தில் சற்று சஞ்சலத்தை ஏற்படுத்துமென்று எதிர்பார்த்தாரோ அது எதுவுமே ஏற்படாததே பெரும் விந்தையாயிருந்தது துறவியாருக்கு. ஆகவே, மெல்ல வாயைப் பொத்திக் கொண்டு பயபக்தியுடன் கேட்டார், "அதில் கண்டிருப்பது..." என்று.

வாசகத்தை முடிக்கக் கூடத் துணிவில்லை அவருக்கு. நந்திவர்மன் சந்நிதானத்தில் இருந்த ஒரு கம்பீரம், கண்ணியம், வீரம், சாந்தி இவை எந்த மனிதனையும் அஞ்ச வைக்கும் தன்மை வாய்ந்தவனவாகையால், துறவி மட்டும் எப்படி அந்த சூழ்நிலையின் புனிதத் தன்மையை வெட்ட முடியும். அங்கு எந்த ஆபத்துக்கும் மருந்திருந்தது. எந்த விபரீதத்துக்கும் சாந்தியிருந்தது. அந்த சாந்தி சற்று தூரத்தில் கிருஷ்ண விக்ரகத்தின் வடிவத்திலிருந்தது. அதனருகே இரு குத்துவிளக்குகள் ஒளி வீசின. அந்தக் குத்து விளக்குகளையும், கண்ணனையும் பார்த்துக் கொண்டேயிருந்தான் நந்திவர்மன்.

பல்லவ சக்கரவர்த்தி ஓலையைப் பற்றி ஏதுமே பேசாமலும் தான் சுட்டிக் காட்டியதற்கும் பதிலேதும் சொல்லாமலும் கண்ணபிரானையே பார்த்துக் கொண்டிருந்தது பெரும் எரிச்சலாயிருந்ததால் துறவி உள்ளூரக் குமுறிக் கொண்டிருந்தார். சக்கரவர்த்தி பேசத் தொடங்கிய பின்பு கூட ஓலையைப் பற்றிப் பிரஸ்தாபிக்காமல், "சோழ நாட்டிலிருந்து பயணம் சௌக்கியமாகத் தானே இருந்தது?" என்று வினவியது துறவியின் கோபத்தை உச்சநிலைக்குக் கொண்டு சென்றதால், "என் சௌகரியத்தை உத்தேசித்துச் செய்த பயணமல்ல இது" என்று கூறினார் குரலில் பணிவுடன், ஆனால் உள்ளத்தில் குமுறலுடன்.

நந்திவர்மனின் வீர இதழ்கள் புன்னகை காட்டின மெல்ல. "திருத்தேர் நம்பியின் ராஜ விசுவாசம் நானறியாததல்ல. இருப்பினும் சோழ நாட்டிலுள்ள நமது படைப்

பிரிவில் முக்கிய ஸ்தானம் வகிப்பவரும் முதியவரும் வீர வைணவருமான தங்கள் நலனை விசாரிப்பது என் கடமையல்லவா?" என்று கூறவும் செய்தார் மாமன்னன் தன் முறுவலைத் தொடர்ந்து.

"இப்பொழுது என் நலனைவிட பல்லவ சாம்ராஜ்யத்தின் நலன் பாதிக்கப்பட்டிருக்கிறது" என்று சுட்டிக்காட்டினார் துறவி.

நந்திவர்மன் மறுபடியும் சிறிது சிந்தித்துவிட்டுக் கேட்டான், "பாண்டியன் தனித்து பெண்ணாகடம் வந்துவிட்டதால் பல்லவ சாம்ராஜ்யம் பாதித்துவிடுமென்று நினைக்கிறீரா?" என்று.

"ஒரு மன்னன் இன்னொரு நாட்டு நகருக்குள் தனித்து நுழைவதே விந்தை நுழைந்த பின்பு இந்த இடத்தை விட்டுப் போகாமல் தனித்து தங்கியிருப்பது அதனிலும் விந்தை. ஆகையால் இதில் ஏதோ மர்மமிருக்க வேண்டும்" என்று கூறினார் துறவி கவலையுடன்.

"அவன் தனித்து வந்தானென்பது உண்மைதானா?" என்று வினவினான் நந்திவர்மன்.

"ஆம்" என்றார் துறவி.

"மேலுக்குத் தனித்து வந்ததுபோல் பாசாங்கு செய்து தனது படையில் ஒரு பகுதியைத் தனித்தனி வீரர்களாக மாறு உடையில் ஏன் வரச் சொல்லியிருக்கக் கூடாது?" என்று நந்திவர்மன் கேட்டான்.

"அதற்குக் காரணமில்லை; அவன் பெண்ணாகடத்தில் புகுந்ததே ஒரு தவறுதலால். ஏனென்றால் முதலில் அரசகுமாரியின் வாவியில் குளித்தான். அதனால் அவனைச் சிறைக்குள்ள தள்ள வேண்டியதாயிற்று."

"அப்படிப் பாண்டியன் சுலபமாகச் சிறைப்பட்டானா காவலரிடம்?"

"காவலர் அவனைச் சிறை பிடிக்கவில்லை."



இதைக்கேட்ட நந்திவர்மன் முகம் அதிகமான வியப்பால் விகசித்தது. "என்ன, காவலர் அவனைச் சிறை பிடிக்கவில்லையா!" என்று வினவினான் குரலில் சற்றே வியப்பு ஒலிக்க.

"இல்லை" என்றார் துறவி.

"வேறு யார் சிறை பிடித்தது?"

"அவனே வலுவில் சிறைக்கு வந்தான்!"

"என்ன! அவனே வலுவில் சிறைக்கு வந்தானா?"

"ஆம். முதலில் அரசகுமாரி அவனை சிறை பிடித்தாலும் விட்டுச் சென்றாள். அவன்தான் விடாமல் தொடர்ந்து வந்து காவலனிடம் தன்னைச் சிறையில் தள்ளும்படி கெஞ்சினான்," என்று துறவி நந்திவர்மன் முகத்தை நோக்கினார் நன்றாகத் தமது கண்களால்.

நந்திவர்மனுக்கு இது பெரும் விசித்திரமாயிருக்கவே, "சரி; நடந்தது பூராவையும் சொல்லுங்கள். இந்த ஓலையில் விவரம் அதிகமில்லை. பாண்டிய மன்னன் தன்னை சாதாரண வீரனாகச் சொல்லிக்கொண்டு பெண்ணாகடத்திற்கு வந்திருப்பதாகவும், அரசகுமாரிக்கு அவன் ஏதோ ஓலை கொண்டு வந்திருப்பதாகவும், சோழ நாட்டையும் அரசகுமாரியையும் நம்மிடமிருந்து காக்க அவனுக்கு சோழர்குல வாள் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் கண்டிருக்கிறது" என்று கூறிவிட்டு பல்லவர்கோன் நன்றாக ஆசனத்தில் சாய்ந்து கொண்டான்.

துறவியாரும் மெல்ல விவரித்தார் பெண்ணாகடத்தில் நடந்த கதையை: "இப்படி பாண்டிய மன்னன் வலுவில் சிறைப்பட்ட பிறகு அன்றிரவு அரசகுமாரி அவனை சிறையில் சந்தித்தாள். அவன் ஓர் ஓலையை அவளிடம் கொடுத்தான். பிறகு அரசகுமாரி அங்கிருந்து சென்று விட்டாள். மறுநாள் சிறையிலிருந்து வெளிவந்த பாண்டிய மன்னனுக்குத் தர்மாதிகாரி மாறன்காரி பெருபசாரம்

செய்தார். அவனுக்கு சோழர்குல வாளைக் கொடுத்து சோழர்குல அரச மகளையும் சோழ நாட்டையும் பாது காக்கும் பணியை அளித்தார். பாண்டிய மன்னன் பெண் ணாகட அரண்மனைப் பூஜை அறையில் சிவலிங்கத்தின் மீது தெண்டனிட்டு நெற்றியில் விபூதியிட்டு வாளை வாங்கிக்கொண்டு ஆணையும் இட்டான்..."

இந்தச் சமயத்தில் இடையே புகுந்த நந்திவர்மன், "என்ன! பாண்டியன் விபூதி இட்டுக்கொண்டானா?" என்று வினவினான்.

"ஆம்" என்றார் துறவி.

"நீர் பார்த்தீரா?"

"இல்லை, விஜயன் பார்த்தான்."

"பாண்டியன் வீர வைணவனாயிற்றே?"

"அப்படித்தான் சொல்கிறார்கள். ஆனால் அவன் சமயத்துக்குத் தகுந்தபடி எந்த வேடமும் போடுவான்" என்றார் துறவி. "மன்னனாயிருப்பவன் சாதாரண வீரனாக வேடம் போட்டு சிங்கத்தின் குகைக்குள் தானாக நுழையும்போது விபூதியிட்டு சிவநேசர் வேடம் போடுவது தானா அவனுக்கு ஒரு பிரமாதம்" என்று தமது கருத்தைத் தெரிவித்தார்.

"இதுவும் ஒரு விந்தைதான்" என்ற பல்லவர்கோன், "விஜயன் விஷயத்தை ஓலையில் ஓரளவு அறிவித்திருக் கிறான். வேறென்ன சொன்னான்?" என்று கேட்டார்.

"செய்ய வேண்டியதைத் தங்களைத்தான் கேட்கச் சொன்னான். பாண்டியன் போக்கு அவனுக்கு ஏதும் விளங்கவில்லை?" என்று கூறினார் துறவி.

"உமக்கு விளங்குகிறதா?" என்று வினவினான் பல்லவர் கோன்.

"இல்லை."



"அவன் போக்குப் புரியாதிருக்கட்டும். பரிகாரம் ஏதாவது தெரிகிறதா உமக்கு?"

"சொன்னேன் பரிகாரம்."

"என்ன?"

"பாண்டியனை முடித்துவிடச் சொன்னேன்."

நந்திவர்மன் கண்களில் விபரீத ஒளி ஒன்று தோன்றி மறைந்தது. உதடுகள் கடுமையுடன் மடிந்தன. "கொலை செய்ய யோசனை சொன்னீரா?" என்று வினவினான் சற்றுக் கடுமையாக.

துறவி நேரிடையாகப் பதில் சொல்லவில்லை. "தன் னைக் கொல்லவரும் பகைவையும் கொல்லலாம் என்று சாஸ்திரமிருக்கிறது" என்று சுட்டிக் காட்டினார்.

நந்திவர்மன் இதழ்கள் இகழ்ச்சியுடன் மடிந்தன. "பாண்டியன் வைணவன், நானும் வைணவன். வைணவன் வைணவனைக் கொல்வது சாலப் பொருந்தும்!" என்றான்.

"சாதியையும் சமயத்தையும் பார்க்க வேண்டிய சமயமல்ல இது. பாண்டியன் பகைவன்" என்று கூறினார் துறவி.

நந்திவர்மன் நீண்டநேரம் சிந்தனையில் இறங்கினான். கடைசியில் துறவியை நோக்கி, "பாண்டியன் போக்கு எனக்குப் புரியவில்லை. படை விடுதியொன்றில் நீர் தங்கியிரும்; இன்னும் இரண்டு நாட்களில் தஞ்சைக்குப் புறப்படுவோம்" என்று கூறிவிட்டு அவர் செல்லலா மென்பதற்கு அறிகுறியாக ஆசனத்திலிருந்து எழுந்திருந்து கண்ணபிரான் விக்ரகமிருந்த கோயிலாழ்வாரை நோக்கி நடந்தான்.

# 15. வாணிப வேடம்

நந்திவர்மனிடம் ஓலையைக் கொடுத்துவிட்டு அவன் ஆணைப்படி அவனது அந்தரங்க அறையிலிருந்து வெளிப்போந்த வைணவத்துறவி அடுத்த நாள் பூராவும் மன்னனைச் சந்திக்க முடியவில்லை. பல்லவ மல்லன் ஆணைப்படி அரண்மனைப் பகுதிக்குள்ளிருந்த காவலர் படை வீடு ஒன்றில் தங்கியிருந்து அடுத்த நாள் முழுவதும், மிக சிரமப்பட்டு பொழுதைப் போக்கினார். அடுத்த நள்ளிரவு நெருங்கியதும் அரண்மனைப் பகுதியை விட்டு வெளிவந்து வைகுந்தப் பெருமான் கோயிலுக்குச் சென்றார். பல்லவ மன்னர்களால் பெரிதும் ஆதரிக்கப்பட்டதும் சிறப்புடன் வைக்கப்பட்டதும் திருமங்கை மன்னனால் வைகுந்த விண்ணகரப் பாட்டுக்களால் மங்களாசாஸனம் செய்யப்பட்டதுமான அந்தக் கோயிலில் அரண்மனையை விடக் காவல் அதிகமாயிருந்தாலும் உள்ளே போவோர் வருவோரை யாரும் தடை செய்யாததால் வைணவத் துறவியும் யாரையும் தலை நிமிர்ந்து பாராமலே பிரதான வாயிற் பெருங்கதவுகளைத் தாண்டிய கோயிலுக்குள் நுழைந்தார். கோயிலுக்குள் வருபவர் யாராயிருப்பினும் எத்தேசத்தவராயினும் எந்த விதமான வேறுபாடும் காட்டக் கூடாதென்ற அரசன் உத்தரவிருந்ததாலும், வழக்கப்படி அன்று கூட்டமும் அதிகமாயிருந்ததாலும், வைணவத்துறவியான திருத்தேர் நம்பி மிகுந்த சிரமப்



பட்டுத்தான் உள்ளே நுழைய வேண்டியதாயிற்று. அப்படி மெல்ல உள்ளே நுழைந்து வைகுந்தப் பெருமாள் சந்நிதியில் ஒரு புறமாக நீண்ட நேரம் நின்று கொண்டே எம்பெருமான் மீது கண்களை நாட்டிக்கொண்டிருந்தார். 'திடவிசும்பு எரிவளி நீர் நிலம் இவை மிசை உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்து' உள்ள பகவானுடைய பரத்வ மகிமையைப் பற்றிப் பொதுவாகவும் குறிப்பாக வைகுந்த விண்ணகரப் பாக்களையும், தீர்த்தக் காரர்கள் சேவித்துக் கொண்டிருந்தது மற்றவர்களுக்கு அமிருதமயமாக இருந்ததென்றாலும் எம்பெருமானை தரிசித்து நின்ற திருத்தேர் நம்பிக்கு மட்டும் பாக்கள் ஏதுமே காதில் விழவில்லை. எம்பெருமானும் கண்ணுக்குப் பட்டுக் கொண்டிருந்தானேயொழிய பூர்ணமான லயிப்பு அங்குமில்லை நம்பிக்கு. அவர் எண்ணமெல்லாம் பெண்ணாகடத்தில் இருந்தபடியால் பெருமானுக்குப் பதில் ஜடிலனே கண்களுக்குத் தோன்றினான். சாற்று மறைப்பாட்டுகளுக்குப் பதில் விஜயன் கூறிய செய்திகளே அவர் காதில் விழுந்து கொண்டிருந்தன. இப்படி கலைந்த மனத்தோடும் பார்வையோடும் பெருமானை சேவித்துத் தீர்த்தமும் திருத்துழாயும் வாங்கிக்கொண்டு அரண்மனை திரும்பியதும் அவருக்கு மன்னனிடமிருந்து செய்தி வந்திருந்தது உடனடியாக மன்னர் இருப்பிடம் வரும்படியாக.

படை வீட்டின் வாயிலில் காத்திருந்த வீரனே அந்தச் செய்தியை அவசரமாகக் கூறினான் வைணவத் துறவியிடம். மன்னர் அழைத்து வரச் சொன்னதாகக் கூறிய அந்த வீரனை நோக்கிக் கேட்டார் வைணவத் துறவி, "நீ வந்து நேரமாகிறதா?" என்று.

"ஆம். கால் ஜாமத்திற்கு மேலிருக்கும்" என்றான் வீரன்.

"செய்தியை யாரிடமாவது சொல்லிவிட்டுப் போவது தானே?" என்று வினவினார் துறவி.

"தங்களிடம் நேரிடையாகச் சொல்ல உத்தரவு" என்று குறிப்பிட்டான் வீரன்.

"மன்னரே நேரில் இட்டாரா உத்தரவை உனக்கு?" என்று மீண்டும் துறவி கேட்டார்.

"பல்லவ மல்லர் மாமன்னர்!" என்று சுள்ளென்று விழுந்தான் வீரன் பதிலுக்கு.

அவன் முகத்தில் சற்று கோபம் ஏறியதும் புலனாயிற்று துறவிக்கு. அதைப்பற்றிச் சட்டை செய்யாமலே கேட்டார், "இதற்கு ஏன் கோபிக்கிறாய்?" என்று.

வீரன் முகத்திலிருந்து கோபம் அன்று சற்று கடுமை மட்டும் தெரிந்தது. "சுவாமி! மன்னர்களையே நம்மைப் போன்றவர் பார்ப்பது கஷ்டம். மாமன்னர்களை இஷ்டப் படி பார்க்கலாமென்று நினைப்பது மிகத் தவறு. யாரை யாவது கூப்பிட்டனுப்ப மாமன்னர் உத்தரவிட மாட்டார். சாதாரண வீரன்தான் விஷயத்தை நமக்குத் தெரிவிப்பான். இருப்பினும் உங்கள் விஷயத்தில் அதுகூட விலக்கு. அமைச்சரே நேரில் தெரிவித்தார் பல்லவ மல்லர் விருப்பத்தை" என்று விளக்கிய வீரன், "நீங்கள் கிளம்பலாம் உடனடியாக" என்றும் தெரிவித்தான் உத்தரவிடும் குரலில்.

அதற்குமேல அவனிடம் ஏதும் பேசாத சுவணவத் துறவி சென்று அரசசந்நிதானத்துக்குத் தேவையான உடை களை அணிந்து வெளியே வந்தார். கையில் திருத்துழா யிருந்ததால் இடது கையை மட்டும் மூடிக் கொண்டு கிளம்பினார். பல படை வீடுகளையும் காவற் பகுதிகளை யும் தாண்டி முதல்நாள் போலவே நந்திவர்மன் அந்தரங்க அறை வாயிலுக்குத் துறவியார் வந்ததும் காவலர் உடனடியாக வழிவிட்டு நின்றனர். உள்ளே நுழைந்த துறவி அங்கு நந்திவர்மனுடன் முதலமைச்சரும் உட்கார்ந் திருப்பதைக் கண்டு இருவரையும் வணங்கினார். பிறகு



பல்லவ மல்லனிடம் திருத்துழாய் பிரசாதத்தை வலது கையால் பயபக்தியுடன் கொடுத்தார்.

பல்லவமல்லன் பிரசாதத்தைக் கண்டதும் ஆசனத்தை விட்டு எழுந்து பயபக்தியுடன் திருத்துழாயை வாங்கிக் கொண்டு அதை வாயில் போட்டுக்கொண்டு அஷ்டாட் சரத்தை உச்சரித்தான், இருமுறை. பிறகு ஆசனத்தில் அமர்ந்து,துறவி அமரவும் ஓர் ஆசனத்தைச் சுட்டிக் காட்டி னான். அரசனும் அமைச்சரும் அமர்ந்தபின் ஆசனத்தில் அமர்ந்த துறவிடம் முதன் முதலாக முதலமைச்சரே பேசினார். "பெண்ணாகடத்திலிருந்து செய்தி கொண்டு வந்திருப்பதாக, மன்னர்பிரான் சொன்னார்..." என்று பேச்சைத் துவங்கினார் அமைச்சர்.

தான் மன்னரிடம் விஷயங்களை முதல் நாளன்றே சொல்லியிருக்க அமைச்சர் எதற்காக மீண்டும் விசாரிக் கிறார் என்பது துறவிக்குத் தெரியவில்லையாதலால், "எல்லா விபரங்களையும் மன்னரிடமே கூறிவிட்டேன்" என்றார் துறவி.

முதலமைச்சர் மிக சாவதானமாக துறவியை நோக்கிக் கொண்டு, "இன்னொருமுறை சொல்வதில் துறவியாருக்கு ஆட்சேபணை இருக்கிறதா?" என்று கேட்டார்.

துறவி மன்னனை நோக்கினார் பதிலுக்கு. மன்னன் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் தெரியவில்லை. ஆகவே துறவி மீண்டும் முதலமைச்சர் மீது கண்களை நாட்டி, "விஜயன் ஓலையை மன்னரிடம் தனிப்படக் கொடுக்கச் சொன்னான். அதில் கண்டிருப்பது மன்னர் பார்வைக்கு மட்டுமே என்றும் கூறினான்" என்று குறிப்பிட்டார் துறவி.

முதலமைச்சர் முகத்தில் இதைக் கேட்ட பின்பும் எந்தவித மாறுபாடுமில்லை. "மாமன்னர் பல்லவர்கோன் பக்கத்தில்தானே இருக்கிறார்" என்று சாதாரணமாகக் கூறினார்.

அதற்குமேல் எதுவும் சொல்ல முடியாததால் துறவி, "ஆம், பெண்ணாகடத்திலிருந்துதான் செய்தி கொண்டு வந்திருக்கிறேன்" என்றார் கடுப்புடன்.

"நல்லது. அங்கு வந்திருப்பது பாண்டியன் நெடுஞ்சடையன்தானென்பது உறுதிதானே?" என்று வினவினார் அமைச்சர்பிரான்.

"உறுதியில்லாததை விஜயன் எழுத மாட்டான்" என்றார் துறவி பதிலுக்கு.

அமைச்சர் பிரான் உதடுகளில் புன்முறுவல் விரிந்தது "விஜயனிடம் உமக்கிருக்கும் நம்பிக்கை பாராட்டத் தக்கது. படைத்தலைவர்களிடம் அலுவல் புரிபவர்கள் படைத்தலைவர்களிடம் பூர்ண நம்பிக்கை வைப்பதுதான் சாலச் சிறந்தது" என்று மெச்சினார் முதலமைச்சர்.

முதலமைச்சர் தன்னை மெச்சுகிறாரா அல்லது தன்னை நோக்கி நகைக்கிறாரா என்பது விளங்கவில்லை துறவிக்கு. ஆகவே அவரும் இடக்காகப் பேசத் துவங்கி, "அமைச்சர் பிரான் பாராட்டுக்கு நன்றி" என்று கூறினார்.

"அவசியமான இடங்களில் அவசியமான சமயங்களில் பாராட்டுவதோ பரிசளிப்பதோ அரசர்கள் கடமை; மாமல்லரின் பிரதான மந்திரி என்ற முறையில் எனக்கும் அந்தக் கடமை உண்டு" என்றார் முதலமைச்சர்.

இதற்குமேல் என்ன சொல்வதென்று வைணவத் துறவிக்குப் புரியாததால், "நீங்கள் கேட்க வேண்டியதைக் கேட்கலாம்" என்றார் முதலமைச்சரை நோக்கி.

"வந்திருப்பவன் பாண்டியனென்று வைத்துக் கொண்டே பேசுவோம். வந்தவன் ஓலையொன்று கொண்டு வந்ததாகக் கூறினீர்கள்." என்றார் முதலமைச்சர்.

"ஆம்." துறவி பதிலளித்தார் எரிச்சலுடன்.



"அந்த ஓலை அரசகுமாரிக்கு சிறைச்சாலையில் கொடுக்கப்பட்டது?"

"ஆம்."

"அரசகுமாரியை பாண்டியன் முதலில் வாயிலில் சந்தித்ததாகக் கூறியிருக்கிறார்."

"ஆம்."

"வாவிக்கரையில் பாண்டியன் ஏன் ஓலையைக் கொடுக்கவில்லை?"

இதற்குப் பதில் உடனடியாகக் கூற முடியவில்லை துறவிக்கு. சிறிது சிந்தித்துவிட்டுச் சொன்னார்: "அப்பொழுது அவன் பாண்டியனென்று அரசகுமாரிக்குத் தெரியாது" என்று.

"பாண்டியனுக்கும் அவள் அரசகுமாரியென்று தெரியாதா?"

"தெரியாது."

"ஏன் தெரியாது?"

"தெரிந்திருந்தால் அவனை சிறை செய்திருப்பாளா அரசகுமாரி!"

இந்தப் பதில் கேள்வியைக் கேட்டதும் முதலமைச்சர் புன்முறுவல் செய்தார். "சிறை செய்தவள் அவனை ஏன் விட்டு விட்டாள்?" என்று மீண்டும் கேள்வியைத் தொடுத்தார் முதலமைச்சர்.

இதற்குப் பதில் கூற முடியாததால், "காரணம் அரசகுமாரியைத்தான் கேட்க வேண்டும்," என்றார் துறவி முடிவாக.

முதலமைச்சர் ஆசனத்திலிருந்து எழுந்து வைணவத் துறவியை நோக்கி வந்தார். "நம்பி! அரசகுமாரியை நாங்களே நேரிடையில் கேட்டுக் கொள்வதானால்

உம்முடைய ஓலையோ தூதோ அவசியமில்லை. எங்கும் நடக்காத விசித்திரமொன்று பல்லவமல்லர் ஆதிக்க எல்லைக்குள் நடக்கிறது. பக்கத்து நாட்டு மன்னன், பல்லவமல்லர் பகைவன், நிதானமாகத் தனித்துப் பெண்ணாகடத்தில் புகுந்தானென்றால் அது எதிரியின் பிரதேசம் என்பதை அறியாமலா புகுந்தான்? புகுந்து பின் அங்கேயே தங்கிவிடுகிறான். அவனுக்கு அங்கு உபசாரம் பலமாக நடக்கிறது. ரகசிய ஓலை ஒன்றை அவன் கொடுக்க அவனுக்குச் சோழர்கள் குலவாள் கொடுக்கப்படுகிறது. அவன் சர்வ சாதாரணமாக அங்கு உலாவுகிறான். இதற்கெல்லாம் மூல காரணம் ஏதுமில்லையா?" என்று வினவினார் முதலமைச்சர்.

"என்ன மூலகாரணம்?" என்று துறவி பதிலுக்கு வினவினார் ஏதும் புரியாமல்.

"பாண்டியனுடன் சேர்ந்து கொண்டு சோழன் நம்மை எதிர்க்கத் துணிந்து விட்டான் என்பதுதான் மூல காரணம்" என்றார் முதலமைச்சர்.

"சோழ மன்னனுக்கு இது எதுவும் தெரியாது!" என்றார் துறவி கடுப்புடன்.

"தெரியாதென்பது உமக்கெப்படித் தெரியும்?" என்று வினவினார் முதலமைச்சர்.

"தூதுவன் யாரும் தஞ்சைக்குச் செல்லவில்லை பெண்ணாகடத்திலிருந்து. விஜயனுக்குத் தெரியாமல் ஒரு வீரனும் கோட்டையை விட்டு நகர முடியாது" என்று துறவி சுட்டிக் காட்டினார்.

முதலமைச்சரின் கூர்மையான கண்கள் துறவியை உற்று நோக்கின. "வீரன்தான் செய்தி கொண்டு செல்ல வேண்டுமா?" என்று வினவினார் முதலமைச்சர்.

"வேறு யார் கொண்டு போவர்கள்?"



"யாரும் கொண்டு போகலாம். வர்த்தகர்கள், வண்டிக்காரர்கள், சாதாரண வழிப்போக்கர்கள் யாரையும் தூதாக மாற்றலாம் அவசியம் வரும்போது. நீரும் விஜயனும் வீரர்களைக் கவனித்திருக்கும்போது வேறு வகையில் செய்தி பறந்திருக்கும் பாண்டிய நாட்டுக்கும் சோழ நாட்டுக்கும்" என்று முதலமைச்சர் மீண்டும் வந்து ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

முதலமைச்சர் சொற்களைக் கேட்ட துறவி பிரமை பிடித்து நின்றார் நீண்டநேரம். "துறவியாரே! நீர் படை விடுதிக்குச் செல்லும். அடுத்து செய்ய வேண்டியதைச் சொல்லியனுப்புகிறோம்" என்ற பல்லமன்னன் சொற்கள் கூட துறவியின் காதில் சரியாக விழவில்லை. செல்லலாமென்பதற்கு அறிகுறியாக மன்னன் கையை அசைத்த பின்பே சுரணை பெற்ற துறவி அந்தரங்க அறையை விட்டு அகன்றார்.

அறையிலிருந்து வெளியே வந்து பல வாயில்களைத் தாண்டியபோதும் படைவீரர் வந்தபோதும் சுரணையேயில்லை அவருக்கு. முதலமைச்சர் சொற்களில் பெரும் உண்மை புதைந்து கிடந்ததைப் புரிந்துகொண்ட துறவி பெண்ணாகடத்தின் நிலைமை ஏதோ என்னவோ என்று எண்ணி ஏங்கினார். அன்றிரவு அவருக்கு உணவும் சரியாகச் செல்லவில்லை. உறக்கமும் ஒழுங்காக வரவில்லை. இரவு முழுவதும் பலவித யோசனைகளிலும், அரைத் தூக்கத்திலும் செலவழித்தார். மறுநாள் முழுவதுங் கூட அவருக்கு செய்தி ஏதும் வரவில்லை. மறுநாளை வைகுந்தன் கோயிலின் ஆறுகால பூஜையில் ஐந்துகால பூஜைவரை கலந்து கொள்வதிலும், காஞ்சி மாநகரின் பெரும் வீதிகளில் புரவியில் செல்லுவதிலும் காலங்கழித்தார். சில சமயங்களில் புரவி விட்டிறங்கி புரவியைக் கையில் பிடித்த வண்ணம் வெளியூர் பஜனை கோஷ்டி

களுடன் நடந்தார். ஏதோ பைத்தியம் பிடித்ததுபோல் அன்று இரவு முதல் ஜாமம் முடியக் கழித்த துறவி அயர்ந்து படுத்தார், தமது அறையில். அவர் கண்களை மூடிய சிறிது நேரத்திற்கெல்லாம் வீரனொருவன் அவரை எழுப்பி, "கிளம்புங்கள்" என்றான்.

"எங்கு?" என்று கேட்டார் துறவி.

"எதையும் கேட்காதீர்கள், புறப்படுங்கள்" என்றான் வீரன்.

பேசாமல் எழுந்து உடையணிந்து வீரனொருவனுடன் கிளம்பினார் துறவி. படை விடுதி வாயிலில் வந்ததும், "புரவியையும் அவிழ்த்துக் கொள்ளுங்கள்" என்றான் வீரன்.

அவன் சொற்படியே செய்த துறவியை அரண்மனையின் பின்பகுதிக்கு அழைத்து வந்த வீரன் அங்கு நின்றிருந்த ஒரு வணிகரிடம் விட்டுச் சென்றான்.

"யார் நீ?" என்று வினவினார் துறவி வணிகனை நோக்கி.

பதிலுக்கு வணிகன் நகைத்தான். கிட்டே சென்று நீண்ட நேரம் வணிகனை உற்று நோக்கிய துறவி அதிர்ச்சியுற்று, "பல்லவமல்லரா! தாங்களா!" என்று குழறினார்.

"ஆம்" என்று நந்திவர்மன் பக்கத்திலிருந்த புரவிமீது தாவி ஏறினான். துறவியையும் தாவி ஏறும்படி பணித்தான்.

"எங்கு செல்ல?" என்று வினவினார் துறவி.

"பெண்ணாகடத்துக்கு" என்றான் நந்திவர்மன்.

"பாதுகாவலர் படை எங்கிருக்கிறது?" என்று கேட்டார் துறவி.

"எதற்கு காவற்படை?" என்றான் நந்திவர்மன்.



துறவியின் அதிர்ச்சி அதிகமாகியது. "மன்னவா! தாங்கள் தனித்தா வரப்போகிறீர்கள்?" என்றார் அதிர்ச்சி குரலிலும் ஒலிக்க.

"பாண்டியன் தனித்து பெண்ணாகடம் வரலாம், பல்லவன் தனித்துப் போகக்கூடாதா? பல்லவனைப் பாண்டியனுக்குக் குறைத்து எடை போடுகிறீரா?" என்ற மன்னன் சிரித்துக்கொண்டு புரவியைத் தட்டிவிட்டான். வேறு வழியின்றி துறவியும் புரவியேறி மன்னனைப் பின் தொடர்ந்தார்.

இரண்டு நாள் வேகமான பயணத்துக்குப் பின் காவிரியின் வடகரையை அடைந்த நந்திவர்மன் எதிரே எழுந்திருந்த கோட்டையைக் கண்டான். "நம்பி! அது தானே பெண்ணாகடக் கோட்டை?" என்றும் கேட்டான்.

"ஆம்" என்றார் துறவி.

"முன்னைவிட கோட்டை பலப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது!" என்றான் நந்திவர்மன்.

"இல்லையே" என்றார் துறவி.

"அதோ அந்தப் பகுதியைப் பாரும்" என்று நந்திவர்மன் பெண்ணாகடக் கோட்டையின் ஒரு பகுதியைச் சுட்டிக் காட்டினான். அதன் அமைப்பு துறவிக்கே பெரு வியப்பா இருந்ததால் அவர் வாயைப்பிளந்தபடி நின்றார். நந்திவர்மன் அந்தக் கோட்டையை மேலும் கண்களால் ஆராயலானான். பல்லவமன்னன் வாணிப வேடம் அடியோடு அவன் பார்வையில் கலைப்பட்டு விட்டதையும் வீரனின் ஆராய்ச்சிக் கண்கள் பெண்ணாகடத்தைத் துருவித் துருவிப் பார்ப்பதையும் கண்ட துறவி, "என்ன இருந்தாலும் வேடம் வேடந்தான். வேடம் உருவத்தை மாற்றுகிறதேயொழிய குணத்தை மாற்றுவதில்லை" என்று தனக்குள் சொல்லிக் கொண்டார்.

# 16. பவள மாலை

காவிரியின் வடகரையிலிருந்து பெண்ணாகடக்கோட்டையைத் துருவித் துருவிப் பார்த்த பல்லவ மன்னனான நந்திவர்மன் தத்ரூபம் தமிழகத்து வணிகர்களைப் போலவே வேடமணிந்திருந்தானானாலும், அவன் கண்கள் அவனைக் காட்டிக் கொடுத்ததை வைணவத் துறவியான திருத்தேர்நம்பி கவனிக்கவே செய்தார். நந்திவர்மன் தலையிலணிந்திருந்த பெரிய முண்டாசும், பல்லவமல்லன் பரந்த நெற்றியில் குறுக்கே தீட்டியிருந்த சந்தனக் கோடுகளும், அதிகமாக வைக்கப்பட்டிருந்த பெரிய அடர்த்தியான மீசையும், முதுகையும் உடலையும் சேர்த்துப் போர்த்தியிருந்த பெரிய காசிப்பட்டுப் போர்வையும், காலிலிருந்த வடநாட்டு செருப்பும் நந்திவர்மனை நூற்றுக்கு நூறு வணிகனாக அடித்திருந்ததை துறவி கவனித்தார். அந்த வேடமும் நந்திவர்மனுக்கு நூற்றுக்கு நூறு பொருத்தமாகவும் அழகாக இருந்ததையுங் கூட அவர் கவனிக்கத் தவறவில்லை. இருப்பினும் மன்னன் பெண்ணாகடத்தை ஆராய்ந்தபோது பெரும் கழுகின் பார்வை அவன் கண்களுக்கு ஏற்பட்டுவிட்டதை உணர்ந்து லேசாகச் சிரிக்கவும் செய்தார்.

அந்தச் சிரிப்புகூட நந்திவர்மனைச் சிறிதும் ஆராய்ச்சியிலிருந்து இழுக்கவில்லை. அவன் நீண்ட நேரம் கோட்டை மீது கண்களை நிலைநாட்டி விட்டு, "ஆம் ஆம்! கோட்டை



பலப்படுத்தானிருக்கிறது. சந்தேகமில்லை" என்று ஏற்கெனவே சொன்னதை ஊர்ஜிதம் செய்வது போல் சொற்களை உதிர்த்தான் நந்திவர்மன். பெண்ணாகடத்தின் உட்கோட்டையின் ஒரு பகுதியை அவன் கை மீண்டும் சுட்டிக்காட்டி, "அதோ அந்தப் பகுதி புதிதாக ஏற்பட்டிருக்கிறது. முன்பு இல்லை அது" என்றும் சொன்னான்.

துறவி உட்கோட்டையின் அந்தப் பகுதியை ஊன்றிக் கவனித்தார். அதன் அமைப்பு அவருக்கே பெரு வியப்பாயிருந்தபடியால் பிரமிப்பின் எல்லையை அடைந்தார். அந்தப் பகுதியில் முன்பு காணப்படாத ஒரு பெரும் சுவர் இருந்தது. அதில் இரண்டு மூன்று விற்கூடங்களும் இருந்தன. "சுவரை யாரோ புதிதாக எழுப்பியிருக்கிறார்கள்" என்று கூறினார் துறவி வியப்பின் ஊடே...

"புதிதாக எழுப்பப்பட்ட சுவர் அல்ல அது" என்று கூறினான் நந்திவர்மன் அந்தச் சுவரை ஆராய்ந்த வண்ணம்.

"இது முன்பில்லை" என்றார் துறவி.

"முன்பு முழுவதும் இல்லை" என்று திருத்திச் சொன்னான் பல்லவர்கோன்.

துறவிக்கு மன்னன் விளக்கம் புரியவில்லை. ஆதலால், "சற்று விளக்கிச் சொல்லுங்கள் மன்னவா" என்று கேட்டார்.

"பெண்ணாகடத்தின் பிரதான வாயிலை அடுத்த வடக்குக் கோட்டைச் சுவரை நீர் பார்க்கிறீர். ஏற்கெனவே இருந்த சுவர் சிறிது தட்டி விடப்பட்டு அதன் உயரம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே அது பாதி பழம் சுவர், பாதி புதுச்சுவர். சுவரின்மேல் விற்கூடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே யார் இந்த சுவரை எழுப்பியிருந்தாலும் அவர்கள் பிரதான வாயில் வழியாகத் தாக்குதலை எதிர்பார்க்கிறார்கள். பழைய சுவரை

பழுது பார்ப்பதுபோல் இந்தப் புதுச் சுவரைக் கட்டியிருப்பதாலும் பழைய சுவரின் அமைப்பையே இதற்கும் வைத்திருப்பதாலும், இந்தச் சுவரையொட்டி இரண்டு இடங்கள் பெரிய மரங்களின் மறைவிலிருப்பதாலும், இதை பெண்ணாகடத்திலிருப்பவர்களே அதிகமாகக் கவனித்திருக்க மாட்டார்கள். அப்படியே கவனித்திருந்தாலும் இதை ஒரு பொருட்டாக மதித்திருக்க மாட்டார்கள். இது பாண்டியன் வேலை; சந்தேகமில்லை. நீர் பெண்ணாகடத்தைவிட்டு வந்தபின் இந்தச் சுவர் கட்டப்பட்டிருக்கிறது" என்று விளக்கினான் பல்லவமன்னன்.

"நான் பெண்ணாகடத்தை விட்டு வந்து ஒரு வாரகாலந்தானே ஆகிறது?" என்றார் துறவி.

"சுவரின் ஒரு பகுதியைக் கட்ட ஒரு வாரம் அதிகம். ஐம்பது கொல்லர்கள் இதை மூன்று நாட்களில் கட்ட முடியும். காஞ்சியில் கோயில் மதில்சுவர்களின் ஒரு பக்கத்தை நாங்கள் பத்தே நாட்களில் கட்டுகிறோம். அத்தனை துரிதமான வேலை செய்யும் கொல்லர்களும் சிற்பத் திறனும் காஞ்சியிலில்லாவிட்டால் ஒவ்வொரு பல்லவ மன்னனும் அவர்கள் ஆயுட்காலத்திலேயே பிரும்மாண்டமான கோபுரங்களையும், கோயில்களையும் எப்படிக் கட்ட முடியும்? நான் இஷ்டப்பட்டால் கோட்டைச்சுவரின் ஒரு பகுதியை அல்லது சுவர் பூராவையுமே ஒரு வாரத்தில் கட்டிவிடுவேன். தமிழ்நாட்டில் அத்திறன் இருக்கிறது" என்று கூறிய பல்லவமல்லன் மீண்டும் ஆராய்ச்சியிலிறங்கினான்.

மறுபடியும் பல விநாடிகள் பெண்ணாகடத்தை ஆராய்ந்த பிறகு, "கோட்டைக்கு முன்பு பலமான மரங்களுள்ள தோப்பு இருக்கிறது. ஆகவே கோட்டைச் சுவரை ஆயுத வண்டிகள் அணுகுவது கஷ்டம். உள்ளும் தோப்புகள் இருக்கின்றன. மரங்களும் நான் முன்பு பார்த்ததைவிட



வளர்ந்திருக்கின்றன. இந்தக் கோட்டை தற்காப்புக்கென்ற பலப்படுத்தப்பட்டிருக்கிறது" என்று மெல்ல சொல்லிக் கொண்டான்.

பதிலுக்குத் துறவி தலையை ஆட்டி தாடியையும் சிறிது தடவிக்கொண்டார். "இத்தகைய கோட்டைக்குள் நமது ஆணைக்கு அடங்காத ஒரே பகைவன் இருக்கிறான். அதுவும் நமது படைகள் உள்ள இடத்தில் துணிவுடன் மாறு பெயரில் உலாவுகிறான்" என்று கூறினான் நந்திவர்மன் துறவியைப் பார்த்து.

"ஆம் மன்னவா" எனறார் துறவி, மன்னன் எதற்காக இதைச் சொல்கிறான் என்பதைப் புரிந்துகொள்ள முடியாமல்.

நந்திவர்மன் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்தவன் போல், "சரி; வாரும் போவோம்" என்று காவிரியாற்றின் மணலில் தனது புரவியை இறக்கினான்.

துறவி பிரமித்துப் போனார். "எதற்கு ஆற்றுக்குள் இறங்குகிறீர்கள்?" என்று பதறினார்.

"பெண்ணாகடம் போக" என்று மன்னன் நகைத்தான்.

"அங்கு ஆபத்து இருக்கிறது" என்று சுட்டிக்காட்டினார் துறவி.

"பாண்டியன் அங்குதானே இருக்கிறான்?" என்று கேட்டான் நந்திவர்மன்.

"ஆம்."

"அவன் ஆபத்தைப் பற்றி நினைத்தானா?"

"இல்லை."

"நான் மட்டும் ஏன் பயப்பட வேண்டும்?"

நந்திவர்மனின் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாததால் அவனைத் தொடர்ந்து தமது புரவியையும்

காவிரியில் இறக்கினார் துறவி. இருவரும் காவிரியைத் தாண்டி பெண்ணாகடத்தின் பிரதான வாயிலை அடைந்த போது மாலை வேளை நெருங்கிவிட்டதால் பெண்ணாகடம் பெரும் மயக்கத்தை அளித்தது. சில்லென்று தோப்புகளை ஊடுருவி வந்த காற்று மரங்களின் இலைகளைச் சலசலக்கச் செய்தது. கடைவீதியின் புஷ்பங்களின் நறுமணம் நாசிகளுக்குப் பெரும் இதத்தை அளித்தது. பூக்களை வாங்க வந்த பெண்களின் கலகலப்புச் சிரிப்பு கஞ்சிராவின் மணிகளைப்போல் நாதமெழுப்பின. உள்ளே வந்தும் போய்க்கொண்டுமிருந்த பொதி வண்டிகளின் சக்கர சத்தங்கள்கூட காதுக்கு இன்பத்தைக் கொடுத்தன. இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டே நந்திவர்மன் துறவியுடன் வணிகர்கள் தங்கும் சத்திரத்துக்குச் சென்று புரவிகளை வாயிலில் கட்டிவிட்டு உள்ளே சென்றான். அங்கிருந்த பல ஊர் தனவணிகர்களுடன் வர்த்தக சம்பந்தமாக அளவளாவினான். அவன் போக்கும் செயலும் மிகவும் அபர வைத்திருந்தபடியால் அவர் உணர்ச்சிகள் ஊசி முனையில் நின்றன. யாராவது நந்திவர்மனை அடையாளங் கண்டுகொண்டால் என்ன செய்வது என்றும் நடுங்கினார் அவர். என்னதான் சோணாடு பல்லவ ஆதிக்கத்தில் இருந்தாலும், பெண்ணாகடத்தின் கோட்டை வீரர்கள் பல்லவ சாம்ராஜ்ய உத்தரவுகளுக்கு அடங்கியவர்களானாலும், விஜயன் பெயருக்கு சோழர் படைத்தலைவனாகவும் உண்மையில் நந்திவர்மனின் ஒற்றனாகவும் இருந்தானென்றாலும், பல்லவமல்லன் தனியாக சிக்கிக்கொண்டானென்றால் பல்லவர்களிடம் விரோத முள்ள சோழ வீரர்களும் தர்மாதிகாரியும் பல்லவமல்லனைச் சிறை செய்யத் தயங்கமாட்டார்கள் என்பதை துறவி உணர்ந்ததால், நந்திவர்மன் நிலை குறித்து அவர் வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருந்தார்.



அந்தச் சமயத்தில் நந்திவர்மன் கேட்டான் ரகசியமாக "நம்பி! நீள்விழி மிக அழகுள்ளவளாமே?" என்று.

"ஆம். அதற்கென்ன?" என்றார் துறவி.

"இத்தனை தூரம் வந்து அவளைப் பார்க்காமல் போகலாமா?" என்றான் மன்னன்.

"உட்கோட்டைக்குள் சென்றால் பார்க்கலாம்" என்ற துறவியின் குரல் தடுப்பாயிருந்தது.

"சரி; அங்கு போவோம்."

"போனால் வெளிவருவது கஷ்டம்."

"ஏன்?"

"உங்களை யாராவது அடையாளங் கண்டுகொண்டால் உபத்திரவம்."

"அதற்குப் பயப்பட்டால் அரசகுமாரியைப் பார்க்க முடியாதல்லவா?" என்று நகைத்தான் நந்திவர்மன்.

துறவிக்கு எரிச்சல் அதிகமாயிற்று. "நீங்கள் இங்கு பாண்டியனைப் பார்க்க வந்தீர்களா? அரசகுமாரியைப் பார்க்க வந்தீர்களா?" என்று சீறினார் துறவி.

"பாண்டியன் அரசகுமாரியைவிட அழகாயிருந்தால் அவனையே பார்க்கலாம். ஆனால் என்ன அழகாயிருந்தாலும் அவன் ஆண்பிள்ளைதானே?" என்ற நந்திவர்மன் மீண்டும் நகைத்தான்.

மன்னன் பிடிவாதத்தை எந்தவிதத்திலும் மாற்ற முடியாதென்பதைப் புரிந்துகொண்ட துறவி அதற்குமேல் ஏதும் பேசவில்லை. நன்றாக இருட்டி எங்கும் விளக்குகள் பளிச்சிட்ட சமயத்தில் நந்திவர்மன் கிளம்பியபோது அவரும் கிளம்பினார். வணிகர் சத்திரம் கடைவீதியை அடுத்திருந்ததால் கடைவீதியைத் தாண்டிய பிறகே உட்கோட்டைக்குச் செல்ல வேண்டுமாகையால் கடைவீதிக்குள் நுழைந்தான் மன்னன்.

அன்று கடை வீதியில் வியாபாரம் சாதாரண நாட்களை விட அதிகமிருந்தது. தூரத்திலிருந்த பொதி வண்டிகளின் எண்ணிக்கையைப் பார்த்த நந்திவர்மன், "இந்த ஊரில் நாளைக்கு வாரச் சந்தை போலிருக்கிறது. இல்லையேல் இத்தனை பொதி வண்டிகள் வரக் காரணமில்லை" என்றான்.

பொதி வண்டிகளையோ கடை வீதியின் அழகையோ ரசிக்கும் மனநிலையில் துறவியில்லாததால் பெயருக்குத் தலையாட்டினார். பிறகு, "என்னைப் பெண்ணாகடத்தில் பலருக்குத் தெரியும். ஆகவே நீங்கள் தனித்துச் செல்லுங்கள். நான் சற்று எட்ட இருந்து உங்களைக் கவனித்துக் கொள்கிறேன்" என்று கூறி மன்னனை தனித்து முன் செல்லவிட்டார். அவர் கூறியபடியே நந்திவர்மன் கடை வீதிகளைப் பார்த்துக்கொண்டு சென்றான். நகைக் கடைகளின் அருகில் வந்ததும் நின்று நகைகளைக் கண்ணால் எடை போடவும் துவங்கினான். திடீரென துறவி மன்னனுக்கு அருகில் வந்து, "அதோ அந்தப் பெரிய கடையில் அரசகுமாரி ஏதோ வாங்குகிறாள்" என்று கூறினார் பதட்டத்துடன். கடையையும் கண்ணாலேயே காட்டி விட்டு அகன்றார்.

நந்திவர்மன் அந்தப் பெரிய நகைக் கடையை நோக்கிச் சென்றான். அங்கு நின்று பவளமாலை ஒன்றை வாங்கிக் கொண்டிருந்த நீள்விழியின் அருகில் வந்ததும் அவள் அழகைக் கண்டு பிரமித்து அசைவற்றும் பல விநாடிகள் நின்றுவிட்டான். அவன் வந்ததையும் அசைவற்று நின்று விட்டதையும் கண்ட நீள்விழி தனது அழகிய விழிகளை அவன்மீது திருப்பினாள். 'இங்கு என்ன வேலை உனக்கு?' என்று கேட்பது போலிருந்தது அந்தப் பார்வை.

அந்தப் பார்வையை நந்திவர்மனின் கூரிய விழிகள் தைரியத்துடன் சந்தித்தன. "தாங்கள் வியாபாரத்தை முடித்துக் கொள்ளுங்கள் அரசகுமாரி. நான் பிறகு வாங்கிக் கொள்கிறேன்" என்று கூறிய நந்திவர்மன் தலைதாழ்த்தி அரசகுமாரியை வணங்கினான்.



அரசகுமாரியின் நீள்விழிகள் அவனுக்கு நன்றி செலுத்தின. பவளமாலையை மீண்டும் அவள் கண்கள் பரிசோதித்தன. "இது என்ன விலை?" என்று அவள் பவள இதழ்கள் கேள்வியொன்றைத் தொடுத்தன கடைக் காரனை நோக்கி.

அவன் பதில் கூறுமுன்பு நந்திவர்மன் சொற்கள் குறுக்கே புகுந்தன. "அந்த மாலையில் பழுதிருக்கிறது." என்று.

கடைக்காரன் கடும் கண்களை அவன்மீது திருப்பினான். "உனக்கு பவளத்தின் மதிப்பு தெரியுமா?" என்று கேட்டான் கோபத்துடன்.

"எதையும் மதிப்பிடத் தெரியும் எனக்கு" என்று கூறி நீள்விழி மீது கண்களை நாட்டினான் பல்லவன்.

கடைக்காரன் கோபம் சற்று அதிகப்பட்டது. "இந்தப் பவளமாலையில் என்ன குற்றத்தைக் கண்டாய்?" என்று வினவினான் கடைக்காரன்.

"அரசகுமாரி! அந்த மாலையைச் சற்று தூக்கி விளக்கின் வெளிச்சத்தில் பிடியுங்கள்" என்ற நந்திவர்மன் அவள் தூக்கிப் பிடித்ததும் அதிலிருந்து மூன்று பவளங்களை விரலால் தொட்டுக் காட்டி, "இந்த மூன்று பவளங்களும் மூன்றாந்தரத்தைச் சேர்ந்தவை. மற்றவை இரண்டாந்தரம். இதில் ஒரு பவளங்கூட முதல் தரமல்ல" என்றான்.

கடைக்காரன் அயர்ந்தே போனான். "என்ன! என்ன?" என்று இருமுறை கூவினான். பிறகு ஒரு பெட்டியை எடுத்து பல்லவனிடம் வைத்து, "இதில் எது நல்ல பவள மாலை? எடு நீ பார்ப்போம்" என்றான்.

நந்திவர்மன் ஒவ்வொரு மாலையாக எடுத்து விளக்கொளியில் பார்த்தான். கடைசியாக, "இதுதான் நல்லது. பழுதில்லாதது!" என்று கூறி ஒரு மாலையை எடுத்து நீட்டினான் அரசகுமாரியிடம். அரசகுமாரி அதைக் கையில் வாங்கிப் பார்த்தாள் அந்தப் பவளங்களில் பிரகாசம் அதிகமில்லை. எல்லாம் ஒரே மாதிரி இலந்தம் பழங்கள் போல் மங்கிய ஒளியுடன் இருந்தன. "இதில் அதிக ஒளியில்லையே?" என்றாள்.

"அசல் பவளத்துக்கு அதிக ஒளி கிடையாது. கற்புடைய மங்கையர் அணிவதால் அவர்களைப் போல் அதற்கும் பகட்டுக் கிடையாது. அதன் அழகு தனிப்பட்டது. அடக்கமானது. உறவாட உறவாட அதன் அருமை தெரியும்" என்று கூறிய நந்திவர்மன் தனது மடியிலிருந்து ஒரு பையை எடுத்து தங்க நாணயங்களைக் கலகலவென்று கடைக்காரன் எதிரிலிருந்த தட்டில் கொட்டினான். "இதில் ஆயிரம் பொற்கழஞ்சுகள் இருக்கின்றன, பவளத்தின் விலை அது" என்று கூறினான்.

"இருங்கள்! இது என்ன?" என்றாள் அரசகுமாரி விவரம் புரியாமல்.

"அரசகுமாரிக்கு வணிகன் காணிக்கை. ஏற்றுக்கொள்ள அடிமை இறைஞ்சுகிறேன்" என்றான் நந்திவர்மன் தலைதாழ்த்தி.

"நான் இதை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று பதறினாள் அரசகுமாரி.

"கொடுக்கத் தகுந்தவன் கொடுக்கிறேன். வாங்குவதில் தவறில்லை" என்று நந்திவர்மன் அவளுக்குத் தலை தாழ்த்திவிட்டுக் கும்பலில் மறைந்தான் அடுத்த கணம்.

அரசகுமாரி மாலையைக் கையில் பிடித்தவண்ணம் பிரமை பிடித்து நின்றுவிட்டாள். தூரத்தேயிருந்த பொதி வண்டிகளின் அருகாமையிருந்த ஓர் உருவமும் இந்த நாடகத்தை ஊன்றிக் கவனித்துக் கொண்டிருந்தது.

## 17. வணிகரும் நாடும்

முன்பின் அறியாத யாரோ ஒரு வணிகன் திடீரென பொற்காசுகளைத் தட்டில் கொட்டிவிட்டு பவளமாலையைத் தனக்குப் பரிசாக அளித்துவிட்டுக் கும்பலில் மறைந்துவிட்டதும் சோழ மன்னன் மகள் பல விநாடிகள் என்ன செய்வதென்றறியாமல் கையில் அந்த மாலையைப் பிடித்தவண்ணம் நின்றுவிட்டாள். அந்த வணிகனின் போக்கு அனைத்துமே விந்தையாயிருந்தது அந்த வனிதைக்கு. தான் எடுத்த பவள மாலைக்குப் பழுது சொல்லி பளபளப்பற்ற ஒரு பவள மாலையை எடுத்து அதுதான் உயர்ந்ததென்று கூறி அதைத் தனக்குப் பரிசாகவும் அவன் அளித்துச் சென்றதையும் எண்ணி எண்ணி வியந்து மலைத்து நின்றாள் நீள்விழி. அவள் மாலையைக் கையில் பிடித்து நிலைத்து நின்றுவிட்டதைக் கண்ட கடைக்காரன், "அரசகுமாரி! தாங்கள் அதை அணிவதில் தவறில்லை. அரசகுலத்தார்க்கு வணிகர்கள் காணிக்கை அளிப்பது முறைக்கு புறம்பும் ஆகாது" என்றான்.

நீள்விழியின் குழம்பிய கண்கள் அவனை ஏறெடுத்து நோக்கின. "அப்படியானால் நீயே இதை எனக்குப் பரிசளித்திருக்கலாமே" என்று கூறவும் செய்தாள் கடைக்காரனை நோக்கி.

கடைக்காரன் பதில் சொல்ல முடியாமல் தயங்கினான் சில விநாடிகள். கடைசியாக துணிவை வரவழைத்துக் கொண்டு, "அரசகுமாரி! இந்தக் கடையே தங்களுடையது தானே" என்றான் மரியாதையுடன்.

அந்த அர்த்தமற்ற வார்த்தையைக் கேட்ட நீள்விழி வெறுப்பு ததும்பிய தனது விழிகளை அவன்மீது நிலைக்க விட்டாள் ஒருவிநாடி. பிறகு மாலையை பொற்கழஞ்சுகள் இருந்த தட்டிலேயே போட்டுவிட்டு அப்புறம் நடந்தாள் தோழிகள் பின்தொடர.

அவள் இரண்டடிகள்தான் எடுத்து வைத்திருப்பாள். "அரசகுமாரி!" என்ற ஒரு சொல் அவள் காலை மேலும் செல்லவொட்டாது தேக்கியது. திரும்பி நோக்கிய நீள்விழி தனக்குப் பின்னால் ஜடிலன் நின்றிருப்பதைக் கண்டு சிறிது மகிழ்ச்சியும் கொண்டாள். "நீங்கள் எப்பொழுது இங்கு வந்தீர்கள்?" என்று வினவவும் செய்தாள் கடை இதழில் குறுநகை கோட்டி.

"இப்பொழுதுதான் வந்தேன்" என்று ஜடிலன் சாதாரணமாகத்தான் பதில் சொன்னானென்றாலும் அவன் குரலில் விஷம் மண்டிக் கிடந்தது.

"அப்படியா!" என்றாள் அரசகுமாரியும் மேலுக்கு சர்வ சாதாரணமாகவும் உள்ளே கோபம் துளிர்க்கவும்.

"ஆம். தங்கள் அதிர்ஷ்டத்தையும் எட்ட இருந்தே கண்டேன்."

"எட்ட இருந்தா?"

"ஆம். பொதிவண்டிகளுக்கருகில் இருந்தேன்."

"மறைந்திருந்து பார்த்தீர்களா?"



"நான் மறையவில்லை. பொதிவண்டி என்னை மறைத்திருந்தது."

"ஓகோ!" இதைச் சொன்ன நீள்விழியின் குரலில் லேசாகக் கோபம் தெரிந்தது.

"ஆம் அரசகுமாரி" என்றான் ஜடிலன். "அதனால் முழு நாடகத்தையும் பார்க்க முடிந்தது" என்றும் கூறினான்.

"நாடகமா!" என்ற அரசகுமாரியின் கேள்வியில் வியப்பிருந்தது.

அதற்கு பதில் சொல்லவில்லை ஜடிலன். கடைக்காரனிடமே சென்று "மாலையை அரசகுமாரி அங்கீகரித்து விட்டார்கள்" என்று கூறி தட்டிலிருந்த பவள மாலையை எடுத்துக்கொண்டு அரசகுமாரியின் அருகில் வந்து, "வாருங்கள் போகலாம்" என்றழைத்தான்.

நீள்விழியின் விழிகளில் கனல் தெரிந்தது. "முதலில் அதைத் தட்டில் போட்டுவிட்டு வாருங்கள்" என்ற அவள் சொற்களிலும் உஷ்ணம் மிதமிஞ்சித் தெரிந்தது.

"அதைப் போடுவது சரியல்ல" என்று ஜடிலன் பிடிவாதம் பிடித்தான்.

"ஏன்?"

"வணிகர்கள் காணிக்கையை நிராகரிப்பது அவர்களை அவமானப்படுத்துவது போலாகும்."

"வணிகர்கள் காணிக்கையைக் கடையில் வாங்கி நீட்ட மாட்டார்கள். அரண்மனைக்குக் கொண்டு வருவார்கள்" என்று கூறிய நீள்விழி விடுவிடு என்ற நடந்துவிட்டாள் கடைவீதி நெடுக. அவளைத் தொடர்ந்து அவள் தோழிகளும் சென்றார்கள்.

கையில் பவளமாலையை ஏந்தியவண்ணம் அவன் போவதைப் பார்த்துக்கொண்டிருந்த ஜடிலன் சில வினாடிகள் ஏதோ சிந்தித்தான். பிறகு மாலையைத் தனது கச்சையில் பத்திரப்படுத்திக் கொண்டு பொதி வண்டிகள் இருந்த இடத்துக்குச் சென்று அங்கிருந்த ஒரு வண்டிக் காரனிடம் மிக ரகசியமாக ஏதோ விஷயங்களைச் சொன்னான். அங்கிருந்து கிளம்பி கடைவீதியைத் தாண்டி அடுத்த இரு தெருக்களைக் கடந்து உட்கோட்டைக்கு வந்து சேர்ந்தான். வந்ததும் நேராகத் தனது அறைக்குச் சென்று பவளமாலையை ஒரு சிறு பேழையில் வைத்து விட்டு அறை நடுவிலிருந்த மஞ்சத்தில் உட்கார்ந்து கொண்டு, நீண்ட நேரம் ஏதோ யோசித்தான். கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து பழைய ஆடையைக் களைந்துவிட்டு வேறு சாதாரண ஆடையைப் புனைந்துகொண்டு வெளியே கிளம்பினான். மாளிகையைவிட்டுக் கிளம்பியவன் பிரதான தெருக்கள் வழியாகச் செல்லாமல் குறுக்கேயிருந்த வாவிக்கரை வழியாகச் சென்று பெண்ணாகடத்தின் பிரதான சத்திரத்தின் பின்பகுதியிலுள்ள தோப்புக்கு வந்து பெரிய மரமொன்றின் மறைவில் நின்றுகொண்டான். நாழிகைகள் பல ஓடிவிட்டதையும் லட்சியம் செய்யாமல் நின்றுகொண்டு சத்திரத்தின் பின்புற வாயில்மீது கண்களை வைத்துக் கவனித்துக் கொண்டிருந்தான்.

அவன் எதிர்பார்த்தது நடக்கவே செய்தது. இருள் நன்றாக மூண்டதும் சத்திரத்தின் பின்புற வாயில் வழியாக பல்லவ வியாபாரியும் அவரைத் தொடர்ந்து துறவியாரும் வந்தார்கள். சத்திரத்தின் பக்கத்தில் மறைந்திருந்த ஓர் உருவம் அவர்களை நாடிச் செல்ல, மூவருமாக தோப்புக்குள் நுழைந்து வந்து ஜடிலன் மரத்திலிருந்து பத்தடி தூரத்தில் நின்றார்கள். அந்த மூன்று உருவங்களைக் கண்டதும், "நான் எதிர்பார்ப்பது சரிதான்" என்று ஜடிலன் சொல்லிக்



கொண்டதன்றி அம்மூவர் சம்பாஷணையையும் கருத்துடன் கேட்கக் காதையும் தீட்டிக் கொண்டான்.

மூன்றாவது உருவம் முதலில் பேச்சைத் துவங்கி, "தாங்கள் இங்கு வந்தது சரியல்ல" என்று கூறியது.

பல்லவ வணிகர் வேடத்திலிருந்த நந்திவர்மன் அந்த உருவத்தைச் சற்று கூர்ந்து கவனித்துவிட்டு, "ஏன் சரியில்லை விஜயா?" என்று வினவினான்.

"காரணம் தங்களுக்கே தெரியும்" என்றான் விஜயன் அச்சம் துளிர்த்த குரலில்.

"பாண்டியன் இங்கிருப்பதை ஓலையில் விஜயன் எழுதி அனுப்பியிருந்தான் தங்களுக்கு..." என்று வைணவத் துறவியாரும் சுட்டிக் காட்டினார்.

நந்திவர்மன் இதழ்களில் இளநகை மெல்லப் படர்ந்தது. "பாண்டியன் படையுடன் வந்திருக்கிறானா?" என்று வினவினான் நந்திவர்மன் ஏளனம் துளிர்த்த குரலில்.

"இல்லை" என்றான் விஜயன்.

"அங்கு உன்னிடம் படையிருக்கிறதல்லவா?" என்று மீண்டும் வினவினான் நந்திவர்மன்.

"இருக்கிறது" என்று ஒப்புக்கொண்டான் விஜயன்.

"படையுள்ள தலைவன் படையில்லாமல் தனிக்கட்டையாக வந்திருக்கும் பாண்டியனைப் பார்த்து அஞ்சுவது விசேஷந்தான்" என்றான் நந்திவர்மன் மெல்ல ஏளன நகை புரிந்து.

விஜயனுக்கு உள்ளூரக் கோபம் பொத்துக்கொண்டு வந்தாலும் அதை வெளிக்குக் காட்டாமல் சொன்னான்: "பிரபு! பாண்டியன் படையுடன் இங்கு வந்தால் விஜயன்

அவனை எதிர்க்கப் பின்னடைய மாட்டான். வந்தவன் திருட்டுத்தனமாக வந்திருக்கிறான். முழுப் பெயரையும் சொல்லாமல் இங்கு உறைகிறான். வந்த அன்றே அரச குமாரி நீள்விழியையும் இந்த ஊர் தர்மாதிகாரியையும் கைக்குள் போட்டுக்கொண்டு கிட்டத்தட்ட இங்கு படைத் தலைவனாகவும் ஆகிவிட்டான். இந்தக் கோட்டையில் இஷ்டப்படி மாறுதல்களையும் செய்து வருகிறான்" என்று.

இதற்கெல்லாம் நந்திவர்மன் மசியவில்லை. "உட்கோட்டையில் உட்புறச் சுவர் அதிகமாக எழும்பியிருப்பதற்கு அவன்தான் காரணமா?" என்று வினவினான் சிறிது சிந்தனைக்குப் பிறகு.

"ஆமாம்" என்றான் விஜயன்.

"இன்னும் என்ன மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன?" என்று வினவினான் நந்திவர்மன் மீண்டும்.

"அந்தச் சுவர் மீது விற்கூடங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன."

"அதைக் கவனித்தேன்."

"இந்தக் கடைவீதியை அடுத்திருக்கும் பிரதானக் கோட்டையைப் பலப்படுத்தவும் ஏற்பாடாகியிருக்கிறது. இந்தப் பகுதியில் விற்கூடங்களையும் வேற் கூடங்களையும் அதிகப்படுத்த தர்மாதிகாரி உத்தரவிட்டிருக்கிறார். உத்தரவிட்டிருப்பது மேலுக்கு தர்மாதிகாரியென்றாலும் உண்மையில் அது பாண்டியன் உத்தரவுதான்."

விஜயன் ஊகம் சரியென்பதை ஆமோதிப்பதுபோல் தலையை ஆட்டிய நந்திவர்மன் துறவியை நோக்கித் திரும்பி, "இந்த ஏற்பாடுகளிலிருந்து நீங்கள் என்ன புரிந்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.



"பாண்டியன் பிரதானக் கோட்டை வாயில் வழியாக தாக்குதலை எதிர்பார்க்கிறான்" என்று கூறினார் துறவி.

"உண்மை" என்று ஆமோதித்த நந்திவர்மன் மேலும் கூறினான்: "பாண்டியன் எதிர்ப்பதை பிரதான வாயிலிலும் சற்று வடக்குப்புறத்திலும் எதிர்பார்க்கிறான். அது தவறுமில்லை. அந்தப் பகுதிகளில்தான் படைகள் வர பாதையிருக்கிறது. இருப்பினும் நீங்கள் எச்சரிக்கையுடனிருக்க வேண்டும். அவன் ஏற்பாடுகளைக் கவனித்து அவ்வப்பொழுது செய்தி அனுப்புங்கள். இந்தப் பெண்ணாகடத்தைச் சீக்கிரம் நாம் ஆக்ரமித்துக்கொள்ள வேண்டும்" என்று.

"இல்லையேல்" என்று விஜயன் தொடுத்தான் இந்தக் கேள்வியை.

"இல்லையேல்... பாண்டியன் அதை ஆக்ரமித்துக் கொள்வான்" என்ற நந்திவர்மன், "எப்படியும் பாண்டியர் பல்லவர் மோதல் இங்கு நடக்கும். அந்த மோதல் ஓரளவு பல்லவ அரசின் பிற்காலத்தையும் நிர்ணயிக்கும்" என்று அறிவித்துவிட்டு, "வா நம்பி" என்று துறவியை அழைத்துக் கொண்டு சத்திரத்தை நோக்கிச் சென்றான். அவர்கள் சென்றதும் விஜயனும் தோப்பை விட்டு அகன்றான்.

அந்த மூவரின் சம்பாஷணை மிகத் தெளிவாக ஜடிலன் காதில் விழுந்ததால் அவன் தீவிர சிந்தனையில் இறங்கிய வண்ணம் மரத்தின் மறைவில் நின்றுகொண்டிருந்தான். விஜயன் உருவம் கண்ணுக்கு மறைந்ததும் மீண்டும் மாளிகைக்கு வந்து தனது அறைக் கதவைத் தாழிட்டுக்கொண்டு விடுவிடு என்று ஓலையொன்றைத் தீட்டினான். பிறகு தர்மாதிகாரியின் அறைக்குச் சென்று அதில் கையெழுத்திடும்படி அவரை வேண்டிக் கொண்டான்.

தர்மாதிகாரி ஓலையைக் கூர்ந்து நோக்கினார். அதிலுள்ள விஷயத்தைத் திரும்பத் திரும்பப் படித்தார். பிறகு கேட்டார், "உனக்கு பைத்தியம் ஏதுமில்லையே" என்று.

"இல்லை."

"பின் எதற்காக இந்த ஓலையை எழுதியிருக்கிறாய்?"

"வாணிபத்தை அதிகரிக்க."

"எதற்கு அதிகப்படுத்த வேண்டும்?"

"வாணிபத்தால் நாடு செழிக்கிறது" என்று ஜடிலன் ஏதோ பேருண்மையைக் கூறிவிட்டவன்போல் மகிழ்ச்சிக் குறியை முகத்தில் படரவிட்டுக் கொண்டான்.

"இப்பொழுது வாணிபத்திடம் திடீரென உனக்கு என்ன அத்தனை விருப்பம்?"

"சக்கரவர்த்திகளே வணிகர்களாகும்போது சாதாரண மன்னன் வாணிபத்தை விரும்புவது விந்தையல்லவே" என்ற ஜடிலன் மெல்ல நகைத்தான்.





# 18. வீர சுல்கம்

ஜடிலன் நகைப்பும் பேச்சும் அடியோடு தர்மாதிகாரிக்குப் பிடிக்காததால் அவர் முகத்தை லேசாகச் சுளித்து நடுவிலிருந்த ஸ்ரீசூர்ணக்கோட்டை மெல்லக் குறுக்கி நெளியச் செய்தார். அதனால் உதிர்ந்த திரிசூரணம் அவரது ஆடையில் சிறிது சிந்தவும் செய்தது. அந்த நிலையில் உள்ளெழுந்த கோபத்தை அடக்கிக் கொண்டு வினவினார் தர்மாதிகாரி, "எந்தச் சக்கரவர்த்தி வணிகரானார் உனக்கு வழிகாட்ட...?" என்று.

ஜடிலன் மிகுந்த மரியாதையுடன் தலை தாழ்த்தி, "தமிழகத்தில் இப்பொழுது சக்கரவர்த்திகள் மலிந்தா கிடக்கிறார்கள்? இருப்பவர் ஒருவர்தானே?" என்று வினவினான் தர்மாதிகாரியை நோக்கி.

"ஆம். ஒருவர்தான், பல்லவ மல்லரான நந்திவர்மர் தான்" என்று அவரும் ஒத்துப்பாடியதன்றி, "அவருக்கென்ன இப்பொழுது வந்துவிட்டது?" என்றும் வினவினார்.

"வேடம்" என்றான் ஜடிலன்.

"வேடமா?" என்ற தர்மாதிகாரியின் குரலில் வியப்பு பெரிதும் ஒலித்தது.

"ஆம்."

"என்ன வேடம்?"

"வாணிப வேடம்."

எதையோ புரிந்துகொண்டவர்போல் தர்மாதிகாரி தமது ஆசனத்தைவிட்டு சரேலென எழுந்து ஜடிலனுக்கு வெகு அருகில் வந்து, "என்ன! நந்திவர்மன் வாணிப வேடம் போட்டு வந்திருக்கிறாரா? இங்கா?" என்று திடுக்கிடும் குரலில் கேள்வியைத் தொடுத்தார்.

"ஆம் தர்மாதிகாரி! இங்குதான் வந்திருக்கிறான் நந்திவர்மன்" என்று சற்று அழுத்தியே சொன்னான்.

"இங்கு என்றால் எந்த இடத்தில்?" என்ற மாறன்காரி குரலில் கவலை தெரிந்தது.

"கடைத்தெருவில்."

"கடைத்தெருவிலா?"

"ஆம்."

"கடைத்தெருவில் எதற்கு வந்தார்? வாணிபம் நடத்தவா?"

"சாமான் வாங்குவதும் வாணிபந்தானே?"

இதைக்கேட்ட தர்மாதிகாரி பொறுமையைக் கைவிட்டார். "ஜடிலா!" என்று ஆத்திரத்துடன் அழைத்தார்.

"ஏன்?"

"விளையாட இது நேரமில்லை."

"அப்படி நிச்சயமாகச் சொல்ல முடியாது."

"ஏன்?"



"நந்திவர்மன் வாணிபமே ஒரு விளையாட்டாக இருந்தது" என்று கூறியதன்றி, "வேண்டுமானால் அரச குமாரியை விசாரித்துப் பாருங்கள்" என்றும் அடக்கத்துடன் தெரிவித்தான்.

அந்த அடக்கம் உண்மை அடக்கமில்லையென்பதையும் விஷமத்தனமான அடக்கமென்பதையும் உணர்ந்துகொண்ட தர்மாதிகாரி, "அரசகுமாரிக்கும் நந்திவர்மர் வாணிபத்துக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டார் கோபத்துடன்.

பதிலுக்கு, "பவளமாலை" என்று மட்டும் சொன்னான் ஜடிலன்.

"பவளமாலையா?" என்று ஏதும் புரியாமல் வினவினார் தர்மாதிகாரி.

"ஆம். பவளமாலை வாங்கி அரசகுமாரிக்குத் தந்தான் நந்திவர்மன். அதற்காக ஆயிரம் பொற்காசுகளும் கொடுத்தான்" என்றான் ஜடிலன்.

மாறன்காரியின் முகத்தில் சீற்றம் தெரிந்தது. "நடுக் கடைத்தெருவிலா?" என்றார் சீற்றம் குரலிலும் ஒலிக்க.

"ஆம்."

"சக்கரவர்த்திக்குத் துணிச்சல் அதிகமாயிருக்க வேண்டும்."

"இங்கு தனித்து வந்ததிலிருந்தே துணிச்சலைப் புரிந்து கொள்ளலாம். அரசகுமாரிக்குப் பவளமாலை கொடுத்தது துணிச்சலின் உச்சகட்டம்."

"அரசகுமாரி வாங்கிக்கொண்டாளா மாலையை?"

"இல்லை. மாலையைத் தட்டில் எறிந்துவிட்டுச் சென்றாள். நான்தான் அதை எடுத்து வந்தேன்!"

இதைக்கேட்ட தர்மாதிகாரிக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. குழப்பம் நிறைந்த பார்வையை அவன் மீது வீசினார். "சக்கரவர்த்தி பவள மாலையை நீள்விழிக்கு வாங்கிக் கொடுத்ததை நீ நேரில் பார்த்துக் கொண்டிருந்தாய்?" என்றார் குழப்பத்துடன்.

"ஆம்" என்று ஒப்புக்கொண்டான்.

"அதை நீ ஆட்சேபிக்கவில்லை?" என்று கேட்டார் தர்மாதிகாரி.

"இல்லை."

"ஏன்! அரசகுமாரிக்கு மாற்றான் பரிசு தருவது விரும்பத்தக்கதா?"

"அந்த மாற்றான் வணிகனாயிருக்கும் வரையில் விரும்பத்தக்கதுதான். வணிகர்கள் மன்னர் குடும்பத்தாருக்குக் காணிக்கை தருவது சம்பிரதாய விரோதமல்ல."

தர்மாதிகாரி தீவிர சிந்தனையில் ஈடுபட்டார் சில விநாடிகள். பிறகு கேட்டார், "ஜடிலா! நந்திவர்மன் இங்கு கடைத்தெருவைப் பார்க்க வந்திருக்கிறானென்று நினைக்கிறாயா?" என்று.

"இல்லை" என்றான் ஜடிலன்.

"பின் ஏன் வந்திருக்கிறான்?"

"என்னையும் கோட்டை ஏற்பாடுகளையும் பார்க்க."

"நீ யார் என்பது நந்திவர்மனுக்குத் தெரியுமா!"

"தெரிந்திருக்கும் என நினைக்கிறேன். இல்லையேல் தனியாக வந்திருக்கமாட்டான் நந்திவர்மன்" என்று திட்டமாக அறிவித்தான் ஜடிலன்.



தர்மாதிகாரியின் விழிகளில் வியப்பு விரிந்தது. "என்ன அத்தனை நிச்சயமாகச் சொல்கிறாய்?" என்றும் வினவினார் வியப்பு குரலிலும் தெரிய.

சற்று நிதானித்துவிட்டு ஜடில பராந்தகன் கூறினான், "தர்மாதிகாரி! இன்று தமிழகத்திலுள்ள பெரும் வீரர்களில் நந்திவர்மனுக்கு இணை யாருமில்லை. நான் தனியாக வந்திருப்பது அவனுக்குத் தெரிந்தது. தனக்கும் அந்தத் துணிவுண்டு என்பதைக் காட்ட அவன் வந்திருக்கிறான். தவிர பெண்ணாகடத்தையும் நீள்விழியையும் பார்த்துப் போகவும் வந்திருக்கிறான் இரண்டையும் பார்த்துமிருக்கிறான்" என்று விவரித்த ஜடில பராந்தகன் ஆசனத்திலிருந்து எழுந்து தர்மாதிகாரியின் அறையில் சில விநாடிகள் உலாவினான். பிறகு திடீரெனத் திரும்பி, "தர்மாதிகாரி! இரண்டையும் பார்த்த பின்னர் இரண்டையும் அடையாமல் விடமாட்டான் நந்திவர்மன். அதற்கான முயற்சிகள் உடனடியாக நடக்கும். ஆகவே நாமும் எதிர் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் அறிவித்தான்.

இதை அறிவித்தபோது அவன் தோரணை முழுவதும் அரச தோரணையாயிருந்ததைக் கவனித்தார் தர்மாதிகாரி. அவன் கண்கள் திடீரென ஈட்டிகளைப்போல் பளபளப்பதையும் கண்டார். அவன் உள்ளூர ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டதும் புரிந்தது அவருக்கு. ஆகையால் அவனிடமிருந்தே மேற்கொண்டு பேச்சை எதிர்பார்த்து வாளாவிருந்தார். ஜடிலனே முடிவில் பேசினான்: "தர்மாதிகாரி! இந்த நிலையில் நாம் வாளாவிருப்பது தவறு. ஆகவே முதலில் இங்குள்ள கடைத்தெருக்களை அதிகரிக்க வேண்டும். வாணிபத்தை அதிகரிக்க வேண்டும். விலை உயர்ந்த பொருள்கள் இங்கு கிடைப்பது நாடெங்கும் தெரியவேண்டும். பாண்டி நாட்டு பெருமுத்துக்கள் எங்கு கிடைக்கு

மென்றால் பெண்ணாகடத்தில்தான் கிடைக்கும் என்று மக்கள் பேசவேண்டும்" என்று கூறினான் ஜடிலன்.

தர்மாதிகாரியின் கண்கள் இகழ்ச்சியைக் கக்கின. "பெண்ணாகடத்தைக் காக்க கடைத்தெருக்களை அதிகப் படுத்துவதுதான் வழியா?" என்று வினவினார் மிதமிஞ்சிய இகழ்ச்சியுடன்.

"நந்திவர்மன் இங்கு எப்படி வந்திருக்கிறான்?" என்று கேட்டான் ஜடிலன் ஏதோ புதிதாகக் கேட்பதுபோல்.

"வாணிப வேடத்தில்."

"நிகழ்த்திய தொழில்."

"வாணிபம்."

"அந்த வாணிபத்தைக் கொண்டே நாம் அவனை முறியடிப்போம்."

"எப்படி?" என்று கேட்டார் தர்மாதிகாரி வெறுப்புடன்.

"இங்கு வாணிபம் அதிகமானால் பல்லவர் செல்வம் இங்கு வரும். இங்கு செல்வம் கொழிக்கும். அதனால் நமது பலம் அதிகப்படும்" என்றான் ஜடிலன்.

"வாணிபத்தைக் கொண்டு செல்வம் திரட்டி, செல்வம் கொண்டு படை திரட்டி நந்திவர்மனை வென்றுவிடுவாய்!" என்று பரம இகழ்ச்சியுடன் கேட்டார் தர்மாதிகாரி.

"ஆம்."

"கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்து அது வெயிலில் உருகிக் கண்ணில் விழுந்ததும் கொக்கு கண்ணை மூடிக்கொண்டால் அதை உடனடியாகப் பிடித்துவிடுவாய்."

"சந்தேகமில்லை."



"நந்திவர்மனைக் கொக்கு என்கிறாய்."

"ஆம். பெரிய கொக்கு."

"நீ சொல்வது புரியவில்லை எனக்கு."

"ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு."

தர்மாதிகாரியின் கண்கள் பாண்டியன் கண்களைச் சந்தித்தன, உறவாடின. ஏதோ புரிந்துகொண்டதற்கு அறிகுறியாகத் தலையையும் அசைத்தார் அவர். ஜடிலன் தன் கருத்தை விளக்கினான்: "தர்மாதிகாரி! சோழ நாடு இப்பொழுது நந்திவர்மன் கையிலிருக்கிறது. இஷ்டப்பட்டால் இப்பொழுது அவன் ஒரு படைப்பிரிவை இங்கு அனுப்பி இதைப் பிடித்துவிடலாம். ஆனால் பிடிக்க வில்லை. அப்படி பெண்ணாகடத்தைக் கைப்பற்றினால் சோழ நாட்டில் கலகம் ஏற்படுமென்பது ஒன்று. நீள்விழி வெகுண்டுவிடுவாள், தனக்குக் கிடைக்கமாட்டாளென் பது இரண்டு. இந்த இரண்டையும் விரும்பவில்லை நந்திவர்மன். இந்தப் பெண்ணாகடத்தை வலுக்கவிட்டு, பிறகு இதைத் தாக்கிப் பிடித்தால் சோழர்கள்கூட அவன் நிதானத்தையும் வலுவையும் பாராட்டுவார்கள். அத்த கைய ஒரு சக்கரவர்த்தியின் ஆட்சியில் வாழ்வதையும் பெருமையாக மதிப்பார்கள். ஆகையால்தான் நந்தி வர்மன் இந்தப் பெண்ணாகடத்தை உடனடியாக தாக்க வில்லை. தாமதிக்கிறான். நாமும் அவனுக்குக் 'குறையப் போவதில்லை."

இதைச் சொன்ன ஜடிலன் சற்று நிதானித்தான். தர்மாதிகிராயின் முகத்தில் கவலை படர்ந்து கிடந்தது. இரண்டு வீரர்கள், இரண்டு அரசர்கள் வீரத்திலும் துணி விலும் ஒருவருக்கொருவர் சளைக்காதவர்கள். இவர்கள் மோதல் பெண்ணாகடத்தில் ஏற்படப் போவதை

நினைத்துக் கலங்கினார். போரினால் வரும் சேதத்தையும் கஷ்டத்தையும் அவர் உணராதவரல்ல. ஆகவே பலபடி சிந்தனையிலிறங்கிய தர்மாதிகாரி முடிவில் கேட்டார்: "அப்படியானால் இந்த ஓலையை பாண்டிய நாட்டுக்கு அனுப்ப வேண்டுமா?" என்று வினவினார் ஜடிலன் கொடுத்த ஓலையைக் காட்டி.

"ஆம்" என்றான் ஜடிலன்.

"இதனால் பாண்டி நாட்டு வணிகர்கள் ஏராளமாக இங்கு வருவார்களே" என்றார் தர்மாதிகாரி.

"ஆம்."

"வந்தால் கடைத்தெருக்கள் இரண்டுக்கு நாலாகும்."

"ஆகட்டும்."

"பிறகு போர் வந்தால் படையை எப்படி நடத்துவது. சிறு கோட்டையில் அதிக ஜனக்கூட்டமிருந்தால் போர்த் திறன் பாதிக்கப்படாதா?"

"ஆம். பாதிக்கத்தான்படும்" என்று ஒப்புக்கொண்ட ஜடிலன், "பாதகமில்லை, அனுப்புங்கள் ஓலையை" என்று கூறிவிட்டு வெளியேறினான் அவர் அறையை விட்டு.

அங்கிருந்து நேராக தனது அறைக்கு வந்து நந்திவர்மன் அரசகுமாரிக்குக் கொடுத்த பவளமாலையை எடுத்து மீண்டும் கச்சையில் வைத்துக்கொண்டு தர்மாதிகாரியின் அறைக்கு வந்து அரசகுமாரியை அழைத்துவர உத்தரவிட்டான், ஒரு காவலனுக்கு. அரசகுமாரியும் தர்மாதிகாரியின் அறைக்கு வந்ததும் பவளமாலையை எடுத்து அரசகுமாரியிடம் நீட்டி, "அரசகுமாரி! இதைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று வேண்டிக் கொண்டான்.

"கண்டவர் கொடுத்ததை நான் அணிவதில்லை."



"கண்டவரல்ல அவர், காண வந்தவர்."

"யாரை?"

"உங்களை!"

"அவரை உங்களுக்கு ஏற்கெனவே தெரியுமோ?"

"நந்திவர்மனைத் தெரியாதவர்கள் தமிழகத்தில் வெகு சிலர்."

இதைக்கேட்ட அரசகுமாரி சிலையென நின்றாள் சில விநாடிகள். "அந்த வணிகர்—அந்த வணிகர்—" என்று தட்டுத் தடுமாறி ஏதோ சொன்னாள்.

"நந்திவர்மன், மல்யுத்தத்தில் நிகரற்றவனென பிரசித்தி பெற்ற பல்லவ மல்லன்தான்" என்று விளக்கினான் ஜடிலன்.

நீள்விழியின் கண்களில் மெல்ல மெல்ல புத்தொளி ஒன்று உண்டாயிற்று. "நந்திவர்மன் சோழர்களின் பகைவன். அவனை முறியடிப்பவன் இந்தப் பவள மாலையை எனக்கு அளிக்கட்டும். அதுவரை இது வீர கல்கமாக இருக்கட்டும்" என்று கூறி மாலையை வாங்கி தர்மாதிகாரியிடம் கொடுத்துவிட்டு அந்த அறையிலிருந்து வெளியேறினாள் வேகத்துடன்.

தர்மாதிகாரி ஜடிலனை நோக்கினார். பவளமாலையைக் காட்டி, "இதைப் பெற உத்தேசமா?" என்று வினவினார்.

ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையசைத்த ஜடிலபராந்தக நெடுஞ்சடையன், "இன்னும் பத்து நாட்களில் அதைப் பெற்றுக்கொள்கிறேன்" என்று கூறிவிட்டு அரசகுமாரி சென்ற வழியே வெளியேறிவிட்டான்.

## 19. ஆசான்

**ப**த்து நாட்களில் பவள மாலையைப் பெற்றுக்கொள்வதாகக் கூறிவிட்டு அரசகுமாரி சென்ற வழியே அறையிலிருந்து ஜடிலனும் வெளியேறியதும் தர்மாதிகாரியான மாறன்காரி நீண்ட சிந்தனையில் திளைத்தார். அன்று பெண்ணாகடத்தில் ஏற்பட்டுள்ள நிகழ்ச்சிகள் அவர் மனதைப் பெரிதும் உலுக்கிவிட்டிருந்தன. பல்லவ சக்கரவர்த்தியான நந்திவர்மன் துணைப்படை ஏதுமின்றித் தன்னந்தனியாக பெண்ணாகடத்தின் பெரும் கடைவீதியில் உலாவியதும், அரசகுமாரிக்குப் பவளமாலை வாங்கியளித்ததும் ஏதோ கதைகளில் நடக்கும் சம்பவமாக அவருக்குத் தோன்றியதேயொழிய வாழ்க்கையில் நடக்கக்கூடிய விஷயமாகத் தோன்றவில்லை. ஆனால் அப்படியொரு சம்பவம் நடந்தே இருக்கிறதென்பதை உணர்ந்தாலும், தாம் அதை நினைத்துப் பிரமிக்கும் அந்த நேரத்திலுங்கூட பல்லவ சக்கரவர்த்தி பெண்ணாகடத்திலேயே உரைகிறார் என்ற நினைப்பாலும், அப்படி சக்கரவர்த்தி பெண்ணாகடம் வந்திருப்பதால் தர்மாதிகாரியென்ற முறையில் தனக்கும் சில பொறுப்புகளிருப்பதை எண்ணியதாலும், எதற்கும் குழம்பாத மாறன்காரியின் மனம் பெரிதும் குழம்பியே கிடந்தது. பல்லவ சக்கரவர்த்தியின் ஆணைக்குள் அடங்கிய சோழ நாட்டுக்குள் அவர் வருவதானால் சோழ மன்னனே அவரை எதிர்கொண்டு



உபசரிக்க வேண்டிய அவசியமிருக்க, பெண்ணாகடத்தின் தர்மாதிகாரியான தான் பல்லவமல்லரை மாளிகைக்கு அழைத்து வந்து உபசரிக்க வேண்டியது தனது கடமையென்பதை உணர்ந்திருந்த மாறன்காரி, 'அவர் மாறுவேடத்தில் வந்திருப்பதால் அவரை உபசரிக்க முடியாது. ஆனால் அவரை இங்கிருந்து காப்பாற்றி அனுப்ப வேண்டியது எனது கடமையல்லவா' என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டார். ஆனால், எப்படிக் காப்பது, எப்படி அனுப்புவது என்பது மட்டும் புரியவில்லை மாறன்காரிக்கு. பரம விரோதிகளான இரு அரசர்களைத் தாங்கியுள்ள பெண்ணாகடத்தின் கதியும் அப்படித் திருப்திகரமானதல்லவென்பதை அவர் சந்தேகமறத் தெரிந்துகொண்டிருந்தார். 'பாண்டியனான ஜடிலன் இங்கு வழிப்போக்கனாக வந்து இந்தக் கோட்டையை வலுப்படுத்துகிறான். பல்லவ சக்கரவர்த்தி இங்கு வணிகனாக வந்து கோட்டை சூட்சமங்களைப் பார்க்கிறான். இருவரும் நீள்விழியை அடையப் பார்க்கிறார்கள். ஆகையால் இரு மன்னர்கள் சண்டையும் இங்குதான் நடக்கும். எப்படி நடக்கும், விளைவு எப்படி என்பதை அந்த இரு மன்னர்கள் தான் அறிவார்கள்' என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டார். பிறகு சரேலெனத் தன் கையிலிருந்த ஓலையைப் பிரித்து மீண்டும் படித்தார். ஓலையின் வாசகம் விசித்திரமாயிருந்தது. "பெரிய கடைக் கூல வாணிகருக்கு வணிக நம்பி எழுதிக்கொள்வது: இங்கு வாணிப விஸ்தரிப்புக்கு சமயம் வந்துவிட்டது. நான் முன்பு எழுதியதுபோல் தகுந்த பொருள்களுடன் இங்கு வணிகர்களை அனுப்புவதோடு தாங்களும் வந்து சேரவும். மற்ற உதவிகளுக்கு அரண்மனை சென்று அமைச்சரிடம் கேட்கவும்" இவ்வளவுதானிருந்தது கடிதத்தில். ஜடில பராந்தகன் உண்மையில் நந்திவர்மனுடன் போரிடுவதானால் தனது படையை வரவழைக்காமல் வணிகர்களை ஏன் வரவழைக்கிறான் என்பது

அடியோடு புரியவில்லை அவருக்கு. 'மற்ற உதவிகளுக்கு அமைச்சரைக் கேட்கும்படி எழுதியிருக்கிறதே. வாணிபத் துக்கு அமைச்சரிடமிருந்து என்ன உதவி கிடைக்கும்?' என்றும் மனத்துள் கேள்வியை எழுப்பிக் கொண்டார். விடையேதும் காணாததால் பெருமூச்செறிந்தார். பிறகு ஓலைக்கு தமது முத்திரையை இட்டுக் காவலனொருவனை விளித்து அந்த ஓலையைக் கொடுத்துப் பாண்டி நாடு என்று அதைக் குறித்த விலாசத்தில் சேர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

கரவந்தபுரம் மாறன்காரி இத்தனை கவலையுடனிருந் தாலும், பெருங் குழப்பத்திற்கும் ஆளாகியிருந்தாலும், அதேசமயத்தில் சிறிதும் குழப்பமோ கவலையோ இன்றிச் சிறைச்சாலையை நோக்கி நடந்து கொண்டிருந்தான் பாண்டியனான ஜடில பராந்தகன். சிறைச்சாலைக்குச் சென்றதும் சிறைச்சாலை காவலனை நோக்கி தான் அன்று அங்கு படுத்துக்கொள்ளப் போவதாகவும், ஆகவே தனக்கு ஓர் அறையைக் காலி செய்து வைக்குமாறு கூறினான். "பிரபு! இங்கு எதற்கு நீங்கள் படுக்க வேண்டும்? படுப்பதற் குத்தான் அரண்மனையிருக்கிறதே" என்று ஆட்சேபித் தான் சிறைக் காவலன்.

"இங்கிருக்கிற அமைதி அரண்மனையில் இல்லை. தவிர இந்தச் சிறைக்கருகில் சில விருந்தினர்களும் வருவார்கள் இன்றிரவு" என்று கூறினான் ஜடிலன்.

"விருந்தினர்களா! இங்கா?" என்று வியப்புடன் வினவினான் சிறைக் காவலன்.

"ஆம்."

"இன்று தர்மாதிகாரி யாரையும் தண்டிக்கவில்லையே."

"அவரால் தண்டிக்க முடியாதவர்கள் வருவார்கள்."



"சோழ நாட்டிலிருந்தா? அரசர் அனுப்புகிறாரா சிறைக்கு யாரையாவது?"

"இல்லை. வருகிறவர்கள் சிறை விருந்தாளிகளல்ல" என்று கூறிவிட்டு வேறு ஏதும் விவரிக்காமல் வாவிக் கரைப் பாதையை நோக்கி நடந்தான். அரை நாழிகைக்குள் அப்பாதை மூலம் வாவிக்கரையை அடைந்த ஜடிலன் அங்கிருந்த ஒரு மரத்தில் அரசகுமாரி சாய்ந்துகொண் டிருப்பதைப் பார்த்து அவளை நெருங்கினான்.

அரசகுமாரி அவனைத் திரும்பிப் பார்க்கவுமில்லை. ஏதும் பேசவுமில்லை. அவள் மிகுந்த கோபத்திலிருக்கிறா ளென்பதைப் புரிந்துகொண்ட ஜடிலன் அவளை நன்றாக அணுகி, "நீள்விழி!" என்றழைத்தான் அன்பு சொற்களில் பொங்கி வழிய.

"என்ன?" சீற்றத்துடன் நெருப்புத் துண்டம்போல் உதிர்ந்தது ஒற்றைச் சொல் அரசகுமாரியின் உதடுகளி லிருந்து. சொல்லை உதிர்த்தபின் பவள இதழ்கள் கடுமை யுடன் உட்புறம் மடியவும் செய்தன.

இதழ்கள் மடிந்துப் பக்கப் பகுதிகளில் சற்று நீண்டதால் அவள் அழகிய கன்னங்களில் குழி விழுந்தன. அவை எத்தனை அழகாயிருக்கின்றன என்று எண்ணிய ஜடிலன், "அரசகுமாரிக்குக் கோபம் அதிகம் போலிருக்கிறது?" என்றான் மெல்ல.

"கையாலாதாகவர்களைக் கண்டால் எனக்குக் கோபமல்ல ஏற்படுவது..." என்று அரசகுமாரி கூறியபோது சொற்களின் கடுமை உச்ச நிலைக்குச் சென்றிருந்தது.

"கோபமல்லவா?"

"அல்ல."

"இதற்குப் பெயர் வேறென்னவோ?"

"வெறுப்பு."

"என் மீதா?"

"ஆம்."

"ஏன் நீள்விழி."

"நீங்கள் சுரணை கெட்டவர்கள்."

இதைச் சொன்னபோது அவள் கண்கள் அவனைச் சுட்டெரித்து விடுவதுபோல் பார்த்தன. அவள் கோபத்துக்கு அவனுக்குக் காரணம் தெரிந்திருந்தாலும் தெரியாதவன் போலவே நடித்தான். அவள் தோள்மீது மெல்ல தனது வலது கையை வைத்தான். அதை தனது வலதுகையால் பிடித்து அகற்றினாள் வேகமாக நீள்விழி. அகற்றிய அந்தக் கையைப் பலமாகப் பற்றிய வண்ணம் கேட்டான் ஜடிலன், "அரசகுமாரி! நான் எப்படி சுரணை கெட்டவன்?" என்று.

அரசகுமாரி கையைத் திமிறவோ விடுவித்துக் கொள்ளவோ முயலவில்லையென்றாலும், நெருங்கிய அவன் உடலிலிருந்து தனது உடலை விலக்கிக்கொள்ளவும் முயலவில்லையென்றாலும், அவள் தோரணையில் வெறுப்பு நன்றாகப் பிரதிபலித்தது. அந்த வெறுப்புடன் சொற்களும் உதிர்ந்தன அவள் இதழ்களிலிருந்து. "உங்களுக்கு எதற்காக சோழர்குல வாளைக் கொடுத்தோம்?" என்று வினவினாள் நீள்விழி.

"இந்தக் கோட்டையைக் காக்க" என்றான் ஜடிலன்.

"அதை மட்டுமல்ல."

"உன்னையும் காக்க."

"யாரிடமிருந்து?"

"பல்லவ மன்னனிடமிருந்தும் கொங்கர் கோனிடமிருந்தும்."

"அவர்களிலொருவன் எனக்குப் பவளமாலை வாங்கித் தருகிறான். அதைப் பார்த்துக்கொண்டு நிற்கிறீர்கள். பிறகு அவன் சென்றதும் வந்து அதை ஏற்கும்படி கூறுகிறீர்கள்.



வெட்கமாயில்லை உங்களுக்கு?" என்று சீறினாள் அரசகுமாரி.

"இதில் வெட்கமென்ன இருக்கிறது?" என்று வினவினான் ஜடிலன்.

"ஆம். ஆம். உங்களுக்கு அதற்குப் பொருள் தெரியாது" என்று கூறி அவள் குறுக்குப்பாதை வழியே மாளிகை செல்லப் புறப்பட்டாள்.

அவளை வழிமறித்து அவள் இருகைகளையும் பற்றிக் கொண்டான் ஜடிலன். "இதோ பார் நீள்விழி! நந்திவர்மன் இழிவான எண்ணத்துடனோ, அல்லது அரசன் என்ற முறையிலோ உனக்குப் பவளமாலையைக் கொடுத்திருந்தால் கடைவீதியில் நடந்திருக்கக்கூடிய விளைவுகள் வேறாயிருந்திருக்கும். இன்றுள்ள பெரிய வீரர்களில் நந்திவர்மன் ஒருவன். பரம வைஷ்ணவன். திருமாலிடம் அசையா பக்தி கொண்டவன். அத்தகைய வைணவன் கௌரவக் குறைவாக யாரிடமும் நடந்துகொள்ள மாட்டான். உனக்குக் காணிக்கையாகத் தரப்பட்டிருக்கிறது பவளமாலை. சக்கரவர்த்தி குடிமக்களுக்குப் பரிசு கொடுப்பதும், வணிகர் அரசகுலத்தார்குக் காணிக்கை அளிப்பதும் தவறாகாது. தவிர தனித்து வந்திருக்கும் அந்த மாவீரனை இங்கு மடக்குவதும் பாண்டியர் வீரத்துக்குப் பெருமை தராது. இதையெல்லாம் யோசித்துதான் கடைவீதியில் நான் நந்திவர்மனை எதிர்க்கவுமில்லை, அவனைப் புரிந்துகொண்டதாகக் காட்டிக் கொள்ளவுமில்லை. நாங்கள் இருவரும் எதிர் மோதும் காலம் வரும். அன்று உன் பவளமாலை என் கை வாளிலிருக்கும்" என்று உணர்ச்சியுடன் கூறவும் செய்தான்.

நீள்விழியின் பெருவிழிகள் அவன் ஆவேசத்தைக் கண்டு வியந்தன. "நந்திவர்மனை நீங்கள் பெரிதும் மதிக்கிறீர்கள்" என்றாள் மெல்ல.

"ஆம் நீள்விழி. பல்லவமன்னன் அனைவராலும் மதிக்கத்தக்கவன்" என்று ஜடிலன் கூறினான்.

"அவர் உங்களை மதிக்கிறாரா?" என்று கேட்டாள் நீள்விழி.

"ஆம். மதிக்கிறான்."

"என்ன அத்தனை திட்டமாகச் சொல்கிறீர்கள்?"

"அந்த மதிப்பைக் காட்டத்தான் தன்னந்தனியாகப் பெண்ணாகடம் வந்திருக்கிறான். எனக்குள்ள துணிவு தனக்கும் உண்டு என்று வலியுறுத்தவே வணிக வேடம் பூண்டிருக்கிறான்" என்று கூறிய ஜடிலன் மேலும் சொன்னான்: "நீள்விழி! உலகில் பெருமக்கள் எப்பொழுதோ ஒருமுறை பிறக்கிறார்கள். அவர்களில் நந்திவர்மன் ஒருவன். அவனை எதிர்த்துத்தான் நான் பாண்டிய அரசை விஸ்தரிக்கவேண்டும். அந்த விஸ்தரிப்பு இந்தப் பெண்ணாகடத்தில் துவங்கும். பெரும் போர் ஒன்று இங்கு நிகழும்" என்று.

நீள்விழி அசைவற்று நின்றாள் சில விநாடிகள். பிறகு கேட்டாள், "போருக்கு ஆயத்தம் எதையும் காணோமே" என்று.

"இன்னும் இரண்டு நாட்களில் தெரியும் உனக்கு" என்று கூறிய ஜடிலன், "அரசகுமாரி! செல் அரண்மனைக்கு" என்று கூறி அவளை அனுப்பி வைத்துவிட்டு மீண்டும் சிறைச்சாலைக்கு வந்தான். அவன் கூறியபடி தனி அறையொன்றைச் சிறைக் காவலன் ஒழித்துவிட்டிருந்ததால் அதற்குள் படுத்துக்கொண்டான். படுத்தாலும் உறங்கவில்லை அவன். சாளரத்தின் மூலமாகத் தெரிந்த நக்ஷத்திரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். புஷ்ய நக்ஷத்திரம் உச்சிக்கு வந்ததும் எழுந்து சிறைக் கம்பிகள் மூலம் தூரத்தே தெரிந்த விஜயன் இருப்பிடத்தை நோக்கினான்.



நீண்டநேரம் எந்த ஒரு நிகழ்ச்சியும் இல்லை அங்கு. பிறகு உள்ளிருந்து பந்தமொன்று வெளிவந்து அதைத் தொடர்ந்து வணிக வேடத்தில் நந்திவர்மனும் துறவியும் வெளி வந்தனர். அவர்களைப் பின்பற்றி விஜயனும் வந்தான். மூவரும் சிறைச்சாலையை நோக்கி வந்ததும் அதை அடுத்த நெடுக இருந்த உட்கோட்டை மதில் சுவரைக் கையால் சுட்டிக் காட்டினான் நந்திவர்மன். முக்கியமாக மூன்று விற்கூடங்களைச் சுட்டிக்காட்டினான். பிறகு ஏதோ விடு விடு என்று கூறினான் விஜயனிடம். விஜயன் புரிந்து கொண்டதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தான். பிறகு மூவரும் கோட்டைச் சுவரை நோக்கிச் செல்லவே ஜடிலனும் மெல்ல அறையிலிருந்து வெளிவந்து அவர்களை தூரத்திலிருந்தே தொடர்ந்தான். நந்திவர்மன் கோட்டை பூராவையும் நிதானமாகச் சுற்றிப் பார்த்தான். பிறகு கோட்டையை முற்புறத்தில் சூழ்ந்து நின்ற காவிரியாற்றை நோக்கினான். அங்கும் ஏதோ சில கூறினான். பிறகு திரும்பி கோட்டையின் பிரதான வாசலுக்கு வந்து விஜயனிடம் விடை பெற்று வெளியே சென்றான்.

நந்திவர்மன் காட்டிய ஒவ்வோர் இடத்தையும் திரும்பத் திரும்ப மனத்திலெண்ணிப் பார்த்தான் ஜடிலன். அதைப் பற்றி எண்ண எண்ண பெருமைக் குறியும் மகிழ்ச்சியும் ஜடிலன் முகத்தில் கலந்துலாவின. மீண்டும் சிறைக்கு வந்த ஜடிலன் அறையில் நிம்மதியாகப் படுத்துறங்கினான். பொழுது விடிந்து நீண்டநேரம் மட்டும் அவன் எழுந்திருக்கவில்லை. எழுந்தபின் சிறைக் கோட்டத்துக்கு அருகிலேயே நீராட்டத்தை முடித்துக்கொண்டு அந்த இடத்திலேயே ஆடை கொண்டுவரக் கட்டளையிட்டுப் புத்தாடை புனைந்தான். பிறகு அந்த சிறைச் சாலைச் சுவரில் கரித்துண்டு எடுத்துக் கோடுகளைக் கிழித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் உள்ளே

நுழைந்த தர்மாதிகாரி, "ஜடிலா! நேற்றிரவை இங்கு கழித்ததாகக் கேள்விப்பட்டேன்" என்றார் வெறுப்புடன்.

"ஆம்" என்று கூறி தலையையும் ஆட்டினான் ஜடிலன்.

"ஏன்? அரண்மனை பிடிக்கவில்லையோ?" என்று கேட்டார் தர்மாதிகாரி.

"முதலில் வந்த இடம் இது.." என்று இழுத்து நகைத்தான் ஜடிலன்.

"முடியும் இடமும் இதுவாக இருக்கப்போகிறது?" என்று இகழ்ச்சியைக் காட்டினார் தர்மாதிகாரி.

"அப்படித்தான் தோன்றுகிறது" என்று கூறிய ஜடிலன், "இப்படி வாருங்கள். இதைப் பாருங்கள்" என்று தான் சுவரில் தீட்டியிருந்த கரிக்கோடுகளைக் காட்டினான்.

தர்மாதிகாரி நீண்டநேரம் அக்கோடுகளைக் கவனித்தார். அவை சொன்ன கதையையும் புரிந்துகொண்டார். "இதன் சூட்சுமங்களை எப்படி உணர்ந்தாய் நீ?" என்றும் வினவினார் ஜடிலனை நோக்கி.

"நானாக உணரவில்லை" என்றான் ஜடிலன்.

"வேறு யாராவது காட்டிக் கொடுத்தார்களா?"

"ஆம்."

"யாரோ?"

"எனது பாடங் கற்பிக்கும் திறமையுள்ள ஒரே ஒருவர்."

"உன் ஆசானா?"

"ஆம்."

"யாரவன்?"

தர்மாதிகாரிக்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை ஜடிலன். அவரை ஏறெடுத்து நோக்கினான். பிறகு கூறினான் மரியாதை தொனித்த குரலில், "நந்திவர்மன்" என்று.

# 20. பித்தன்

சிறைச்சாலைச் சுவரில் இழுக்கப்பட்டிருந்த கோடுகளைக் கண்டு உட்கோட்டை சூட்சுமங்களை ஜடிலன் உணர்ந்துகொண்டதை நினைத்து, அவற்றை அவன் எப்படி அறிந்தானென்று கேட்ட தர்மாதிகாரிக்கு, "நந்திவர்மன் தான் எனக்குப் பாடத்தைச் சொல்லிக்கொடுத்தான்" என்ற தோரணையில் ஜடிலன் பதில் கூறியதும் அவர் வியப்பின் உச்சநிலையை அடைந்தார். "நந்திவர்மனா! அவன் எப்பொழுது காட்டிக் கொடுத்தான் இந்தக் கோட்டையின் சூட்சுமங்களை?" என்று வியப்பு குரலில் மிதமின்றி ஒலிக்கக் கேட்கவும் செய்தார் தர்மாதிகாரி.

ஜடிலன் அவர் வியப்பையும் கண்டான். தான் கூறியதில் அவருக்குச் சந்தேகமிருந்தது அந்த வியப்புக்குறியில் ஊடுருவி நின்றதையும் கவனித்தான். ஆகவே சற்றுப் புன்முறுவலுடன் பதில் சொன்னான்: "நேற்றிரவுதான் கூறினான் நந்திவர்மன்" என்று.

"நேற்றிரவா!" என்ற தர்மாதிகாரியின் குரலில் அவநம்பிக்கை மிக அதிகமாக ஒலித்தது.

"ஆம் தர்மாதிகாரி! நேற்றிரவு நந்திவர்மன் விஜயனையும் வைணவத் துறவியையும் அழைத்துக்கொண்டு மதிலோரமாகச் சென்று பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆராய்ந்தான். பிறகு இந்த மூன்று இடங்களை, விற்கூடங்

களை விஜயனுக்குக் காட்டி ஏதோ போதிக்கவும் செய்தான்" என்றான் ஜடிலன்.

"என்ன போதித்தான்?"

"நான் தூரத்திலிருந்ததால் நந்திவர்மன் கையால் கட்டிக் காட்டியதை மட்டுமே பார்க்க முடிந்தது என்னால். சொற்கள் காதில் விழவில்லை."

"விழுந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும்" என்று முணுமுணுத்தார் தர்மாதிகாரி.

"விழாவிட்டாலும் பாதகமில்லை. நந்திவர்மன் என்ன சொல்லியிருப்பானென்பதை என்னால் ஊகிக்க முடியும்" என்று கூறிய ஜடிலன் தனது கண்களை தர்மாதிகாரியை நோக்கிச் சற்று உயர்த்தினான்.

தர்மாதிகிராயின் முகத்தில் கவலை தெரிந்தது. அவன் கண்களை ஒரு விநாடி சந்தித்து வேறுபுறம் திரும்பி கோட்ட மதிலைப் பார்த்தவண்ணம் கேட்டார் அவர். "அந்த மூன்று விற்கூடங்களையும் பலவீனப்படுத்தும்படி உத்தரவிட்டிருப்பானா நந்திவர்மன்" என்று.

ஜடிலன் அந்தக் கேள்விக்கு உடனடியாகப் பதில் சொல்லவில்லை. சிறிதுநேரம் அவனும் உட்கோட்டை மதில்சுவரின் அந்தப் பகுதியைக் கவனித்தான். முடிவில், "இருக்காது! அந்த இடங்களைப் பலப்படுத்தும்படி கூறியிருப்பான்" என்று கூறினான்.

தர்மாதிகாரியின் முகம் ஆச்சரியக் குறியைக் காட்டியது. "பலப்படுத்தும்படிக் கூறியிருப்பானா?" என்று வினவவும் செய்தார் வியப்புடன்.

"ஆம்" என்றான் ஜடிலன்.

"எதிரி கோட்டையைப் பலப்படுத்துவது அவனுக்கு நல்லதா?"

"ஆம்."



"எப்படியோ?"

"இந்தக் கோட்டையின் பிரதான காவலன் விஜயன்."

"நீ?"

"நான் இப்பொழுதுதானே பதவி வகிக்கிறேன். இதற்கு முன்பு சோழர்கள் உபதளபதியும் இக்கோட்டையின் பாது காப்பாளனும் அவன்தானே? ஆகவே இக்கோட்டைப் பாதுகாப்பு சம்பந்தமான எந்த மந்திராலோசனையிலும் அவனுமிருப்பான். விற்கூடங்களை வலுப்படுத்த அவன் யோசனை சொன்னால் யாரும் மறுக்க மாட்டார்கள். கோட்டையின் கேந்திர ஸ்தானங்களைப் பலப்படுத்த கோட்டைக் காவலன் யோசனை கூறினால் அதை யார் எதிர்க்க முடியும்?" என்று ஏதோ புதிர் போடுவது போல் கேட்டான் ஜடிலன்.

இதைக்கேட்ட தர்மாதிகாரி பதிலேதும் சொல்ல வில்லை. எந்த திக்கில் ஜடிலன் யோசனை ஓடுகிறதென் பதை அவர் புரிந்துகொண்டாலும் அதை வெளிக்குக் காட்டவுமில்லை. அவனே கூறட்டும் முழுவதையும் என்று ஒரு 'உம்' மட்டும் கொட்டினார்.

ஜடிலனே தொடர்ந்து சொன்னான்: "விற்கூடங்களைப் பலப்படுத்தி, அதுவும் முக்கியமாக கோட்டை மதிலின் பிரதான வாயிலின் பக்கத்திலிருக்கும் மூன்று விற்கூடங் களையும் பலப்படுத்தி போருக்கு விஜயன் ஆயத்தம் செய்வதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆகவே போர் விஷயமாக நமது கவனம் பூராவும் அந்த கேந்திர ஸ்தானங் களில் இருக்கும். சண்டை மட்டும் வேறு திசையிலிருந்து வரும். கண்மூடிக் கண் திறப்பதற்குள் இக்கோட்டை நந்திவர்மன் வசமாகிவிடும்." இதைச் சொன்ன ஜடிலன் சிறிது நேரம் பேச்சை நிறுத்தி தர்மாதிகாரியைக் கவனித் தான்.

தர்மாதிகாரி அந்தக் கரிக்கோடுகளை மீண்டும் ஊன்றிக் கவனித்தார். "இந்த மூன்று இடங்களும் வெளிக்

கோட்டையின் பிரதான வாயிலிலிருந்து வரும் பாதையி லிருப்பதால் இவற்றை நான் பலப்படுத்துவேன். வெளிக் கோட்டை விழுந்தாலும் உட்கோட்டையைப் பலநாள் பாதுகாக்க இவை மட்டுமல்ல இன்னும் சில சூட்சுமங் களும் இருக்கின்றன. ஆனால் இந்த கேந்திர ஸ்தானங் களையே நந்திவர்மன் தனது தந்திரத்தால் உபயோக மில்லாமல் அடித்துவிட்டானே" என்று தனக்குள் சொல் லிக்கொண்ட தர்மாதிகாரி திடீரென ஜடிலனை நோக்கித் திரும்பி, "நாம் விஜயனை சிறையில் தள்ளினாலென்ன?" என்று வினவினார் கோபத்துடன்.

"விஜயனை சிறையில் தள்ளினால் நந்திவர்மன் எச்ச ரிக்கை அடைந்து விடுவான். அப்புறம் அவன் எங்கு தாக்கு வான் எப்படித் தாக்குவானென்று கூற முடியாது" என்று சுட்டிக்காட்டினான்.

அதுவும் சரிதானென்று தர்மாதிகாரிக்குப் பட்டதால் சரியென்று அவர் தலையசைத்தார். ஆனால் கேட்டார், "இப்பொழுது நந்திவர்மன் தாக்குதல் எந்தப் பகுதியில் வருமென்பது உனக்குத் தெரியுமா?" என்று.

"ஓரளவு ஊகிக்க முடியும்."

"எந்தப் பக்கத்தில்?"

"அதை மட்டும் கேட்காதீர்கள்."

"ஏன்?"

"அது என் ரகசியமாயிருக்கட்டும்." என்ற ஜடிலன் மெல்ல நகைத்தான். அந்த நகைப்பிலிருந்த உறுதியைக் கண்ட தர்மாதிகாரி அவனிடமிருந்து மேற்கொண்டு விளக்கம் ஏதும் கிடைக்காதென்பதை உணர்ந்து கொண் டதால் அவர் மேற்கொண்டு பேச்சை மாற்றி, "அதிருக் கட்டும்; நீ என்ன பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் போகிறாய்?" என்று வினவினார்.



அதற்கும் ஜடிலன் நேரடியாகப் பதில் சொல்லவில்லை. "இன்றிலிருந்தே அந்த வேலைதான்" என்றான். "இன்றே நாம் அது விஷயமாக மந்திராலோசனையில் இறங்கு வோம்" என்று கூறிவிட்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு தர்மாதிகாரியைக் கேட்டுக்கொண்டான். அவன் இஷ்டப்படி அன்று மாலையே தர்மாதிகாரி பெண்ணாகடக் கோட்டையின் மாளிகையிலுள்ள மந்திராலோசனை அறையில் உபதலைவர்களைக் கூட்டினார். உபதலைவர்கள் பின்தொடர விஜயன் பூர்ண ராணுவ உடையணிந்து கதிரவன் மறையும் தருவாயில் மந்திராலோசனை மண்டபத்துள் நுழைந்தான். தர்மாதி காரி அவனுக்கு முன்பே அங்கு தயாராகக் காத்திருந்தார். ஜடிலன் வர மட்டும் சற்றுநேரம் பிடித்தது. வந்தபோதும் அவன் மந்திராலோசனைக்குரிய ராணுவ உடையணி யாமல் சாதாரண உடையணிந்து வந்தான். அவசர அவசரமாக உள்ளே நுழைந்த அவன் தர்மாதிகாரிக்கும் அடுத்திருந்த ஆசனத்தில் அமர்ந்து, "மன்னிக்க வேண்டும். கடைப்பக்கம் போயிருந்ததால் சிறிது நேரமாகிவிட்டது" என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டான்.

தர்மாதிகாரிக்கு உள்ளே கோபம் மிதமிஞ்சி எழுந்திருந் தாலும் அதை அவர் வெளிக்குக் காட்டவில்லை. கடைவீதியில் சதா அவனுக்கு என்ன வேலையிருக்கும் என்று எண்ணி எரிச்சல் கொண்டார். கடைவீதிகளை இரண்டுக்கு நாலாக்க வேண்டுமென்று, வணிக வேடம் பூண்டு வந்த நந்திவர்மனை வணிகத்தால்தான் வெற்றி கொள்ள வேண்டுமென்றும், அவன் ஏற்கனவே சொன்ன குருட்டு யோசனை அந்தச் சமயத்தில் அவர் மனத்தில் எழவே அவர் எரிச்சல் ஆயிரம் மடங்காகி அவர் உள்ளத் தைக் காய்ச்சு காய்ச்சென்று காய்ச்சிக்கொண்டிருந்தது. இருப்பினும் அவர் அதைச் சிறிதும் வெளிக்குக்காட்டா மல் மந்திராலோசனையைத் துவக்கும் பாவனையில், "படைத்தலைவர்களே! பெண்ணாகடத்தின் மீது பல்லவர்

தாக்குதல் ஏற்படுமென நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. பல்லவர் தாக்குதலைத் தாங்கக்கூடிய அத்தனை பெரிய கோட்டையல்ல பெண்ணாகடம். எனினும் அது சமீப காலத்தில் பெரிதும் பலப்படுத்தப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். இன்னும் அதற்கு என்ன பலம் தேவை? எதிரி தாக்குதல் ஏற்படும்போது இதை எப்படிப் பாதுகாப்பது என்பதை யோசிக்கவே உங்களை வரவழைத்தேன்" என்று கூறி தமது ஆசனத்தில் நன்றாகச் சாய்ந்து கொண்டார்.

அவர் முகத்தில் கவலைச் சாயை பூர்ணமாகப் படிந்திடப்பதை படைத்தலைவர்கள் கண்டார்கள். விஜயனும் அதைக் கண்டான். அவன் உள்ளத்தில் ஏதோ பல கேள்விகள் எழுந்து கொண்டிருந்தன. நந்திவர்மன் வந்து சென்ற மறுநாளே இந்த மந்திராலோசனை ஏற்படுவது வியப்பாயிருந்தது அவனுக்கு. தவிர தனக்குத் தெரியாமல் உட்கோட்டைக்குள் எந்த தூதன் வரமுடியும் என்றும் எண்ணிப் பார்த்தான். கடைசியில் இது அத்தனையும் ஜடிலன் வேலையாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்ததால் பேச்சு, செய்கை, அனைத்திலும் ஓர் எச்சரிக்கையைக் கையாண்டான் விஜயன். ஆகவே தன் மீது எந்தச் சந்தேகமும் ஏற்படாதிருக்க கோட்டைப் பாதுகாப்பில் அதிக அக்கறை காட்டினான். "பல்லவர் தாக்குதல் ஏற்படுவது நிச்சயமானால் நாம் வெளிக் கோட்டை உட்கோட்டை இரண்டையுமே பாதுகாக்க வேண்டும். வெளிக்கோட்டையின் மதில் சுவரில் சுமார் பன்னிரண்டு விற்கூடங்கள் இருக்கின்றன. அவற்றில் இன்று முதற்கொண்டு வீரர்களை நிரப்பி விற்பொறிகளை இயக்கவும் அவற்றில் பேரம்புகளை இணைக்க அம்புகளைக் குவித்து வைக்கவும் ஏற்பாடு செய்யலாம். தவிர வேலெறியும் வீரர்களையும் மதில் சுவரின் மேற்பகுதியில் நெடுக உலாவ விடலாம். அந்தக் கோட்டை ஒருவேளை விழுந்தால் உட்கோட்டை நமது இரண்டாந் தளமாகும்.



இது ஏற்கெனவே வலுவுள்ளது. நாம் புதிதாக எழுப்பியிருக்கும் சுவர் உயரமும் நல்ல பாதுகாப்பு. தவிர விற்கூடங்களையும் பலப்படுத்த வேண்டும்" என்று உணர்ச்சியுடன் சொல்லிக்கொண்டு போன விஜயனை, "எந்த விற்கூடங்களைக் கூறுகிறீர்கள்?" என்று இடைமறித்து வினவினான் ஜடிலன்.

"கோட்டை வாயிலுக்கு அருகிலுள்ள விற்கூடங்கள்" என்று கூறினான் விஜயன்.

இதை அவன் சொன்னதும் தர்மாதிகாரியின் கண்களும் ஜடிலன் கண்களும் ஒரு விநாடி சந்தித்து அகன்றன. அடுத்து ஜடிலன் மற்றொரு கேள்வியை எழுப்பினான். "கோட்டை வாயிலுக்கருகில் மூன்று விற்கூடங்கள்தானே இருக்கின்றன?" என்று கேட்டான்.

"ஆம் மூன்றுதான். இருப்பினும் அவை பல விற்கூடங்களுக்கு இணையானவை" என்று கூறினான் விஜயன்.

"உண்மைதான்" என்றான் மற்ற உபதலைவர்களில் ஒருவன்.

"அவற்றிலென்ன அவ்வளவு விசேஷம்?" என்று கேட்டான் ஜடிலன்.

"சாதாரணமாக ஒரு விற்கூடத்தில் எத்தனை பொறிகளிருக்கும்?" என்று பதில் கேள்வி எழுந்தது விஜயனிடமிருந்து.

"ஒன்று அல்லது இரண்டு" என்றான் ஜடிலன்.

"இந்த விற்கூடங்கள் ஒவ்வொன்றிலும் நான்கு பொறிகள் இருக்கின்றன. ஏககாலத்தில் அவை இருபது பேரம்புகளை வீசக் கூடியவை— அந்த அம்புகள் ஒவ்வொன்றின் நீளம் எட்டு கைப்பிடிப் பிரமாணம்" என்று விளக்கினான் விஜயன்.

ஜடிலன் முகத்தில் போலி வியப்பொன்று படர்ந்தது. "அப்படியா!" என்று வினவினான் வேண்டுமென்றே வியப்பைக் குரலில் காட்டி.

"ஆம்" என்று பெருமையுடன் சொன்ன விஜயன், "பாண்டி நாட்டு மதில்களைவிட சோழநாட்டு அரண்களின் மதில்கள் அதிக அகலமுள்ளவை. வீரர்கள் தாராளமாக நடமாடலாம், போரிடவும் செய்யலாம்" என்று குத்தியும் காட்டினான்.

அதனால் ஜடிலன் ஆத்திரமடைவானென்று எதிர் பார்த்திருந்ததால் ஏமாந்தே போனான் விஜயன். ஜடிலன் அந்த சொல் தாக்குதலை சர்வ சாதாரணமாக ஏற்றுக் கொண்டான். "உண்மைதான். சோழநாட்டிலிருந்தும் நாம் கற்றுக்கொள்ள வேண்டியது நிரம்ப இருக்கிறது" என்ற ஜடிலன், "கோட்டைத் தளபதி கோட்டையை வலுப் படுத்துவதை நீங்கள்தான் கவனித்துக்கொள்ள வேண்டும். அதில் உங்களுக்குத்தான் அனுபவம் அதிகம், தவிர இந்தக் கோட்டையில் நீண்ட நாளாக நீங்கள் இருக்கிறீர்கள். இதன் சூட்சமம் உங்களுக்குத்தான் தெரியும்" என்று விஜயனைப் பாராட்டினான்.

"கோட்டைத் தலைவருக்குத் தெரியாத சூட்சமம் இந்தக் கோட்டையில் ஏதுமில்லை" என்று ஓர் உப தலைவன் எடுத்துக்காட்டினான்.

"மிக நல்லது" என்ற ஜடிலன் தர்மாதிகாரியை நோக்கி, "இந்தக் கோட்டையைப் பலப்படுத்துதல், விற்பொறிகளை சீர்பட வைத்தல், அவற்றில் வீரர்களை நிரப்புதல் இந்தப் பணிகளை விஜயன் கவனித்துக் கொள்ளட்டும்" என்று கூறிவிட்டு விஜயனை நோக்கி, "எதற்கும் உட்கோட்டை வாயிலை அடுத்த மூன்று விற்கூடங்களையும் நீங்கள் உடனடியாக வலுப்படுத்த வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.



விஜயன் உள்ளத்தில் விவரிக்க இயலாத பயம் ஒன்று எழுந்தது. தனக்கு நந்திவர்மன் இட்ட அதே உத்தரவை ஜடிலனும் இடுவது அவனுக்கு ஆச்சரியமாகவும் இருந்தது. கடைசியில் தனது பயமும் ஆச்சரியமும் அர்த்தமற்றவை என்பதை எண்ணிக்கொண்டு, "தங்கள் உத்தரவு. நாளை முதல் அவற்றைப் பலப்படுத்துகிறேன். கோட்டையைச் சுற்றிலும் வீரர்களையும் நிறுத்துகிறேன். மதில்களிலும் வீரர் கூட்டங்கள் நாளை முதல் பவனி வரச் செய்கிறேன். இந்தக் கோட்டையை இன்னும் இரண்டே நாட்களில் பூர்ண கவசம் பூண்டுவிட ஏற்பாடு செய்கிறேன்" என்றான்.

"அப்படியே செய்யுங்கள்" என்று ஜடிலன் மற்ற உப தலைவர்களை நோக்கி, "கோட்டைத்தலைவர் உத்தரவை எச்சரிக்கையுடன் நிறைவேற்றுங்கள், ஏதாவது சந்தேகம் வந்தால் என்னைக் கேளுங்கள்" என்று சொன்னான்.

தர்மாதிகாரி மாறன்காரி ஏதுமே பேசவில்லை. அத்துடன் மந்திராலோசனை முடிந்துவிட்டதற்கறிகுறியாகத் தமது கையை ஆட்டினார். விஜயனும் மற்ற உபதலைவர்களும் செல்ல எழுந்தார்கள். ஜடிலன் அவர்களை நோக்கி, "உபதலைவர்களே! பல்லவர் படையெடுப்பு ஏற்படப் போவதைப் பகிரங்கப்படுத்த வேண்டாம், அது ரகசியமாக இருக்கட்டும். இல்லையேல் மக்களிடையே அனாவசியமான பீதி பரவும்" என்று கூறினான்.

இதைக்கேட்ட விஜயன் முகத்தில் சிறிது சாந்தி தெரிந்தது. மற்ற உபதலைவர்கள் முகத்தில் வியப்பு மண்டியது. போர்க்காலங்களில் மக்களுக்குப் போரைப் பற்றி அறிவுறுத்தி எச்சரிக்கையும் கட்டுப்பாடும் செய்வது சம்பிரதாயம். அதற்கு மாறாக ஜடிலன் இட்ட உத்தரவு உபதலைவர்களுக்கு வியப்பைத் தந்ததால் அவர்களில் ஒருவன் சொல்லவே செய்தான், "இது சம்பிரதாய விரோதம்" என்று.

ஜடிலன் பதிலுக்கு, "சம்பிரதாயத்தை மாற்றுவோம்" என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தான். அவர்கள்

அனைவரும் சென்றதும் மாறன்காரி தனது கோபக் கண்களைத் திருப்பினார் ஜடிலன் மீது, "விஜயனிடம் கோட்டைப் பாதுகாப்பை அளித்துவிட்டாய்" என்றார் சினத்துடன்.

"ஆம்."

"அவனுக்கு வேண்டிய அதிகாரங்களையும் அளித்து விட்டாய்."

"ஆம்."

"நீ என்ன செய்ய உத்தேசம்?"

"கடைத்தெருவை இரண்டுக்கு நாலாக்கப் போகிறேன்."

"உன் நாட்டிலிருந்து வரப்போகும் வணிகருக்கு இடமளிக்க."

"ஆம்."

"இதுதான் சரியான சமயமா அதற்கு?"

"ஆம்."

"உன் போக்கு எனக்குப் புரியவில்லை. கோட்டை மதில்களை, கேந்திர ஸ்தானங்களை, விற்கூடங்களை நந்திவர்மன் ஒற்றனிடம் ஒப்படைத்துவிட்டாய். ஏன்?" என்று சீறினார் மாறன்காரி.

ஜடிலன் ஆசனத்திலிருந்து எழுந்திருந்து தர்மாதிகாரி மீது தனது வேலினும் கூரிய கண்களை நிலைக்கவிட்டான். "நந்திவர்மன் தாக்குதல் அந்த இடங்கள் எதிலும் ஏற்படாது" என்று கூறிவிட்டு நடந்தான் வெளியே.

அவன் பதில் தர்மாதிகாரியைத் தூக்கிவாரிப்போட்டது. மறுநாளிலிருந்து ஜடிலன் போக்கும் செய்கையும் பர விபரீதமாக மாறின. "அரசகுமாரியின் கதியும் பெண்ணா கூடத்தின் கதியும் என்ன ஆகுமோ, இந்தப் பித்தன் கையில் இரண்டையும் ஒப்படைத்துவிட்டோமே" என்று தன்னுள் நினைத்து நினைத்துக் கதி கலங்கினார் மாறன்காரி.

# 21. சாம்ராஜ்யாதிபதி

மறுநாள் முதல் விடியற்காலையிலிருந்து இரவு முற்றி பத்து நாழிகைக்கும் மேலாக ஜடில பராந்தக நெடுஞ் சடையன் மிகத்துரிதமாகவும் இடைவிடாமலும் அலுவல் புரிந்தானென்றாலும், அந்த அலுவல் அனைத்தும் படையெடுக்கும் எதிரிக்கு மிகச் சாதகமாக அமைந்ததைக் கண்டு தர்மாதிகாரியான மாறன்காரி பெரிதும் மன முடைந்தார். மறுநாள் விடிந்ததும் பறையறிவிப்போ னொருவனை மட்டும் துணைக்கு அழைத்துக்கொண்டு கோட்டை மதிலை ஒட்டியிருந்த கடைத்தெருவை அடுத்திருந்த இரு தெருக்களை மக்கள் ஒழித்துத் தர வேண்டுமென்றும், அவர்கள் வீடுகளுக்குப் பதில் வேறு வீடுகளில் அவர்கள் இடந்தரப்படுமென்றும் பறையறிவித் தான். பறைக்கொட்டைக் கேட்டவுடனேயே வீடுகளி லிருந்து வெளிவந்த பெரும்பான்மையான பெண்களும் சில ஆடவர்களும் பறையறிவிப்போன் விடுத்த ஆணை யைக் கேட்டதும் திகப்பிரமை கொண்டு ஜடிலனைச் சுற்றிக் கொண்டனர். ஆணையைச் சொல்லி பறையறிவிப்பவன் முடித்ததும் ஜடிலனைச் சுற்றியிருந்த கூட்டத்தில் ஆத் திரக் கூச்சல்கள் கிளம்பின. "அநியாயம்! வீட்டைவிட்டு எங்கு போவது? எதற்காக வேறு வீட்டில் நாம் தங்க வேண்டும்?" என்ற கூக்குரல் கிளம்பின. "நீ வந்தது முதல் இப்படித் தான் ஏதாவது நடக்கிறது" என்று வயோதிக

ணொருவன் கூவினான்: 'ஆம் ஆம்' என்று பெண்களும் கூவினார்கள். ஜடிலன் அவர்களைப் பேசாமலிருக்கும் படி கையமர்த்திக் கேட்டான், "வீணாக அவசரப்படுகிறீர்களே? காரணத்தைக் கேட்டீர்களா?" என்று.

"காரணம் எதுவாயிருந்தாலென்ன? எங்களை வீட்டை விட்டுக் கிளப்ப நீ யார்?" என்றாள் பெண்களில் ஒருத்தி.

மறுபடியும் பெண்கள் கூச்சல் அதிகமாயிற்று. கூட்டமும் வலுப்பெற்றது. "பெண்ணாகடப் பெண்களே! சற்று அமைதியாய் யோசனை செய்யுங்கள். இதுவரை எந்தக் கோட்டைத் தளபதியாவது பறையறிவிப்புடன் வந்திருக்கிறானா?" என்று வினவினான் உரத்த குரலில்.

இதைக் கேட்ட பெண்கள் சிறிது யோசித்தார்கள். சற்று சத்தமும் அடங்கியது. ஒருத்தி கேட்டாள் கும்பலிலிருந்து, "ஆம் வந்ததில்லை. உன்னை யார் வரச்சொன்னது?" என்று.

"பெண்ணாகடத்தின் கோட்டை மட்டுமல்ல விருத்தியாக வேண்டியது, ஊரின் செல்வச் சிறப்பும் வாணிபமும் விருத்தியாக வேண்டும்" என்று துவங்கினான் ஜடிலன்.

"அதற்கு நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டாள் யாரோ ஒருத்தி கூட்டத்திலிருந்து.

ஜடிலன் கண்கள் அவர்களைக் கூர்ந்து நோக்கின. "இந்தத் தெருவையும் அடுத்த தெருவையும் கடைத்தெருவாக்கப் போகிறேன்" என்று இரைந்து கூறினான்.

"இருக்கும் கடைத்தெருக்கள் போதாதா?" என்று கேட்டான் கூட்டத்தில் ஒருவன்.

"போதாது. பெண்ணாகடத்தை இரண்டாந்தரப் பட்டணமாக வைத்திருக்கவும் முடியாது. இது சோழ



நாட்டின் தென்கோடியிலும் பாண்டிய நாட்டின் வட எல்லையிலும் இருக்கிறது. இரண்டு நாட்டு வாணிபமும் இங்கு நடந்தால் இதன் செல்வச் சிறப்பு இப்பொழுதிருப்பதை விட நூறு மடங்கு அதிகமாகும். இந்தப் பெண்மணிகளின் கழுத்தில் ஆபரணங்கள் இன்னும் அதிகமாக ஜொலிக்கும். இன்னும் நான்கு நாட்களில் பாண்டி நாட்டு முத்து இந்தக் கடைத் தெருவில் குவியல் குவியலாகக் கொட்டிக் கிடக்கும். முத்துக்கள் இந்தப் பெண்களின் கழுத்துக்களிலும் கொண்டைகளிலும் காதுகளிலும் கைவளைகளிலும் கணக்கிடாமல் கிடக்கும். பெண்ணாகடத்தை மிகச் சிறந்த நகரமாக்க, பலமுள்ள நகரமாக்க, பணம் பெருகிய நகரமாக்க தர்மாதிகாரி தீர்மானித்து விட்டார். உட்கோட்டை பலப்படுத்தப்பட்டிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இனி வெளிக்கோட்டையும் பலப்படுத்தப்படும். இடையே வாணிபத்திற்கும் இது தமிழகத்தின் தனிப்பெரும் சந்தையாகும். அந்த நிலையில் உங்கள் செல்வ வளம் எப்படியிருக்கும்?" என்று மெல்ல மெல்ல உரக்கவும் மாறி மாறிப் பேசிய ஜடிலன், "எந்தப் புனரமைப்பிலும் முதலில் சில இடைஞ்சல்கள், சிக்கல்கள், அசௌகரியங்கள் மக்களுக்கு இருக்கத்தான் செய்யும். பின்பு பத்து மடங்கு அதிக வளமான வாழ்வு கிடைக்கும். என் தாய்மார்கள் தர்மாதிகாரியுடன் இந்த விஷயத்தில் ஒத்துழைக்க வேண்டும்" என்று இரு கரங்களையும் கூப்பி கேட்டுக் கொள்ளவும் செய்தான்.

கூட்டத்தில் சிறிதுநேரம் மௌனம் நிலவியது. ஜடிலன் பேச்சும் விளக்கமும், வேகமும், பெண்களுக்கும் சரி அங்கிருந்த சில ஆடவர்களுக்கும் சரி சற்று உற்சாகத்தையே அளித்தன. "நாங்கள் எந்த இடத்தில் வசிப்பது?" என்று ஒரு குரல் எழுந்தது.

"இந்த இரு தெருக்களில் உள்ளவருக்கு கோட்டையிலுள்ள வீரர்கள் விடுதிகளில் இடந்தர முடியும்" என்று கூறினான் ஜடிலன்.

"உட்கோட்டையிலா! அரசகுமாரி அங்கிருக்கிறார்களே!" என்றாள் ஒரு பெண்.

"அரசகுமாரி உட்கோட்டையை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறார்கள். மனுநீதி கண்ட சோழ பரம்பரையில் வந்தவர்கள் அரசகுமாரி. தனக்கொன்று மக்களுக்கு ஒன்று என்பது அவர்களிடம் கிடையாது" என்று ஜடிலன் கூற பெண்களிடம் மகிழ்ச்சி சலசலப்பு ஏற்பட்டது. இப்படியே அடுத்த தெருவிலும் பேசி மக்களைச் சரிப்படுத்திய பாண்டிய மன்னன் அன்று பிற்பகல் விஜயன் இருப்பிடம் சென்று அவனுடன் கலந்து பேசினான். "வீரர்கள் இருப்பிடங்களைக் கோட்டைக்குள் ஒழித்துவிட வேண்டும்" என்று கேட்டான்.

வீரனான விஜயன் சீறினான் முதலில். "எதற்கு இந்த ஏற்பாடு?" என்று கேட்கவும் செய்தான்.

"கடைத்தெருக்களுக்கு அடுத்துள்ள இரண்டு வீதிகளில் உள்ளவர்களுக்கு இங்கு இடம் வேண்டும்" என்றான் ஜடிலன்.

"ஏன்?" விஜயன் முகத்தில் குழப்பமும் தெரிந்தது; சீற்றமும் தெரிந்தது.

"அந்த இரண்டு தெருக்களிலும் மேல் குடும்பப் பெண்களே பெரும்பாலுமிருக்கிறார்கள். நாளை போரென்று வந்தால் அவர்கள் வெளியிலிருப்பதைவிட உட்கோட்டைக்குள் இருப்பது அவர்களுக்குப் பாதுகாப்பு."

"உம்."



"இரண்டாவதாக அந்த இரண்டு தெருக்களும் கடை வீதிகளாகப் போகின்றன."

இதைக் கேட்டதும் விஜயன் பிரமித்தான். உள்ளூர அவன் கோபம் மறைந்து மகிழ்ச்சி துளிர்த்துக் கொண்டிருந்தது. ஜடிலன் தனது வேலையை எத்தனை சுலபமாக்குகிறான் என்பதை நினைக்க நினைக்க அவன் உள்ளப் பூரிப்பு அதிகமாயிற்று. "உட்கோட்டையில் பெண்களை நிரப்பிவிட்டு, வெளி வீதிகளையும் கடை வீதிகளாக்கி விட்டால் கோட்டை வீரர்களில் முக்கால் வாசிப் பேரை வெளிக்கோட்டைச் சுவரையடுத்தும் மற்ற தெருக்களிலும் நிரப்பலாம். அப்படி நிரப்பினால் வெளிக்கோட்டையில் எந்தத் தடங்கலுமின்றி நந்திவர்மர் நுழைய முடியும். உட்கோட்டையின் விற்கூடங்கள் வேற்கூடங்களில் மட்டும் சில வீரர்களை நிறுத்தி மேலுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தலாம். இதைவிடக் கோட்டையைப் பலவீனமாக வைப்பது கஷ்டம்" என்று உள்ளூர சொல்லிக்கொண்டான். இருப்பினும் மேலுக்கு ஆட்சேபிக்கத் தொடங்கி, "நான் வீரர்களை எங்கு அனுப்புவது?" என்று வினவினான்.

"வீரர்கள் உட்கோட்டை மதிலை அடுத்து பாசறைகளை அமைத்துக்கொள்ளலாம். மற்றும் சிலர் வெளிக் கோட்டை மதிலை அடுத்துத் தங்கலாம். வெளிக் கோட்டை மதில்களுக்கும் வெளியே உள்ள தோப்பில் கூடத் தங்கலாம். இது தற்காலிக ஏற்பாடுதான். சீக்கிரம் அவர்களுக்கு விடுதிகள் கட்டிவிடலாம்" என்று பதில் சொன்னான் ஜடிலன்.

தன் எண்ணம் எப்படியோ அப்படியே ஜடிலனும் கூறுவதைக் கேட்ட விஜயன், 'விட்டில்கள் விளக்கில் தாமாகத் தானே விழுகின்றன' என்று சொல்லிக்

கொண்டான் மனதிற்குள். இருப்பினும் மேலுக்கு "கோட்டைத் தளபதி உத்தரவு" என்று கூறினான்.

விஜயனை விட்டதும் உட்கோட்டைக்குள்ளிருந்த அரண்மனையை அடுத்த சிறு தோப்பையும், வாவியையும், கோட்டை மதிலைத் தழுவி ஓடிக்கொண்டிருந்த காவிரியையும் பார்த்துவிட்டு மீண்டும் வீதிகளை ஒழித்துவிடும் மும்முரப் பணியில் இறங்கினான் ஜடிலன். அன்று மாலைக்குள் வீரர்களின் விடுதிகள் ஒழிக்கப்பட்டன. மெல்ல கடைவீதிகளை அடுத்திருந்த தெருக்களிலிருந்த பெண்கள் உட்கோட்டைக்கு வந்து அந்த விடுகளுக்குள் நுழையலாயினர். சாதாரண காலமாயிருந்தால் நாலைந்து நாட்களில் முடியக்கூடிய அந்த வேலையை ஒன்றரை நாட்களுக்குள் முடித்தான் ஜடிலன். அன்றிரவு தனது புரவிமீது ஏறிக்கொண்ட பாண்டிய மன்னன் பெண்ணாகடத் தெருக்களையும், கோட்டைக்கு வெளியிலும் நீண்டநேரம் சுற்றினான். படை வீரர்களுக்கு ஆங்காங்கு பார்த்து விசாரித்தும், கோட்டைக்கு வெளியே தங்க வந்த வீரர்களுக்கு மரத்தடிகளில் தங்கவேண்டிய வழிமுறைகளைச் சொல்லிக் கொடுத்தும் பொழுதைப் போக்கினான். பிறகு கோட்டைக்குள் வந்து பொதி வண்டிகளிருக்கும் இடம் வந்து அங்கு நின்றிருந்த சொக்கநாதனை அழைத்தான் புரவியிலிருந்தபடி. கிட்டே வந்த சொக்கநாதனைக் கேட்டான். "அன்று கொடுத்தேனே ஓர் ஓலை, அதை மதுரையில் கொடுத்தாயா?" என்று.

"கொடுத்தேன்" என்றான் சொக்கநாதன்.

"பிறகு இன்றுதான் வருகிறாயா?"

"ஆம்."

"மூன்று நாட்களில் வருவதாகச் சொன்னாயே?"



"சொன்னேன். ஆனால் பெரியவர் அங்கேயே நிறுத்தி விட்டார்."

"யார் பெரியகடைக் கூலவாணிகரா?"

"ஆம்."

"அப்படியானால் சரி" என்று திருப்தியுடன் கூறிய ஜடிலன் சொக்கநாதனைத் தன்னுடன் வரும்படி கூறி விட்டுப் புரவியை மெல்ல நடத்தினான். அடுத்த வீதிக்கும், அடுத்த வீதிக்கு வந்தவுடன் புரவியை விட்டிறங்கி, "சொக்கநாதா! இன்னும் நான்கைந்து நாட்களுக்கு நீ இங்கு தானிருக்க வேண்டும். பொதிவண்டி ஓட்ட வேண்டாம்" என்று கூறினான்.

சொக்கநாதன் முகத்தில் சற்று குழப்பம் தெரிந்தது. "ஐயா! நீங்கள் என்னிடம் ஓலை கொடுத்து மதுரை அனுப்பியதிலிருந்து என் வண்டிக்கு அதிக ஓட்டமில்லை. ஆனால் பெரியகடைக் கூலவாணிகர் போதிய பொருள் கொடுத்தார். இப்பொழுது நீங்களும் பொதி வண்டிய ஓட்ட வேண்டாமென்கிறீர்கள். இங்கு பெண்ணாகடத்தில் என்ன நடக்கிறது? என்னகேதுமே புரியவில்லையே" என்றான்.

"ஒன்றுமில்லை சொக்கநாதா. இங்கு வாணிபத்தைப் பெருக்கப் போகிறோம். அதற்காக இதோ பார் இந்த இரண்டு வீதிகளையும் ஒழித்துவிட்டிருக்கிறோம். இதில் பாண்டி நாட்டு வணிகர்கள் தங்கப்போகிறார்கள். அதைக் கவனித்து நான் கூறுகிறபடி செய்யத்தான் உன்னை நியமித்தேன்" என்றான் ஜடிலன்.

"என்னையா!" என்று திகைத்தான் சொக்கநாதன்.

"நான் சாதாரண பொதி வண்டிக்காரனாயிற்றே?" என்றும் கெஞ்சினான்.

"சொக்கநாதா! தொழிலைப் பொருத்ததல்ல ஒருவன் உயர்வு. அவன் குணத்தைப் பொருத்தது, திறமையைப் பொருத்தது. பொதி வண்டியோட்டும் உனக்குப் பாண்டிய நாட்டினரை நன்றாகத் தெரியும். சில வணிகர்களைத் தெரியும். சிலரைத் தெரியாது. இருப்பினும் தராதரம் பார்த்து அவர்களுக்கு இடமும் வீடும் அளிக்க வேண்டும். அதற்காகத்தான் உன்னை நியமிக்கிறேன்" என்று கூறினான்.

பதில் கூறாமல் நின்றான் சொக்கநாதன். அப்பொழுதே அவனை அரண்மனைக்கு அழைத்துப்போய் அவனுக்கு அதிகார ஓலை எழுதிக் கொடுத்து அவனுக்கு உதவி செய்ய நான்கு வீரர்களையும் நியமித்தான் ஜடிலன். இந்த ஏற்பாடுகள் முடிய இரவு பத்து நாழிகைக்கு மேல் ஏறிவிட்டதால் தனது அறைக்குச் சென்று நிம்மதியாகப் படுத்து உறங்கினான். அவன் நிம்மதியாக உறங்கினானே யொழிய மற்ற யாரும் நிம்மதியாக உறங்க முடியவில்லை. உட்கோட்டை வீரர்கள் தங்கள் வீடுகளை ஒழித்துக் கொண்டிருந்தார்கள். வெளி வீதிகளிலிருந்த பெண்கள் சராசரியாக கோட்டைக்குள் வந்துகொண்டிருந்தார்கள். எங்கும் ஒரே சந்தடியாக இருந்தது. மாறன்காரியும் அரசகுமாரியும் பந்தங்களையும் விளக்குகளையும் ஏந்தி வந்த ஏழைகளை உப்பரிகையிலிருந்து கவனித்துக்கொண்டிருந்தார்கள். இருவருக்கும் ஏதும் புரியாததால் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளவும் செய்தார்கள்.

இருவரும் ஏதும் பேசவில்லை. இந்த ஏற்பாடுகளெல்லாம் ஜடிலனுடையது என்று இருவருக்கும் தெரியும். எதற்காக வீரர்களை வெளியனுப்பி கோட்டைக்குள் பெண்களை நிரப்புகிறான் ஜடிலன் என்பது இருவருக்கும் புரியாததால் மீண்டும் சயன அறைக்குள் சென்றனர்.



மறுநாள் துப்புரவாகிவிட்ட வெளி வீதிகள் மனித சஞ்சாரமற்றுக் கிடந்தாலும் அதற்கடுத்த நாளிலிருந்து பெரும் பொதிவண்டிகள் கோட்டைக்குள் வரத் தொடங்கின. அந்த வண்டிகளை சொக்கநாதன் வீரர்களை விட்டு வழிகாட்டி அழைத்துவரச் சொல்லி அந்தந்த வணிகர்களின் தரத்துக்குத் தக்கபடி வீடுகளையும் கொடுத்தான். அடுத்த இரண்டு நாட்கள் இதே மாதிரி வண்டிகளும் வணிகர்களும், வணிகர்களின் உதவியாளரும் வந்த வண்ணமிருந்தனர் பெண்ணாகடத்துக்கு. பெண்ணாகடத்தில் பெண்கள் தொகை குறைந்து ஆண்கள் தொகை அதிகப்பட்டது. வாலிப வணிகர்கள் பலர் தங்கள் கடைகளை அழகு செய்தனர். பெரும் மூட்டைகள் வண்டிகளிலிருந்து உருண்டு மண்டிகளுக்கு உட்புறம் எடுத்துச் செல்லப்பட்டன.

பெண்ணாகடம் பெண்களின் நகைப்பொலியும் வளையொலியும் சிலம்பொலியும் ஒலிக்கப் பெற்றிருந்த சிறப்பை இழந்து வாலிப வணிகர்களின் வேடிக்கைப் பேச்சும், வாணிபக் கூச்சலுமாக மாறி பெரும் அமர்க்களப்பட்டது. அந்த ஊரின் நிலவரத்தையோ சட்ட திட்டங்களையோ அறியாத பல வாலிபர்கள் அரசகுமாரியின் தாமரைக் குளத்திலும் குளித்தார்கள். அதையடுத்து தோப்புகளிலும் உலாவினார்கள்.

அடுத்த மூன்று நாட்கள் அரசகுமாரி ஜடிலனைச் சந்திக்கவேயில்லை. அரண்மனையை விட்டு வெளி வரவும் இல்லை. மூன்றாவது நாளிரவு அவனே நாடி வந்தான் அரசகுமாரியை. "நீள்விழி! ஆடையணிந்து புறப்படு" என்றான்.

"இரவில் எங்கு போகவேண்டும்?" என்று கேட்டாள் நீள்விழி உள்ளெழுந்த கோபத்தை அடக்கிக்கொண்டு.

"உன் புதுக் குடிமக்களைப் பார்க்க" என்றான் ஜடிலன்.

அப்பொழுது அவன் வீரர்களுக்கான ஆடையை நன்றாக அணிந்திருந்தான். இடைச் கச்சையில் தொங்கியது சோழர் குலப் பெருவாள். அவன் அளித்த காட்சி கம்பீரமாக இருந்தது. அவனைப் பார்த்தால் உள்ளூர உவகை ஏற்படவே செய்ததென்றாலும் அதை மறைத்துக் கொண்ட நீள்விழி, "யார் என் குடிமக்கள்? பாண்டி நாட்டு வணிகரா?" என்று கேட்டாள் போலிச் சினத்துடன்.

ஜடிலன் அதற்குப் பதில் சொல்லவில்லை. "வா தெரியும்" என்று சற்று அதட்டலாகவே அழைத்தான்.

நீள்விழிக்கு அந்த அதட்டல் இன்பமாக இருந்ததால் வேறு பதில் சொல்லாமல் உள்ளே சென்று அரச உடை உடுத்துக்கொண்டு வந்தாள். இருவரும் புரவிகளில் ஆரோகணித்துப் புதுக் கடவீதியின் முகப்பிலிருந்த ஒரு பெரும் விடுதிக்கு வந்ததும் குதிரையிலிருந்து இறங்கி நீள்விழியை உள்ளே அழைத்துச் சென்ற ஜடிலன் இரண்டு கட்டுகளைத் தாண்டி மூன்றாவது கட்டுக்கு வந்தான். மூன்றாவது கட்டில் வணிகர்கள் கூட்டம் மிக அதிகமாயிருந்தது. அங்கு சற்று ஒதுக்குப்புறமாக நின்று தூரத்திலிருந்த இரண்டு வணிகருக்குச் சைக் காட்டி அழைத்தான் ஜடில பராந்தகன். அவர்கள் கழுத்தில் தொங்கிய ஆபரண மதிப்பைக் கண்டு திகைத்தாள் நீள்விழி. இருவர் தலையிலும் இருவிதமான தலைப்பாகை இருந்தது. ஆனால் இரண்டிலும் சரிகை அதிகம். ஒரு வணிகன் திறந்த மார்புடன் மேலே ஒரு பட்டைச் சரிகை அங்கவஸ்திரத்தை அணிந்திருந்தான். இன்னொருவன் அங்கி அணிந்திருந்தான். இருவர் நெற்றியிலும் விபூதியும் குங்குமமும் பளபளத்தன. "இவர்தான் பெரியகடை கூலவாணிகர்" என்று மேனியில் அங்கவஸ்திரம் மட்டும் அணிந்திருந்த



வரை அறிமுகப்படுத்தினான் ஜடிலன். "இவர் மதுரையின் முத்து வியாபாரி. போர் வரும் நாட்களில் உபதளபதியாகவும் பணியாற்றுவார்" என்று அங்கி அணிந்திருந்தவரையும் சுட்டிக் காட்டினான்.

இருவரும் அரசகுமாரிக்குத் தலை வணங்கினர். "அரசகுமாரி! இனி பெண்ணாகடத்தைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம். இதன் வளர்ச்சி எங்கள் வளர்ச்சி. இதன் பெருமை எங்கள் பெருமை" என்றான் பெரியகடைக் கூலவாணிகன்.

"இதன் பாதுகாப்பை ஏற்க எங்கள் தலைவர் இருப்பதால் இனி நீங்கள் வெறும் அரசகுமாரியல்ல. சாம்ராஜ்யாதிபதியாவீர்கள்" என்றான் அங்கி அணிந்திருந்த வணிகன்.

அவர்கள் பேசிக்கொண்டிருக்கையிலேயே மூட்டைகள் வந்து உள்ளே இறங்கிக்கொண்டிருந்தன. மூட்டைகளைத் தூக்கி வந்தவர்கள் என்னதான் லாகவமாக மூட்டைகளை இறக்கினாலும் அவை 'கிளாங் கிளாங்' என்று ஒலித்தன.

"முத்துக்களா இப்படி ஒலிக்கின்றன?" என்று ஏளனமாகக் கேட்டாள் அரசகுமாரி.

"இல்லை அரசகுமாரி! உலகோப் பொருள்கள்" என்றான் அங்கி அணிந்திருந்தவன். அவன் அப்படிச் சொன்னதும் மற்றவன் நகைக்கவும் செய்தான் மெல்ல.

## 22. இரண்டே நாட்கள்

மதுரையிலிருந்து வந்த அந்த இரு பெரு வணிகர்களின் இடாகாத்திரத்தையும் வீரக் களை சொட்டிய முகங்களையும் பார்த்த நீள்விழியின் மனத்தில் விவரிக்க இயலாத சந்தேகம் எழுந்ததென்றால், உள்ளே வந்த மூட்டைகளிலிருந்தவை முத்தல்ல உலோகப் பொருள்கள் என்று அவர்களிலொருவன் கூறி நகைத்ததும், தான் சாம்ராஜ்யாதிபதியாகப் போவதாக மற்றொருவன் கூறியதும், இருவருமே ஜடிலனை தங்கள் தலைவரென்று குறிப்பிட்டதும் அந்தச் சந்தேகத்தை அதிகமாக்கவே செய்தன. இறுதியில் அந்த இரு வணிகர்களிடமும் விடை பெற்று அவள் புதுக்கடைப் பெரு விடுதியிலிருந்து வெளிப்போந்த பின்புகூட கடைவீதிகளில் அப்பொழுது வந்து போய்க் கொண்டிருந்த வாலிப வணிகர்கள் போக்கும், அசட்டைச் சிரிப்பும், வந்திறங்கிய பொதி மூட்டைகள் பல நீண்டும் குறுகியும் சாதாரண மூட்டைகளுக்கு முற்றும் புறம்பாக விளங்கிய காட்சியும் அவள் சந்தேகத்தை ஆயிரம் மடங்கு அதிகப்படுத்தே செய்தன. இத்தனை வணிகர்கள் பாண்டி நாட்டிலிருந்து வந்துங்கூட அவர்களில் ஒருவர்கூட பெண்ணினத்தைச் சேர்ந்திராததையும் கவனித்த நீள்விழி அதைப்பற்றி ஏதும் ஜடிலனைக் கேட்கவில்லையென்றாலும், தனக்குத் தெரியாத, தர்மாதிகாரிக்கும் புரியாத ஏற்பாடுகள் ஏதோ நடப்பதாக



உணர்ந்து கொண்டாள். பெண்ணாகடத்தின் ஜனத்தொகை நாளுக்கு நாள் அதிகரிப்பதோடு அது பெண்களின் பிரத்யேக சந்தையாகவும், சோழநாட்டு அரசகுமாரியின் தனிப்பட்ட இருப்பிடமாகவும் இருந்த நிலை போய், பாண்டி நாட்டு வணிகரின் இருப்பிடமாக மாறிவிட்டதையும் எண்ணிப்பார்த்த நீள்விழிக்கு, ஜடிலன் மனத்தில் ஆழ்ந்த திட்டமிருப்பது மட்டும் தெரிந்ததேயொழிய அந்தத் திட்டம் என்னவாக இருக்கும், என்ன பலனை அளிக்கும் என்று மட்டும் அடியோடு புரியவில்லை. ஆகவே, ஜடிலனோடு புரவியில் கடைத்தெருக்களில் மட்டுமின்றி மற்ற தெருக்களிலும் வெளிக் கோட்டையிலுள்ள மதிலுக்கருகாமையிலும் சுற்றிய அவள், மதிலுக்கருகே கோட்டைக்குப் பலமான பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதைக் கவனித்து, இத்தனையிலும் அவன் கோட்டைப் பாதுகாப்பைக் கைவிடாததை நினைத்துச் சற்று மகிழ்ச்சியும் அடைந்தாள். மதிலுக்கருகில் ஜடிலன் தனது புரவியிலிருந்து இறங்கி ஏணியில் ஏறி மதிலின் உச்சிக்குச் சென்று நீண்டநேரம் அங்கு இருந்த விற்கூடங்களையும், வேற்கூடங்களையும் பார்வையிட்டதும், அங்கிருந்த வீரர்களைக் கண்ணுங்கருத்துமாக இருக்கும்படி எச்சரித்ததும் அவளுக்கு ஓரளவு திருப்தியாகவே இருந்தது. அவன் திரும்பி உட்கோட்டைக்கு அருகில் வந்தபோதும் அதே ஊக்கத்தை அங்கு பாதுகாத்த வீரர்களிடமும் காட்டியதும், அத்தனை வாணிப வெறியிலும் அவன் வீர உணர்ச்சி மங்காமலிருந்ததைக் கண்டு பெருமிதமும் அடைந்தாள். அவன் வீரர்களிடம் பேசிய முறை, ஊக்கிய வகை, இவற்றைக் கண்டதால் சந்துஷ்டியுடனேயே நீள்விழி கடைசியில் தனது அரண்மனையை அடைந்தாள்.

அரண்மனையை அடைந்துவிட்ட பிறகு ஜடிலனிடம் விடைபெற்று அவள் உள்ளே செல்ல முயன்றபோது

ஜடிலன் அவளைச் சிறிது கையைப் பிடித்து நிறுத்தி, "உன்னுடன் இரண்டொரு விநாடிகள் தனித்துப் பேச வேண்டும்" என்று கேட்டதும் அவள் நகைத்து, "தனித்துப் பேச வாவியிலும் இடமில்லை. தோப்பிலும் இடமில்லை, எல்லா இடங்களையும் வணிகர்களைக் கொண்டு நிரப்பி விட்டீர்கள். எனது அறை ஒன்றுதானிருக்கிறது. அங்கு நீங்கள் வர முடியாது" என்று கூறினாள்.

ஜடிலனுக்கு அவள் கூறியது சரியென்றே பட்டாலுங் கூட அவன் சற்று பிடிவாதமாக, "அரசகுமாரியின் அறைக்கு நான் வரமுடியாது. ஆனால் பூஜையறைக்கு வரலாமல்லவா?" என்று வினவினான்.

நீள்விழியின் விழிகளில் வியப்பின் சாயை பெரிதாகப் படர்ந்ததன்றி விஷமச் சிரிப்பின் ரேகையும் அதில் கலந்து கிடந்தது. "இப்பொழுது நேரம் என்ன தெரியுமா?" என்று அவள் கேள்வியிலும் அந்த விஷமமும் வியப்பும் கலந்தொலித்தன.

ஜடிலன் முகத்தில் சிரிப்பின் சாயையோ இடக்கின் ஒளியோ எதுவும் படரவில்லை. அவன் சாவதானமாகவே சொன்னான் நீள்விழியை நோக்கி: "நீள்விழி! பூஜைக்கு நேரம் என்று தனிப்பட எதுவும் இல்லை. எப்பொழும் நாம் ஆண்டவனுக்கு பூஜை செய்யலாம்" என்று.

"இப்பொழுது பூஜை அறைக்கு நீங்கள் அழைப்பது பூஜை செய்யவா? என்னுடன் தனித்துப் பேசவா?" என்ற நீள்விழியின் கேள்வி சற்று இடக்காக இருந்ததன்றி அதில் நாணமும் கலந்து நின்றது.

அந்தச் சமயத்தில் அவர்கள் அரண்மனை வாயிலில் நின்றிருந்தபடியாலும், அவர்கள் மீது அரையுங்குறையுமாக எட்ட இருந்த பந்தங்களும் அரண்மனை முகப்பிலிருந்த ஓரிரு விளக்குகளும் ஒளிவீசிய காரணத்தாலும், காவலை முன்னிட்டு ஆங்காங்கு சஞ்சரித்துக் கொண்



டிருந்த வீரர்கள் அவர்களைப் பார்க்க முடிந்தது. அப்படிப் பார்த்த வீரர்கள் பார்த்தும் பார்க்காதது போல காவல் புரிந்து கொண்டிருந்ததை ஜடிலன் உணர்ந்துகொண்டதாலும், அங்கு நிற்பதும் நீண்ட நேரம் பேசுவதும் சரியல்ல என்று அவனுக்குத் தெரிந்ததாலும், நீள்விழியின் கேள்விக்கும் நிதானமாகவே பதில் கூறினான்: "பூஜை செய்வதும், உன்னுடன் தனித்துப் பேசுவதும் முரண்பாடான செய்கைகளல்ல" என்று.

"உங்கள் தேவைக்குத் தக்கபடி சகலமும் மாறும் போலிருக்கிறது" என்று கேட்டாள் நீள்விழி.

"தேவையை ஏற்படுத்துவதும் நாமல்ல, மாற்றுவதும் நாமல்ல" என்றான் ஜடிலன்.

"வேதாந்தம் பேசுகிறீர்கள்..." என்று இகழ்ச்சியுடன் சொன்னாள் நீள்விழி.

"வேதாந்தத்தின் அடிப்படைதான் சிருஷ்டி. அதன் விளைவுதான் வாழ்க்கையின் நிகழ்ச்சிகள்" என்று சாவசாதாரணமாகச் சுட்டிக் காட்டினான் ஜடிலன்.

"நீங்கள் வேதாந்தி போலிருக்கிறது?"

"ஆம் நீள்விழி. அது உனக்கே தெரியும்."

"தெரியும் தெரியும். அதை வாவிக்கரையிலும் பார்த்திருக்கிறேன். குறுக்குப் பாதையில் அன்று குழலில் சிக்கிக் கொண்டதே மலர்க்கொடி அன்றும் பார்த்திருக்கிறேன். நல்ல வேதாந்தி!" என்று கூறி நகைத்தாள் அவள்.

பதிலுக்கு ஜடிலன் நகைக்கவுமில்லை. சீரிய குரலை மாற்றவுமில்லை. "நீள்விழி! நாமிருவரும் அணுகும்போது ஏற்படும் உணர்ச்சிகளும் பகவானுடைய நியமனத்தால் ஏற்படுகின்றன. ஆனால் சிந்தித்துப் பார். என் இடையில் தொங்கும் உங்கள் குலப் பொக்கிஷமான இந்த வாளைப் பார். வேதாந்தியும் வீரனுமான ஒருவனிடம் இதைக்

கொடுக்க வேண்டுமென்று ஓலையில்லையா இத்துடன். அதன் காரணமாக இதை தர்மாதிகாரி என்னிடம் ஒப்படைக்கவில்லையா? உன்னையும் சோழ நாட்டையும் பாதுகாக்க உறுதிமொழி கேட்கவில்லையா என்னிடம்?" என்று வினவினான் அவன்.

அவன் கூறியது அனைத்துமே உண்மை என்பதை நீள்விழி உணர்ந்தாலும், அவன் தன்னைப் பார்க்கும் போதெல்லாம் அவன் கண்களில் ஏற்பட்ட காதல் வெறியும், அவன் கை தன் உடலைச் சுற்றி வளைத்த போதிருந்த லாவகமும் ஒரு வேதாந்தியினுடைய செய்கைகளாக இருக்க முடியாதென்ற திட்டமான முடிவுக்கு வந்தாள். இவனை வேதாந்தியென்று தர்மாதிகாரி நம்பியது கூட சரியா என்ற சந்தேகம் ஏற்பட்டது அவளுக்கு. ஆனால் அவன் தானே எழுதி தனக்குக் கொணர்ந்த ஓலையில் அவன் பெரு வீரனென்பதற்கு அத்தாட்சியிருந்ததால் அவன் வேதாந்தியில்லாவிட்டாலும் பெரு வீரனென்பதைச் சந்தேகமற உணர்ந்து கொண்டாள். தவிர வாவிக் கரையில் அவன் விஜயனை சர்வ சாதாரணமாக விளையாட்டாக வாட்போரில் வெற்றி கொண்டதும் அவள் கண் முன்பு எழுத்ததால் அவனிருக்கும் வரை தனக்குப் பயமில்லையென்று உறுதியும் கொண்டாள். அந்த உறுதிக்கு அவன் கொண்டுவந்த ஓலையையும் வாவிக்கரையில் காட்டிய வீரத்தையும்விட தன் உள்ளத்தை அவன் ஆக்கிரமித்துக்கொண்டுவிட்டதே மூலகாரணமென்பதை அவள் உணர்ந்திருந்ததால் உள்ளூர நகைத்துக்கொண்டு, "சரி வேதாந்தி! வாருங்கள் பூஜை அறைக்கு" என்று அழைத்துக்கொண்டு அரண்மனைக்குள் சென்றாள்.

இரண்டு கட்டுகளைத் தாண்டியதுமிருந்த பூஜை அறையின் முகப்புக்கு வந்ததும் அங்கிருந்த பெரும் அண்டாவிலிருந்து செம்பால் நீர் மொண்டு கை கால்



கழுவி அறையைத் திறந்து உள்ளே நுழைந்தனர் அரசகுமாரியும் ஜடில பராந்தகனும். அறைக் கோடியிலிருந்த லிங்கத்தின் இருபுறங்களிலும் எரிந்துகொண்டிருந்த இரு தூண்டா விளக்குகளும் அந்த நடுநிசியில் மங்கலான வெளிச்சத்தை வெளியிட்டுக் கொண்டிருந்தன. சிவலிங்கத்தின் மீது காலையில் போடப்பட்டிருந்த புஷ்பங்களும் வில்வதளங்களும் அப்பொழுது புத்தம் புதிதாயிருந்தன. அவற்றை நீள்விழிக்குக் காட்டிய ஜடிலன், "நீள்விழி! அதோ அந்த புஷ்பங்களையும் வில்வத்தளங்களையும் பார்! புத்தம் புதிதாயிருக்கின்றன. இதிலிருந்து உனக்கு என்ன தெரிகிறது?" என்று கேட்டான்.

நீள்விழி ஈசனை நோக்கித் தலை வணங்கினாள், கை கூப்பினாள். அந்த புஷ்பங்களையும் வில்வத்தளங்களையும் பார்க்கவும் செய்தாள். "எனக்கு ஏதும் புரியவில்லை?" என்று மெல்லச் சொன்னாள் முடிவில்.

"ஈசுவரனிடமிருந்து உயிர்கள் உண்டாகின்றன. அதனால் ஈசுவர சம்பந்தம் பெற்றவைகளிடத்தில் உயிர்த் துடிப்பு இருக்கிறது. இந்தப் புஷ்பங்களை மனிதன் தலையில் வைத்தால் இத்தனை நேரம் வாடி வதங்கியிருக்கும்" என்று கூறிய ஜடிலன் தரையில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து நீண்ட நேரம் ஈசனை வணங்கினான். நீள்விழியையும் வணங்கச் சொன்னான். அவன் மண்டியிட்டு கைகளை ஊன்றி தலை குனிந்திருந்து வணங்கி எழுந்ததும், "நீள்விழி! ஆண்டவனை வேண்டிக்கொள்" என்று கூறினான் உணர்ச்சிமிக்க குரலில்.

"எதற்கு?" என்று கேட்டாள் நீள்விழி, சிவலிங்கத்திடமிருந்து கண்ணை எடுக்காமலே.

"உன் வெற்றிக்கு, என் வெற்றிக்கு, பெண்ணாகடத்தின் வெற்றிக்கு" என்றான் ஜடிலன்.

நீள்விழி சிவலிங்கத்திலிருந்து கண்களை அகற்றி அவனை நோக்கினாள். அந்த நோக்கில் கேள்விகள் பல இருந்ததைப் பார்த்த ஜடிலன் தனது கண்களை அவள் கண்களுடன் கலந்தான். பக்கவாட்டுகளில் நீண்டிருந்த அந்தக் கயல்விழிகளில் காந்தம் நீண்டநேரம் அவன் கண்களை அப்படியும் இப்படியும் பார்க்கவொட்டாமல் கவர்ந்து நிறுத்தியது. அப்படிப் பல விநாடிகள் நின்ற ஜடிலன் கடைசியில் வளை நோக்கித் தலையாட்டினான். "உன் ஊகம் சரிதான் நீள்விழி" என்று கூறவும் செய்தான்.

நீள்விழி உதடுகளைத் திறந்து மூடினாள். அவள் கண்களிலும் முகத்திலும் கவலை மண்டிக் கிடந்தது. "போர் வந்துவிட்டது அருகில்" என்ற சொற்கள் உணர்ச்சிகள் ததும்பத் உதிர்த்தாள் அவள்.

ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் ஆட்டிய ஜடில பராந்தகன், "அதிகமாகப் போனால் இன்னும் நான்கு அல்லது ஐந்து நாட்களில் பெண்ணாகடம் தாக்கப்படும். தஞ்சையிலுள்ள பல்லவர் படை போர்க்கோலம் பூண்டுவிட்டது. காஞ்சியிலிருந்தும் ஒரு படை வந்து அத்துடன் கலந்துகொண்டிருக்கிறது. படைகள் நகருவதும் இங்கு தோன்றுவதும் நமக்குத் தெரியாது. நந்திவர்மன் அத்தனை துரிதமாக வருவான்" என்று கூறவும் செய்தான்.

நீள்விழியின் முகத்தில் அச்சம் ஏதும் தோன்றவில்லை. "நந்திவர்மனை எதிர்க்க நமது கோட்டைப் பகுதி ஏற்பாடுகள் போதுமா?" என்று வினவினாள்.

"போதாது?" என்றான் ஜடிலன்

"விஜயனை நீங்கள் நம்புகிறீர்களா?" என்று அடுத்த கேள்வி கேட்டாள் நீள்விழி.



ஜடிலன் சிறிதுநேரம் சிந்தித்துவிட்டு நேரிடையாகப் பதில் கூறாமல், "நீள்விழி! நந்திவர்மனை நாம் வெற்றி கொண்டால் அதில் பெரும் பங்கு விஜயனுக்குமிருக்கும்" என்று சொல்லிவிட்டு, "அது கிடக்கட்டும் நீள்விழி! இன்று கடைத்தெருவில் பார்த்த இரு வணிகர்களைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று வினவினான்.

"நான் எதை நினைத்தாலென்ன?"

"இல்லை சொல்லேன்."

"அவர்களில் ஒருவர் வணிகர்."

"யார்?"

"அங்கியணியாமல் வெறும் சரிகைத் துணி அணிந்திருந்தவர்."

"இன்னொருவர்."

"வணிகரல்ல."

"வேறு யார்?"

"பல போர்களைக் கண்ட பெரு வீரர். நீங்கள் அங்கு மறைமுகமாகச் சொன்னபடி உபதளபதி."

ஜடிலன் மௌனம் சாதித்தான். "நீள்விழி! உன் நீண்ட விழிகளிலிருந்து எதுவும் தப்புவதில்லை. நீ அங்கேயே அவர்களைப் பற்றிச் சந்தேகப்பட்டதைக் கவனித்தேன். ஆகையால் உன் வாயை மூடத்தான் பூஜை அறைக்கு அழைத்து வந்தேன். நீ கண்டதையோ கேட்டதையோ தர்மாதிரிக்குக்கூடச் சொல்ல வேண்டாம்" என்று முடிவில் கூறினான். மேற்கொண்டு தொடர்ந்தும் சொன்னான்: "நாளை போர் மூண்டு விஜயன் ஏதாவது சதியில் இறங்கினால் அவனுக்குப் பதில் ஓர் உபதளபதி வேண்டுமென்பதற்காகவே அவரை வரவழைத்தேன். ஆகவே அவர் பெண்ணாகடத்தில் இருப்பது யாருக்கும் தெரிய வேண்டாம்" என்று.

நீள்விழி அவனை நெருங்கி அவன் கைகளைப் பிடித்துக் கொண்டான். "என் உயிர், வாழ்வு, என் நாடு மூன்றும் உங்கள் கைகளிலிருக்கின்றன. உங்கள் கட்டளைகளை என் சிரம் ஏற்கும்" என்றான். "ஆமாம், இங்கு உங்கள் நாட்டு வணிகர்களை நிரப்பியிருக்கிறீர்களே! அவர்களைக் கொண்டு இந்நகரைக் காக்க முடியுமா? ஆமாம், அவர்கள் எல்லோரும் வணிகர்களா?" என்றும் வினவினான்.

"இப்பொழுது கேட்காதே நீள்விழி. இன்னும் ஒரு வாரத்தில் சகலமும் வெட்ட வெளிச்சமாகும். அதற்குள் இங்கு எது நேர்ந்தாலும் கவலைப்படாதே. எதைக் கண்டாலும் யாரிடமும் சொல்லாதே" என்று கூறி அவனிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றான் ஜடிலன்.

நீள்விழி சிறிதுநேரம் தெய்வ சந்நிதானத்தில் நின்றான். பிறகு கதவைச் சாத்திக்கொண்டு தன் பள்ளியறைக்குச் சென்று பஞ்சணையில் விழுந்தான். அவன் உள்ளே நுழைந்ததையும் நேராகப் பஞ்சணையில் சென்று விழுந்ததையும் கண்ட பணிப் பெண்கள் அதற்குக் காரணத்தை அறியாமல் பணிவிடை புரிய நெருங்கினார்கள். "எனக்கு எதுவும் தேவையில்லை. தனிமையில் விட்டுச் செல்லுங்கள்" என்றான் நீள்விழி. பணிப் பெண்கள் பள்ளியறைக் கதவைச் சாத்திக்கொண்டு சென்றதும் அவன் மனத்தில் எண்ணங்கள் ஆயிரம் எழுந்தன. பெண்ணாகடத்தில் பாண்டிய நாட்டு உபதளபதி வந்திருப்பதை ஜடிலனே ஒப்புக்கொண்டுவிட்டதாலும் போர் அதிக நாளில்லை என்பதை அவனே கூறிவிட்டதாலும் அவன் நெஞ்சத்தில் ஏதேதோ விஷயங்கள் தோன்றலாயின. "ஊர் போரை அணுகிக்கொண்டு இருக்கையில் ஜனநெரிசல் உதவுமா? அதனால் வீரர் போக்குவரத்துக்கு இடைஞ்சலேற் படாதா?" என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டான். அவன் வணிகர் கும்பலை இந்தச் சமயத்தில் பெருக்குவதோ, கடைத் தெருக்களை விஸ்தரிப்பதோ விவேகமான செய்கையா என்பதிலும் சந்தேகமிருந்தது அவனுக்கு. வணிகர் கும்பல் தெருக்களை மட்டுமின்றி வாவிக்கரையிலும், காவிரிக் கரையையும் அடுத்த பின்புறத் தோப்பையும் ஆக்கிரமித்துக்கொண்டு விட்டதாலும், வெளித் தெருப் பெண்கள் உட்கோட்டைக்குள் கொண்டுவரப் பட்டு விட்டதாலும், தான் எங்கும் சுதந்திரமாக சஞ்சரிக்க முடியாததல்லாமல் வீரர் நடமாட்டத்துக்கும் பெரிதும் இடைஞ்சலேற்படும் என்பதையும் நினைத்துப் பார்த்த நீள்விழி, நிகழ்ந்துள்ளவை போர் வெற்றிக்கு அனுகூலமானவையல்ல என்ற முடிவுக்கே வந்தான். அந்தக் கவலையுடன் நித்திரையில் ஆழ்ந்தான்.



அதைப்பற்றி ஏதாவது தெரிந்துகொள்ளும் நோக்கத்துடன் மறுநாள் காலையில் பூஜைக்குப் பிறகு தர்மாதிகாரியின் அறையை அடைந்தபோது அங்கு தன் மனத்திலெழுந்த சந்தேகங்களையே விஜயன் வலியுறுத்திக் கொண்டிருந்ததைக் கவனித்தான்.

"பிரபு! தர்மாதிகாரி! இந்தப் பெண்ணாகடத்தை முறியடிக்க இனி பல்லவ சக்கரவர்த்தி தேவையில்லை. சாதாரண படைத்தலைவன் போதும். வீதிகளெங்கனும் வணிகர்கள் நிரம்பிவிட்டார்கள். படைகளை அணிவகுத்து நடத்துவது கஷ்டமாயிருக்கிறது. வணிகர்கள் ஒரு கட்டுக்குள்ளும் அடங்கவில்லை. தற்காப்பு ஏற்பாடுகளிலும் தலையிடுகிறார்கள். சில வணிகர்கள் மதில்களில் ஏறி விற்கூடங்களையும் வேற்கூடங்களையும் சரி பார்க்கிறார்கள். இன்னும் சிலர் புரவிகளின் மீது ஏறி காவிரி மணலில் பந்தயம் விளையாடுகிறார்கள். இவர்களைச் சிறையில் தள்ள அனுமதி வேண்டும்" என்று கேட்டான் கடுங்கோபத்துடன்.

தர்மாதிகாரியின் முகத்தில் கவலை மண்டியது. "இதைப்பற்றி ஜடிலனை ஏதாவது கேட்டாயா?" என்று வினவினார்.

"இல்லை. அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சதா வணிகர்களோடு சுற்றிக் கொண்டிருப்பதாகக் கேள்வி" என்ற விஜயன், "தர்மாதிகாரி! இந்தக் கோட்டையில் தங்களைவிடப் பெரிய அதிகாரி இல்லை. நாம் உடனடியாக வணிகர்களை அடக்காவிட்டால் பெண்ணாகடம் நந்திவர்மன் கைக்கு மாறிவிடும்" என்று சொன்னான்.

"அதெப்படி அத்தனை நிச்சயமாகக் கூறுகிறாய்?" என்று கேட்டார் தர்மாதிகாரி.

"கோட்டைப் பாதுகாப்பை என்னிடம் ஒப்படைத்த பிறகு நான் கையைக் கட்டிக்கொண்டா உட்கார்ந்திருப்பேன். முன்னோடிகள் அனுப்பி வைத்தேன் புலன் விசாரிக்க. நந்திவர்மன் படை நகர்ந்து விட்டது பெண்ணாகடத்தை நோக்கி" என்று அறிவித்தான்.

"அப்படியா?" என்று பிரமித்தார் தர்மாதிகாரி.

"ஆம்" என்று கூறிக்கொண்டு ஜடிலனும் அந்த அறைக்குள் நுழைந்தான்.

அவனை நோக்கிக் கண்களைத் திருப்பிய தர்மாதிகாரி, "உனக்கும் செய்தி எட்டியிருக்கிறதா அப்படி?" என்று கேட்டார்.

"ஆம்" என்றான் ஜடிலன்.

"முன்னோடிகளை, ஒற்றர்களை நீயும் அனுப்பினாயா?" என்று வினவினார் தர்மாதிகாரி.

"இல்லை. ஆனால் நிச்சயமாக நாம் பல்லவன் படைகளை இரண்டு நாட்களில் காவிரிக்கு அக்கரையில் பார்க்கலாம்" என்றான்.

# 23. நாளை மாலையில் பார்!

ஜடிலன் கூறியபடியே இரண்டு நாட்களில் பல்லவர் படைகள் காவிரியின் வடகரையில் வந்து தங்கிவிட்டதை தர்மாதிகாரி தனது கண்களாலேயே கண்டார். ஜடிலன் தம்மைக் கண்டு சென்ற தினத்திலிருந்து மூன்றாவது நாள் மாலை சற்று முற்றியதும் ஆற்றின் அக்கரையில் இருந்த தோப்பில் பந்தங்கள் பல உலாவுவதை உப்பரிகையிலிருந்தே பார்த்த தர்மாதிகாரி போர் எந்தச் சமயத்திலும் துவங்கலாமென்பதை உணர்ந்து கொண்டார். அதைத் தான் உணர்ந்து கொண்டாரேயொழிய போரின் முடிவு என்னவாகுமென்பதை அவரால் உணர முடியவில்லையாதலால் அவர் முகத்தில் கவலை மண்டிக் கிடந்தது உப்பரிகையின் கைப்பிடிச் சுவரில் சாய்ந்த வண்ணம் தூரத்தே தெரிந்த விளக்குகளைப் பார்க்கப் பார்க்க வலுவான படையுடனேயே நந்திவர்மன் வந்திருக்கிறான் என்பதை அறிந்ததால் கவலைப் பெருமூச்சு ஒன்றும் கிளம்பியது அவர் நாசியிலிருந்து. தவிர வேறு சில சிந்தனைகளும் எழுந்து எதற்கும் குழம்பாத அவர் சிந்தையையும் குழம்ப வைத்திருந்தது. இரண்டு நாட்களில் பல்லவர் படையை காவிரியின் அக்கரையில் பார்க்கலாமென்று கூறிப் போன பிறகு ஜடிலனை அவர் பார்க்கவில்லை. அவனைப்பற்றி விசாரித்தறியலாமென்று விஜயனை மறுநாள் கூப்பிட்டு அனுப்பியபோது அவனும் காணப்

படவில்லை. விஜயனைத் தேடிச் சென்ற தூதன், "கோட்டைத் தலைவரை எங்கும் காணோம்" என்று தெரிவித்தான்.

"காணாமல் எங்கு போய்விடுவார்?" என்று சீறினார் தர்மாதிகாரி.

"இருப்பிடத்தில் காணோம். வெளிக்கோட்டை மதில் சுவருக்கருகிலும் மதில் மேலுள்ள தற்காப்புப் படையினரிடமும் அவர் இல்லை" என்றான் தூதன்.

தர்மாதிகாரிக்கு அந்தச் சமயத்தில் ஏற்பட்டது வெறுப்பா எரிச்சலா என்பது அவருக்கே தெரியாததால் அவர் படபடப்புடன் கேட்டார், "சரியாகப் பார்த்தா?" என்று.

"சல்லடை போட்டுச் சலித்துவிட்டேன்" என்றான்.

"எங்கும் காணவில்லை?"

"இல்லை."

"பின் நமது வீரர்களுக்கு யார் உத்தரவிடுகிறார்கள்?"

பதிலை சற்றுத் தயங்கித் தயங்கிச் சொன்னான் தூதன். அந்தப் பதிலைக் கேட்டதும் அதிர்ச்சி தாங்கவில்லை தர்மாதிகாரிக்கு. "மதுரை வணிகர் ஒருவர் உத்தரவிடுகிறார்" என்று தூதன் மென்று விழுங்கி கூறியபோதும் பல விநாடிகள் பேசாமலேயே நின்றார் மாறன்காரி. "வணிகரா!" என்று கடைசியில் கேட்டபோது அவர் சுயநினைவில் இல்லையென்பதை உணர்ந்து கொண்ட தூதன் மெல்ல அவரிடமிருந்து நழுவி வெளியே சென்றான்.

வணிகரை விட்டு வீரரை இயக்குவதற்கு முனைந்திருப்பவன் பாண்டியன் மன்னனான ஜடில பராந்தகனே யென்பதை அவர் சந்தேகமற உணர்ந்து கொண்டாலும்



அதனாலேற்படக்கூடிய ஆபத்தையும் உணர்ந்தேயிருந்தாராதலால் மிகவும் குழப்பமடைந்த நிலையில் இருந்தார் தர்மாதிகாரி. நீள்விழிக்கு உதவி கேட்க பாண்டியனுக்குத் தான் ஓலையனுப்பியதற்கு உதவி செய்ய அவனே புறப்பட்ட வந்தது பற்றிய ஆரம்பத்தில் அச்சமடைந்திருந்த அவர், பாண்டியனை யாரென்று அறியாததன் விளைவாக அவனுக்கு யாராவது தீங்கிழைத்தால் ஏற்படக்கூடிய விபரீதங்களை நினைத்துப் பார்த்துப் பெரிதும் கலங்கினார். இப்பொழுதுள்ள சோழர்— பல்லவர் பூசலுக்குப் பதில் சோழ— பாண்டிய பூசலை அத்தகைய நிகழ்ச்சி விளைவித்துவிடும் என்ற நினைப்பால் பெரும் துயரத்துக்கும் ஆளாகியிருந்தார். தவிர இரண்டு நாட்களாக பெண்ணாகடத்தில் ஏற்பட்டு வந்த தற்காப்பு மாறுதல் முறைகளும் அவருக்கு பெரும் சந்தேகத்தை விளைவித்திருந்தன. ஜடிலன் உத்தரவின் காரணமாக தினசரி பெண்ணாகடத்திலும் அதன் தென்புறத்திலும் வந்து குவிந்துகொண்டிருந்த வணிகர் கூட்டம் பெரும் தொல்லை விளைவித்துக் கொண்டிருந்ததையும், வணிகர்களே பலர் படைகளுக்குள் ஊடுருவி அங்கிருந்த ஏற்பாடுகளை மாற்றிவிட்டதையும் அவர் கவனித்துக் கொண்டுதானிருந்தார். பெண்ணாகடத்தில் அன்றாடம் நடக்கும் மாறுபாடுகளை அவ்வப்பொழுது அவரது வீரரர்கள் வந்து சொல்லிக் கொண்டுதானிருந்தார்கள்.

ஜடிலன் அவருடன் பேசிவிட்டுப் போன மறுநாளே புறக்கடைத் தெருக்களில் நான்கு கடைகளில் ஆயுதங்கள் விற்கப்பட்டதைப்பற்றி அவர் கேள்விப்பட்டார். அங்கு விற்கப்பட்ட வாளும் வேலும்கூட அவரிடம் மாதிரிக்குக் கொண்டுவந்து காட்டப்பட்டன. வாள்கள் மிக உரமாகவும் வேல்கள் சோழநாட்டு வேல்களை விட அதிக நீளமாகவும் இருந்ததை அவர் கண்டு, 'இவற்றை சோழ வீரர்கள்

உபயோகப்படுத்த முடியுமா?' என்று சந்தேகித்தார். ஆனால் அந்த வாட்களையும் பெருவாரியாக மதுரையிலிருந்த வணிகர்களே வாங்கிக்கொண்டதாகச் செய்தி கிடைத்தபோது அவர் கூரிய புத்திக்கு மெல்ல விஷயம் புரியலாயிற்று. புரிந்ததும் அவர் ஜடிலனைப் பார்க்க முயன்றார். ஆனால் அவன் எங்கும் காணவில்லை.

அவனைக் காணத் துடித்தது அவர் மட்டுமல்ல, நீள்விழியும் அவனைக் காண பெருமுயற்சி செய்தாள். கடைத்தெருவில் வாளும் வேலும் விற்கப்படுவதாகவும் அதை வணிகர் வாங்குவதாகவும் செய்தி கிடைத்தவுடனேயே அவள் உண்மையைப் புரிந்துகொண்டாள். அன்று கடைவீதியின் பெரிய இல்லத்தில் இரு வணிகர்களை ஜடிலன் அறிமுகப்படுத்தியபோது அங்கு வந்த மூட்டைகளில் ஒலித்த உலோகப் பொருள்கள் ஆயுதங்களே என்பதை உணர்ந்துகொண்டாள். எத்தனை ரகசியமாக ஜடிலன் வணிகர்கள் உடையில் மதுரையின் படைப் பிரிவைப் பெண்ணாகடத்துக்கு வரவழைத்து விட்டான் என்பதை அறிந்து வியந்தாள் அரசகுமாரி. வந்துள்ள படையைப்பற்றி மேலும் அறிய ஜடிலனைப் பார்க்க பெருமுயற்சி செய்தாள். கடைத்தெருவுக்குத் தோழியுடன் மாலை வேளைகளில் சென்றாள். வெளிக்கோட்டை மதிலுக்குச் சென்றாள். எங்கும் எப்புலனும் கிடைக்கவில்லை அவளுக்கு. அவனுடன் விஜயனையும் காணோம் என்பதைக் கேட்டதும் அவளே வியப்பின் எல்லையை எய்தினாள். மூன்றாவது நாள் மாலை தனது உப்பரிகை அறையிலிருந்து பல்லவர் படைகளைக் கண்ட அரசகுமாரிக்கும் தர்மாதிகாரிக்கு ஏற்பட்டிருந்த கவலை ஏற்பட்டிருந்தது.

அந்தக் கவலையின் காரணமாக உப்பரிகையின் வெளித் தாழ்வரைக்கு வந்த அவள் அந்தத் தாழ்வரையின் கோடியில் கைப்பிடியில் சாய்ந்துகொண்டிருந்த தர்மாதிகாரியைப் பார்த்ததும் அவரை நாடிச் சென்றாள். அவள் காலடி ஓசையைக் கேட்ட தர்மாதிகாரி, "நீயா நீள்விழி?" என்று கேட்டார் பரிவுடன் பெற்ற தகப்பனைப் போல.



"ஆம்" என்றாள் நீள்விழி.

"எதிரி அக்கரையில்" என்றார் தர்மாதிகாரி.

"ஆம்" என்றாள் நீள்விழி மீண்டும்.

"நமது இரு படைத்தலைவர்களையும் காணவில்லை."

"ஆம்."

"எங்கு போனார்களோ?"

"தெரியவில்லையே."

"போர் என்ன ஆகுமோ?"

"அது அவருக்குத்தான் தெரியும்."

"யாருக்கு?"

"பாண்டிய மன்னருக்கு."

நீள்விழியின் சொற்களைக் கேட்ட தர்மாதிகாரி திடீரெனத் திரும்பினார் அவளை நோக்கி. "அவன் பாண்டிய மன்னனென்பது உனக்குத் தெரியுமா?" என்றும் கேட்டார்.

"தெரியும்." நீள்விழி கண்களை நிலத்தில் தாழ்த்தினாள்.

"யார் சொன்னது?" என்று கேட்டார் மாறன்காரி.

"அவரே சொன்னார்" என்றாள் நீள்விழி.

தர்மாதிகாரி பல விநாடிகள் பேசாமல் நின்றார். பிறகு, "நீள்விழி! இன்றிரவோ நாளைக் காலையிலோ நந்திவர்மன்

தூதன் வருவான் பெண்ணாகடத்தைச் சரணடையும்படிச் சொல்ல. அப்பொழுது பதில் சொல்ல வேண்டியவர்கள் படைத்தலைவர்கள். இருவரும் காணோம். நான் என்ன பதில் சொல்லட்டும்?" என்று கேட்டார்.

நீள்விழி மௌனம் சாதித்தாள். உப்பரிகையிலிருந்து சுற்றுமுற்றும் பார்த்தாள். வணிகர்கள் சாரிசாரியாக அணிவகுத்துக் கோட்டையின் பின்புறம் வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் பலர் புரவியிலேறியும் ஆயுதந் தரித்தும் உட்கோட்டையிலிருந்த தோப்பிலும், கோட்டைச் சுவரை அடுத்த பின்புற வாயில்களுக்கு அருகாமையிலும் நிரம்பிக் கொண்டிருந்தார்கள். வெளிக்கோட்டை வாயிலில் அதிகக் கூட்டமில்லை. சொற்பப் படையும் விற்கூடங்கள் வேற்கூடங்களின் பாதுகாப்பும் மட்டுமே இருந்தன. "எப்படியும் அவரை நாளை பார்க்க முடியும் என்று நினைக்கிறேன்" என்றாள் நீள்விழி வணிகர்களின் அணிவகுப்பையும் அவர்கள் ஆங்காங்கு வந்து சேர்ந்து கொண்ட முறையையும் பார்த்த பின்பு. ஜடிலனைப் பார்க்கும் நம்பிக்கை தர்மாதிகாரிக்கு இல்லை. ஆனால் நீள்விழி சொன்னது சரியாகப் போயிற்று. அடுத்த நாள் நந்திவர்மன் தூதன் சில விநாடிகளுக்குள் அரண்மனையின் முகப்பு மண்டபத்திற்கு வந்து சேர்ந்தான்.

பல்லவர்களின் பெரும் இரும்புக் கவசங்களை அணிந்து நீண்டவாள் இடையில் தொங்க, வந்த பல்லவ தூதன் தர்மாதிகாரியின் முன்பு தலை வணங்கி, "படைத்திறல் பல்லவர்கோன் நந்திவர்ம பூபதி பல்லவமல்லர், பரம வைணவரின் தூதன் வந்திருக்கிறேன்" என்று அறிவித்தான்.

அவன் மேலே பேசலாமென்பதற்கு அறிகுறியாகக் கையை அசைத்தார் தர்மாதிகாரி. "பல்லவர் ஆதிக்கத்திற்



குள்ளடங்கிய சோழ நாடு பாண்டிய மன்னன் ஆட்சிக்கு உள்ளாகியிருப்பதை உணர்ந்த பல்லவ மகாப்பிரபு, அந்தச் சூழ்ச்சியிலிருந்தும் பாண்டியன் ஆதிக்கத்திலிருந்தும் சோழநாட்டை விடுவிக்க உறுதி பூண்டு வந்திருக்கிறார். அதை முன்னிட்டு இந்தப் பெண்ணாகடத்தில் சாதாரண வீரன்போல் வேஷம் போட்டு உறையும் பாண்டிய மன்னனை உடனடியாகச் சிறை செய்து தம்மிடம் அனுப்பி வைக்கும்படி ஆணையிடுகிறார். இல்லையேல் இப்பெண்ணாகடம் நாளை மாலை விளக்கு வைத்ததும் தாக்கப்படும் என்றும் சொல்ல உத்தரவு! வாழ்க பல்லவமல்லர்! வாழ்க பரம வைணவச் சக்கரவர்த்தி!"

பல்லவ வீரன் மிகுந்த துணிவுடனும் அதிகாரத் தோரணையிலும் இந்தச் சொற்களை உதிர்த்தான். அவன் சொற்களை அந்த முகப்பு மண்டபத்தின் சுவர்கள் எதிரொலி செய்தன. அந்த நிலையில் தூதனை ஏற இறங்கப் பார்த்த மாறன்காரியின் விழிகளில் அச்சம் லவலேசமும் இல்லை. இரண்டு நாட்களாக இருந்த குழப்பம்கூட மறைந்துவிட்டது. அவர் ஏதோ பதில் கூற வாயெடுத்தார். அந்த சமயத்தில் வெளியில் இருந்து தாரைகள் ஊதப்பட்டன. மண்டபத்தில் திடீரென நுழைந்த ஒரு வீரன் இரைந்து கட்டியம் கூறினான்: "பாண்டிய மன்னர் ஜடில பராந்தக நெடுஞ்சடையர்! தேவி மீனாட்சியின் வம்ச திலகம்! பரம வைணவர்! எச்சரிக்கை! அமைதி! அமைதி!"

இந்தச் சொற்களும் அந்த மண்டபத்தில் எதிரொலி செய்தன. அந்த எதிரொலிகளின் ஊடே அரச உடையணிந்த ஜடில பராந்தகன் சோழர்குல பெருவாளை இடையில் கட்டியவண்ணம் அலட்சிய நடை நடந்து மண்டபத்தில் நுழைந்தான். மண்டபத்திலிருந்து அத்தனை தலைவர்களும், தர்மாதிகாரி நீள்விழி உட்பட சகலரும்

எழுந்தனர். அவர்களைக் கையமர்த்தி உட்காரச் சொல்லித் தானும் ஓர் ஆசனத்தில் அமர்ந்த நெடுஞ்சடையன் தூதனைப் பார்த்து, "தூதைச் சொல்லி விட்டாயா?" என்று வினவினான்.

நந்திவர்மன் தூதன் சிறிதும் அசையாமல் கூறினான். "சொல்லிவிட்டேன்" என்று.

"இன்னொரு முறை சொல்" என்று பாண்டியன் கேட்க, மறுமுறையும் கூறினான் தூதன் பல்லவன் ஆணையை.

பாண்டியன் தூதனை ஏறிட்டு நோக்கிவிட்டுக் கூறினான்: "சொல் பல்லவ மல்லரிடம். இந்தப் பெண்ணாகடம் பாண்டியனுக்குச் சொந்தமானதென்று சொல். அது சோழர்குலப் பெருவாளால் பாதுகாக்கப்படும் என்று சொல். நாளை மாலை சந்திக்க வேண்டிய இடத்தில் நந்திவர்மன் படைகளைச் சந்திப்பதாகச் சொல்."

இதைச் சொல்லி தூதன் போகலாமென்பதற்கு அறிகுறியாகக் கையை அசைத்தான் பாண்டிய மன்னன். அவன் சென்ற பிறகு தர்மாதிகாரியை நோக்கி, "தர்மாதிகாரி! இப்பெண்ணாகடத்தையும் நீள்விழியையும் பாதுகாப்பதாக சோழர் வாள்மேல் ஆணையிட்டேன்! அந்த ஆணை நாளை மாலை நிறைவேற்றப்படும். நாளை இங்கு கிடைப்பது பாண்டியர் வெற்றி. அந்த வெற்றி பாண்டியர்களின் முதல் சாம்ராஜ்யத்திற்கு அஸ்திவாரம்" என்று கூறினான். பிறகு ஆசனத்திலிருந்து எழுந்து செல்லக் கிளம்பினான்.

"நானும் நீள்விழியும் பேசவேண்டும் தங்களுடன்" என்றார் மாறன்காரி.

"அதற்கு அவகாசம் அதிகமில்லை" என்று கூறிய பாண்டியன் மாறன்காரியைத் தொடர்ந்து அவர்



அறைக்குச் சென்றான். தர்மாதிகாரியின் அந்தரங்க அறையை அடைந்ததும் காலதாமதம் செய்யாமல், "ஜடில பராந்தகா! துணிவான பதில் கூறிவிட்டாய். ஆனால் நிலை எப்படியிருக்கிறது?" என்று கேட்டார்.

பராந்தகன் அவரையும் நோக்கி நீள்விழியையும் நோக்கினான். "நாளை மாலை விளக்கு வைத்து ஒரு நாழிகைக்குப் பிறகு இந்த உப்பரிகையிலிருந்து காவிரியாற்று மணலைக் கவனியுங்கள். நீள்விழி! உன்னைப் பின்புற மதிலுக்கு அழைத்துச் செல்ல மதுரை கூலவாணிகர் வருவார். அவருடன் சென்றால் நீயும் பார்க்கலாம் போரை" என்று கூறிவிட்டுச் சென்றான்.

அவன் சொன்னது இம்மி பிசகாமல் நடந்தது. மறுநாள் அவன் சொன்ன அதே வேளையில் போர் மூண்டது. பயங்கரப் போர் அது. உட்கோட்டை பின்புற மதிலின் மீதிருந்த கூலவாணிகன் உதவியால் போரைக் கண்ட நீள்விழி பிரமித்துப் போனாள். தமிழகத்தின் சாம்ராஜ்யப் பதவியில் ஏற்பட்டுக்கொண்டிருந்த மாறுதலையும் அவள் கண்டாள் அந்தப் போரில்.

# 24. போரும் முடிவும்

பெண்ணாகட உட்கோட்டைப் பின்புற மதிலின் மீது மதுரைக் கூலவாணிகனுடன் மறுநாள் மாலையில் விளக்கு வைத்த நேரத்தில் நின்ற சோழ மன்னன் மகள் வெள்ளை மணலடித்து மிக அழகாகத் தெரிந்த காவிரியின் மடியை நோக்கினாள். அக்கரைத் தோப்புகளில் எரியத் தொடங்கிவிட்ட பந்தங்களையும் கண்டாள். அக்கரையில் பந்தங்கள் எரியத் தொடங்கியதுமே தானிருந்த பின்புற மதிலின் வாயில்கள் திறக்கப்பட்டதையும், அவற்றிலிருந்து புரவிகளில் அமர்ந்த மதுரை வணிகர்கள் சராசரியாக வெளிவந்ததையும், மதிலோரமே அணிவகுத்துச் சென்றதையும் நன்றாகக் கிழக்கு திசை சென்று ஆற்றிலிறங்கியதையும் கவனித்தாள். வணிகர் தொகை நிமிடத்துக்கு நிமிடம் ஆற்றில் பெருகிக் கொண்டிருந்ததையும், பின்புற வாயில் வழியாகச் சென்ற வணிகர் படையைப் போலவே முன்புற வாயில் வழியாகக் காலாட் படையொன்றும் கிளம்பி வந்ததையும் பார்த்தாள் நீள்விழி. அவளுக்கு விஷயத்தை விளக்க முற்பட்ட கூலவாணிகன், "அம்மணி! புரவிப்படை காவிரி மணலில் இந்தப் பின்புற வாயிலை அடுத்து அதாவது காவிரியின் மேல்புறத்தில் நிற்கிறது. அதோ அந்த காலாட்படை கீழ்ப்புறத்தில் அணிவகுத்து வருகிறது. இனிமேல் பாருங்கள் நிகழும் விந்தையை" என்று சொல்லி முடிக்கு முன்பாகக் கேட்டாள் நீள்விழி, "அப்படியானால் பல்லவர் படைகளும் இப்படி இரண்டு பகுதிகளாக இவருமா?" என்று.



"பல்லவர் படை அப்படி வராது அரசகுமாரி. பல்லவ மல்லர் காலாட்படைகளை அழைத்து வரவில்லை. முற்றும் புரவிப்படை" என்றான் கூலவாணிகன்.

"அப்படியானால் நமக்கு மட்டும் ஏன் இப்படி பாதிப்பாதி?"

"முதலில் நம்மிடம் அவ்வளவு புரவிகள் கிடையாது. தவிர மணலில் ஓடக்கூடியவை பாலைவனத்தில் ஓடிப் பழக்கமுள்ள அராபியப் புரவிகள்தாம். அவற்றில் சுமார் ஆயிரம் புரவிகளை மதுரையிலிருந்து வரவழைத்தோம்."

"அப்படியானால் நமது பலம் பல்லவர் பலத்தைவிடக் குறைவல்லவா?"

"தொகையில் குறைவுதான் அரசகுமாரி. ஆனால் தொகை மட்டும் போரை நிர்ணயிப்பதில்லை."

இந்த சம்பாஷணையை இருவரும் ஆற்றைப் பார்த்து கொண்டே நடத்தினார்கள். திடீரென மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டாள் அரசகுமாரி. அக்கரையில் முரசு ஒலித்தது. கொம்புகள் ஊதப்பட்டன. புற்றிலிருந்து கிளம்பிய ஈசல்களைப்போல தோப்பிலிருந்து சுமார் ஐயாயிரத்துக்கு மேல் மதிக்கக்கூடிய நந்திவர்மன் புரவிப் படை ஆற்றிலிறங்கிவிட்டது. படையின் முகப்புகளிலும் பக்கங்களிலும் சில வீரர்கள் பந்தங்களைத் தாங்கி ஓடி வந்தார்கள். வேகமாக இறங்கிய அந்தப் படையை நோக்கி வணிகர் படை நகரவில்லை. அணிவகுத்து நின்ற இடத்தில் நின்றிருந்தது. நந்திவர்மன் படை பாதி ஆற்றை அணுகிக் கொண்டிருந்ததும் நீள்விழி நின்றிருந்த இடத்துக்கு நேர்க் கீழேயிருந்த வாயிலில் முரசு ஒலித்தது. அடுத்த விநாடி தடதடவென்று இரண்டு புரவிகள் வான வேகத்தில் வெளிப் போந்தன. ஒன்றின்மீது பாண்டிய மன்னன் அமர்ந்திருந்தான். மற்றொன்றில் அவன் உப தளபதி யென்று கூறிய வணிகன் அமர்ந்திருந்தான். அவ்விருவரில் வணிக உபதளபதி புரவி வீரர் இருந்த இடத்துக்கும்.

பாண்டியன் காலாட்படை இருந்த இடத்துக்கும் சென்று கலந்து கொண்டதையும் கவனித்த நீள்விழி போர் மூண்டுவிட்டதைப் புரிந்துகொண்டான். பாதி ஆற்றுக்கு வந்த நந்திவர்மன் புரவிப் படை இரண்டு பிரிவாகப் பிரிந்து ஒன்று காலாட்படையையும் இன்னொன்று புரவிப்படையையும் நோக்கி வந்ததையும் பார்த்தான் நீள்விழி.

மதுரை வணிக தளபதியின் தலைமையில் வந்த புரவிப் படை காற்று வேகத்தில் பறந்தது எதிரியின் புரவிப் படையை நோக்கி. பாண்டிய மன்னன் தலைமையில் காலாட்படை மெல்ல ஆற்றில் ஊர்ந்தது. திடீரென பாண்டிய மன்னன் கைவாளை உயர்த்தவே திடீரென மண்டியிட்டு உட்கார்ந்து விட்ட காலாட்படை விற்களை வளைத்து எதிரிகளின் குதிரைப் படையை நோக்கி அம்பு மழை பொழிந்தது. திடீரென காவிரியின் மடியில் பெரும் கூச்சலும், ஆயுதங்களின் மோதலால் ஏற்பட்ட ஒலிகளும், புரவிகள் மனிதர்களின் ஓலங்களும் கிளம்பின. வணிகத் தளபதியின் புரவிப்படை பெரு வேகத்தில் எதிரியின் புரவிப்படையுடன் மோதியதும் மணலில் புரவிகள் புரவிகளை இடித்தன. வாட்கள் வாட்களோடு மோதின, போர் மிக மும்முரமாக நடந்தது.

பாண்டிய மன்னனிருந்த இடத்தில் மன்னன் மட்டுமே எதிரி வேல்களுக்கு இலக்காகும் முறையில் தனது புரவியில் அமர்ந்திருந்தான். அந்தப் புரவியும் கால்களை மணலில் தேய்த்து முன்னேறத் துடித்தாலும் அதை அனுமதிக்காத ஜடிலன், "நீலா! பொறு. இன்னும் சில நிமிடங்களில் நீ பாய்ந்து செல்லலாம்! எதிரிகளை நோக்கி" என்று கூறி சமாதானப்படுத்திவிட்டு மீண்டும் வாளை உயர்த்தினான். அதுவரை உட்கார்ந்து மும்முறை அம்பு மாரி பொழிந்த காலாட்படை மறுபடியும் சற்று முன்னேறியது. அம்புகள் பூராவும் எதிரி புரவிகள் மீதே பாய்ந்தன வாகையால் எதிரியின் முதல் இரண்டு வரிசைப் புரவிகள்



மாண்டு விழுந்ததன்றி மற்ற புரவிகள் முன்னேறுவதற்கும் இடைஞ்சலாயிருந்தது. சில புரவிகள் மாண்ட புரவிகளைத் தாண்டிப் பாய்ந்தன. சில தாண்டும் தருவாயில் விழுந்துவிட்டதால் தங்கள் மீதிருந்த வீரர்களைத் தள்ளி விட்டு எழுந்து நாலாபுறமும் ஓடின. இதன் விளைவாக குதிரைப்படை மெல்ல மெல்ல காலாட்படையாக மாறிக் கொண்டிருந்தது. அப்படி புரவிகளையிழந்த படையை நோக்கி மீண்டும் மீண்டும் அம்புகளைப் பொழிந்து கொண்டு முன்னேறியது காலாட்படை.

முதல் இரண்டு நாழிகைக்குள்ளேயே காலாட்படையை நோக்கிய எதிரியின் புரவிப்படைப் பிரிவில் பாதிப் புரவிகள் மாண்டுவிட்டதால் தனது வாளை ஓங்கி, மீண்டும் ஆட்டிய பாண்டிய மன்னன் கட்டளையால் காலாட்படை வேல்களை எறிந்துகொண்டு எதிரிப் படையை நோக்கி நகர்ந்தது.

பாண்டியன் ஜடில பராந்தகன் கலாட்படையைக் கொண்டு எதிரி புரவிப்படையைக் காலாட்படையாக மாற்றிக்கொண்டு முன்னேறிய சமயத்தில் வணிக தளபதி தனது புரவிப் படையைக் கொண்டு எதிரிப் படையைப் பெரிதும் ஊடுருவிவிட்டான். போகிற போக்கில் பல்லவர் படை முறியடித்துவிடும்போல் தோன்றியது மதில் மீதிருந்து பார்த்த நீள்விழிக்கு. கூலவாணிகனும் அப்படித் தான் நம்பினான். ஆனால் திடீரென நிலைமை மாறு பட்டது. தனது படைக்குப் பின்னாலிருந்து திடீரென பெரும் புரவியொன்றில் ஆரோகணித்து முன்னணிக்கு வந்த நந்திவர்மன் தனது கழுத்திலிருந்து பெரும் சங்கை எடுத்து பலமாக ஊதினான். கையிலிருந்த பெருவாளை எடுத்து ஆட்டினான் தனது படைகளை நோக்கி. கண்ணிமைக்கும் நேரத்தில் அவன் புரவிப் படையின் இரு பிரிவுகளும் ஒன்றையொன்று நோக்கிப் பக்கவாட்டில் நகர்ந்தன. ஒன்றுடன் மற்றொன்று இணைய அவை இணைந்துவிட்டால் பாண்டியன் படையின் காலாட்கள்

மீது அவை சீறி வர முடியுமென்றும், புரவிகளின் காலடிகளில் பாண்டியர் மாளுவது திண்ணமென்றும் புரிந்தது நீள்விழிக்கு.

நந்திவர்மன் தனது படைகளை இணைத்து வணிக தளபதியின் படையை எண்ணிக்கை பலத்தில் பின்னடையச் செய்தான். அதேசமயத்தில் காலாட்படையை நோக்கியும் வேகமாக வந்தான். அப்படி அந்தப் படை நகரும் சமயத்தில் "நீலா! அதோ பல்லவ சக்கரவர்த்தி" என்று இரைந்து கூவினான் ஜடிலன். அடுத்த விநாடி நீலன் பறந்து சென்றது நந்திவர்மனிருக்குமிடத்தை நோக்கி. சோழர்குலப் பெருவாளால் இடைப்பட்டோரை வெட்டிக்கொண்டே பிசாசுபோல் நந்திவர்மனை அணுகி விட்ட ஜடிலன் தனது வாளை உயர்த்தினான் பல்லவனை நோக்கி. நந்திவர்மன் வாள் அந்தப் பெருவாளை அனாயசமாகத் தடுத்தது. மீண்டும் அந்த இரு மாபெரும் வீரரும் ஒருவரையொருவர் வாள்கொண்டு தாக்கினர். சுற்றிலும் கடுமையான போர் நடந்துகொண்டிருந்தது. இறந்து விழுந்த வீரர்கள் மீதுங் குற்றுயிரும் குலையுயிரு மாயிருந்த வீரர்கள் முதுகுகளின் மீதும் வீரர்களை இழந்த புரவிகள் ஓடிக்கொண்டிருந்தன.

"நீர் வெள்ளம் ஓடவேண்டிய காவிரியாற்றின் மடியை குருதி வெள்ளம் நனைத்துக் கொண்டிருந்தது. மாண்ட குதிரைகளும், மாளும் குதிரைகளும், மாண்ட வீரரும், மாளும் வீரருமாகக் கோரக் காட்சியளித்தது அந்த அழகிய மடி. தமிழர்களை வளர்த்த காவிரி அன்னையின் மடியில் அன்று தமிழர்கள் ஒருவரையொருவர் கொன்று மாண்டு கிடந்தார்கள். மாளாதவர் அந்தக் கொலைத் தொழிலில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார்கள். பெண்ணாகட வெளிப் புற மதிலின் பெருவிளக்குகளும் பந்தங்களும் அந்தக் காட்சியின்மீது வீசிய வெளிச்சம் அந்தக் காட்சியைப் பன்மடங்கு அதிகக் கோரமாக்கியது. எந்தப் பக்கம் வெற்றியென்று தெரியாமல் போர் நடந்து கொண்டிருந்தது.



நந்திவர்மனும் ஜடிலனும் வாளுடன் வாள் மோத மணலில் மரணப் போர் இட்டார்கள். இரு பெரும் சிங்கங்களின் மோதலில் எந்த சிங்கம் வெற்றியடையு மென்று சொல்வது என்ன கஷ்டமோ அத்தனை கஷ்டமாயிருந்தது, அன்று அவ்விருவர் போரின் முடிவை நிர்ணயிப்பதும். ஆனால் மெல்ல மெல்ல பல்லவன் சளைக்கத் தொடங்கியதை ஜடிலன் உணர்ந்து கொண்டான். ஆகவே தாக்குதலை மிக மும்முரமாக்கிக்கொண்டு, "மாவீரரே! இந்த சோழர்குலப் பெருவாள் எழுநூறு ஆண்டுகளாகக் காத்திருக்கிறது பல்லவரை வெற்றி கொள்ள" என்று இரைந்து அறிவித்தான். கடைசியில் வாளை ஓங்கி அடித்தான் நந்திவர்மன்மீது. வாள் நேராக நந்திவர்மன் தலைமீது இறங்கி அவன் தலைக் கவசத்தை உடைத்து விடவே நந்திவர்மன் குதிரையிலிருந்து விழ இருந்தான். விழுந்துமிருப்பான் பாண்டியன் மட்டும் நீலனைப் பக்கவாட்டில் செலுத்தி நந்திவர்மனைப் பிடித்துக்கொண்டிராவிட்டால்.

நந்திவர்மனை அவனது புரவியிலிருந்து அப்படியே தனது புரவியில் தாங்கி இழுத்துக்கொண்ட ஜடிலன் பெரிதும் தடுமாறினான். பல்லவ மன்னனுடைய பெரும் பலம் ஜடிலன் மீது இரும்புபோல் உட்கார்ந்து விட்டதால் அவன் அப்புறம் இப்புறம் திரும்ப முடியாதவனானான். மிகுந்த கஷ்டப்பட்டு தனது வலது கையை நந்திவர்மன் உடலிலிருந்து விடுவித்துக்கொண்டு சோழர்குலப் பெரு வாளை எடுத்துப் பெரிதாக ஆட்டினான். பிறகு தன்னை எதிர்க்க வந்த புரவி வீரரில் இருவருக்கு சைகை காட்டி, "பல்லவ சக்கரவர்த்தியை மெல்ல பாசறைக்கு அழைத்துச் செல்லுங்கள்" என்று கூறி அவர்களிடம் நந்திவர்மனை ஒப்படைத்தான்.

நந்திவர்மன் படைவீரர் இருவரும் வாயைப் பிளந்து, அந்தப் போர் முனையிலும் செயலற்று பிரமித்து நின்றனர். இப்படி எதிரி அகப்படும்போது எதிரியைச் சிறையெடுத்

துச் செல்லாமல் அவன் புரவி வீரர்களிடம் ஒப்படைக்கும் அதிசயத்தை அவர்கள் பார்த்ததில்லை. கேட்டதும் இல்லை. அந்த வியப்புடன் பாண்டியனை வணங்கித் தங்கள் மன்னனை ஒரு தனிப் புரவிமீது படுக்கவைத்து அழைத்துச் சென்றனர். அடுத்த சில விநாடிகளில் நந்திவர்மன் காயமடைந்துவிட்ட விவரம் அவன் படையினரிடை பரவவே படை பின்வாங்க கொம்புகள் ஊதப்பட்டன. பலமாக பொருதிக்கொண்டே பின்வாங்கிய பல்லவன் படையை மதில்மீதிருந்து பார்த்த நீள்விழி மகிழ்ச்சிப் பெருமூச்சு விட்டாள். பின்வாங்கும் படைமீது அம்புகளைப் பொழிய வேண்டாமென்று ஜடிலன் சைகை செய்ய பாண்டியர் படை மீண்டும் மதிலோரம் வந்தது.

உட்கோட்டை மதில் வாசலுக்கு வந்த ஜடிலன் காவிரியின் மடியை நோக்கினான். பிறகு பக்கத்தே புரவியிலமர்ந்திருந்த வணிக உபதளபதியை பார்த்து, "இனி பல்லவர் படை போருக்கு வராது. பாதி அழிந்துவிட்டது. இனி நமது வீரர்கள் வணிகர் உடைகளில் வலம்வர அவசியமில்லை நீயும் பாண்டியசேனாதிபதி உடையில் வரலாம்" என்று கூறினான். "எதற்கும் நீ இரவு பூராவும் இங்கிரு படைகளுடன். ஏதாவது விசேஷம் இருந்தால் சொல்லி அனுப்பு" என்று கூறி புரவியை வாயிலுக்குள் செலுத்தினான்.

கோட்டைக்குள் வந்ததும் நீராடாமலும் இரத்தம் தோய்ந்த வாளைத் துடைக்காமலும் நேராக சிவலிங்கமிருந்த பூஜை அறைக்குச் சென்றான். அங்கு ஆண்டவன் முன்பு வணங்கி, "எனது கடமையைச் செய்துவிட்டேன். என் சபதத்தை நிறைவேற்றிவிட்டேன்" என்றும் கூறினான் சிவலிங்கத்தை நோக்கி.

"எந்த சபதத்தை நிறைவேற்றிவிட்டாய் ஜடிலா?" என்ற ஒலி கேட்டுத் திரும்பினான் பாண்டியன்.



கதவருகில் தர்மாதிகாரி நின்று கொண்டிருந்தார். "சபதங்கள் பல உண்டா எனக்கு?" என்றான் ஜடிலன்.

"தேவி மீனாட்சி முன்பு பாண்டிய அரசை பேரரசாக்க செய்த சபதம் ஒன்று. என்னை உன் மந்திரியாக்க செய்த சபதம் இரண்டு. நீள்விழியை சாம்ராஜ்யாதிபதியாக்கச் செய்த சபதம் மூன்று" என்று கூறினார் தர்மாதிகாரி.

ஜடிலன் வணங்கிய நிலையிலிருந்து எழுந்து வந்து தர்மாதிகாரியின் பாதங்களைத் தொட்டு எழுந்து நின்றான். "பாண்டிய முதலமைச்சரே!" என்று அவரை விளித்துவிட்டு, "தாங்கள் ஆசியாலும் இந்த சோழர் குலப் பெருவாளின் வன்மையாலும், இன்று காவிரியின் மடியில் நந்திவர்மன் முறியடிக்கப்பட்டான். பாண்டிய சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரம் போடப்பட்டது. நீள்விழி இனி பல்லவனுக்குமில்லை. கொங்கர்கோனுக்குமில்லை. அவள் பாண்டிய நாட்டு ராணி. ஆகவே பாண்டிய சாம்ராஜ்யத்தின் அதிபதி" என்று அறிவித்தான்.

அவன் குரலில் வெற்றியின் பெருமை இல்லை. ஆணவமில்லை. பக்தி ஓங்கி நின்றது. "எம்பெருமான் நாராயணன் அருள் அனைத்தும், பத்துடை அடியவர்க்கு எளியவனான அவன் இந்த எளியவனுக்கு இன்று வெற்றியளித்தான். இன்று நந்திவர்மனைக் காயப்படுத்தியது இக்கரமல்ல, அவன் கரம்" என்றும் நா தழுதழுக்கக் கூறினான்.

தர்மாதிகாரியின் முகத்தில் பெருமிதமிருந்தது. "நந்திவர்மனை இந்த வாளால் காயப்படுத்தினாயா!" என்று கேட்டார் பெருமிதத்துடன்.

"ஆம்."

"அவனைச் சிறை பிடித்துவிட்டாயா?"

"இல்லை. அவன் வீரர்களிடம் ஒப்படைத்தேன்."

"ஏன் மாண்டுவிட்டானா?"

"இல்லை."

"பின் ஏன் சிறை பிடித்து வரவில்லை?"

"அவன் மாவீரன், வைணவன், உத்தமன்."

இதைக்கேட்ட தர்மாதிகாரி பிரமித்தார். பாண்டியனின் பெருந்தன்மை அவரைத் திகைக்க வைத்தது. "பாண்டியா! நீ வாழி" என்றார் உருக்கம் தோய்ந்த குரலில்.

பாண்டியன் அவரை நோக்கிச் சொன்னான்: "பிரபு! தர்மாதிகாரி! என் முதலமைச்சரே! இந்தப் பெண்ணாகடத்தில் நடந்தது பெரும் நாடகம். சரித்திரம் காணாத நாடகம். இரு மன்னர்கள் தனித்து உலாவிய இடம். வணிக வேடத்தில் வீரர்கள் தோன்றிப் பொருத இடம். இது மீண்டும் பெண்ணாகடமாகத் திகழச் செய்வோம். பாண்டி நாட்டுச் சக்கரவர்த்தி ஆண்டுக்கொரு முறை இங்கு வசிப்பான் தன் ராணியுடன். நாளை நான் புறப்படுகிறேன், மதுரைக்கு. நீங்கள் இதை மீண்டும் பழைய பெண்ணாகடமாக மாற்றிவிட்டு வந்து சேருங்கள்."

இதைக்கேட்ட தர்மாதிகாரி அறையை விட்டு நகர எத்தனித்தார். "ஒன்று மறந்துவிட்டேன்" என்றான் பாண்டியன் அவரைத் தடுத்து நிறுத்தி.

"என்ன ஜடிலா?"

"விஜயனையும் அவன் ஒற்றன் வைணவத் துறவியொருவனையும் சிறைக் கூடத்திலடைத்திருக்கிறேன். அவர்களை விடுவித்துப் பல்லவனிடம் அனுப்பிவிடுங்கள்."

"அந்தத் துரோகிகளையா?"

"அவர்கள் துரோகிகளல்லர், பல்லவ மன்னன் ஆணைக்குட்பட்டவர்கள். செய்யவேண்டிய கடமையைச் செய்தார்கள்."

இதைக்கேட்ட தர்மாதிகாரி பிரமித்தார். பாண்டியன் நீதியை நினைத்து வியந்த வண்ணம் அறையை விட்டு



வெளியேறினார். அவர் சென்றதும் உள்ளே வந்தாள் நீள்விழி. வந்தவள் நேராக ஜடிலனை அணுகி, "பாண்டிய பேரரசரே, வணக்கம்" என்றாள். அவள் அடிபணியவும் குனிந்தாள். அதற்கு முன்பாகவே அவளைத் தூக்கி நிறுத்திய ஜடிலன், "வணங்குவதற்கு இதல்ல இடம். இது பக்திக்கு இடம்" என்றான்.

"வாவிக்கரைக்குப் போவோமா?" என்றாள் நீள்விழி.

"அது காதலுக்கு இடம். ஆனால் அங்கு கூட்டமிருக்கிறது இப்பொழுது" என்றான்.

"கூட்டமில்லாத இடம் இல்லையா?" என்றாள் நீள்விழி தன் நீள்விழிகளில் சிரிப்பை உதிர்த்து.

"இருக்கிறது நீள்விழி."

"எங்கு?"

"மதுரையில்."

"மதுரையிலா?"

"ஆம் அரண்மனையில்."

"அப்படியா!"

"ஆம்" என்ற ஜடிலன் அவள் காதுக்கருகில் குனிந்து, "பாண்டியன் பள்ளியறை" என்றான் மெதுவாக.

அவள் முகம் நாணத்தால் குங்குமச் சிவப்பாகச் சிவந்தது; அதரங்கள் எதையோ எதிர்பார்த்துத் துடித்தன. உடலெங்கும் தெரிந்திருந்த ரத்தக்கறையுடன் அவளை அணைத்தான் பாண்டியன்.

மறுநாள் அவன் பெண்ணாகடத்தைவிட்டு புரவியிலேறி நீள்விழியுடன் கிளம்பியபோது உட்கோட்டை வாயிலிலும், தெருக்களிலும் மக்கள் சமுத்திரம் நிரம்பி நின்றது. பாண்டியனையும் நீள்விழியையும் நோக்கி கை தூக்கி ஆசிர்வதித்தார் மாறனஅகாரி. "வாழி பாண்டியர் கோன்! வாழி பாண்டிய சாம்ராஜ்யம்! வாழி நீள்விழி!"

என்றார். மக்கள் ஆரவாரம் செய்தனர். வாழியெனும் ஒலி வானைப் பிளந்தது.

நீள்விழியின் முகத்தில் மகிழ்ச்சி ததும்பியது. ஜடிலன் மட்டும் சிறிது துயரத்தைக் காட்டினான்: "வரும்போது சுதந்திரமாக வந்தேன். போகும்போது குடும்பச் சுமையைக் கட்டிக் கொண்டு போகிறேன்" என்றான்.

இதைக்கேட்ட நீள்விழி, "அப்படியானால் வேண்டாமே, தனிக்கட்டையாகவே செல்லுங்கள்" என்று கூறி புரவியைத் தட்டிவிட்டாள்.

ஜடிலன் பெரிதாக நகைத்துவிட்டு, "நீலா பிடி அவளை" என்று தனது புரவியையும் அவளைத் தொடர விட்டான்.

மாறன்காரி மெல்ல நகைத்தார் அதைப் பார்த்து. "பெண் ஓடுவதும் ஆண் துரத்துவதும் காதல். ஆதிகால முதல் இதே கதை" என்று கூறினார். அந்தக் கதை தொடர்ந்தது மதுரைச் சாலையில். நீலன் வெகு விரைவில் நீள்விழியின் புரவியைப் பிடித்து உராய்ந்தது. புரவி மீதிருந்த நீள்விழியின் இடையைச் சுற்றி பாண்டியன் இடது கையும் ஊர்ந்தது.